
"இதுவோ எங்கள் கோவை"



கோணி அம்மன் கோயில்

கோவை கிழார்

"இதுவோ எங்கள் கோவை"

கோவை கிழார்

முதற் பதிப்பு: 1949

கிடைக்குமிடம்:

கோவை நிலையப் பதிப்பகம்

4/89, திருச்சிப்பாதை, கோயமுத்தூர்.

உயர்ந்த பதிப்பு விலை ரூ. 3

சாது அச்சுக்கூடம்

இராயப்பேட்டை, சென்னை - 14



திரு. சி. எஸ். இரத்தினசபாபதி முதலியார்

இந்நூலை அன்புடன் ஏற்றுக்கொள்ள இசைந்தருளிய
மணிமன்றத் தலைவர் அவர்கள்பால் விடுத்த

அன்பளிப்பு உரை

ஊரை நகர் ஆக்கிய திருவாளர்

பன்னிரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னர் கோவன்பதியைக் கோவன்புத்தூர் ஆக்கினார் ஒரு சமய சேவைத் திருவாளர். பன்னிரண்டு நூற்றாண்டுகளும் சாதாரண ஊராகவே இருந்த அதனைக் கோவை நகர் ஆக்கினார் மற்றொரு உலகிய சேவைத் திருவாளர். இவ்விரு சேவைத் திருவாளர்களையும் கோவை மறக்க இயலாது. கோவையின்பால் அவர்கள் கொண்ட சேவைத் தொடர்பை விளக்குவது இச்சிறு நூலாகும். ஆகவே இந்நூல் அத்தகையத் திருவாளர்களுக்கு அன்பளிப்பாக அமைய வேண்டியது முறைமை அல்லவா ?

அவ்விருவரில் நம் கண் காணச் சேவை இயற்றினவர் உலகிய சேவைத் திருவாளர் ஆகும். அவர்பால் அவரது மணிவிழா மலராக இந்நூல் எழுதப்பெற்றது ; அவருக்கு அன்பளிப்பாக வெளியிடப் படுகின்றது. அவரும் இவ்வன்பளிப்பை நெஞ்சார ஏற்றுக்கொண்டிருக்கிறார். இதுவே இந்நூல் பெறுகிற விருப்பம்.

அன்பளிப்பாக அமைகிற இந்நூல் அத்திருவாளர் அரிய பெரிய செயல்களை நினைப்பூட்டுவதோடு இந் நகரத்துப் பெருமக்களுக்கும் இந்நகரத்தின் பண்டைய வரலாறுகளை வெளிப்படுத்துகின்றது. அம்முறையில் இந்நூல் அத்திருவாளர் தொடர்பாக இவ்வூராருக்கும் ஓர் அன்பளிப்பு ஆகும்.

எவர் பொருட்டு இந்நூல் வெளிவருகிறதோ அத் திருவாளருடைய செயல்களை ஒரு சிறிதேனும் எடுத் துரைப்பது முறையல்லவா? அம்முறையில் இச்சிறு அன்பளிப்பு உரை முன்னுரையாக விளங்குகின்றது.

பிறப்பும் வளர்ச்சியும் இவ்வூரின் கண்ணே கொண்ட திருவாளர்

சான்றோர் உடைத்தெனப் புகழ்பெற்ற நற் றொண்டை நாட்டில் அதன் தலைநகராகி ஏழு சிறந்த பண்டை நகர்களுள் ஒன்றும் ஆகிய கச்சியம் பதியில் ஒரு சிறந்த சைவ வேளாளர் குடி இருந்தது. அக்குடி ஒருகாலத்தில் கொங்கு நாட்டிற்கு வந்து அதனை அழகுபெறச் செய்தது. அக்குடியில் உதித்த சதாசிவ முதலியார் என்ற சீலர் நிலக்கிழாராகவும் பணக்கிழா ராகவும் தொழிற்கிழாராகவும் விளங்கினர். நாட்டின் பொருள் வளத்தை வளர்ச்சி செய்ய நூல் ஆலை, சருக்கரை ஆலை, பண உதவிநிதி முதலிய இயக்கங் களில் ஈடுபட்டார். திருப்பேரூர் கோயில் ஆட்சியிலும் சேவை செய்தார். அத்தகைய பெரியார் தவப் புதல் வராய் திரு. இரத்தினசபாபதி என்ற பெயருடன் 1886-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 9-ம் தேதியன்று

நம் திருவாளர் உதித்தார். இளவயதிலேயே தந்தையார் சிவபதம் அடைய, தாயார் திருமதி ஜகன்னுதம்மாள் அம்மையாரால் அன்புடன் வளர்த்தப் பெற்ருர். நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக செல்வக் குழந்தை தாயார் அன்பில் வளர்ந்து அக் காலத்திற்கு ஏற்ற படிப்பு பெற்றது. தமிழும் ஆங்கில மும் கற்றதன்றி இளைஞர் ஆனவுடன் அந்நாளில் தோன்றிய சுதந்திர வாஞ்சையிலும் ஈடுபட்டு வந்தார்.

உலகப் படிப்பில் தேர்ச்சியடைந்த திருவாளர்

பள்ளிப் படிப்பு புள்ளிக்கு உதவாதன்ருே? உலகப் படிப்பே மக்களை முன்னேற வைப்பதாகும். இளவயதிலேயே உலகப் படிப்பில் நுழையத் தொடங் கினர். இருபதாவது ஆண்டிலேயே தான் பிறந்த வட்டாரத்திற்கு ஊர் ஆண்மைக் கழக உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அக் கழகத்தில் தொடர்ச்சி யாகப் பல ஆண்டுகள் அங்கத்தினராக யிருந்து எவரும் போற்றும்படி அரிய பாடுபட்டார். முதலில் அங்கத்தின ரானவர் பிறகு உதவித் தலைவர் ஆகியும் பின்னர் தலை வர் ஆகியும் பல்லாண்டுகள் உழைத்தார்.

இக் கழகத்தில் இருந்து கொண்டே தாலுக்காச் சங்கம், ஜில்லாச் சங்கம், மாகாணச் சங்கம் முதலிய பெரிய சங்கங்களில் புகுந்து நற்ருெண்டுகள் செய்தார். ஆட்சித் துறைகளையன்றி வணிகத்துறை கைத் தொழிற்றுறை முதலிய பல துறைகளிலும் தொண்டு செய்தார். இந்த வகையில் உலகப் படிப்பில் தேர்ச்சி பெற்று பெரும் நிபுணர் ஆனர்.

நகர வளர்ச்சியில் ஈடுபட்ட திருவாளர்

இந்நூல் நகரத்தைப் பற்றியதாதலால் இந்நகரத்திற்கு அத்திருவாளர் செய்த சேவைகளைச் சிறிது விவரமாகக் கூறவேண்டியது இதன் பொறுப்பு அல்லவா? அந்த வகையில் அவர் செய்த வேலைகளை விவரித்தால் இது ஒரு பெரிய நூலாகிவிடும். அதற்கு இங்கு இடம் இல்லை. ஆகவே சுருக்கமாக எண்ணிக்கை அட்டவணை ஒன்றை மட்டும் சேர்த்து உரைத்திடுவோம். மனிதனுக்குப் பொதுவாகவும், நகர வாசிக்குச் சிறப்பாகவும் இன்றியமையாது வேண்டப்படும் தேவைகள் உணவு, உடை, உறையுள் என்பன. இவை மூன்று பொருள்களையும் தேடிக் கொடுத்து இவ்வூரை அவர் ஓர் உண்மையான நகரம் ஆக்கினர். உணவில் உண்ணும் பொருள்களும் குடிநீரும் அடங்கும். உண்ணும் பொருள்களுக்காகப் புதுச்சந்தை (மார்க்கட்டு) ஒன்றைக் கட்டினர். குடிநீர் வசதிக்காக ஐம்பது ஆண்டுகளாக எண்ணி எண்ணிக் கைவிட்ட சிறுவாணித் திட்டத்தை 50 லட்சம் ரூபாயில் ஏற்படுத்தினர்.

உலகிலேயே தூய்மையான நீர்களில் ஒன்றுகிய சிறுவாணித் தெளிநீரை ஒரு மைல் அளவு மலையைக் குடைந்து, சுரங்கம் செய்து அதன் வழியாக அதைக் கொணர்ந்து இருபது மைல் குழாய் அமைத்துக் கோவைக்குக் குடிநீர் கொண்டுவந்தார். இதனுல் வயிற்றுக் கடுப்பு முதலிய நோய்கள் கோவையை விட்டு ஓடிப்போய் விட்டன. மக்களுக்கு நல்லுடை உடுக்கக் கொடுக்க நூற்சாலையும் நெசவுச் சங்கமும் நிறுவித்

தலைமைத் தாங்கி நற்றொண்டு புரிந்தார். போர்க் காலங்களில் உடை நெருக்கடியை மிக ஊக்கத்தோடு சமாளித்துப் பெரும் உதவி செய்தார். உறைந் துறைய வீட்டு நெருக்கடி போக்கப் பல புற நகர் கள் கட்டத் திட்டம் செய்தார். இந் நகரத்தில் இவ ருடைய ஆட்சிக் காலத்திலேயே பத்துப் பன்னிரண்டு புற நகர்கள் ஏற்பட்டன. அவற்றில் ஒன்று இவ ருடைய திருநாமத்தை வகிக்கும் பெருமை பெற்றிருக் கிறது. அப்பெயரே இவருக்கு என்றும் அழியாத புகழைத் தரும் என்க. ஆலையாட்களுக்கும் உண்ண வீடுகளை யமைத்தது ஒரு பெருங் கைங்கரியம் ஆகும். தொழிலபிவிருத்திக்கு இன்றியமையாததும், அது தின வாழ்க்கைக்கு அவசியமானதுமான மின்சாரத்தைக் கோவைக்கு முனிசிபல் திட்டத்தில் கொணர்ந்ததும் இவரே. மின்சார வசதியினால், தொழிலபிவிருத்தி யடைந்ததும், மக்கள் வாழ்க்கை வசதி அதிகரித்தது மாத்திரமன்றி, நகராட்சிச் சபைக்கும் வருவாயும் அதி கரித்தது. அவ் வருவாயின் காரணமாய் மக்களுக்குப் பல்வேறு நன்மைகள் செய்யவும் ஏதுவாயிற்று. ஊர் கட்டினால் மட்டும் போதுமா? உடல் நலத்தைப் போற்றுவதற்கு அசுத்த நீக்கம் வேண்டாமா? நிலத் தின் கீழ் சாக்கடை வசதி தொடங்கியது இவரே ஆகும். மேலும் வைத்திய சாலைகள், குழவிகள் பாதுகாப்புச் சாலைகள், பிரசவச் சாலைகள் முதலியவை களுக்கும் அடிகோலினர். உடலுக்கேயன்றி உயிருக்கு அறிவு வளர்ச்சி கொடுக்கும் பள்ளிகளை மிகுதிப் படுத்தி உயர்தரப் பள்ளியை நிறுவினதும் போற்றத்

தக்கது. நகர மக்களின் முன்னேற்றத்திற்கும், நாட்டு நலனுக்கும் படிப்பு எவ்வளவு அவசியம் என்பதை யுணர்ந்து, கட்டாய ஆரம்பக் கல்வி முறையைப் புகுத்தினர். இவற்றிற்கெல்லாம் சலியாத ஊக்கத்துடன் வேலைசெய்த திருவாளர் இவரைத் தவிர வேறு எங்குள்ளார்?

நாட்டு அன்பில் தேறின திருவாளர்

நகரம் ஒன்றோ, நாட்டிற்கும் திருத்தொண்டு செய்வதற்காகத் தாலுக்கா, ஜில்லா, மாகாண சபைகளில் ஈடுபட்டார் என்று முன்னமே கூறப்பட்டது. அச் சேவையில் மருத்துவ சாலைகள், பாடசாலைகள், பாதைகள், பாலங்கள், பஞ்சாயத்துக்கள், கூட்டுறவுச் சங்கங்கள் முதலிய பல இயக்கங்களிலும் கலந்துகொண்டு பல தொண்டுகளையும் புரிந்திருக்கிறார். மாகாணம் மட்டுமோ, இந்தியா மத்திய சபைகளில், சிறப்பாக வாணிப உலகத்தில் அவர் பெருந் தலைவராகி மிகச் சிறந்த வேலைகள் செய்திருக்கிறார். ஆலை முதலாளிகள் சங்கத்திலும் தலைமை வகித்துக் கோவையில் நூலாலை இயக்கத்தைச் சிறப்பித்து இவ்வூரை இரண்டாவது மான்செஸ்டர் என்ற பெயர் பெறுவதற்கு ஏற்ற உதவி புரிந்திருக்கிறார். இந்த வகையில் ' தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர் என்ற சிறப்பினை ஒத்ததன்றி " தனக்கென வாழ்ந்தும் தன் நகர்க்குரியாளர் " ஆக இருக்கும் சிறந்த வாழ்க்கையில் விளங்கினர்.

சமூக நலனுக்குப் பாடுபட்ட திருவாளர்

தம் சமூகம் முன்னேற்றமடைய இவர் அரும் பாடுபட்டு வருகிறார். சேக்கிழார் சங்கத்தை நிறுவி, அதற்குத் தலைமை தாங்கி நடத்தி வருவது யாவரும் அறிந்ததே. இவர் நகருக்கும், நாட்டுக்கும், சமூகத் திற்கும் ஆற்றியிருக்கும் சேவை ஏட்டிலடங்கா. அறி வும் ஆன்மாவும் ஒருங்கே வளர்ச்சியடைய சேவை செய்திருக்கிறார்; அகத்தூய்மையுடன் புறத் தூய்மைக் கும் பாடுபட்டிருக்கிறார்; தூய்மையான சிறுவாணித் தண்ணீரால் கோவை நகர வாசிகளின் புறத்தூய்மைக் கும் தாகசாந்திக்கும் வசதியளித்திருக்கிறார்; கட்டாய கல்வி மூலம் சமூகத்தின் அகத்தூய்மைக்கும் அறிவு வளர்ச்சிக்கும் மார்க்கம் தேடியிருக்கிறார். மின்சாரத்தி னால் புற இருட்டை விரட்டினார்; கல்வி அபிவிருத்தி யினால் அக இருட்டை இருந்த இடம் தெரியாது தொலைத்தார். நாகரீக வசதிகளை நகருக்கு ஈந்து மக் களின் உலகிய தேவைகளைத் திருப்தி செய்தார்; சன்மார்க்க வழிகளில் வழிகாட்டி மக்களின் தெய்வ அன்பிற்கும் அடிகோலினார்.

அறுபது ஆண்டும் சேவையே செய்த திருவாளர்

இவ்வகையில் அறுபது ஆண்டுகள் சேவை செய்து எல்லோர்க்கும் எப்போதும் இனியர் ஆக இருக்கின்றார். கம்பீரமான நெடிய உருவமும், கூர்ந்த ஒளிமிகுந்த கண்களும், இல்லையென உதவி புரியும் கையெழுத்து ராசியும், எப்பேர்ப்பட்ட நெருக்கடியிலும் சினத்தைக் காக்கும் உள்ளமும் ஒருங்கே காண்பது இவரிடம்தான்,

இதுவோ எங்கள் கோவை

அன்னாருடைய அறுபதாம் ஆண்டு நிறைவில் மணிவிழாக் கொண்டாடுகையில் 7 - 3 - 46ல் அவர் பொருட்டு அடியிற் காணும் புகழ்ப் பாடல்கள் ஓதப் பட்டன. அவற்றோடு அவர் உள்ளத்திற்குகந்ததான இந்நகரத்தின் வரலாற்றுத் துணுக்குகளைத் திரட்டி ஒரு நூல் ஆக்கி அவர் திருமுன்னர் ஓர் அன்பளிப்பாக வைப்போமாக !

மணிவிழா வாழ்த்து

திருவாரும் சிவகிரிகள் சீர்வாராக மலையினங்கள்
கருவாரும் திருமூர்த்திக் கரிமலைகள் வாணிமலை
மருவாரும் வெள்ளிமலை மருதமலை குருடிமலை
தருவாரும் நீலமலை தலைமலைகள் கஞ்சமலை
குருவாரும் சேர்வைமலை கொல்லிமலைக் கிரிவரிசை
உருவாரும் அகல்விளக்கின் உயர்விளிம்பாய் அவைசுரக்கும்
எருவாரும் வளம்பெருக்கும் எழில்பொன்னி திரியாகப்
பெருவாரிப் புனல் ஒளியின் பெருவிளக்காம் கொங்குற்றோய் !

வேளாளர் மரபினிலே வியன்மகவாய் உதித்தருளி
தாளாளர் உணர்வினிலே தகுகல்வி தானுணர்ந்து
கோளாளர் வியந்திடவே கோவைநகர் அவைப்பதியாய்
ஆளாளர் இவனெனவே ஆட்சியிலே நாடுபெற
வாளாளர் முறைதன்னில் வாழ்க்கையிலே சிக்கனமும்
நீளாரும் நூற்றலையே நிறைதொழிலாய் பொருள்வகுத்தும்
தோளாளர் பின்வாங்கத் துரைத்தனமும் மேற்கொண்டும்
மீளாத தொண்டினிலே மிளிர்மலைபோல் உயர்ந்தோய்கேள் !

இளவயதில் தந்தைசெயல் எழிற்றாய்கொண் டாற்றிடவும்
வளவயதில் தந்தைசெயல் வளமுழுதும் ஆற்றினையே

மணிவிழா வாழ்த்து

கல்லூரிப் படிம்பொன்றே கலைவளர்ச்சிக் கன்றெனவும்
பல்லூறு மனுபவமும் பலன்தருமென் றுணர்த்திஃனயே [க்கு

குலத்தொழில்விட் டெத்தொழிலும் குடித்தொழிலோஎன்பார்
நலத்தொழிலாய் கைத்தொழிலும் நலந்தருமென் றேத்திஃனயே

வாணிபத்தில் ஈடுற்ருர் வகைதெரியா திருந்தக்கால்
நாணிடவும் அவர்க்குநலம் நல்கிபதி ஆயிஃனயே

குடித்திடநீர் வசதியிலாக் கோவைநகர்க் களித்திக்க
வடித்திடுநீர் சிறுவாணி வளஞ்சுரக்க வகுத்திலேயோ

ஊர்முழுதும் நாற்றமுற உலக்காங்கை புகுந்திடுநாள்
சீர்முழுதும் ஓங்கிவரச் சீரகங்கள் நிறைத்திலேயோ

வீதியிலே இருளழிக்க மின்விளக்கிட் டொளிதரல்போல்
ஓதியிடும் படிப்பமைத்தே உணர்வின்மை நீக்கிலேயோ

தொழிலாளர் ஊதியமும் தூய்மைதரும் வரவுமுற
எழிலான மின்னியலின் இயங்கிகள்முன் வைத்திலேயோ

ஒருமகன் ஒருபணி உறஅதில் உயருவன்
ஒருமகன் நிறைபணி உறவவை உறுவனே ?
அனுதினம் நினசெயல் அறவிஃன அறிவுறல்
மனுதினம் அறிவுற மலேவுறும் எனுமரோ.

அலேமகள் கலேமகள் அன்போ டியங்குதல்
தலேமகள் சாரலில் சாரா தெனுமுரை
நிலேமகள் தன்மையில் நின்பால் இலேயெனில்
மலேமகள் கருணையில் மல்கல் என்குமோ.

தமிழுடன் ஆங்கிலம் போற்றிஃன
அமிழ்தினில் மொழிகளை ஏற்றிஃன

இதுவோ எங்கள் கோவை

குமிழினில் புகழ்உருப் பேற்றினை
சிமிழினில் இசை யொளி ஊற்றினை

கழகம் அமர்ந்தனை
அழகன் கவர்ந்தனை
குழகன் துதித்தனை
பழவன் புகுத்தனை

வருவாயைப் பெருக்கிட்டு வறுமையினைச் சுருக்கிட்டுக்
கருவாழ்வை இனிதாக்கல் கடமையெனல் நின்படிப்பே

வீண்பெருமை தலைகுனிய வியப்பெளிமை மேன்மையுற
ஆண்பெருமை ஈதெனவே அறிவுறுத்தல் நின்கருத்தே

இகல்கொண்டோர் நாணமுற இதமவற்குச் செய்தளித்துத்
திகில்கொண்டோர் அமைதியுறத் திருத்திவரல் நின்செயலே

எவருறினும் இன்முகத்தால் இதமளித்து நட்புறுத்தி
அவரவர்கள் நினைநீங்கா அன்பளித்தல் நீன்பண்பே

ஆதலினால்,

அறுபான் பத்தும் ஆண்டுகள் நிறைந்து
மறுபால் கடந்து மணிவிழா உறவே

நின்னுடன் பழகிய நிறைநன் மாந்தர்
இன்னுரை மல்கி எழில்வாழ்த் தளிக்க

இன்றுன தகத்தில் எழுந்தருள் பொழுது
நன்றெனத் தமிழும் நற்சிவ சமயமும்

தந்தம் வாழ்த்தினைத் தந்திட உவந்தே
உந்தன் விருந்தினர் உடனுடன் புகுந்துளார்;

மணிவிழா வாழ்த்து

இவ்விரு வாழ்த்தும் ஈசன் அருளால்
செவ்விய அன்பில் செலுத்துவர் காண்மோ !

கருணையங் கண்ணுதல் கவின்வாழ் வுடனே
தருணமார் உரமும் தந்திட வேண்டுவர் ;

காஞ்சிமா நதியின் கவினுர் மணலில்
வாஞ்சனை தந்திடும் வருடம் பலவாய்

மணியார் மன்றத் தலைவ !
அணியார் அரனருள் அரும்பெரும் வாழ்வே !

பார்த்திவ மாசிப் பகர்திங்கள் மூவெண்நாள்
ஆர்த்திடு நான்காம் அருந்திதியில்—பூர்த்தி
மணிவிழாவில் தந்தான் மணிமன்ற வேட்கு
பணிவிருந்து பன்மாலைப் பா.

கோவை கிழார்

முன்னுரை

ஒருநாள் கச்சேரி வேலையின் பொருட்டு மேட்டுப் பாளையம் சென்றேன். அங்கே புகைவண்டி நிலையத்தில் மேடையின்மீது வைத்திருக்கும் புத்தக விற்பனைச் சாலை எப்போதைப் போல என் கண்ணைக் கவர்ந்தது. சுலப விலைக்கு ஒரு நல்ல புத்தகம் கிடைத்தால் உடனே வாங்கிவிடுவது என் வழக்கம். “ இலண்டன் கதைகள் ” என்று பெயரிட்ட அழகிய சிறு புத்தகம் ஒன்று இருந்தது. விலையும் ஒன்பது அணுவாகக் குறைந்த விலை போடப்பட்டிருந்தது. திருப்பிப் பார்த்தேன். இலண் டன் நகரத்தைப்பற்றிப் பல அருமையான செய்திகள் மிகச் சுலப நடையில் எழுதப்பெற்றிருந்தன. அணு கொடுத்து வாங்கினேன். உடனே படித்தும் முடித்தேன். இதைப்போல எனது நகர் கோவைக்கு ஏன் ஒரு நூல் எழுதக் கூடாது என்று என் மனதில் தோன்றிற்று. எழுதுவதற்கோ எத்தனையோ கதைத் துணுக்குகள் இருக்கின்றன. இதுவரையில் எவரும் எழுதவும் இல்லை. ஏன் நானே அதை எழுத முயலக்கூடாது என்று நான் எண்ணினேன். என் நண்பர்களிடமும் கச்சேரியில் சொன்னேன். கோவையைப்பற்றி அவ்வளவு நல்ல கதைகள் உண்டா என்று சந்தேகித்துக் கேட்டார்கள். உண்டு என்று சொல்லி உடனே எழுதுவதாக உறுதி செய்துவிட்டேன். இதுதான் இந்நூல் எழுதுவதற்கு ஏற்பட்ட முதல் காரணம்.

'இலண்டன் கதை' என்ற நூலிலும் ஒரு முன்னுரை எழுதப்பட்டிருந்தது. "இலண்டனில் வசிக்கும் மக்களுக்கே இலண்டனைப்பற்றித் தெரியாது. இந்நகரில் உள்ள பல பாகங்கள், தெருக்கள், கட்டடங்கள் முதலியவைகள் எவ்வாறு உண்டாயின என்ற வரலாறுகள் எத்தனைபேர் அறிவார்கள்? பெரும்பான்மையான பேர்களுக்குத் தெரியவே தெரியாது. கேட்டால் 'அப்படியுமுண்டா' என அதிசயிப்பார்கள். ஆகவே அவைகளைப்பற்றிச் சொல்லும் ஒரு நூல் அவசியம் அல்லவா? அதனால்தான் இந்நூல் எழுதப்பட்டது" என முகவுரையில் கண்டிருந்தது. இக் காரணம் நமது ஊருக்கும் பொருந்தும். கோவை நகரின் காரணம் என்ன, எப்படி ஏற்பட்டது? இதன் சரித வரலாறுகள் உண்டா? பற்பல பாகங்கள் எவ்வாறு ஏற்பட்டன? தெருப்பெயர்கள் எவ்வாறு வந்தன? மற்ற நிலையங்கள் எவ்வாறு ஏற்பட்டன? இக் கேள்விகள் கேட்க அவைகளுக்குத் தகுந்த விடை வரைந்தால் கேட்பவர்களுக்கு மிகுந்த உற்சாகம் தருமல்லவா? ஆகவே அக் காரணத்தைக் கொண்டே இந்நூல் எழுதப்படுகின்றது.

இந்நூலில் எழுதப்பட்டிருக்கும் கதைகள் வெறும் கட்டுக் கதைகள் அல்ல. வெகுகாலமாக நகரத்தில் வழங்கி வந்த கர்ண பரம்பரைகள், பழைய நூல்களில் கண்ட வரலாறுகள், பெரியவர்கள் சொன்ன சரிதங்கள், கல்வெட்டு, ஏடு இவைகளில் கண்ட ஆதாரங்கள், ஆலயங்களில் கண்ட செய்திகள் முதலான பலவித ஆராய்ச்சிகளைக் கொண்டே

முன்னுரை

இந்நூல் எழுதப்பட்டுள்ளது. கற்றோர்களும் மற்றோர் களும் எளிதில் படிக்கும் பொருட்டுத் துணுக்குகளாகச் சிறு சிறு பிரிவுகளாகப் பிரித்துக் கதைகள் எழுதப் பட்டுள்ளன. ஆகவே கோவை வாசிகள் இதனைப் படித்து மகிழ்வார்களாக.

எனது நகர் வாசிகள் இக் கதைத் துணுக்குகளை வாசித்து அவைகளால் ஒரு சிறிது மகிழ்ச்சியும் மனச் சாந்தமும் பெற்றாராகில் அதுவே இந்நூல் எழுதியதன் பலனாகும்.

இதில் கண்ட வரலாறுகளைத் தவிர வேறு வரலாறு கள் கிடைத்தாலும் அன்பர்கள் கருணை கூர்ந்து அனுப்பி னாலும் அவைகளைப் பின்னால் சேர்த்துக் கொள்ளப்படும். இக் கதைகளை மாற்றி வேறு விதமாகக் கதைகள் வழங்குவதாயிருந்தாலும் அவைகளும் பின்னால் குறித் துக் கொள்ளப்படும். அதற்கு அன்பர்கள் உதவி பெரிதும் நாடப்படுகிறது.

கோவை ம. ரா.

---

17 - 11 - 1939-ல் எழுதப்பட்ட இம்முன்னுரை 15 - 5 - 1949-ல் அச்சாகியது.

பொருளடக்கம்

[எண் - பக்க எண்]

பொருளடக்கம்

“ இதுவோ எங்கள் கோவை ”

1. இதுவோ கோவை!

“யானைக்குத் தன்குட்டி பொன்குட்டி” என்றாற் போல் எங்கள் கோவை எங்களுக்கு ஒரு அருமந்த ஊர். யானைக்குட்டியைப்பற்றி அப்படிப் பட்ட ஒரு பழமொழி இல்லை என்று வாது செய்யா தீர்கள். அவ்விதம் யானைக் குட்டியைப் பற்றி ஒரு பழமொழி இருந்தாலுமென்ன இல்லா விட்டாலும் என்ன? எங்கள் ஊருக்கு உவமை காட்டுவதற்கு ஏற்ற ஒரு கருத்து அதில் இல்லையா? யானை நாற்கால் பிராணிகளில் சிறந்தது; மிகக் கம்பீரமானது. ஆகவே மிகக் கம்பீரமான எங்கள் ஊருக்கு அதுவே பொருத்தமான உவமை. “காக்கைக்குத் தன்குஞ்சு பொன்குஞ்சு” என்று பாமரர்கள் வழங்கும் பழமொழி எங்கள் ஊருக்குச் சிறிதும் ஒவ்வாது. எங்கள் ஊரார் காக்கையைப் போல் கன்னங்கரேல் என்று

இருக்க மாட்டார்கள். பயங்காளிகள் அல்ல. வாணிபத்திலும் கைத் தொழிலிலும் மற்றவர்களோடு பகிர்ந்து கொடுக்கும் இயல்பு இல்லாமல் தம் ஊராருக்கே ஊதியம் தந்து செல்வாக்கு அதிகரித்துக் கொள்வார்கள். ஆகவே காக்கைச் சுபாவம் இந்த ஊரில் கிடையாது. ஆனால் யானை சுபாவமோ மிகுதியாக உண்டு. பத்து ஆண்டுகளுக்குள் ஊர் நான்கு மடங்கு பெருகிவிட்டது. ஊர்த்தொகை யானை வயிறு போல உப்பிவிட்டது. பணப் பெருக்கமும் அதன் வல்லமை போல அதிகரித்து விட்டது. ஆகவே யானைக்குட்டி தான் எங்கள் ஊருக்கு ஏற்ற உவமை. மேலும் காக்கையைப் பிடித்துப் பழக்குவார் எங்கள் ஊரில் கிடையாது. யானையைக் கொண்டு வந்து பழக்கி வைப்பது மாத்திரமன்றி ஊர்கோலம், மகாநாடு, நாடகம், ஒலி ஒளிப்படம், இன்னும் சொல்லப் போனால் சுருட்டு விற்பனை விளம்பரத்திற்கும் பயன் படுத்திக் கொள்வது வழக்கமாகி விட்டது. தெரிந்த குணங்களைக் கொண்டுதானே தெரியாதவைகளுக்கு உதாரணம் காட்டுவது இலக்கணவிதி. இந்த முகாந்திரத்தினாலே தான் யானைக்குட்டியை எங்கள் ஊருக்கு உவமையாக எடுத்துக் காட்டினோம். இனி தாய் யானை தன் குட்டியிடம் கொண்டுள்ள வாழ்க்கை யின்னதென்று அறிவீர்களா? எந்தக் காக்கையும் அத்தனை அன்போடு தன்குட்டிக்கு இரை கொடுக்காது. யானை பால் வார்த்தல்லவோ வளர்த்துவருகிறது. ஆகவே குட்டி எத்தனை பழுப்பாகப் பிறந்தாலும் அதன் பேரில் மண்ணை அள்ளிக்கொட்டித் தன்னைப்போல்கருப்பாக்கி

விடுகிறது. அந்தத்தாய் யானையைக் காட்டிலும் அதிகமாக எங்கள் அருமந்த நகரை நாங்கள் பாராட்டுகிறோம். வேறு எந்த ஊருக்குச் சென்றாலும் எங்கள் ஊர் மேலேயே எங்கள் சிந்தனை. நினைப்பது மாத்திரம் அல்ல. பேசவும் செய்வோம். எங்கள் சிறுவானித்தண்ணீர், எங்கள் தென்றல் காற்று, எங்கள் தெரு அமைப்பு, எங்கள் பஞ்சாலைகள், எங்கள் தறிகள் இவைகள் எல்லாம் வேறு எங்கு உண்டு. ஆகவே எங்கள் ஊரைப்போல அருமையான ஊர் எங்குமில்லை என்று உண்மையிலேயே பெருமையாயும் பேசிக் கொள்வோம்.

ஐ ஐ ஐ

2. இயற்கைப் பெயரோ செயற்கைப் பெயரோ

காலை விடிந்ததும் என் வீட்டு மேல்மாடியிலே நின்றேன். கிழக்கே பல நிறங்கள் கொண்ட கீழ் வானத்தில் கதிரவன் தோன்றினான். அதில் சிகப்பே அதிகம். கதிரவனும் செக்கச் செவேல் என்னும் வண்ணத்தில் ஒரு உருண்டைப் பந்தாய்க் கிளம்பினான். மேற்கே திரும்பினேன். அவனது இளங் கதிர்கள் வில் போன்று எங்கள் நாட்டிற்கு மேற் கெல்லையாகப் படுத்திருக்கும் மேற்கு மலைத்தொடரின் மேல் விழுந்தன. நீல நிறமாகி இருந்த மலைத் தொடர் ஒளி பெற்று எரிமயமாகத் தொடங்கியது. இம் மலைத் தொடராகிய வில் சிவபிரானுடைய வில்லோ என எண்ணினேன். ஆம், அத் தொடரின் நடுவில் 6000 அடி உயர்ந்திருக்கும் வெள்ளியங்கிரியில்

வீற்றிருக்கும் பஞ்சலிங்கமூர்த்தி வேட்டையாடவோ, போர்புரியவோ இக் கல்வில்லை எடுத்தது போலும். மறுபடியும் மாலை அந்த இடம் ஏறி நின்றேன். கதிரவன் எங்கள் ஊர்ப்பகுதிகளைத் தன் வெப்பக் கதிர்களால் உற்சாகப்படுத்திவிட்டு மேற்கே சென்று அத் தொடருக்குப் பின்னால் மறையத் தொடங்கினான். அப்போதும் இரத்தமயமான செகப்பு ஆகியது வானம். அதன் கீழே மலைத் தொடர் எதிர் தோற்றத்தை விட்டு நீல நிறமாகத் தொடங்கியது. அப்போது அது உண்மையாக ஒரு பெரும் நீல வில் லென்று என் மனதில் பட்டது. வில்லின் நுனிகளைப் பார்த்தேன். தென்கோடியில் தருமலிங்கமலை. வட கோடியில் பொன்னூற்று மலை. எம்பெருமானுடைய வில் தரும்த்தில் தோன்றிப்பின் பொன் ஊற்றாக மிளிர்கிறதே என்று நினைத்தேன். வில்லின் ஒவ்வொரு கணுவிலும் ஒரு ஓங்கல் இருந்தது, ஐயாசாமி மலை, ஓரத்தி மலை, கரிமலை, பொரத்தி மலை, சென்னி மலை, நீலி மலை, இடிந்த மலை, பெருமாள்முடி, மருதமலை. குருடிமலை இவைகளே அவ் வில்லின் கணுக்கள். வில்லுக்கு நாண் அல்லது கயிறு எங்கே? அது நச்சிப்போனதினால் அழிந்ததோ, அதினால் அங்கு அது இல்லைபோலும். நாண் கண்ணிற்குத் தெரியா விட்டாலும் பாணம் (அம்பு) எனினும் உண்டோ? ஆம், உண்டு. அதுதான் காஞ்சிமா நதி எனத் திருமுறையில் சுந்தரர் வாக்கில் கண்ட நொய்யல் ஆறு. இது வெள்ளி மலையில் தொடங்கி நேரே கிழக்காகக் கோவைமேல் ஓடுகிறது. இந்த ஆறாகிய அம்பின் ஓட்டமே ஓட்டம். மாரிக்காலத்தில் இதன் வேகத்

தைக் காணவேண்டும். ஈசன் அம்பின் வேகத்தைச் சொல்லவும் வேண்டுமா? அந்த அம்பின் வாலில் கட்டியிருக்குங் இறகுகள் செவ்விறகு போலும். அச் செவ்விறகே கோவை நகர். சுற்றிலும் கரிசல் தரை இருந்தாலும் கோவை நகரில் செம்மண் மிகுதி என்று அறிவோம். ஆகவே தான் கோவைப் பழமோ என்று வியந்து இதனை கோவை எனப் பெயரிட்டார்போலும். நான் கண்ட காட்சியை இந்நாட்டிற்கு 400 ஆண்டுகளுக்கு முன் விஜயம் செய்த வசைக் கவிகள் காளமேகப் புலவர் கண்டார்போலும். அதைப் பார்த்துத்தான் அப் புலவர் பெருமான் "நாண் என்றால் நச்சிருக்கும் நற் சாபம் கற் சாபம் - பாணந்தான் மண் தின்ற பாணம்" என்றார் போலும். நொய்யல் செம்மண்ணை அறுத்துக்கொண்டே போவதால் அது மண் தின்ற பாணம் ஆகாதா? ஆகவே கோவை ஒரு இயற்கை அம்பின் சிகப்பு இறக்கை என அன்று அறிந்தேன்.

ை ை ை

3. இடம் இருண்ட வனமா

பல நூறுயிரம் ஆண்டுகளுக்கு முந்தி நாம் இருக்கும் நிலவுலகம் கதிரவனிடமிருந்து துண்டுபட்டு வெளிவந்த ஒரு நெருப்புப் பிழம்பாம். அந்தக் குட்டித் துண்டும் தாய்ப் பிழம்பைப்போல் அதனைச் சுற்றிக் கொண்டிருந்ததாம். அவ்வாறு சுற்றச்சுற்றக்குளிர்ந்து போய் நீர்மயமாகிப் பின் கெட்டியாகி அது ஐந்து பூதங்களால் ஆனதோர் உலகம் ஆயிற்றும். பிற்கு

பயிர் பச்சைகள் தோன்றி உயிர்கள் பிறந்தனவாம். முதலில் பயிர்ப்பச்சைகள் எங்கும் படர்ந்து பெரிய வனமாக இருந்தனவாம். அதில்தான் காட்டுப்பிராணிகள் வாழ்ந்து வந்தனவாம். இவ்வரலாறு பூவியல் கலையார் கூற்றுகும். உலகம் முழுதுமே இருளடர்ந்த காடுகள் சூழ்ந்திருந்தால் கோவை நகர் இருக்கும் இடம்தான் அதை விட்டு வேறுவிதமாக இருக்கக் கூடுமோ? வில் போன்ற மேற்கு மலைத் தொடரிலிருந்து மழைபெய்தலினல் பல அருவிகள்தோன்றின. அவ்வருவிகள் பாறைகளில் விழுந்து குதித்தன. பிறகு நிலமட்டத்திற்கு வரவே சிற்ருறுகளாகி ஓடின. இரண்டு மூன்று காதங்களுக் குள்ளாக அவைகள் ஒன்று கூடி பள்ளத்தாக்கின் வழியே கிழக்கே ஓடின. அச் சிற்ருறுகளைப் பிற்காலத்தார் இருட்டுப்பள்ளம், சிற்ருறு, பெரியாறு, ஆனையாறு, காஞ்சி நதி முதலிய பெயர்களால் வழங்கினர்கள். ஒன்று சேர்ந்த ஆற்றிற்கு நொய்யல் என்ருர்கள். நொய்போல உருவம் குறுகி நொய்போல உண்போர்க்கு சத்து அளிக்கும் தன்மை உடைத்தா யிருந்ததால் அதனை நொய்யல் என்ருர்களாம். இந்த நொய்யலாறு வாமனனைப்போல் இருந்தாலும் வெள்ளம் உறில் திரிவிக்கிரமன்போல் பெருகிநாடு முழுதும் மலை வளங்களை நிரப்பிப் பயிரைப் பெருக்கும் தன்மை உடையது. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முந்தி இவ்வாற்று வண்டல்களினல் செழித்த பள்ளத்தாக்கு முழுதும் ஒரே இருண்ட ஆரணியமாக இருந்தது. "சந்தம்ஆர் அகிலொடு சாதி தேக்க்ம்மரம் உந்துமாம்"

என்று சம்பந்தர் கூறியது பொன் முகலிக்கல்ல, நொய்யலுக் கென்று கூறினுல் மிகையாகாது. தேக்கு, ஈட்டி, வேங்கை, இருள், மருது முதலிய பெருமரங்கள் எங்கும் முளைத்துப் பள்ளத்தாக்கு முழுதும் இருண்டு கிடந்தன. அத்தகைய நீர்வளம் நிலவலம் பொருந்திய வனத்தில் மழைக்குக் குறைவா ? பெரிய சோலைகள் அடங்கிய குன்றுகள் இருந்தால் மழை மிகுதியாகச் சுரக்கும் என்பது கலைஞர் கூற்று அல்லவா. அப்படிப்பட்ட செழிப்புள்ள நாட்டில் யார் வாழமுடியும் ? அதற்கு ஏற்ற உயிர்வகைகள் தான் வாழமுடியும் அல்லவா !

௵ ௵ ௵

4. இருளர்பதியோ இது !

இருளடர்ந்த வனத்தில் எப்படிப்பட்ட உயிர்கள் வாழும் ? இடத்திற் கேற்ப உயிர்களின் நிறமும் குணமும் இருக்கும் என்பர் உயிர் நூலார். நீரில் வாழும் உயிர்களைப் பார்ப்போம். நீருக்குள் ஆழ்ந்த இடங்களில் கருப்பு நிறமுள்ள கடல் பிராணிகள் வாழும். இருட்டிலும் அவைகளுக்குக் கண் தெரியும். நீரில் மேல்பகுதியில் வாழும் மீன்கள் தான் பல நிறங்களைக் கொண்டு இருக்கும். அவைகளைக் கதிரவன் வெப்பம் தாக்குமன்றோ? கொடிகளில் வாழும் பூச்சிகள் சிறு துரும்புகளைப்போல் உடலும் அவயவமும் பெற்றிருக்கின்றன. பச்சைக் கொடியில் சுற்றும் பாம்பு பச்சை நிறத்தோடு இருக்கும். புள்ளிகளாக ஒளி விழும் காடுகளில் வாழும் சிறுத்தை, புலி, புள்ளிமான்

முதலிய காட்டு மிருகங்கள் தம் தோலிலும் புள்ளி களைக் கொண்டு இருக்கும். ஆகவே இருண்ட காட்டில் வசித்த மக்கள் இருள் போன்ற நிறமுடைய மக்களாக அன்றோ இருப்பார்கள்; அந்தக்கார் நிறத்தைக் கண்டு அம்மக்களை இருளர் என்று அழைத்திருத்தல்தப்பல்ல. மேலும் மலைச்சரிவுகளில் வாழ்ந்த மக்களை மலைசர் என்றார்கள். காட்டில் வாழ்பவர் களைக் காடர் என்றனர். இப்போதும் இம்மேற்குமலை களில் வாழும் மக்கள் இருளர், மலசர், காடர் எனப் படுகிறார்கள். ஆகவே ஈராயிரம் ஆண்டுகளுக்கு முந்தி நொய்யல் பள்ளத் தாக்கில் பரவியிருந்த வனங்களில் வாழ்ந்த குடிகள் இருளர் என்னபட்டால் ஒரு வியப்பல்ல. அப்பண்டைக் குடிகள் சிறு குடிசைகளைக் கட்டி நீர் கிடைக்கும் ஓடைகளுக்கு அருகில் வசித்து வந்தார்கள். அவர்களுடைய இருப்பிடங்கள் பத்துப்பதினைந்து குடிசைகள் கொண்ட குறிச்சிகளாகும். இருளர் குறிச்சிகளுக்குப் பதி என்று பெயர் வழங்கி வந்தது. மருதைப்பதி (மருதமலையில்), வெள்ளைப்பதி (வெள்ளிமலைக்கருகு) குமுட்டிப்பதி, கிருட்டிணும்பதி, அப்பாச்சிக் கவுண் டன் பதி முதலிய பெயர்கள் கோவைக் கருகில் இருளர் வாழும் சிற்றூர்களின் பெயர்கள் ஆகும். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முந்தி நொய்யலாற்றங் கரையில் ஒரு இருளர் குடியேற்றம் இருந்தது. அவ் விருளர் பதியில் கோவன் என்ற ஒரு தலைவன் இருந் தான். அவன் வெகு புகழோடு தன் குறிச்சியைப் பாலித்து வந்ததினால் அப்பதிக்கு அவன் பெயரே

நிலைத்து விட்டது. அதனால் அப்பதிக்கு கோவன்பதி என்ற பெயர் ஏற்பட்டது. அக்கோவன்பதி நீர்ச் செழிப்பு நிலச் செழிப்புகளாலே மிகவும் பெயர் பெறத் தொடங்கிற்று. ஆகவே கோவை இருளர் பதியோ என்று அதில் ஐயமும் நாணமும் கொள்ள வேண்டாம்.

௸ ௸ ௸

5. அவன் வழிபட்ட தெய்வம் எது ?

இருளர் குறிஞ்சி நில மக்கள். காட்டில்வேட்டை ஆடிப் பிழைப்பார்கள். தினை விதைத்தல் தேன் எடுத்தல் அவர்களுடைய பொதுத் தொழில். மலைபடு பொருளைச் சேகரித்துப் பயன் படுத்திக் கொள்ளுவார் கள். காட்டில் கிடைக்கும் மயிற்பீலி, பாசிமணி புலிப்பல் அவர்களுடைய அணிகள். மரப்பட்டை தோல் அவர்களுடைய ஆடைகள். பன்றி, எருமை, ஆடு, மாடு, நாய் அவர்களுடைய பிராணிகள். இவ் விதச் சூழ்நிலைப் பொருள்களைப் பெற்றிருந்ததினால் காட்டுமிருகங்களுடைய அபாயத்தை விலக்கவேண்டி வேட்டைத் தொழிலை மிகுதியாகக் கொண்டார்கள். அவ்விதமான அபாயத் தொழிலுக்கு வேண்டிய பாதுகாப்பு அவர்களுக்கு வேண்டும் அல்லவா? தாங்களே நாய் வில் வேல் வாள் முதலியவைகளைக் கொண்டு பாதுகாத்துக் கொள்ளலாம். இருந்தாலும் தங்களால் ஆகாமல் மிதமீறிய அபாயமும் வருவ துண்டு. அப்போது தெய்வத்தின் மேல் பாரம் போட்டுப் பூசை செய்வார்கள். அதற்காக பருவம்

தோறும் விழாக் கொண்டாடுவதுண்டு. தங்களால் செய்ய முடியாத ஒன்றைச் செய்விக்க அருள் புரியும் பொருள் யாதாக இருக்க முடியும்? ஆற்றலே உருவமாக இருக்கும் பொருள் அன்றோ அதுவாகும். இறைவனுக்கே ஆற்றல் மிகுதி. ஆகவே ஆண் வடிவப் பொருளுக்கு வேலன் என்று பெயரிட்டார்கள். ஆற்றலுள்ள இறைவனுக்கு அழகும் இருக்கும் அல்லவா? ஆகவே அவனை முருகன் என்றார்கள். அவன் கோயிலை ஒரு நீர்ச்சுனை வடிந்தோடும் மலைச் சாரலில் மருத மரத்தடியில் அமர்த்தினார்கள். அம் மருதமே அவனுடைய ஆற்றல் அமைந்த வேலாகும். அத்தெய்வமே மருதமலை ஆண்டவர் ஆனார். எத் தொழிலைச் செய்யத் தொடங்கினாலும் ஆண்டவனை வழிபட்ட பிறகே அதனைத் தொடங்குவார்கள். அதற்காகப் பூசை போடுவதுண்டு. மறியறுத்துக் குருதிச் சோறு ஆக்கிப் பலியிட்டு வேலன் ஆட அவன் வாக்கைப் பெற்று எத்தொழிலையும் செய்வார்கள். சிறப்பாக வேட்டைக்குச் செல்லும் போது அவ்வாறு விழா கொண்டாடுவதுண்டு. மேலும் பிணி முதலியவைகள் கண்டால் அதற்காக வேண்டுதலை மேற்கொண்டு அவனுடைய கோயிலாகிய மருதமலைக்குத் தம் சிறந்த முதற்பொருள்களை காவடிக்கு அமைத்து எடுத்துச் செல்வார்கள். இவ்வித வழிபாடுகள் பண்டைக் காலம் தொடங்கியே இருளர்களில் நடைபெற்று வந்தன. அவையே இக்காலத்தில் படித்த ஊர் வாசிகளிலும் நடைபெற்றால் அதில் வியப்பு ஏதேனும் உண்டா! பழையன கழிதல் நன்னூலில்

மட்டும் உண்டே தவிர நடவடிக்கையில் இல்லை அல்லவா.

ೞ ೞ ೞ

6. கோணியம்மன் அவன் வழிபட்ட அம்மனே

ஆற்றலுக்கும் காவலுக்கும் சிறந்த அண்ணல் மலை நம்பி என்று இருளன் கொண்டு வழிபட்டான். ஆனால் அவன் பெண்ணின் பெருமை அறியாமல் இருக்கவில்லை. ஆற்றலின் உருவம் பெண் என்று அவன் எளிதில் உணர்ந்தான். ஒரு நாள் வேட்டைக்குச் சென்றான். தன் இனத்தாருடன் ஒன்று கூடிக் காட்டுப்பன்றி, சிறுத்தை, புலி முதலிய பல காட்டுப் பிராணிகளையும் கொல்லும் காலத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் உள்ள ஒரு பேதம் கண்டான். ஆண் புலியைக் காட்டிலும் பெண் புலி வெகு சீற்றத்துடன் எதிர்த்தது. அதிலும் குட்டிகளுடன் கூடிய பெண் புலிக்கு உண்டாகும் சீற்றமும் அப்போது அது கொள்ளும் ஆற்றலும் எடுத்துரைக்க முடியாததே. ஏன் என்று சிந்தித்தான். தன் குட்டிகளின் மீது வைத்திருக்கும் அன்பே அதற்குக் காரணம் என்று அறிந்தான். அன்பு மென்மை கொண்டபோதிலும் அதிலிருந்து சிறந்த ஆற்றல் ஏற்படுகிறதல்லவா? ஒரே உயிர் அன்பு உருகும்போது மெல்லியதாகவும் அழகுள்ளதாகவும் இருக்கிறது. அந்த அன்பினால் தன் குட்டியைக் காக்க முயலும்போது ஆற்றலில் சிறந்து கொடூரம் அடைகிறது. என்ன இயற்கை முரண்? பின் தன் பதிக்கு வந்தான். தன் குடிகளிலும்

இதே இயல்பு கண்டான். ஒரு இருளத்தாய் தன் குழவியை எத்தனை அன்போடு பால்தந்து வளர்த்துகிருள். ஒருநாள் அவள் குடிசைக்குள் ஒரு சிறுத்தை புகுந்து அக்குழவியைத் தூக்கிச் செல்லவந்தது. வெளியே நீர் எடுக்க அருவிக்குச் சென்ற தாய் அவ்வபாயத்தைக் கண்டு சிறிதும் அஞ்சாமல் தன் கையில் இருந்த நீர்க் குடத்தால் அச்சிறுத்தையை ஓங்கி அடித்தாள். உடனே அவ்வரவம் கேட்ட ஏனை மக்கள் வேல்களைக் கொண்டு அதனைக் குத்திக் கொன்ருர்கள். அந்த பேதைத்தாய் எத்தனை ஆற்றல் வாய்ந்தவள். ஆகவே தாய்மைக்குள்ள வல்லமை எத்துணையது. நம்மைப்பெற்றவள் நம்தாய். ஆகவே உலகத்தில் உள்ள எல்லா உயிர்களையும் உண்டு பண்ணினவள் பெருந்தேவியே. அவளே காப்பதில் மென்மையும் அழகும் கொண்டவள். பகைவர் வந்தால் அவ்வன்பே ஆற்றலாக மாறுகிறது. அவளையே உலக அம்மை என வழிபட வேண்டும் என்று இருளன் அறிந்தான். தன் பதியில் ஒரு அம்மன் ஆலயம் ஏற்பட்டது. அதற்குச் சிறந்த பொருள்களை சேகரித்து வழிபட்டான். மலைபடு பொருள்களேயன்றித்தம் அருமை உயிர்ச் சொத்துக்களாகிய ஆடு, எருமை, பன்றி இவைகளையும் பலியிட்டு வணங்கினன். வணக்கத்தைக் காட்டுவது தியாகத்தினுல் அல்லவோ முடியும்? ஆகவே இம் மூன்று அருமையான உயிர்களைப் பலியிட்டு வந்தான். அது முதல் கொண்டு அவைகளுக்கு முப்பலி என்ற பெயர் வரத்தொடங்கிற்று. ஒரு கல்லால் உருவம் செதுக்கி அதனை ஒரு மேடைமேல் நட்டு அதன் மேல்

ஒரு கூறை இல்லம் உண்டாக்கிப் அதனை வழிபடும் கோயிலாகக் கொண்டான். ஒருநாள் ஏதோ ஒரு காரணத்தில் அவ்வுரு சாய்ந்திருந்தது. சாய்ந்திருப்பதே அவ்வம்மனின் நோக்கம் என்று கண்டான். அப்படியே சாய்ந்து கோணலாக நின்று விட்டபடியால் அவ்வம்மனை மக்கள் கோணம்மன் என்று கூறத் தொடங்கினர்கள். நாளடைவில் அக்கோணம்மன் குலதேவதையாகவும் ஊர்த் தேவதையாகவும் ஆகிவிட்டது.

ஃ ஃ ஃ

7. கீழும் மேலும் இடையில் சந்தித்தது

கிழக்கே சோழ நாட்டில் கரிகால் சோழன் செங்கோல் செலுத்தி வந்தான். காவிரியின் நீர்ச் செழிப்பால் மக்கள் குறைவின்றி வாழ்ந்து வந்தனர். மேற்கே சேரநாட்டில் சேரமான் பெருமாளும் தனது நாட்டில் செங்கோல் செலுத்திச் சமயத்தில் ஈடுபட்டுவந்தார். இருவருக்கும் இடையிலே கொங்கு நாடு காடடர்ந்து குடியேற்றம் இன்றிக்கிடந்தது. அக்காலத்தில் சமய முதலிகள் மூவர் தோன்றி நாடு முழுவதும் பாடல்களை அருளிச் செய்து மக்களைச் சமயப்பணியில் ஈடுபடச் செய்தனர். அப்போது சேரமான் பெருமாளுக்கும் சமய முதலிக்கும் திருவருளால் நட்புரிமை பூண்டது. சேரமான் சோழநாடு விஜயம் செய்து சமய முதலியுடன் ஆலயங்களில் ஈடுபட்டு சேவை செய்து வந்தார். சமய முதலி கரிகால் சோழனைச் சந்திக்கச் செய்தார். சோழன் இடை நாட்டைச் சீர்திருத்த

எண்ணினன். தாய்நாட்டிற்கு நீர்வளம் கொடுக்கும் பொன்னி நதியின் மூலம் காணவும் ஆர்வம் இருந்தது. இப்படிக் குடியேற்றத்தில் ஆர்வம் உண்டாகவே சமய முதலியின் உதவியினுல் சோழனும் சேரனும் இடை நாடாகிய கொங்கு நாட்டிற்கு விஜயம்செய் தார்கள். முதற்கண் கொங்கு நாடு புகுவதற்குக் காவிரியைத் தாண்டி வானிகூடும் திருத்தலமாகிய பவானி என்ற திருநணுவிற்கு வந்து சேர்ந்தார்கள். அங்கிருந்து புறப்பட்டு ஒவ்வொரு திருத்தலமும் தரி சித்துக் கோயில்களுக்கு வேண்டிய திருப்பணிகளைச் செய்வித்துக் கடைசியில் மேல்கொங்கில் துடிய லூருக்கு வந்து சேர்ந்தார்கள். அங்கே குருடிமலையி லிருந்து தோன்றிவரும் அகத்திய நதியில் (இப்போது மதுரநதி)நீராடி அகத்தீசுரம் உடையாரைத் தரிசித்து (இப்போது விருந்தீசுவரர்) திருமுழுக்கு வழிபாடு முத லியவைகளைச் செய்து வழிபட்டார்கள். பிறகு அங் கிருந்து காஞ்சி நதியின் கரையில் உள்ள பட்டிப் பெருமானைத் தரிசிக்க வேண்டும் என்ற ஆர்வத்தினுல் புறப்பட்டார்கள். அப்போது சமயமுதலியின் அழைப் புக் கிணங்கிப் போகும் வழியில் கோவன் என்ற இரு ளன் வாழ்ந்த பதியின் வழியே சென்றூர்கள். அது பெரிய வனமாக இருக்கக் கண்டு அதனைச் சீர்திருத் திக் குடியேற்றுவிக்கும் எண்ணம் கொண்டார்கள். இந்த எண்ணத்தை யாவரும் ஒத்துக் கொள்ள அங்கே தங்கி வேலை செய்யத் தொடங்கினுர்கள். என்னே திருவருள்! காடு வீடாகி; பதி புத்தூர் ஆகும் தருணம் வந்தது.

8. ஊர் கட்டுகையில் ஊர்த் தேவதை சீற்றம்

கரிகால் சோழன் வேடர் கம்பளத்தை விட்டுக் கோவனது இருளடர்ந்த வனத்தை வெட்டும்படி கட்டளை யிட்டான். அவர்களும் பெரிய பெரிய மரங்களை யெல்லாம் வெட்டி வெளி ஆக்கினார்கள். அவ்வனத்து நடுவில் அதனைக் காத்துக் கொண்டிருந்த கோணியம் மன்என்ற தேவதையின் புனித உபவனம் இருந்தது. அவ்வனத்தில் அழகானதும் மனோ ரம்மியமுமான பூ மரங்கள் இருந்தன. அதனை அறியாத வேடர் கம்பளம் அவ்வனத்துப் புனித மரங்களில் ஒற்றிரண்டை வெட்டத் தொடங்கினார்கள். அவ்வாறு அபராதம் செய்த அவ்வேடர்களுக்குக் கண்மங்கத் தொடங்கியது. சிலர் மூர்ச்சித்து விழுந்தார்கள். உடனே ஒருவன்மீது ஆவேசம் வந்து அவ்வாறு செய்தது குற்றம் என வெளியிட்டுப் பின் அத்தேவதை மேல் நடத்த முடியாதபடி கர்ச்சித்துத் தடை செய்தது. அது கேட்ட சோழன் சமய முதலியை அழைத்து அந்தத் துர்க்கையை ஒப்பும்படி சொல்லச் சொன்னான். சமய முதலியும் துர்க்கையை வணங்கி தாம் செய்து வந்த காரியம் நற்காரியம் என்றும் அதனைச் செய்வதற்கு ஒப்புக் கொள்ளும்படிக்கும் தாழ்ந்த வணக்கத்துடன் விண்ணப்பித்தார். தேவதை தனக்கு ஏற்பட்ட முறைகளைச் சொல்லி கோவனால் ஏற்படுத்திய முப்பலியும் தர வேண்டியதென்று சொல்லிற்று. சமய முதலி அவ்வாறே செய்வதாக வாக்களித்துப் புது ஊர் கட்டிய பிறகு சோழனைக் கொண்டு அத்தேவதைக்கு ஆலயம்

எழுப்பித்து சகல நிமந்தங்களையும் ஏற்படுத்துவதாக ஒத்துக் கொண்டார். தேவதையும் சம்மதித்து சாந்தம் அடைந்தது. அவ்வாறு சம்மதி பெற்றுக் கரிகால்சோழன் வேடர் கம்பளத்தைக் கொண்டு மற்றும் நின்ற மரம் செடி கொடிகள் எல்லாம் வெட்டி நிலத்தை செய் நேர்த்தி பண்ணினான், வனாந்திரம் அழிந்து ஊர் ஏற்படுவதற்கு வேண்டியபடி நிலம் பக்குவமடைந்தது,

ஃ ஃ ஃ

9. ஊரமைப்பும் ஊர்ப் பெயரும்

காடழிந்து வெளியானவுடன் சமய முதலியின் ஆலோசனையின் பேரில் தகுந்த சிற்பிகளைக் கொண்டு கோட்டையும் பேட்டையும் கட்டுவிக்கச் சோழன் முயன்றான். அவைகளைக் கட்டுவதற்கு வேண்டிய பொருள்களைச் சேகரித்து ஆள்களை விட்டுக் கட்டத் தொடங்கினான். ஊருக்கு ஒரு பெரிய குளம் கட்டிநீர் வசதி ஏற்படுத்தினான். குடி மக்கள் வேளாண்மை செய்யப் பல வசதிகளையும் ஏற்படுத்தினான். நொய்யலாற்றிற்கு அணை கட்டிக் கால்வாய் வெட்டிக் குளங்களில் நீர் நிரப்பினான். அக்கால்வாய்க்கு அதுமுதல் இராச வாய்க்கால் எனப் பெயர் பெற்று விளங்கியது. அந்நீர் வந்து நிரம்பிய ஏரிக்கு பெரிய ஏரி என்ற பெயர் வந்தது. அதிலிருந்து சிறிய ஏரிக்கு நீர் வடிந்தது. அதிலிருந்து மீதி ஆனநீர் வால்போல் வளைந்த குளத்தில் விழுந்தது. அதற்கு அதன் வடிவால் வாலாங்குளம் எனப் பெயர் வந்தது. இக்

குளங்களில் நிரம்பிய நீரைக் கொண்டு குடியானவர்கள் நன்செய் நிலங்களைப் பயிர் இட்டார்கள். நாடும் நகரமும் செழிப்படைந்தது. இப்புதிய நகரத்திற்குப் பெயரிட வேண்டி ஆலோசித்ததில் முந்தி கோவனால் ஏற்பட்டு இருளர் பதியாகக் கோவன் பதி என்று வழக்கத்தில் வந்து விட்டபடியால் அதனை மாற்ற மனம் இன்றி அப்புதூருக்கும் கோவன் புத்தூர் எனப் பெயரிட்டான். அப்பெயரே கல்வெட்டுகளிலும் கண்டது. பிற்காலத்தில் அப்பெயர் மருவி கோயமுத்தூர் என வழங்கி விட்டது. ஊர் அமைப்பு ஏற்பட்டவுடன் சோழனுடன் வந்த சமய முதலி தன் அன்பர்கள் சடையப்பன் கத்தூரி ரங்கப்ப செட்டி இவர்களைக் கொண்டு புத்தூரில் பதினெண் வகை மக்களையும் குடியேற்றி வைத்தார். நாளுக்கு நாள் ஊரும் பெருத்து வளர்ச்சி யுற்றது. மக்கள் மகிழ்ச்சியுடன் வாழ்ந்தார்கள்.

ஃ ஃ ஃ

10. புதூர் நிர்வாகம்

ஊர் கட்டிவிட்டால் போதுமா? அதனைப் பரிபாலிக்க ஒரு நிர்வாகம் வேண்டாமா? ஊர் கட்டினது சோழன். அக்காலத்தில் சோழர் நாட்டு ஆட்சி முறையில் சிறந்து விளங்கினவர்கள். மக்கள் இன்ப வாழ்க்கை பெற்று குறைவற்றிருக்க வேண்டுமென்பது அவர்கள் நோக்கம். வெறும் ஏகாதிபத்தியக் கொள்கைகள் கொண்டவர்கள் அல்லர். முடியரசாக நாட்டு அரசியல் அமைந்திருந்த போதிலும் குடியரசின்

விதைகள் அப்போதே ஊற்றுப் பெற்றிருந்தன. நாட்டு மத்திய நிர்வாகம் முடியரசின்கீழ் இருந்தது என்றாலும் அமைச்சர்குழாம் அவனைச் சமரசப் படுத்தி வந்தது. பிறநாட்டுச் சம்பந்தத்திற்கே அவன் முழு உரிமையும் பெற்றிருந்தான். உள்நாட்டு நிர்வாகத்திலே குடிகளுக்கு நிரம்பிய உரிமைகள் இருந்தன. ஊர்களின் சகல நிர்வாகங்களையும் ஊர்க்குடிகளே நடத்தி வந்தார்கள். அதற்குப் பஞ்ச வாரியச் சபைகள் இருந்தன. அச்சபையின் அங்கத்தினர்கள் ஊராரால் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். குட ஓலை மூலமாக அத் தேர்வுகள் நடைபெற்றன. தேர்வு முறையை ஆராய்ந்து பார்த்தால் இக்காலத்துத் தேர்தலில் உள்ள பண்புகள் எல்லாம் அக்காலத்திலும் இருந்தன என அறிய வேண்டும். ஓர் ஊரில் இருந்த ஆலய மேற்பார்வை, பாய்ச்சல் வசதி, உழவுப் பிரிவினை, வரிவாங்குதல், குற்ற விசாரணை முதலிய உள்நாட்டு விவகாரங்கள் எல்லாம் அவ்வூர்ச் சபையாராலேயே நடத்தப்பட்டன. அப்படிப்பட்ட முதிர்ச்சி பெற்ற அரசியலை நடத்திவந்த சோழ மன்னன் தான் புதிதாக நிர்மாணித்த கோவன்புத்தூருக்குத் தகுந்த நிர்வாகத்தை ஏற்படுத்தாமல் போவானா? நிர்வாகம் நிலை நின்றிருக்க வேண்டி தலைவர்களை தெரிந்தெடுக்கச் செய்தான். தனக்கு அமைச்சன் போன்று கூடவே இருந்த சமயமுதலியை அழைத்து ஊர்த்தலைவர்களைத் தேர்ந்தெடுக்க ஆணை யிட்டான். அவரும் தனது நண்பர்களைக் கொண்டு தக்க ஆட்களை தெரிந்தெடுத்தமைத்தார். உழவுக் குடியானவர்களுக்குச் சோழ

நாட்டுப்புரவச்சேரி வேளாளன் பிச்சையப்பன் என்றவனை சடையப்பன் முதன்மையாக வைத்தான். செட்டிமைக் குடிகளுக்குத் தலைவனாகக் கவரை வரதப்பனை கஸ்தூரிங்கப்ப செட்டி தெரிந்தெடுத்து வைத்தான். நகரதிகாரத்திற்கு வட வாடமன்றாடியைச் சோழன் அமைத்தான். கணக்குக்குச் சிதம்பர அதிகாரிப் பிள்ளையை வைத்தான். இவ்வாறு கிராம நிர்வாகிகள் நியமனம் பெற்றார்கள். கிராமமும் சரிவர நடைபெற்றது. இந்நிர்வாகிகள் பெயர்கள் சரியா என்ற ஆராய்ச்சி வேண்டியதில்லை. நியமனத் தன்மை மாத்திரம் எடுத்துக் கொள்வோம். இவர்களுக்குப் பரம்பரை இருந்தாலும் ஆயிரம் ஆண்டில் எவ்விதம் ஆயிற்றோ கூற இயலுமா? வேளாளர், செட்டியார்கள் மணியம் கணக்கு இப்போதும் உண்டு என்க.

ஐ ஐ ஐ

11. கோட்டை ஈசுவரன் கோயில்

புது ஊரைக் கட்டிவைத்த சோழன் அவ்வூருக்கு ஒரு கோயில் கட்டி வைக்கவில்லையா என்று கேட்கலாம். சமயமுதலியே கூடவரும்போது கோயில் எழும்பாதிருக்குமா. "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற மொழி அவர்களுக்குத் தெரியாதா? கோட்டை கட்டுவதற்காக மரங்களை வெட்டி நிலத்தைச் சோதிக்கையில் மிக அழகுடன் அங்கு ஒரு சுயம்புலிங்கம் தோன்றிற்று. அதன் வரலாற்றை விசாரித்ததில் அது சங்கீசுரமுடைய நாயனுர் என்று தெரிந்தது. உடனே அச்சங்கீசுரமுடையாருக்குக்

கோயில் கட்டுவித்தான் சோழமன்னன். கருப்பக் கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், பிரகாரம், சுற்றுத் திருமதில், திருக்குளம், தீர்த்தம், நந்தவனம், முதலியவைகள் எல்லாம் அளவை நூலில் கண்டபடி செய்வித்தான். கோயில் திருப்பணி முடிவடைந்தவுடன் சமயமுதலி உத்தம பண்டிதரைக் கொண்டு சங்கீசுரம் உடையார்க்கு புண்ணியாவசனம், அட்டமந்திரம், பிரதிட்டை முதலான சடங்குகளைச் செய்வித்தார். பிறகு கரிகால்சோழன் சேரனிடத்தில் கை நிறைய நிலம் கொண்டு சங்கீசுரமுடையார் திருக்கோயிலுக்கு ஐந்நூறு பொன் கிராமமும் ஐம்பது பொன் சுங்கத் தீர்வையும் ஐம்பது மிடா விரைப்புப் பாட்டமும், குளக்கரையில் ஐம்பது மிடா விரைப்புப் பாடும் மானியமாகக் கொடுத்து எல்லை கண்டு சூலக் கல் போட்டுவித்தார். அவ்விதம் ஆலயத்திற்குவிட்ட மானியத்தில் சமய முதலிக்குப் பத்தில் ஒன்று விட்டு அதற்குக் கல் சாசனம் போடுவித்தார். பிறகு அந்த ஆலயத்திற்கு நம்பி முதல் திருவலகு வரை ஆள் போட்டுவித்தார். ஐம்பது குடிவைத்தார்.

நாட்டாண்மை : கைக் கோளரில் திருவம்பல முதலி
நாயனம் : வேலாயுத நட்டுவன்
நம்பி : சின்னப்ப நம்பி
தாசி : மயிலி மாணிக்கம்
மணியம்: சோணாசல முதலி. முதலியவர்களை நியமித்தார்.

அவர்களுக்கெல்லாம் ஓலை பட்டயம் எழுதி, வெற்றிலைப் பாக்குக் கொடுத்துச் சமய முதலி ஒரு திட்டம் ஏற்படுத்தினார்.

சங்கேசுரர் என்ற பெயரே இப்போது சங்கமேசுவரர் என்றும் கோட்டையீசுரர் என்றும் கோட்டை சுப்பிரமணியர் கோயில் என்றும் வழங்கப்படுகிறது.

ை ை ை

12. கோணியம்மன் கோயில் அமைப்பு

முன்னமே கோன மாகாளி என்ற துர்க்கைக்கு சமய முதலி வாக்களித்தபடி சோழனைக் கொண்டு வடக்கு வாசல் கோயில் ஒன்று கட்டுவித்து உத்தம பண்டிதரை அழைத்து அதில் கோணியம்மனை நிலை நிறுத்தி புண்ணியாங்கம் அஷ்ட மந்திரம் பிரதிஷ்டை முதலியவைகளைச் செய்வித்தார். பிறகு கரிகால் சோழன் சேரனிடத்தில் கை நிறைய நிலம் பெற்றுத் துர்க்கை ஆலயத்திற்கு 10 மிடா விரைப்பு புன்செய் நிலமும், 10 மிடா விரைப்பு நன்செய் நிலமும் மானியம் விட்டு நிலத்திற்கு எல்லை கண்டு சூலக்கல் நாட்டுவித்தார். அந்த ஆலயத்திற்கு விட்ட மானியத்தில் சமய முதலிக்குப் பத்தில் ஒருபங்கு என்று கண்டு ஆலயத்தில் கல்சாசனம் போடுவித்தார். பிறகு சமய முதலி ஆலய வழிபாட்டிற்கு ஆதியோகி கோரக்க நாதர் வர்க்கத்தில் வந்த கப்பினிப் பண்டாரத்தை வைத்தார். அவரைக் கொண்டு துர்க்கைக்கு அபிஷேகாதிகளைச் செய்வித்து ஆடு பன்றி கோழி ஆகிய முப்பலி ஊட்டுவித்து 'நாம் முன் சொன்னபடி முப்

கோணியம்மன் என்ற பெயர் கோனியம்மன் என்றும் வழங்குகிறது. 11 12 பகுதிகளில் காணும் உரை நடை பட்டயத்தில் கண்ட நடையாகவே கொள்ளப்பட்டது.

பலியும் தந்தோம்' என கணக்கு ஒப்புவித்தார். அதே சமயத்தில் அவ்வூரில் உள்ள குடிமக்களுக்கு 'நீங்கள் இந்த துர்க்கைக்கு வருஷம் ஒரு திருநாள் நடத்துவிக்க வேண்டும். 'கட்டின வீடுதோறும் மா விளக்கும் பொங்கலும் இட்டு' ஆடு கோழி பன்றி இந்த முப்பலியும் கொடுத்து 'வருஷம் ஒரு தடவை எருமைக்கடா பலியும் ஒப்புவித்து வாருங்கள்' என்று ஆணையிட்டார். பிறகு தூர்க்கையைப் பார்த்து 'நீயும் இந்த குடிகளிடம் இந்தப்படி பலியும் பெற்றுக்கொண்டு அவர்களுக்குக் கிராம தேவதையாக இருந்து அவர்களைச் சம்ரக்ஷித்து வா' என்று கட்டுப்பாடுசெய்தார். இதையெல்லாம் முடித்ததும் கரிகால சோழன் சேரமான் பெருமாள் சமய முதலி சடையப்பன் கஸ்தூரி ரங்கப்ப செட்டி மற்றுமுள்ள பேரும் சேர்ந்து சங்கீசுரம் உடையார்க்கு அபிஷேகாதி தூபதீப ஆராதனைகள் செய்வித்துத் தரிசித்துச் சிலகாலம் கோவன் புத்தூரில் தங்கி இருந்தார்கள். இவ் வரலாறு சோழன் பூர்வ பட்டயம் என்ற நூலில் உள்ளது. கோயில் தற்போது பெரிய கடைத்தெருவில் கிழக்குக் கோடியில் சர்க்கார் கல்லூரிக்கு அடுத்து இருக்கிறது. முன் காலத்தில் அது யேட்டுப்பாளையப் பாதையில் சின்ன வாடன்பட்டி எல்லைக்குள் இருந்ததென்பர். பிறகு இங்கு கொண்டு வரப்பட்டது என்பர். சமீப காலம் வரையில் அம்மன் திருவிழாவில் எருமைப் பலி கொடுக்கப்பட்டு வந்தது. சமீபத்தில் நிறுத்திவிடப் பட்டது. கோணியம்மன் தேர் இராச வீதியில் பெண் பாடசாலைக்கு அடுத்த இடத்தில் நிற்கிறது. ஊர்

வலம், தேர் உற்சவம் முதலியவைகள் எல்லாம் நான்கு தேர் (மாட) வீதிகளில் தான் நடைபெறும். கோட்டைச் சிவாலயத்திற்கும் அப்படியே.

ஃ ஃ ஃ

13. பேரூர் விஜயமும் அதன் பெருக்கமும்

கோவை நகரை நிர்மாணித்த கரிகாற் சோழன் அவனுடன் வந்த சேரமான் பெருமாள் சமய முதலி முதலியோர் பேரூர் சென்று பட்டிப் பெருமானைத் தரிசித்தார்கள். அங்கே நொய்யல் ஆற்றில் நீராடிப் பட்டிப் பெருமானுக்கு அபிஷேகாதிகளைச் செய்து கூத்தாடும் பெருமானைத் தரிசித்தார்கள். அப் பெருமானுடைய திருவுருவமும் கனகசபையும் கீழைச் சிதம்பரம்போல் உள்ளதால் இத் தலத்திற்கு மேலைச் சிதம்பரம் என்ற பெயர் ஏற்பட்டதை அறிந் தார்கள். சமய முதலியும் இங்கே கூத்தாடும் பெரு மானின் அழகிய தோற்றத்தைக் கண்டு வியந்து துதித்தார். பின்னால் சிதம்பரம் சென்றபோது அங்கு நடராசப் பெருமானைத் தரிசிக்கையில் திருப்பேரூரில் கண்ட திருவுருவம் நினைவிற்கு வந்து அந்தச் செய்தியைத் தம் துதியில் குறித்திருக்கிறார். இவ் வர லாற்றை ஆராயும்போது சமய முதலி என்பவர் சுந்தர மூர்த்திகள் என்றும் அவருடைய துதிப் பாடல்,

"மீகொங்கில் அணி காஞ்சிவாய்ப் பேரூரர் பெருமானைப்
சிற்றம்பலத்தே பெற்றும் அன்றே" [புலியூர்

என்றும் ஊகிக்கலாம். எனவே இச் செய்திகள் ஏற் பட்டது 9 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி எனலாம்.

பேரூர் சென்ற அரசர் குழு அப்பேரூரின் மேன்மை நிலையைக் கண்டு அதனை நாட்டின் தலைநகராக்கி அதற்குக் கோவையை ஒரு புறப்பகுதி ஆக்கிவிட்டார்கள். அது முதல் கோவை "பேரூர் நாட்டுக் கோவன் புத்தூர்" ஆகிவிட்டது. அதுமுதல் ஏற்பட்டிருக்கும் கல்வெட்டுகளும் அவ்வாறே கோவையைக் குறித்திருக்கிறது. கொங்கு நாட்டில் உள்ள இருபத்திநான்கு நாடுகளில் ஆறை நாடு ஒன்று. அவ்வாறை நாட்டின் ஒரு உட்பகுதியாகப் பேரூர்நாடு ஆயிற்று. அது நொய்யல் பள்ளத்தாக்கில் வெள்ளலூர் முதல் மேற்கு மலைத் தொடர் மட்டும் எட்டி இருந்தது. ஆகவே அக்காலத்தில் பேரூர் பெரு நகராகவும் கோவை சிற்றூராகவும் இருந்தது. பேரூர் வைப்புத் தலமாகிச் சமயத் திருத்தலங்களில் ஒன்றாகி இருந்தது. கோவையோ பின்னால் ஏற்பட்ட நகரமாகவே, சமய இலக்கியத்தில் கூறப்பட்ட திருத்தலமாக இருக்கவில்லை. இத்தன்மையில் கோவை பல ஆண்டுகள் ஒரு சிற்றூர் ஆகவே இருந்தது. பேரூர் விஜயம் செய்த சேரமான் பெருமாளும் சமய முதலியும் மலை நாட்டிற் கேகி அதன் தலைநகராகிய திருவஞ்சைக் களத்திற்குச் சென்றார்கள்.

ை ை ை

14. வீரனும் வீரக்கல்லும்

புதிதாக நிர்மாணிக்கப் பெற்ற கோவன்புத்தூரில் குடியேறிய மக்கள் வெகு செழிப்போடு வாழ்ந்தார்கள். அக்கம் பக்கத்தில் காடு வெட்டிப்

பண்படுத்திய நிலங்களைக் காத்து உழுது பயிரிட்டு வேளாண்மையெடுத்து வெகு சிறப்புடன் இருந்தார்கள். அவர்களில் வாலிபர்கள் உடல் நலம் பெற்று உழைப்பில் ஈடுபட்டு உரம் பெற்றிருந்தார்கள். பிற இடங்களிலிருந்து பகைவர், கள்வர், காட்டு மிருகங்கள் எவைவந்தாலும் அவர்களை எதிர்த்துப்போராடித் தோற்பிக்கும் வல்லமை கொண்டிருந்தார்கள். அப்போது காடு வெட்டி நகராக்கியிருந்ததினால் காட்டிலிருந்த புலி முதலிய கொடிய மிருகங்கள் வெளியேறி அடுத்த மலைக்காடுகளுக்குச் சென்றுவிட்டன. ஒவ்வொரு கால் தம் பழைய ஞாபகத்தினால் கோவைக்கருகில் வந்து கால்நடைகளை அடித்துக்கொண்டு போவதுண்டு. ஒரு தடவை, சிறிய ஏரிக் கருகில் இருந்த ஒரு புலத்தில் ஒரு பெரிய புலி புகுந்து மாட்டைக் கடித்து எடுத்துக்கொண்டு போய்விட்டது. குடியானவர்கள் பீதி அடைந்தார்கள். ஆனால் அந்நிலத்துக் குடியானவனின் மூத்த மகன் மிக வல்லமை கொண்ட வாலிபனாகவும் அஞ்சா நெஞ்சமும் படைத்தவனாகவும் இருந்தான். அப்புலியுடன் போர் புரிந்து கொன்றுவிட வேண்டும் என்று உறுதி கொண்டிருந்தான். மறுநாள் இருட்டில் அடுத்த நிலத்தில் அப்புலி புகுந்து மற்றொரு மாட்டை அடித்துக்கொண்டு போயிற்று. இனி தாமதிக்கக் கூடாது என்று சொல்லி கையில் வீர வேல் பிடித்துக்கொண்டு அன்று இரவு புலத்தைக் காத்துக்கொண்டிருந்தான். இரத்தச் சுவை கண்ட புலி அன்றிரவும் வந்தது. வாலிபனோ உடனே குதித்து அப்புலியைக் குத்தினான். குத்துப்பட்ட புலி

மிக்கக் குரோதம் கொண்டு அவ்வாலிபன் மீது பாய்ந்தது. அஞ்சா நெஞ்ச முள்ள வாலிபன் மறுபடியும் அக்கொடிய மிருகத்தைக் குத்தினுன். இவ்வாறு இருவரும் வெகு நேரம் கொடிய போர் செய்தார்கள். பல குத்துக்கள் வாங்கிக்கொண்டு புலி இறந்தது. வாலிபனுக்கோ புலியின் கடியாலும் நகங்களின் காயங்களினுலும் இரத்தம் ஆற்றைப்போல வெளியேறக் கீழே விழுந்தான். மூர்ச்சையும்போனுன். அதற்குள் ஊரார் கூடி விட்டார்கள். தன்னந் தனியே ஒரு பெரிய புலியுடன் போர்புரிந்து கொன்ற வாலிபன் வீரச் செயல்களை வியந்து பாராட்டினுர்கள். வாலிபனும் வலி பொறுக்கமுடியாமல் சிறிது நேரத்தில் உயிர் துறந்து வீர சொர்க்கம் எய்தினுன். ஊராரின் பாதுகாப்பிற்காக புலியுடன் போர்புரிந்த வாலிபனுடைய உடலைக் கிராமப் பொது இடத்தில் புதைத்து விட்டு அவனைப்போல ஒரு கல்லுரு அமைத்து ஊர்ப்பொது இடமான அக் குளக்கரையின் தென்சரிவில் நட்டு பூசை செய்தார்கள். இப்போதும் அவ்வீரனின் கல் அதே இடத்தில் நிற்கிறது. இப்போதும் சில தடவைகளில் அதற்கு பூசை நடப்பதுண்டு. ஒரு வாலிபன் புலியுடன் போர்புரிந்தும் அவன் அடக்கமானதும் அடங்கிய சமாதிக்கருகில் இரண்டு பெண்கள் கும்பிடுவதும் அக்கல் சிலையில் செதுக்கப்பட்டிருக்கிறது. புறநானூற்றில் வீரக்கல்லைப் பற்றிப் பின்னல் கண்டபடி கூறியிருத்தலைக் காண்க. இப்போது இந்தச் சிலையைச் சாம்பகன் கோயில் என்கிருர்கள். சாம்பகன் சம்புகனின் மருஉவோ என்பது ஐயம்.

15. சுவைகண்ட பூனை மீண்டும் வந்தது (சோழர் ஆதிக்கம்)

சமய முதலியின் ஊக்கத்தினால் சேரமானும் சோழனும் நட்புரிமை பூண்டிருந்தார்கள். அதனால் தான் இரண்டு மன்னர்களும் ஒன்றுகூடி கொங்கு நாடு விஜயம் செய்தார்கள். சோழன் காடு வெட்டி குடியேற்றம் செய்த போதிலும் மரியா தைக்காக சேரனிடமிருந்து நிலம் பெற்றதாகச் சொல்லி ஆலயங்களுக்குத் தானங்கள் செய்தான். உண்மையில் சேரனுடைய ஆதிக்கம் கொங்கு நாட்டில் மிகக் குறைவே. கொங்கு நாட்டில் வட பாகம் முழுதும் தலைக் காட்டுக் கங்கர் ஆளு கைக்குட்பட்டிருந்தது. மேல் கொங்கு மாத்திரம் சேரன் வசத்தில் பெயருக்கு மாத்திரம் இருந்தது. இப்படி யிருக்கையில் சேரமான் பெருமான் கைலைக் குச் சென்ற பின் சேரநாடு வலி குறைந்தது. நாடும் பல பிரிவுகள் ஆகிப் பல குறுநில மன்னர் வசம் வந்து விட்டது. ஆகவே அவர்களுக்குக் கொங்கு நாட்டின் மீது இருந்த அதிகாரம் குறைந்தது. கரிகால் சோழன் கொங்குநாடு புகுந்து கோவை நகரை ஏற்படுத்தினது முதல் கொண்டு அவனுக்கும் அவன் சந்ததியார்களுக்கும் கொங்கு நாட்டின் சிறந்த ஞாப கம் நீங்கவே யில்லை. அப்போது வடக்கே தலைக் காட்டுக் கங்கர்களின் வல்லமையும் குறையத் தொடங்கியது. சோழர்கள் ஏதோ ஒருசாக்கைப் பிடித்துக்கொண்டு தலைக்காட்டுக் கங்கர்களின் மீது

போர் தொடுத்தார்கள். 894 கி. பி. யில் தலைக்காட்டைப் பிடித்து விட்டார்கள். கங்கர் அரசியல் நிலை குலைந்தது. வட கொங்கு சோழர் வசத்தில் வந்தது. பிறகு மேல் கொங்கின் மீது கண்வைத்தனர். சிறிது சிறிதாக கொங்கு நாடு முழுவதும் சோழர் கைக்குள்ளாக வந்து விட்டது. சேரநாட்டுக் குறுநில மன்னர்கள் இந்த ஆக்கிரமிப்பை எதிர்க்கவே யில்லை. மேல்கொங்கு சோழர்கள் கைக்குள் விழவே கோவையும் அவர்கள் அதிகாரத்துள் வந்து விட்டது. சோழர்கள் அரசாட்சியிலும் பேரூர்நாட்டுக்கோவன் புத்தூர் என்றே கல்வெட்டுகள் கூறுகின்றபடியால் கோவை நகர் பேரூரை விடப் பெரிதாக வில்லை எனலாம். ஆனால் கோவைக்குச் சுற்றிலும் நாடு செழிப்படைந்துக்கொண்டே வந்தது எனச்சொல்ல வேண்டும். ஏனெனில் இக்காலத்தில் தான் சோழர்கள் பெயரால் பாதைகளும் கால்வாய்களும் உண்டாயின. இவர்களே கொங்கு நாடு என்ற பெயரை மாற்றி, ராஜேந்திரன் I காலத்தில் அதிராசராச மண்டலம் என்றும், விக்கிரம சோழன் காலத்தில் வீரசோழ மண்டலம் என்றும் குலோத்துங்கன் III காலத்தில் சோழ கேரள மண்டலம் என்றும் பெயரிட்டார்கள். உருசி கண்ட பூனை மீண்டும் வந்ததா ?

ஃ ஃ ஃ

16. புது அரசியல் – கொங்கு சோழர்

கொங்கு நாட்டிற்கும் சோழ ராஜதானிக்கும் வெகுதூரம். தஞ்சையிலிருந்து கொங்கு நாட்டை

ஆளுவது என்றால் கடினம் அல்லவா? ஆகவே கொங்கு நாட்டை ஆள ஒரு பிரதிநிதியை அனுப்பி வைத்தார்கள். அரச வம்சத்திற்குச் சேர்ந்த ஒரு இளவரசனையே அவ்வித ஆட்சிக்கு அனுப்புவது சோழர் வழக்கம். அவ்வாறு அனுப்பியதில் சிறிது காலத்திற்குள்ளாக அவ்விளவரசன் சந்ததியே கொங்கு நாட்டில் ஆளத்தொடங்கிற்று. முதலில் பிரதிநிதியாக வந்த இளவரசன் நாள் ஆக ஆகத் தனி அரசனாகவே ஆய்விட்டான். இது இந்து சரிதத்தில் சகசமாக ஏற்படும் ஒரு சம்பவம். பிற்காலத்தில் விஜயநகரத்துப் பிரதிநிதியாக மதுரைக்கு வந்த விசுவநாத நாயக்கன் பின்னாலே நாயக்க வம்சத்தை ஏற்படுத்த வில்லையா? அதைப் போலவே கொங்கு நாட்டில் சோழக் கிளை அரசு ஒன்று தாபிதம் ஆகிவிட்டது. இவ்வம்சத்தார்கள் சோழர்கள் என்றே பட்டம் வகித்தார்கள். இவர்களில் விக்கிரமன் (1004-45) இராசாதிராஜன் (1080 - 1110) உத்தமன் (1110 - 1117) வீரசோழன் (1117 - 1135) வீர நாராயணன் (1135 - 1144) குலோத்துங்கன் (1149 - 1183) வீரசோழன் (1183 - 1206) வீர ராஜேந்திரன் (1207 - 1255) விக்கிரமன் (1255-1283) முதலிய பல அரசர்கள் பரம்பரையாக ஆண்டார்கள். இவர்கள் வம்சம் கொங்கு சோழ வம்சம் எனப் பெயர் பெற்றது. தென் கொங்கு வட கொங்கு என்ற இரண்டு கொங்குகளையும் ஆண்டு வந்ததினால் அவர்களில் சிலருக்கு 'இருகொங்குகளையும் ஆண்டவன்' என்ற பட்டம் இருந்தது. சிலர் மிகவும் புகழ் பெற்று இருந்தபடியால் "கோன்னேர்

இன்மை கொண்டான் " என்ற பட்டமும் வகித்துக் கொண்டார்கள். முதலில் இவர்களுடைய ஆட்சி ஆம்ராவதி நதியோரமாகிய செழிப்பான நாடுகளி லேயே இருந்தது. பிறகு வரவர வடக்கே சென்று கொங்கு நாடு முழுவதற்கும் அரசர்கள் ஆனார்கள். இவர்களுடைய தலைநகர் இராஜராஜபுரம் என்ற தற்காலத் தாராபுரம் ஆகும். இராஜராஜன் என்ற சோழனால் ஏற்படுத்தப் பெற்று அவனுடைய பெய ரையே அந்நகர் பூண்டு கொண்டது. அப்பெயரே பின்னர் மருவி தாராபுரம் என்று ஆயிற்று. ஆம்ராவதிக்கரையில் இருந்துகொண்டு இவ்விராசவம் சம் கொங்கு நாடு ஆண்ட காலத்தில் கோவை நகரும் அவர்கள் ஆளுகைக்குட் பட்டு வந்தது. அக்காலத் துக் கல்வெட்டுகள் கோவன் புத்தூரைக் குறிக்கின் றன. ஒரு கல்வெட்டு ஆம்ராவதி நதிக் கரையில் உள்ள குமரலிங்கக் கோயிலில் இருக்கின்றது.

ஃ ஃ ஃ

17. கொங்கர் மலைநாடு புகுந்தது - கொங்கப்படை

கொங்கு நாடு முழுவதையும் ஒரு குடைக் கீழ்க் கொண்டு வந்து ஆளத் தொடங்கிய கொங்கு சோழர் வெற்றி வெறிபிடித்து அலைந்தனர். மோகமும் வெற்றி வெறியும் பிடித்தால் அரசர்களுக்கு இன்னது செய் வது என்று தெரியாது. செருக்கினாலே மதிமயங்கி பிற நாடுகளைப் பிடிக்க வேண்டும் என்ற பேராசை தோன் றும். கொங்கு சோழர் அருகிலிருந்த மலை நாட்டின் மீது கண் வைத்தார்கள். மலை நாடு அப்போது பல

சிற்றரசர்களால் ஆளப்பட்டு வந்தது. ஆகவே வலி குன்றி இருந்தது. இந்த நிலைமை யறிந்து கொங்கு சோழமன்னன் மேற்கே படை யெடுத்துச் சென்றான். மேற்கே கொங்கு நாட்டிற்கு எல்லையாக இருப்பது வாளையாறு என்ற ஒரு சிறு ஆறு. அதனைக் கடந்து சிற்றூர் நாட்டில் புகுந்தான். சிற்றூர் பாலைக் காட்டிற்கு 9 கல்லில் உள்ள ஒரு செழிப்பான ஊர். ஒரு ஆற்றோரம் அழகாகக் கட்டப்பெற்றிருப்பது. துஞ்சத்தெழுத்தச்சன் என்ற மலையாள இராமாயணம் பாடிய கவியின் ஊர். அவ்வூரின்மீது கொங்கன் படை எடுத்துச் சென்றபோது மலையாளிகள் தங்களுக்குத் தக்க தளகர்த்தன் இல்லாமையினால் அவ்வூர்க் கிராம தேவதை சிற்றூரியம்மன் ஆலய வாயிலில் சரண் புகுந்து தொழுதார்கள். அப்போது அவ்வம்மன் அவர்கள் விண்ணப்பத்தைக் கேட்டு அகம் மகிழ்ந்து தானே போருக்குவருவதாக அசரீரியால் கூறித் தன்மக்களைப் போருக்கு அனுப்பினாள். அவ்வூர் முக்கிய தரைவாட்டு இளைஞர்கள் எல்லாம் ஆவேசம் கொண்டு போருக்குப் புறப்பட்டனர். அம்மனும் சிம்மாரூடியாகிக் கொங்கு அரசன்மீது போர்க்குச் சென்றாள். அன்று இரவு நடந்த போரில் கொங்கு அரசன் தலை வெட்டப் பட்டது. கொங்கர்கள் தோற்று ஓடினார்கள். அம்மனும் இரத்தம் சிந்திய வாளை ஆற்றில் கழுவினதினால் அந்த ஆற்றிற்கு வாளையாறு எனப் பெயர் வந்தது. மலையாளர்கள் வென்றார்கள். அது முதல் இப் படையெழுச்சி 'கொங்கப் படை' எனப் பெயர் பெற்றது. ஆண்டு தோறும் மாசி மாதத்தில் சிவராத்திரி

யின்போது இப்படை யெடுப்பின் வெற்றி காரண மாக ஓர் உற்சவம் சிற்றூரம்மன் கோயிலில் கொண் டாடப்பட்டு வருகிறது. போர் போல வேடநாடக மும் அம்மன் ஊர்வலமும் நடக்கின்றது. அப்போது ஒரு பண்டை ஏட்டுப் பிரதியிலிருந்து வரலாறும் வாசிக்கப்படுகிறது. கொங்க அரசன் பெயர் இரா சாதிராசன் என்று காணப்படுகிறது. இவ்வரசன் (1080 - 1110) ஆண்ட அரசனே, அப்பெயரே பூண்ட அவன் இருமக்களோ ஆக இருக்கலாம்.

ஃ ஃ ஃ

18. கேரளர் சீற்றம், கோவைப் படையெடுப்பு, கோவை வீரகேரளம் ஆனது

ஒரு கொங்கு நாட்டு அரசன் தங்கள் நாட்டின் மீது படையெடுத்து வந்தான் எனக் கேட்ட மலை நாட்டு அரசர்களுக்குப் பெருங்கோபம் வந்தது. அதிலும் அவ்வரசன் தோல்வியுற்றான் எனக்கேட்ட மலை நாட்டரசர்களுக்குக் கொங்கர்கள்மீது மிகுந்த ஏளனமும் உண்டாயிற்று. தெய்வத்தின் அருளால் மலைநாட்டார் வெற்றி அடைந்தார்கள் எனக்கேட்டு அவ்வருள் இருக்கிறபடியால் தாமும் பழிக்குப்பழி வாங்கவேண்டும் என்று அவர்கள் எண்ணினார்கள். மலைநாட்டுச் சிற்றரசர்களில் வீர கேரளன் என்ற ஒருவன் இருந்தான். அவன் கொங்கு நாட்டு மேற் கெல்லையாக அடுத்து இருந்த மலை நாட்டரசன். வெகு விரைவில் அக்கம்பக்கத்து நாடுகளைப் பிடித்தோ நட்பு பூண்டோ செல்வாக்கு அடைந்து வந்தான். கொங்கு

நாட்டரசன் தோல்வியுற்று இறந்தான் என்று கேட்டவுடன் இதுதான் சமயம் என்று எண்ணி முந்தி சேரமான் பெருமாள் காலத்தில் அவர் அரசியலுக்குள் உட்பட்டிருந்த நாட்டைப்பிடிக்க வேண்டும் என்று இச்சை கொண்டு சேனைகளைத் திரட்டிக் கொண்டு கொங்கின்மீது படையெடுத்தான். வாளை யாற்றைத் தாண்டிப் பேரூர்நாடு புகுந்தான். நாட்டில் அரசன் கொல்லப்பட்ட படியாலும் அடுத்துப் பட்டத்திற்கு வந்த இளவரசன் மிகவும் இளையவனாக இருந்தபடியாலும் எதிர்ப்பு மிகுதியாக இருக்கவில்லை. கூடிய விரைவில் பேரூர் நாடு முழுதும் பிடித்துக் கோவை நகர்க்குத் தன் பெயரைக்கொண்டு புது நாமகரணம் செய்வித்தான். அது முதல் அரசியல் பட்டியலில் கோவைக்கு வீர கேரள நல்லூர் எனப் பெயர் வழங்கிற்று. சிலாசாசனங்களிலும் அப் பெயர் தீட்டப்பெற்றது. மேலும் பேரூர் நாட்டில் இருந்த வேறு சில ஊர்களுக்கும் கேரளப் பெயர்களையே இட்டான். அப்படிப் பெயர் மாறின சில ஊர்கள் முட்டம் என்கிற அமரபுஜங்க நல்லூர், இரவிவர்ம சதுர்வேதி மங்கலம் முதலியன. இவ்வாறு கொங்கு நாட்டில் படையெடுத்து வெற்றி அடைந்ததைக் கண்டு பேரார்வம் கொண்டு கேரள மன்னர்கள் ஆம்ராவதி நதியோரமாகவும் படையெடுத்தார்கள். அப்படை யெடுப்பு பழனிவரை சென்றது. பழனிக் கல்வெட்டுக்களில் கேரள நாட்டு அரசர்களின் பெயர்கள் கூறப்பட்டிருப்பதைக் காணலாம். இந்த வகையில் கேரள மன்னர்கள் கொங்கர்

களின்மீது வெற்றியுடன் பழிக்குப் பழி வாங்கி விட்டார்கள். இந்த வகையில் மேல் கொங்கின் சில பகுதிகள் கேரள மன்னர்களின் ஆட்சியில் சிறிது காலம் இருந்தது என அறியவேண்டும்.

ஓ ஓ ஓ

19. கோவையைக் கொங்கு சோழர்கள் மீட்டினது

கோவையும் அதற்கடுத்த பிரதேசமும் கேரள நாட்டாரிடம் அதிக காலம் இருக்கவில்லை. கொங்கு நாட்டு இளவரசன் வயது வந்ததும் கைவிட்டுப்போன நாடுகளை மீண்டும் பிடித்துக் கொண்டான். இதனைக் கல்வெட்டுகளே நிரூபிக்கின்றன. பேரூரிலும் குமர லிங்கத்திலும் காணப்படும் கல் வெட்டுக்கள் அனேக மாக ஒரே காலத்தவை. அவைகளுக்குப் பிந்தி உள்ள கல்வெட்டுக்களில் வீர கேரளம் என்ற பெயரே காணப்படுவதில்லை. ஆகவே கோவையைக் கொங்கு அரசன் திரும்பிப் பிடித்துக் கொண்டான் எனக் கூறவேண்டும். ஊர் கொங்கு அரசியலுக்குள் வரவே அப்புதுப் பெயரும் போய்விட்டது. மக்கள் பழைய பெயராகிய கோவன்புத்தூர் எனவே வழங் கத் தொடங்கினர். ஆனால் இப்படை யெடுப்பின் காரணமாக ஒரு சின்னம் மாத்திரம் இங்கேயே தங்கி விட்டது. கோவைக்கு அடுத்த மேற்புறம் 3 கல்லில் உள்ள ஒக்கிலி பாளையம் என்ற கிராமத்திற்கு வீர கேரளம் என்று இன்னும் அரசியல் கணக்கு களில் இருக்கிறது. இந்த ஒரு சின்னத்தைத் தவிர வேறு மலை நாட்டுச் சின்னங்கள் முழுவதும் கொங்கு

நாட்டில் மறைந்து போயின. அது முதல் கோவை கொங்கு நாட்டரசர்கள் வசமே இருக்கத் தொடங்கியது. கொங்கு சோழர்கள் காலத்தில் நாட்டில் பல சீர்திருத்தங்கள் ஏற்பட்டன. அவைகளில் சிறந்தவை பெரும் பாதைகளும் நீர் பாய்ச்சல் வசதிகளும் ஆலய நிர்மாணங்களுமே ஆம்.

ஐ ஐ ஐ

20. கம்மாளர்களுக்குரிமைகள் சாசனத்தால் தந்தது

ஒரு தனி மனிதனோ அல்லது ஒரு குலமோ அரசியலுக்கோ அல்லது பொது நலத்திற்கோ தன்னலமின்றிப் பேருதவி புரிவதானால் அதனை அரசியலார் கண்காணித்துப் பட்டமோ உரிமையோ வழங்குவதுண்டு. இந்த வழக்கம் எல்லா முன்னேற்ற நாடுகளிலும் உண்டு. இப்போதும் ஆங்கில நாட்டிலும் இந்து நாட்டிலும் இருக்கிறது. முன்னாளில் சங்கத்தார் காலத்திலும் இருந்தது. பின்னர் வந்த மூவேந்தர் நாளிலும் இருந்தது. அது போல கொங்கு நாட்டிலும் இருந்திருக்க வேண்டும். அவைகளில் ஒரு பரிசளிப்பு கல்வெட்டுக்களிலும் கொங்கு மண்டல சதகத்திலும் கூறியிருக்கக் காண்கிறோம். கோனேரின்மை கொண்டான் என்ற பட்டப் பெயர் வகித்த ஒரு கொங்கு சோழனது 15-ம் ஆண்டில் ஆடிமாதம் முதலாக கொங்கு நாட்டு கண்மாளர் "நன்மை தின்மைகளுக்கு இரட்டைச் சங்கு ஊதுதல், பேரிகை அடித்தல், போகும்போது பாதரட்சை அணிதல், வீட்டிற்குச் சாந்து பூசுதல் செய்யலாம்" என்ற

உரிமைகளை அவ்வரசன் தந்ததன்றி அதனை நாடு எங்கும் செம்பிலும் கல்லிலும் வெட்டிக் கொள்ளலாம்" என்றும் விளம்பரப்படுத்தப்பட்டது. இதனைப் பேரூர் பட்டீசுவரர் கோயிலில் மேல் கொங்கிற்காகவும் குடிமங்கலம் சோழீசுவரர் கோயிலில் தென் கொங்கு நாட்டிற்காகவும் கரூர்ப் பசுபதீசுவரர் கோயிலில் வெங்கால நாட்டிற்காகவும் பாரியூர் அமரபணீசுரர் கோயிலில் காஞ்சிக்கூவல் நாட்டிற்காகவும் மொடக்கூர் மெய்ப்பொருள் நாதர் கோயிலில் தலையூர் நாடு முதலிய ஏழு நாடுகளுக்காகவும் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டிருக்கின்றன. இவைகளில் எல்லாம் ஓரே வாசகம் கண்டிருக்கிறது. உள்நாடுகளின் பெயர் மாத்திரம் மாறியிருக்கிறது. கோனேரின்மை கொண்டான் என்ற பட்டத்தை 12 நூற்றுண்டில் மூன்று கொங்கு சோழர்கள் வகித்திருந்தார்கள். அவர்களில் ஒருவனே இந்த உரிமைகளை கண்மாளர்களுக்குக் கொடுத்திருக்க முடியும். ஒரு வேளை சிலப்பதிகாரக் காலத்தில் அவ்வுரிமைகளை இழந்த பொற்கொல்லர்கள் பிந்தி கோனேரின்மை கொண்டான் காலத்தில் செய்த ஒரு பொதுச் செயல்களின் நிமித்தமாக இவ்வுரிமைகளைப் பெற்றூர்கள் போலும். கொங்கு மண்டல சதகத்தில் இதனைப்பற்றிக் கூறும் பாடல்.

" இருப்புற்ற விட்டுக்குச் சாந்திட்டுக்கொள்ள
இரண்டு சங்கு
விருப்புற்றவாழ்விலும் சாவிலும் ஊத
வெளிநடை காற்

செருப்பிட்டுச்செல்லப் பெறுவீர்கள் என்னவச்
செம்பியனுல்
வரைப்பத்திரம்பெற்ற கம்மாளருங் கொங்கு
மண்டலமே ”

என்பதே. கொங்கு நாட்டுப் பேரூரில் இந்தக் கல்வெட்டு இருப்பதால் இதன் உரிமை பேரூர் நாட்டுக் கோவைக்கும் கிடைத்திருக்கும் என்று அறியலாம்.

ஐ ஐ ஐ

21. கொங்கு சோழர் அமைத்த பெரும்வழி

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தி யிருந்து தமிழர்களுக்கும் உரோமானியர்களுக்கும் வர்த்தகச் சம்பந்தம் இருந்தது. தமிழ்நாட்டிலிருந்து உரோமானியர் மிளகு முதலிய வாசனைத் திரவியங்களையும் முத்து மயில் தோகை முதலிய விலையுயர்ந்த பண்டங்களையும் தருவித்துக் கொண்டனர். அச்சரக்குகள் கடல் வழியே நாவாய்களில் ஏற்றுமதி ஆயின. பெரும்பாலும் மேற்குக் கரையில் இருந்த வஞ்சி, முசிரி முதலிய துறைமுகங்களில் அச்சரக்குகள் கொண்டு போய்ச் சேர்க்கப்பட்டு அங்கே மரக்கலங்களில் ஏறின. கொங்கு நாட்டிலிருந்து பல சரக்குகள் அத்துறைமுகங்களுக்குச் சென்றன. அதன் பொருட்டு கொங்கு நாட்டிலிருந்து மேற்குக் கரைக்கு பெரும் வழிகள் இருந்தன. அவைகளில் ஒன்று கருவூரிலிருந்து ஆம்ராவதி நதி ஓரமாகப் பாலைக்காட்டுக் கணவாய் வழிச் சென்றது. கரூர், கலைய நல்லூர்,

பொள்ளாச்சி முதலிய இடங்களில் பெருந்தொகை களாக அகப்பட்ட உரோமானிய வெள்ளி நாணயங் களே இதற்கு அத்தாட்சி. அந்நாணயங்கள் அகஸ்தஸ் சீசர் (44 கி. மு. 14 A. D) முதல் கான்ஸ்டன்டைன் காலம் வரை (கி. பி. 323-337) உள்ளன. மற்றொன்று வெள்ளலூர், பேரூர் வழியே இருந்தது. இவ்விடங் களிலும் நாணயங்கள் கிடைத்தன. உரோமானிய வர்த்தகம் கி. பி. 4 நூ-ல் நின்றுவிட்டது. ஏனெனில் ரோம சாம்ராஜ்யம் பிடிபட்டு அழிவுற்றதே காரணம் என்க. பிறகு 8 - 9 நூற்றுண்டுகளில் சமயப் பிரசாரம் ஏற்பட்டபோது பெரும் வழிகள் தோன் றின. அவைகளில் ஒன்று முறையே பவானி, திரு முருகன் பூண்டி, அவிநாசி, கரவலூர், அன்னூர், கோயில்பாளையம், சாமக்குளம், துடியலூர், கோவை, பேரூர் வழியாகப் பாலக்காடு சென்றது. சோழன் பூர்வபட்டயத்தில் சோழன் சேரன் சமய முதலி சென்றதாகக் குறிப்பிட்ட பெருவழி இதுதான். செழிப்பான ஆற்றுப் பள்ளத்தாக்கு, ஊர்கள், ஆலயங்கள் நிறைந்த வழியே இதுவாகும். ஆகவே இவ் வழி வர்த்தகத்திற்கு இணக்கமானதே. இனி கொங்கு சோழர்கள் ஆளத்தொடங்கி நாட்டைச் சீர் திருத்தம் செய்த காலையில் புதுப் பாதைகளை ஏற்படுத் தினர்கள். அதில் ஒன்று கொங்கு வல்லிவதி என்பது. இதனை ஒரு பேரூர்ச் சாசனம் ஒரு நிலத்திற்கு எல்லை கூறும்போது குறிக்கின்றது. கொங்கு வல்லி என்ற ஒரு கொங்கு குலத்தரசின் மகள் பெயரால் அவ்வழி ஏற்பட்டதென்று ஊகிக்கலாம்.

22. கொங்கு சோழர் இயற்றிய நீர்ப்பாய்ச்சல் வசதிகள்

கரிகால் சோழன் சமய முதலியுடன் கொங்கு நாட்டில் காடு வெட்டி ஊர்களை அமைத்த காலை நீர்ப் பாய்ச்சல் வசதிகளையும் தொடங்கி இருக்கவேண் டும். பேரூரில் நொய்யலாற்றங்கரையில் ஒரு படித் துறை கட்டி அதற்கு 'கரிகால் சோழன் துறை' எனப் பெயரிட்டான். இப்போதும் அந்தத் துறை இருக்கிறது. நல்ல செதுக்கின கருங்கற்களால் ஆகிய துறையாகும். இப்போது அதனை சோழன் துறை என்றே வழங்குகிருர்கள். இதனருகில் ஒரு பண்டைய அரச மரமும் அதனடியில் நாகர் பிள்ளையார் முதலிய மூர்த்திகளும் இருக்கின்றன. அதனருகில் பண் டைச் சின்னங்கள் புதை பெற்ற மேடும் இருக்கிறது. அக்காலம் முதல் நொய்யல் ஆற்றின் நீரைப் பயன் படுத்திக் கொள்ளும் பல முறைகளைச் சோழர்களும் அவர்களுடைய பிரதிநிதிகளான கொங்கு சோழர் களும் செய்து வந்தார்கள். அந்தச் சிறு ஆற்றில் மழைக்காலத்தில் ஏராளமான வெள்ளம் வரும். அத னைத் தேக்குவதற்காக மெல்ல மெல்ல 16 அணைகளைக் கட்டினுர்கள். அவைகளிலிருந்து கால்வாய்களும் குளங்களும் ஏற்பட்டுள்ளன. பூளுவபட்டி அணையி லிருந்து சித்திரச் சாவடி வாய்க்கால் வழியாக நீர் வந்து செலுவாம்பதி, கிருஷ்ணும்பதி, குமாரசாமி ஏரி இவைகளுக்குப் பாய்கிறது. செலுவாம்பதி கிருஷ்ணும் பதி என்பவைகள் இருளர் சம்பந்தப்பட்ட தென்று அப்பெயர்களே சொல்லும். குமாரசாமி ஏரி கோவை நேர்வட மேற்கே உள்ள ஒரு குளம். இந்த ஏரியின்

மீதி நீர் செல்வ சிந்தாமணி என்ற பள்ளபாளையத்து ஏரியை நிரப்புகிறது. பேரூருக் கருகே உள்ள ஒரு அணையிலிருந்து இராஜவாய்க்கால் என்ற பெயருடன் ஒரு கால்வாய் பிரிந்து பல தோப்புகளுக்குப் பாய்ந்து பிறகு பெரிய ஏரியை நிரப்புகிறது. இது கொங்கு சோழர் காலத்திலேயே இருந்து அதிராஜ வாய்க்கால் என்ற பெயருடன் விளங்கியது. இதன் நீரே மீதி யானல் சிறிய குளம், வாலாங் குளம் புளிய குளம் முதலியவைகளுக்குப் பாயும். மற்ருெரு அணையி லிருந்து பிரியும் வாய்க்கால் குறிச்சி குணியமுத்தூர் பாய்கிறது. கோவை சங்கிலி கருப்பன் அணை வெள்ள லூர் பாய்கிறது. இவ்வூர்தான் அன்னதான சிவபுரி என்ற வள்ளலூர். இங்கே பண்டைய தேனீசுர முடையார் ஆலயத்தில் பழைய கல்வெட்டுகளும் ஊரிலே ரோமானியப் புதையல்களும் கிடத்தன. நொய்யல் நதிக்கு இன்னும் பல அணைகளும் வாய்க் கால்களும் குளங்களும் கிழக்கே இருக்கின்றன. பெரும்பான்மையானவை சோழர் காலத்தில் உண்டா னவை.

ஃ ஃ ஃ

23. கொங்கு சோழர் ஆலயத் திருப்பணிகள்

சமய முதலியின் உபதேசத்தால் கரிகால் சோழன் தொடங்கிய கோயிற்றிருப்பணி பின் வந்த சோழர்களாலும் கொங்கு சோழர்களாலும் தொடர்ந்து நடத்தப்பட்டது. கோவையிலே சங்கீ சுவர முடையார் ஆலயத்தைத் தோற்றுதல் செய்து

அதற்கே நீண்டகாலப் பரிபாலனத்தை உத்தேசித்து வேண்டிய நிபந்தங்களை சோழன் செய்து வைத்தான் என்று முன்பே குறிக்கப்பட்டது. கிராம தேவதை கோணியம்மனுக்கும் அப்படியே நிலங்கள் புலங்கள் திருவிழாக்கள் ஏற்பட்டன. கோவையில் உள்ள ஆலயமாகிய பேட்டை ஈசுரன் கோயில் எப்போது ஏற்பட்டது என்பதற்குக் குறிப்பு ஒன்றும் கிடைக்க வில்லை. ஒரு வேளை பேட்டையைக் கரிகாலன் கட்டின தினுலே கோயிலும் கட்டியிருக்க முடியும். அது அரசி யல் மாறுபாட்டினுல் இடம் பொருள் ஏவல்களில் மாறுபாடு அடைந்திருக்கலாம். தற்போது இருக்கும் சிவாலயத்திற்கு மைசூரார் செப்பேடுதான் உண்டு. பெயரும் விசுவநாத சுவாமி என்றதனுல் புது ஆல யம் ஆக இருக்கலாம். ஆனுல் அடுத்துள்ள பேரூர்ப் பட்டீசர், (திரு ஆன்பட்டியுடையார்) முட்டம் நாகேசர், இடிகரைவில்லீசர், கவசநல்லூர் காலகாலே சர், குறிச்சிவாலீசர், வெள்ளலூர் தேனீசர், துடிய லூர் விருந்தீசர் (அகத்தீசர்) முதலான ஆலயங்கள் மிகப் பழையவையே. கொங்கு சோழர்கள் பெரும் பான்மையாக ஆம்ராவதி (ஆன் பொருனை) ஆற் ருேரமே பல ஆலயங்களைக் கட்டினுர்கள். அவைகள் சோழீசுரம் உடையார் என்ற பெயரையே கொண் டிருத்தலால் கொங்கு சோழரால் அவைகள் ஏற்பட் டன என அறியலாம். தாராபுரம் அகத்தீசர் (ராச ராசச் சோழீசர்) முத்தூர் சோழீசர், வெள்ளைக் கோயில் பராக்கிரம சோழீசர், கன்னபுரம் விக்கிரம சோழீசர், பெருமா நல்லூர் உத்தம சோழீசர்,

சமத்தூர் சோழீசர், ஏலத்தூர் சோழீசர், கொழுமம் சோழீசர், சங்கிராம நல்லூர் சோழீசர் பெரிய கோட்டை சோழீசர் (சோழமாதேவி குலசேகரர் ஆலயத்துச் சோழமாதேவி நல்லூர் ஆலயம் உத்தம சோழபுரம்—சோழர் பெயர் கொண்ட ஊர்கள்) ஆக சோழீசுரர் என்ற பெயர்களைக் கொண்ட சோழர் தாபனம் ஆனவைகள் 10 குறித்தோம். இன்னும் ஆராய்ந்தால் பல இருக்கலாம். இவ்வாலயங் களுக் கெல்லாம் மானியங்கள் பூசைக்குரிய ஏற்பாடு கள் ஆலயச் சாமான்கள் முதலியவைகள் எல்லாம் கொங்கு சோழர்களால் ஏற்பட்டன.

ஃ ஃ ஃ

24. ஊர் அமைப்பு - சதுரத் தெருக்கள்

கரிகால் சோழன் ஊர் அமைத்துப் பதினெண் வகை மக்களையும் குடியேற்றிச் சென்ற பிறகு கொங்கு சோழர்களின் ஆட்சியின் கீழ் ஊர் பெருகி வந்தது. தெருக்கள் அமைப்பும் நேராகவும் சதுர மாகவும் ஏற்பட்டது. கோட்டைக்கும் பேட்டைக்கும் அரைகல் தூரம் இருக்கும். கோட்டை சின்னக் குளத்திற்கு வடக்கேயும் பெரிய குளத்திற்கு வட கிழக்கேயும் அமைக்கப்பட்டது. சங்கீசுரமுடையார் கோயிலுக்குக் கிழக்கே மறையவர் வீதி அமைக்கப் பட்டது. சிவாலயத்திற்குத் தெற்கே பெருமாள் கோயில் பின்னால் ஏற்பட்டது. இரண்டிற்கும் இடை யில் பல தெருக்கள் தோன்றின. அவைகள் எல்லாம் ஒழுங்காக அமைக்கப்பட்டன. அருகுள்ள குளத் திற்கு மேலே ஒரு மேட்டில் கட்டப்பட்டதால் அதைக்

கோட்டை மேடு என மக்கள் வழங்கினூர்கள். கோணியம்மன் கோயில் கோட்டைக்கு வெளியே வடவண்டை கட்டப்பட்டது. இவ்வம்மனே கோட்டைக்குக் காவல்; பேட்டைக்கு வழி காட்டுபவள். பேட்டையோ நான்கு பெரிய தேர் ஓடும் வீதிகளைக் கொண்டது. இவைகளின் வழியேதான் எல்லாத் திருவிழா ஊர்வலங்களும் நடைபெறும். இச் சதுரத்தின் நடுவில் கோணியம்மன் கோயிலிருந்து மேற்கே செல்லும் பெரிய கடை வீதி ஓடுகிறது. அச் சதுரத்தின் நடுவில் தென் வடலாகச் சின்னக் கடை வீதி செல்லுகிறது. எல்லாத் தெருக்களும் நேராக அமைந்துள்ளன. இச்சதுரத்திற்கு வடக்கே பேட்டை ஈசுவரன் கோயில் தெருவும் அதனை அடுத்து வடக்கே தேவர் அடியார் வாழும் கிழமேல் தெருவும் அதற்கடுத்து இடைத் தெருவும் அதனை அடுத்து வட கோடியில் பெருந் தெருவும் இருந்தன. ஆலயத்திற்கு மேற்குத் தெருக்களில் மறையவர்களும் தெற்குத் தெருவில் வணிகர்களும் வடக்குத் தெருக்களில் கைத்தொழிலாளர்களும் கிழக்கே வேளாளர்களும் வசித்தனர். இவ்வகைச் சிற்ப அமைப்பு கோவை நகர் கொண்டிருந்து ஒழுங்கோடு முன்னேறி வந்தது. இம் முன்னேற்றத்திற்குக் கொங்கு சோழர் காலத்து அரசியல் அமைதியே பேர் உதவியாக இருந்தது எனலாம்.

ஃ ஃ ஃ

25. ஹொய்சளர் வருகை

கருநாடக நாட்டில் ஒரு பெரிய அடவியில் ஒரு ஜைன முனிவர் தவம் புரிந்து கொண்டிருந்தார்.

சளன் என்ற ஒரு வீரன் அவரைக் கண்டு அருள் பெறச் சென்றிருந்தான். அப்போது திடீரென்று பெரிய புதர் ஒன்றிலிருந்து ஒரு புலி தோன்றி முனிவரின் மேல் பாயவந்தது. அப்போது முனிவர் 'சளனே இதனைக் கொல்' என்ற பொருளில் கருநாட மொழியில் "ஹொய், சள!" என்றனர். சளனும் அப்புலியை எதிர்த்து வாளால் குத்திக் கொன்றான். அது முதல் அவனுக்கு ஹொய்சளன் என்ற பெயர் வந்ததாம். பிறகு முனிவருடைய அருள்பெற்று சளன் ஒரு அரசவம்சம் தாபித்தான். அவ்வம்சம் கருநாட நாட்டில் ஹளவீடு என்ற நகரைத் தலைமை ஊராகப் பெற்றுப் பல நூற்றாண்டுகள் மிகப் பெருமையுடன் அரசாண்டது. அதில் வல்லாளன் என்ற பெயருடைய மன்னர்கள் ஆண்டனர். அவர்களிலே வீரராமநாதன் என்பான் சோழநாட்டின்மீது படையெடுத்துத் திருச்சிக்கு வடக்கே உள்ள கண்ணனூரில் சில காலம் அரசாண்டான். அவன் கட்டின கோயில் ஹொய்சளேசர் கோயில் என்பது. அது தமிழில் போசலேசுரர் என்றாகி அதன் பொருள் தெரியாத பின் காலத்தார் போஜேசுவரர் என்றாக்கி போஜராஜன் கட்டியதென்று கதைகட்டி விட்டனர். வெகு காலமாக கொங்குநாடு தலைக் காட்டுக் கங்கர் வசம் இருந்ததெனச் சொன்னோம். கங்கர்கள் கருநாட மொழி (கன்னடம்) பேசுபவர்கள். அவர்கள் காலத்தில் பல கன்னடக்குடிகள் கொங்குநாட்டில் வடபகுதியில் குடியேறினர். பிறகு சோழர்கள் அவர்களைத் துரத்தி விட்டார்கள். கொங்கு சோழர்கள் வலி குன்றத்

தொடங்கியபோது கன்னட ஹொய்சளர்கள் தெற்கே வரத் தொடங்கினர். 13 நூற்றாண்டில் கொங்கு நாட்டின் வட பகுதியை அவர்கள் தழுவிக் கொண்டார்கள். நொய்யலின் வட கரை முழுதும் அவர்கள் வசம் செல்லவே கோவையும் அவர்பால் சேர்ந்தது. கன்னடியக் குடியானவர்கள் ஏராளமாகக் கொங்கு நாட்டில் குடியேறினார்கள். அவர்களில் பெரும்பாலோர் கெங்கடிய ஒக்கலிகர். இப்பதத்தின் பொருள் 'கங்கநாட்டுக் குடியானவர்' என்பது. [கெங்கடிய = கங்க நாட்டு, ஒக்கலிகர் = குடியானவர்]. ஹொய்சளர்களில் முதல் மன்னர்கள் ஜைனர்கள். அம்மன்னர் காலத்தில் சமணம் கொங்கு நாட்டில் புகுந்தது. விஜய மங்கலம், வெள்ளோடு, திங்களூர் முதலிய இடங்களில் உள்ள ஜைன ஆலயங்கள் அப்போது ஏற்பட்டன. அங்குள்ள ஜைனர்கள் கன்னடம் தான் இப்போதும் பேசுகிறார்கள். ஆனால் தமிழை நன்றாகக் கற்றுக் கொங்குவேள் மாக்கதை, கொங்கு மண்டல சதகம் முதலிய சமண நூல்களை இயற்றினார்கள்.

ஃ ஃ ஃ

26. சமணப் புலவர்கள்

கொங்கு நாட்டை ஆண்ட கங்கர்களிலும் ஹொய்சளர்களிலும் பல பேர் சமண சமயத்தைச் சார்ந்தவர்கள். அவர்கள் காலத்தில் சமண சமயம் கொங்கு நாட்டில் புகுந்தது. சமணர்கள் விஜயமங்கலத்திலும் அதைச் சுற்றியுள்ள ஊர்களிலும் குடியேறி ஆலயங்களைக் கட்டித் தமிழ்ச் சங்கம் நிறுவித்

தமிழைப் போற்றி வந்தார்கள். அவ்விதம் அவர்க்ள் குடியேறி இருந்த சின்னங்கள் இப்போதும் இருக்கின்றன. ஈரோடு தாலுக்கா விஜயமங்கலம், அரசண்ணுமலை, திங்களூர், வெள்ளோடு, பூந்துறை, சீனுபுரம் முதலான ஊர்களிலும், உடுமலைப்பேட்டை தாலூக்கா திருமூர்த்தி மலையிலும், பொள்ளாச்சி தாலூக்கா கப்பளாங் கரையிலும், கரூர்தாலூக்கா ஆறுநாட்டார் மலையிலும், பழனி தாலூக்கா ஐவர் மலையிலும் சமண ஆதிக்கச் சின்னங்கள் இப்போதும் காணலாம். இவ்வூர்களில் உள்ள சில ஆலயங்களில் சில சமணக் குடும்பங்கள் இப்போதும் பூசைசெய்து வருகிருர்கள். சங்கத்தார் காலத்துச் சில செய்யுட்களைத் தவிர தமிழில் சிறந்த நூல்களை எழுதிய கொங்கு நாட்டுப் புலவர்கள் சமணர்களே. இவர்களில் சிறந்தவர்கள் கொங்கு வேளிர், அடியார்க்கு நல்லார், பவணந்தி முனிவர், குண வீரபண்டிதர், வச்சணந்தி முனிவர், கார்மேகக் கவிஞர் முதலியோர். கொங்கு வேளிர் வாழ்ந்தது விஜயமங்கலம். பிசாச பாஷையில் இருந்த பிரகத் கதையை "மாக்கதை" என்ற பெயரில் மிகச்சிறந்த காவியம் ஒன்றை இயற்றினுர். அடியார்க்கு நல்லார் கொங்கு மண்டலத்துக் குறும்பு நாட்டு நிரம்பையூரில் உதித்து சிலப்பதிகாரத்திற்கு ஒரு அருமையான உரை எழுதியுள்ளார். இவராலேயே பண்டை வழக்கங்களும் பொருள்களும் நமக்கு விளங்குகின்றன. பவணந்தி முனிவர் தமிழில் சிறந்த இலக்கணத்தை இயற்றினுர். இவர் சனகை என்ற சனநாத புரத்தில்

அவதரித்தார். குண வீர பண்டிதரும் வச்சணந்தி முனிவரும் வாரக்கா நாட்டுக் களந்தையில்பிறந்தவர்கள். இது பொள்ளாச்சி தாலூக்காவில் உள்ளது. கார்மேகக் கவிஞர் விஜயமங்கலத்தில் இருந்தவர். கொங்கு மண்டல சரிதத்தை எழுதினவர். கொங்கு நாட்டுச் சரிதச் சங்கதிகள் பலவும் இதனுல் தெரிகின்றன, திருமூர்த்தி மலையில் உள்ள பாறைச் சித்திரம் சமணத் தீர்த்தங்கருடையதே. அருகில் பல ஆலயங்களில் அமணேசுவரர் என்று இருக்கும் மூர்த்தங்கள் சமண சம்பந்தமே. ஆகவே கோவைக்குச் சுற்றிலும் 12 நூ. வரை சமண ஆதிக்கம் இருந்தது என அறியலாம்.

ை ை ை

27. தென்பாண்டியர்கள் - கொங்கு பாண்டியர்கள்

13 - ம் நூ. தொடக்கத்திலேயே தஞ்சைச் சோழர்கள் பலவீனமடையத் தொடங்கினுர்கள். அவர்களுடனே கொங்கு சோழர்களும் தாழ்வு அடையத் தொடங்கினுர்கள். அவர்களுடைய வடகொங்கு நாட்டை ஹொய்சளர்கள் பிடித்துக் கொண்டார்கள். தென் கொங்கில் மதுரைப் பாண்டியர் புகத்தொடங்கினுர்கள். ஜடாவர்மன் சுந்தர பாண்டியன் முதலாதவன் சோழநாட்டைப் பிடித்து ஸ்ரீரங்கம் சிதம்பரம் வரை வெற்றியுடன் சென்ருன். அப்போது அவன் கொங்குநாட்டிலும் புகுந்தான். சிதம்பரத்தில் துலாபரம் செய்து தன் நிறைகொண்ட பொன்னைத் தானம் செய்த மன்னன் இவன்தான். வழக்

கப்படி தொலை நாடான கொங்கை ஆள ஒரு பிரதிநிதியை வைத்துவிட்டுப் போனான். இவனுடைய வம்சத்தார் கொங்கு பாண்டியர் என்னப்பட்டனர். அவர்களுடைய அரசு வெகு சிறிய காலந்தான் நடைபெற்றது. அதற்குள் சில சீர் திருத்தங்களை இந்நாட்டில் செய்து வைத்தனர். கொங்கு பாண்டியரில் சிறந்தவன் 1265 - 1285 ஆண்ட வீரபாண்டியன். பிறகு வந்தவன் ஒரு சுந்தர பாண்டியன். இவன் காலத்தில் அவிநாசியில் சுந்தர நயினார்க்கோயில் கட்டப்பட்டது. சுந்தர மூர்த்திகள் முன்னாளில் முதலைவாய்ப் பிள்ளை அழைத்த அற்புதம் நடந்த குளக்கரையில் அவ்வாலயம் கட்டப்பட்டதாம். இவன் காலத்தில் ஒரு புது ஊர் கட்டப்பட்டு குடி வைத்ததும், சூலூரி (சூரலூர்)ல் நொய்யலுக்கு அணைக்கட்டு, வாய்க்கால், குளம் முதலியவைகளை நிர்வாகம் செய்ய அதிகாரிகளை நியமித்ததும், கூறுகிற கல் வெட்டுகள் ஏற்பட்டன. இரண்டாவது கல் வெட்டு குரக்குத்தளி என்ற வைப்புத் தலமாகிய பெரியபாளையம் ஆலயத்தில் உள்ளது: இருகொங்கு மன்னர்களும் சுந்தரபாண்டியனிடம் தங்கள் வழக்குகளை தீர்க்கச் சென்றதாகவும் ஒரு கல்வெட்டு கூறுகிறது. ஆகவே அக்காலத்துப் பாண்டிய மன்னன் வெகு பிரசித்தி பெற்றவனாக இருக்கவேண்டும். பாண்டியருடைய கல்வெட்டுகள் பேரூர் வரை இருத்தலால் அக் காலத்தில் கோவை சிறிது காலம் அவர்களிடம் இருந்தது. மேலும் கோவைக்கு மேற்கிலும் வடக்கிலும் வீரப்பாண்டி என்ற பெயர்களுள்ள

ஊர்கள் உண்டு. அவைகள் வீரப்பாண்டியனால் ஏற்படுத்தப்பட்டவை என்று அறிய வேண்டும். ஆனால் கோவை நகரத்தில் அவர்கள் யாதொரு நிரந்தரச் சின்னமும் வைத்துவிட்டுப் போகவில்லை.

ல ல ல

28. வட ஹொய்சளர்கள்

பாண்டியர்கள் என்ன முயன்றும் வடக்கே இருந்துவந்த ஹொய்சளர்களை விரட்டமுடியவில்லை. வட கொங்கு முழுதும் அவர்கள் கையிலேயே நின்று விட்டது. வட கொங்கையும் தென் கொங்கையும் பிரித்து நின்றது நொய்யல் நதியாகும். கோவை நொய்யல் நதிக்கரையில் இருந்ததனால் இவ்விரண்டு அரசர்களும் போராட நடுவில் அது எல்லை ஊராக இருந்தது. சிறிது காலம் கன்னடியர் சிறிது காலம் மதுரை மன்னர்கள் இவ்விருவர் ஆட்சிக்குள்ளே சிக்கிப் பெருந்துன்பம் அடைந்தது. இதனாலே இந் நகரம் முன்னேற்றம் அடைவதற்கு வழியில்லாமற் போய் விட்டது. ஹொய்சளர்களில் சிறந்த மன்னன் பிட்டி தேவன் இராமாநுஜரால் வைஷ்ணவன் ஆகித்தெற்கே தன் அரசாட்சியைப் புகுத்தினான். தலைக் காட்டில் இருந்த சோழர் பிரதிநிதியைத் துறத்திவிட்டுக் கோலாரைப் பிடித்துக் கொண்டு கோயத்தூரை வென்று கொங்கு நாட்டை அடிமைப் படுத்தியதாக ஒரு கல்வெட்டு கூறுகிறது. கோயத்தூர் என்ற ஊர் கோயமுத்தூர் என்றும் புங்கனூரில் உள்ள தெட்டிகம் என்றும் பலவாய் கூறுகின்றனர். கங்கவாடி முழுதும் அவன் வசமாகியிருந்தது என்பது நிச்ச

யம். வடகொங்கு முழுதும் அவன் வசப்பட்டதோ என்பது ஐயம். ஏனெனில் அவனுக்குப் பின் வந்த பல மன்னர்களும் தாங்களும் கொங்கு நாட்டைப் பிடித்த தாக வீரம் கூறிக் கொள்ளுகிறுர்கள். நரசிம்மன் I, வல்லாளன் II, நரசிம்மன் II இவர்கள் எல்லாரும் கொங்கு நாட்டின் மீது படையெடுத்ததாக கூறிக் கொள்கிறுர்கள். ஆகவே இவர்களில் ஒருவராவது நிரந்தரமாகக் கொங்கு நாட்டைப் பிடித்ததாகத் தெரியவில்லே. ஆனுல் இம் முயற்சிகள் பின்னுல் பலன் தந்ததற்கு அறிகுறிகளாக இருந்தன. நர சிம்மன் II தகடூர் அதிகமானே வென்றதாக ஒரு கல் வெட்டு கூறுகிறது, ஆகவே அவன் காவிரியைக் கடந்து தற்காலச் சேலம் ஜில்லாவில் புகுந்ததாக அறி கிறேம். *1235 - 53* ஆண்ட வீர சோமேசுரவன்தான் திரிச்சி ஜில்லாவில் புகுந்து கண்ணனூரில் போசலே சுரம் உண்டாக்கினவன். ஆனுல் அவன் கீர்த்தி வெகுகாலம் இருக்கவில்லே. மதுரைப் பாண்டியர் அவனேத் துரத்திவிட்டார்கள். அவன் கல்வெட்டு ஒன்று கொங்கில் திங்களூரில் இருக்கிறது. அவ்வூர் வரை அவன் செல்வாக்குச் சென்றிருந்தது எனலாம்.

ஊ ஊ ஊ

29. தண்ட நாயக்கர்கள்

ஹொய்சள மன்னர்களின் சேனேத் தலேவர்களுக் குத் தண்ட நாயக்கர்கள் என்ற பெயர். தண்டு என்ருல் சேனே என்று அறியலாம். அவர்களில் சிறந்தவன் பெருமாள் தண்ட நாயக்கன். இவன் நரசிம்மன் III *(1254-1292)* உடைய தளகர்த்தன். தன் அரசனுக்

காகத் தெற்கே படையெடுத்து கொங்கு நாட்டில் வடப்பகுதி முழுதும் பிடித்தான். பவானிக் கரையில் ஒரு பலமான கோட்டை கட்டி அதற்குத் தன் பெயரைச் சூட்டினுன். இன்றைக்கும் அது டணுய்க்கன் கோட்டை என்ற பெயரால் வழங்குகிறது. இக் கோட்டை ஒரு சிறந்த அரண். மைசூர் பீட பூமிக்குத் தலைவாயில் போன்றது. முதலில் இதன் பெயர் நீலகிரி சாதாரணன் கோட்டை எனப்பெயர் வகித்தது. நீலகிரியைப் பிடித்த காரணத்தினுல் இப்பெயர் அத் தண்ட் நாயக்கன் பெற்றுன்போலும். பெருமாள் தண்ட நாயக்கன் மகன் மாதப்ப தண்ட நாயக்கன். அவன் தகப்பனுக்குப் பிந்தி இக்கோட்டைக் கதிபதி ஆனுன். அவன் வீர வல்லாளன் III (1293 - 1311) காலத்தில் சேனைத் தலைவனுக இருந்தவன். அவ்வரசன் காலத்தில் வடகொங்கு முழுதும் அம்மன்னன் வசமே இருந்தது. அவனுடைய கல் வெட்டுக்கள் கொங்கு நாடு முழுதும் பரவிக் கிடக்கக் காணலாம். ஹொய்சளர்க்குச் சேர்ந்த தெற்குப் பிராந்தியத்திற்குத் தண்ட நாயக்கன் கோட்டையே தலை நகராக இருந்தது. அம்மாதப் பையன் மக்கள் வீரசிக்க கேதையன், சிங்கையன் என்ற தண்ட நாயக்கர்கள் பிரதிநிதிகள் ஆனுர்கள். அவர்களில் கேதையன் டணுய்க்கன் கோட்டையிலுள்ள மாதவப் பெருமாள் ஆலயத்தைத் தன் தகப்பன் ஞாபகார்த்தமாகக் கட்டினுன். இவர்களுடைய கல்வெட்டுகள் பேரூரில் இருக்கின்றன. ஆகவே கோவை இத் தண்ட நாயக்கர்கள் ஆளுகையில் மூன்று தலைமுறையாக இருந்தது எனலாம்.

ஆனால் தென் கொங்கு ஆகிய ஆமராவதிப் பள்ளத் தாக்கு இவர்கள் காலத்தில் எல்லாம் பாண்டியர்கள் வசமே இருந்தது. அங்கே தண்ட நாயக்கர்களின் கல்வெட்டுக்களே கிடையா. கன்னட நாட்டுப் பிரதி நிதிகளாகக் கோவையில் ஆண்டவர்கள் மாதேராஜா சிக்கேராசா என்ற கர்ணபரம்பரை உண்டு. ஒரு வேளை தண்ட நாயக்கர்களில் காணும் மாதப்பனும் சிக்க கேதையனும் இவர்களாக இருக்கலாம். தண்ட நாயக்கன் என்ற சொல் 12 நூ. காலசூரியர் காலத் திருந்தே வழக்கத்தில் இருந்தது. பிச்சல மன்னன் மந்திரி வசவண்ணர் தண்ட நாயக்கனாகப் போற்றப் படுகிறார். (பிரபு லிங்க லீலை.)

ஃ ஃ ஃ

30 வடக்கே அரசியல் மாறுதல்

வீரவல்லாள தேவன் III ஆளுகையில் வடக்கே இருந்து திடீரென்று ஒரு பெரிய வெள்ளம் வந்தது. அது தெற்கே இருந்த எல்லா அரசியல்களையும் அழித்துவிட்டுப் போயிற்று. அவ்வெள்ளம் அன்னிய நாட்டது மாத்திரம் அன்று. அன்னியசமயத்தின் வெள்ளமும் ஆகும். டெல்லியிலிருந்து வந்த அலா உத்தீன் படை யெடுத்து ஓரங்கல் காகாதியர், ஹளே வீடு ஹொய்சளர் முதலான பற்பல அரசியல்களையும் ஒருங்கே நொருக்கிவிட்டுப்போனான். முதல் படை யெடுப்பு ஒரு கொள்ளைக் கூட்டம் போல் வரிசையாக தெற்கே வந்து திரும்பிவிட்டது. வெள்ளத்தில் தலை வணங்கின செடிகள் திரும்பி எழுவது போல் ஹொய் சளர்கள் படையெடுப்பு முடிந்தவுடன் திரும்பியும்

அரசாள எழும்பினர். அக்காலத்துக் கல்வெட்டுக்கள் 14 நூ. மத்தி வரையில் இருக்கின்றன. இரண்டாம் முறை முகம்மதியர்கள் மாலிக் காபூர் தலைமையில் தெற்கே வந்தார்கள். அப்போது பல ஊர்கள் அழிந்தன. அவ்விதப் படையெடுப்பின் காரணமாக கொங்கு நாட்டில் விஜய மங்கலத்தில் ஒரு கல்வெட்டின்படி ஒரு கோயிலுக்கு அவ்வூர் மக்கள் ஒரு தானம் கொடுத்தார்கள் என்றும், அத்தானத்தினால் தம் அரசனுக்குப் பகைவர்களினின்றும் க்ஷேமம் வரவேண்டும் என்று கோரினதாகவும் தெரிகிறது. வீர வல்லாளன் 1342 வரை ஆண்டுவந்தான். அந்த ஆண்டுக் கல்வெட்டு ஒன்று (டணாய்க்கன் கோட்டை) அவ்வரசன் துருக்கர்களுடன் போர் புரிந்து இறந்தான் எனக்கூறுகிறது. அவனுக்குப்பின் வந்த விருபாக்ஷராயன் 1347 ல் விஜயநகரம் தாபனம் பெறுதற்கு உதவி புரியும் பொருட்டு ஒரு சேனையை அனுப்பினதாகத் தெரிகிறது. இவனோடு ஹொய்சளர் அழிந்தார்கள். ஹம்பி விஜயநகரத்தார் தோன்றினர்கள். அவர்கள் மிக்கப்பெருமையுடன் வளர்ந்து முகம்மதியர்களை இரண்டு நூ. வரை தெற்கே வராமல் தடுத்தார்கள். கொங்கு நாடும் அத்துடன் கோவை நகரும் விஜயநகரத்தார் ஆளுகைக்குள் சென்றது. வட நாட்டு அரசியல் மாறுதல்கள் கொங்கு நாட்டை மிகவும் பாதித்திருக்காது. ஏனெனில் இது ஒரு கோடியில் இருந்ததினாலும் இது அநேகமாக பிரதிநிதிகளாலேயே ஆளப்பட்டுவந்ததினாலும் பாதிக்கப்படவில்லை என அறியலாம்.

31. விஜயநகரத்தார் - கருநாடக சாம்ராச்சியம்

விஜயநகரத்தார் முதல் முதலில் கொங்கு நாட்டில் புகுந்தது புக்கராயன் I மகன் கெம்பண்ண உடையான் II காலத்தில் கி. பி. 1368ல் தான். இவன் சங்கமன் வம்சத்தைச் சேர்ந்தவன். இதே அரசன்காலத்திய இரண்டு கல்வெட்டுகள் கொங்கு நாட்டுச் சடையாம் டாளையத்தில் இருக்கின்றன. கூறையூரில் முகம்மதியரால் அழிக்கப்பட்ட நாகேசுரம் உடையார் வடுகு பிள்ளையார் என்ற இரண்டு கோயில்களையும் ஆவுடையராசன் என்பவன் திருப்பிக்கட்டினதாக இக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. இக்கோயில்களை முகம்மதியர்கள் மாலிக்காபூர் படையெடுப்பிலோ அல்லது மதுரை சுல்தான்கள் ஆளுகையிலோ அழிந்திருக்க வேண்டும். 1365 - 66 ல் புக்கன் I தன் மகனாகிய கம்பண்ணனை II மதுரை சுல்தான்கள் அரசைத் தொலைக்கும்படி அனுப்பினான் என்று சேலம் வட்டத்து வரலாற்றுநூல் கூறுகிறது. இவ்வூரில் ஆக்கிரமித்த முகம்மதியர்களை விஜயநகரத்துச் சேனை துறத்தியடித்து விட்டு ஆலயங்களைப் புதுப்பிக்க வழி தேடியிருக்க வேண்டும். இச் செயலே விஜயநகரத்தாரின் சமய ஆதரவைத் தெளிவமாகக் காட்டுகிறது. இந்த சங்கமவம்சத்து மற்ற அரசர்களான ஹரிஹரன் II (1386 - 97) தேவராயன் I (1408,) ஹரிஹரன் II (1400 - 1412) தேவராயன் II (1419 - 1451) என்ற அரசர்கள் காலத்துக் கல்வெட்டுக்கள் பல கொங்கு நாட்டில் கிடைப்பதனால் சிறிது சிறிதாக விஜயநகரத்தார் கொங்கு நாடு முழுதும் தம் கைவசத்தில் கொண்

டார்கள் என அறியலாம். தேவராயன் II கல்வெட்டுகள் கொழிஞ்சிவாடி பழனி என்ற ஊர்களிலும் இருப்பதால் அவன் காலத்தில் கொங்கு முழுவதும் பிடிபட்டு மதுரைப் பக்கத்திலும் விஜயநகரத்தார் சென்றுவிட்டார்கள் எனலாம். விஜயநகரத்து இரண்டாம் வம்சம் சாளுவ வம்சம் எனப்படும். இவர்கள் காலத்துக் கல்வெட்டு ஒன்றும் கொங்கு நாட்டில் இல்லாமல் இருந்தாலும் ஜெய்மினி பாரதத்தில் சாளுவ நரசிம்மனைப்பற்றிக் கூறும்போது கொங்கு தாராபுரம் அவனைச் சேர்ந்ததென்று கூறுகிறதினால் கொங்குநாடு அவ்வம்சத்தை விட்டு நீங்கவில்லை எனலாம். கொங்கு நாட்டோடு கோவையும் விஜயநகரத்துள் அடங்கிவிட்டது. ஆனால் கல்வெட்டு ஆதரவுகள் கிடைக்கவில்லை. பெரிய ஆலயங்களும் கோபுரங்களும் அவர்கள் கட்டுவது வழக்கம். ஆனால் கோவையில் அவ்வாறு ஏற்படவில்லை.

ஐ ஐ ஐ

32. அருணகிரிநாதர் வருகை

விஜய நகரத்துப் பிரபுடதேவராயன் II காலத்தில் திருவண்ணாமலையில் அருணகிரிநாத சுவாமிகள் அவதரித்து முருகக் கடவுளிடம் மிகுந்த அன்பு பூண்டு தென்னாடு முழுதும் சுற்றி முருகர் ஆலயங்களைத் தரிசித்து அருமையான திருப்புகழ்களைப்பாடி வந்தார். அப் பெரும்புலவர் காலம் முதல், நாட்டில் முருகர் வழிபாடு மிகுந்தது. தென் நாட்டில் பல நாடுகளையும் சுற்றிவரும்போது கொங்குநாடு வந்தார். கொங்கு நாட்டில் பாடல் பெற்றவை, வைப்பு, புரா

ணத் தலங்கள் எல்லாவற்றிற்கும் திருப்புகழ்களைப் பாடியதன்றிக் குன்று தோருடல் தலங்களுக்கும் மிகுதியாகத் திருப்புகழ்கள் அருளிச்செய்திருக்கிறார். அவ்வாறு கோவைக் கருகில் சுவாமிகள் பாடிய தலங்கள், பேரூர் - 3 மைல் - "இராப்பிணிதீர... பேரூர்ப் பெருமாளே." மருதமலை - 7 மைல் - "திரிபுரமதனை ஒருநொடியதனில்... அணிசெயுமருத மலையோனே." கனகமலை - (கிணற்றுக் கடவு) - 12 மைல் "அரிவையர்கள்...கனககிரியிலகு கந்தப் பெருமாளே." குருடிமலை - 10 மைல் - "கருடன் மிசைவரு...குருடிமலையுடை முருக... "தென்சேரி மலை - 24. - என்கேனும் ஒருவர் வர...தென்சேரி கிரியில்வளர் பெருமாளே." அவிநாசி - 25 "இறவாமல் பிறவாமல்... அவநாசிப் பெருமாளே." முதலியன. இத்தனைத் தலங்களைக் கண்டவர் கோவைக்கு வராமல் இருப்பாரா? வந்துதான் இருப்பார். கோவையில் கோட்டை சுப்பிரமணியர் கோயில் கரிகால் சோழன் காலத்திலிருந்தே புகழ்பெற்றது. அதனைத் தரிசித்து ஒரு அருமையான திருப்புகழ் பாடியுள்ளார். அது வருமாறு :

பாவ நாரிகள் மாமட மாதர் வினைக ளாணவ
 பாவை யாரிள நீரன முலையாலும்
பார்வை யாமிரு கூரயி லாலு மாமணி யார்குழை
 பார காரன வார்குழல் அதனாலும்
சாவ தாரவி தாரமு தார்த ராவித மூலித
 சாத மூரலி தாமதி முகமாலும்
சார்வ தாவடி யேனிடர் விற மாலறி வேமிகு
 சார மாயதி லேயுறல் ஒழிவேனோ

ஆவ வார்வன நான்மறை ஆதிமூலப ராவரி
யாதிகாரணரி தாகிய பரமேச
ஆதி யாரருள் மாமுரு கேச மால்மரு கேசுர
றுதி தேவர்க ளியாவர்கள் பணிபாத
கோவநாமறை யோர்மறை யோது மோதம்வி மூாவொலி
கோடி யாகம மாவொலி மிகவீறும்
கோவை மாநகர் மேவிய வீர வேலயி லாயுத
கோதையாளை யிேடமர் பெருமாளே.

இத்திருப்புகழை வேறு ஒரு ஊரின் திருப்புகழ் என்று மயங்கிச் சிலர் பதிப்பித்திருக்கின்றனர். அம் மயக்கத்தை நீக்கும் வண்ணம் இந்தக் குறிப்பை எழுதியுள்ளோம்.

௵ ௵ ௵

33. உம்மத்தூர் ஆட்சி

மத்திய ஆட்சி பலமுள்ளதாக இருக்கும் வரைக்கும் மாகாணங்கள் அடங்கியிருக்கும். மத்திய ஆட்சி பலவீனம் ஆகும்போது மாகாணத் தலைவர்கள் தலை தூக்கி ஆடுவார்கள். நாளா வட்டத்தில் மாகாணத் தலைவர்கள் மன்னர்களைப் போல எல்லா அரசியல் உரிமைகளையும் செலுத்தத் தொடங்கி விடுவார்கள். தங்களுக்கென ஒரு அரச பரம்பரையும் ஏற்படுத்தி விடுவார்கள். இந்தச் சீரில்லா முறை இந்தியாவில் எங்கும் இருந்தது. இந்து அரசியல்களிலும் முகமதிய அரசியல்களிலும் இருந்தது. இதனை முந்தியே ஒரு முறை குறித்துள்ளோம். அதே சீர்கேடு விஜயநகர ஆட்சியிலும் ஏற்பட்டது. விஜய நகரத்தில் மிகச் சிறப்போடு ஆண்ட தேவராயனுக்குப் பிந்தி ஆண்ட

அரசர்கள் பலம் குறைந்து இருந்தார்கள். அப்போது கொங்கு நாட்டைக் கண்காணித்துவந்த அதிகாரி உம்மத்தூரில் இருந்தவன். இராயனுடைய கண்காணிப்பு குறையவே உம்மத்தூர் அதிகாரி தன்னையே மன்னவனாகக்கொண்டான். தன் பெயராலேயே சாசனங்கள் வெளியிட்டான். அக்கம் பக்கத்துத் தலைவர்களோடு போர் புரிந்து நாடுபிடிக்கவும் தொடங்கினான். ஏனெனில் வரி வாங்குவதும் படைகளைத் திரட்டி வைப்பது முதலான உரிமைகளும் மாகாண அதிகாரிகளே செய்து வந்தபடியால் இவ்வதிக்கிரமிப்பு சாத்தியமாகிவிட்டது. இவ்விதம் உம்மத்தூரில் இருந்து கொங்கு நாட்டைத் தன் ஆளுகைக்குள் கொண்டுவந்தவன் வீர நஞ்சராய உடையார். 1489, 1499 கி. பி. இட்ட சாசனங்கள் அவிநாசி தாலூக்காவில் இருக்கின்றன. கொங்கு நாட்டு வைப்புத் தலமாகிய குறும்பு நாட்டுக் குரக்குத்தளியாகிய பெரிய பாளையத்தில் ஒரு கல்வெட்டு இருக்கிறது. அவ்வூருக்கடுத்த நஞ்சராயன் குளம் என்ற பெரிய ஏரியை இவன்தான் கட்டினவன். இவன் இந் நாட்டில் நீர்ப்பாய்ச்சல் வசதிகளை மிகுதிமாக நிறுவினவன். கொடுவாயில் ஒரு சிவாலயம் கட்டினான் இவன் மகன் வீரசிக்கராயன் 1508, 1512 - ஆண்டுகளில் அவிநாசிக்கடுத்த பல ஊர்களில் சாசனங்கள் ஏற்படுத்தியுள்ளான். இவனுக்குப் பின் இச் சிறு அரசியல் முடிந்துவிட்டதுபோலும். உம்மத்தூர் என்ற ஊர் மைசூர் நாட்டில் தென்பகுதியில் உள்ள ஒரு ஊர். கொங்கு நாட்டிற்கு அடுத்து உள்ளது.

ஆகவே அது சிறிது காலம் இம்மாகாணத்தின் தலை நகராக இருந்தது.

ௐ ௐ ௐ

34. திருக்கணும்பி மாதையன் ஆட்சி

உம்பத்தூர் ஆட்சியை ஒட்டினாற் போல தெற்கணும்பி மாதையன் என்ற ஒரு தலைவன் கொங்கு நாட்டில் ஆட்சி புரிந்ததாகச் சான்று கிடைக்கிறது. தெற்கணும்பி அல்லது திருக்கணும்பி என்ற ஊர் மைசூர் சீமையில் தெற்குப் பகுதியில் உள்ளது. இந்த ஊருக்குச் சேர்ந்த மாதையன் என்பவன் கொங்கு மாகாணத்திற்கு விஜயநகரத்தின் பிரதிநிதியாக ஆண்டான் என்று சொல்லக்கூடும். இவன் ஒரு வீர சைவத் தலைவன் என்று கூறப் படுகிறான். இவனுடைய கல்வெட்டு பேரூர்த் திருக்குளத்தில் இருக்கிறது. ஆலயத்திற்கு வடகிழக்கு மூலையில் அக்குளம் வெகு கச்சிதமாகக் கட்டப் பட்டுள்ளது. செதுக்கின கருங்கற் படிகளினால் 16 மூலை கொண்டதாக நிலமட்டத்திலிருந்து அடி மட்டம் வரையில் உண்டாக்கப் பட்டிருக்கிறது. இதன் 16 மூலைகளிலும் கன்னடத்திலும் தமிழிலும் "தெற்கணும்பி சங்கரையன் மகன் மாதையன் சேவை" என்று எழுதப்பட்டிருக்கிறது. ஒரு ஆலயம் இக்குளத்தின் கீழ்க்கரையில் கட்டப்பட்டுள்ளது. அது மாதவேச்சுரம் என்று இத்தலைவன் பெயரால் வழங்குகிறது. இவைகளுக்கு ஒரு கர்ண பரம்பரைச் சரிதம் உண்டு. இத்தலைவன் ஒரு கடுமையான வீர சைவனென்றும், பேரூரில் இருந்த ஒரு பெருமாள்

சந்நிதியை இடித்து அக்கற்களைக் கொண்டு தான் வெட்டின இக்குளத்திற்குப் படிகளும் இந்த சிவாலயமும் கட்டி தன் பெயரால் அவ்வாலயத்தில் சிவலிங்கப் பிரதிட்டை செய்தான் என்றும் கூறப்படுகிறது. இப்பெருமாள் ஆலயத்தின் மூல மூர்த்தி இலட்சுமி நாராயண மூர்த்தி என்றும் அதுதான் இப்போது குளத்தின் தென்புறத்தில் வைக்கப் பெற்றிருப்பது என்றும் சொல்லப்படுகிறது. இந்த மாதையனே அவிநாசியில் சிவாலயத்தில் பல திருப்பணிகளைச் செய்தவன். முன்கோபுரம் கட்டுவதற்காகப் பெரிய கருங்கற்களை தருவித்து வைத்தான். ஆனால் அத்திருப்பணி முடிவு பெறவில்லை. கோவை இராஜ வீதியின் பெயர் இவன் பெயர் என்றும் ஊகிக்கப்படுகிறது. அப்படியாயின் அங்கிருந்த அரண்மனை இவன் கட்டினதாக இருக்கலாம். இவன் சந்ததியார் பெயர்கள் கிடைக்காமையினால் இவன் வெறும் பிரதிநிதியாக மாத்திரம் இருந்தான் எனக் கூறமுடியும்.

ை ை ை

35. வீரசைவம் தளிர்ச்சி

விஜய நகரத்து மன்னர்கள் வீர சைவர்கள் அல்லர். முதல் இரண்டு வம்சத்தினர்கள் சைவர்கள் ஆகவும் பின்னால் வந்தவர்கள் வைஷ்ணவர்கள் ஆகவும் இருந்தார்கள். ஆனால் 15, 16-ம் நூற்றாண்டுகளில் அவர்கள் கொங்கு நாட்டிற்கு அனுப்பிய ஆட்சியாளர்கள் வீர சைவர்கள். உம்மத்தூர் அரசர்கள் சைவத்தைப் பரப்பினவர்களே. பின் வந்த தெற்கணும்பி மாதையன் ஒரு வீர சைவன்.

வைணவ ஆலயத்தை இடித்துச் சிவாலயத்தைக் கட்டினுன் என்ருல் அது அவனது மதப்பற்றினை விளக்குகின்றது. இவன் இடித்த திருமால் கோயில் சென்னை மியூசியம் செப்பேட்டில் கண்டபடி மாறன் சடையன் காலத்தில் "கொங்குநாடு புகுந்து காஞ்சிவாய்ப் பேரூரில் திருமாற்குக் குன்ற மன்னதோர் கோயில்" உண்டாக்கின விவரம் கொண்ட திருமால் கோயிலே என்றும் ஊகிக்கிருர்கள். அப்படிப்பட்ட ஒரு கோயில் இப்போது இல்லாததே இம்மாதையனுடைய செயல் என்பர். இந்த வீர சைவர் காலத்தில்தான் மைசூர் நாட்டிலிருந்து பல வீரசைவம் அல்லது லிங்காயிதக் குடும்பங்கள் கோவையிலும் அவிநாசி, சேவூர், சத்தியமங்கலம் முதலிய ஊர்களில் குடியேறினர் எனலாம். மற்றும் படிநாட்டில் சிவாச்சாரிய மடமான சாந்த தேவர் சிம்மாசனத்து 50 உடையார்களுக்கு அன்னவஸ்திரம் கொடுப்பதற்காகப் பொன்தானம் செய்ததாக உம்மத்தூர் சிக்கராயனுடைய கல்வெட்டு ஒன்று கூறுகிறது. ஆகவே வீரசைவ மடத்திற்கு ஆதரவு தரப்பட்டது. மேலும் ஹைதர் காலத்தில் கோவை ஆண்ட தலைவன் ஆன குறிக்கார மாதையனும் ஒரு வீர சைவனே. இப்போதும் "குறிக்காரர்" என்ற வீட்டுப் பெயர் கொள்ளேகாலத்தில் லிங்காயதர்களில் உண்டு. கோவையில் சுக்கிரவாரப் பேட்டையில் வீரசைவ மடம் ஒன்று இருக்கிறது. அதற்கு அடுத்துப் பல வீரசைவ குடும்பங்கள் இருக்கின்றன. அவர்கள் சென்ற நூற்ருண்டில் மிகச் செல்வாக்குடன் இருந்

தார்கள். பெரிய வீடுகளைக் கட்டிக்கொண்டு வாழ்ந்தார்கள். லிங்கப்ப செட்டி சந்தும், வீதியும் ஒரு வீரசைவச் சீமான் நினைவாக ஏற்பட்டவைகளே. இந்த விதமாகக் கோவையில் வீரசைவம் நுழைந்து பெருகியது.

ஃ ஃ ஃ

36. கருநாடக ஆட்சி

கருநாடக சாம்ராஜ்யம் மிகவும் உன்னத நிலைக்கு வந்தது துளுவ வம்சத்துக் (3-வது வம்சம்) கிருஷ்ணதேவராயன் (1509 - 1530) காலத்தில் தான். இவன் வருவதற்கு முந்தி விஜயநகரம் பல வீனப் பட்டிருந்தபோது பல இராசப் பிரதிநிதிகள் தம்மிச்சைபோல அத்துமீறி நடந்து வந்தார்கள். அவர்களில் ஒருவன் உம்மத்தூர் அரசப் பிரதிநிதி. இதனைக் கண்டிக்க வேண்டி கிருஷ்ணதேவராயன் உம்மத்தூர் பேரில் படையெடுத்துச் சிவசமுத்திரக் கோட்டையை ஒரேநாட் சண்டையில் வென்றான். அந்தப் பிரதிநிதியைத் துரத்திவிட்டு பருவத ராகுத்தன் என்பவனைப் பிரதிநிதியாக வைத்தான். இச்செய்தி ஈரோட்டுக் கல்வெட்டினால் (1510 கி.பி.) தெரிகிறது. உம்மத்தூர் தலைவர்களைப் போல் அல்லாமல் இவன் அரசனுக்கு அடங்கி அவனுடைய கீர்த்தியை பிரபலப்படுத்தினான். கொங்குநாடு முழுதும் இம்மன்னனுடைய ஆட்சி திரப்படுத்தப் பட்டது. ஏனெனில் நாடு முழுதும் அவன் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. தாடிக்கொம்புக் கல்வெட்டில் அவன் 24 மனைகள் கட்டி குடியேற்றி வைத்தான்

என்று சொல்லப்பட்டிருக்கிறது. (1522 கி. பி.) ஆகவே விஜயநகரத்தார் குடியேற்றத்தில் வெகு திறமை காட்டினார்கள் என்று சொல்லலாம். தென் இந்தியா முழுதும் பாளையப்பட்டுக்களை ஏற்படுத்தி வடநாட்டு நாயக்கர்களை சாமந்தர்களாக்கி அவர்கள் மூலமாகத் தெலுங்கு கன்னட வகுப்பார்களைக் குடியேற்றி வைத்தார்கள். அவ்விதம் கருநாடக ஆட்சி தென் நாட்டில் வலுக்கத் தொடங்கியது. மேலும் சமயச் சீர்திருத்தத்திலும் முற்பட்டு ஆலயங்களில் பெருங் கோபுரங்களையும் பெரிய மண்டபங்களையும் (100, 1000 கால்கள்) பெரிய மதில்களையும் கட்டினார்கள். கிருஷ்ணதேவராயனுக்குப் பிறகு அச்சுதராயன் (1530 - 42) அவனுக்குப் பிறகு சதாசிவராயன் (1540 - 1567) அரசாண்டனர். இவர்கள் காலத்திலும் கொங்கு நாடும் கோவையும் அவர்கள் வசத்திலேயே இருந்தன. கொங்கு ஒரு மாகாணமாக இருந்தது. சதாசிவன் பெயருக்கு மாத்திரம் அரசன். கிருஷ்ணதேவராயன் மருமகனான அளியராமராயனே உண்மையாக ஆட்சி புரிந்து வந்தான். 1565ல் ராக்ஷச தகடி யுத்தத்தில் அளியராமராயன் கொல்லப்பட்டான்; துளுவ வம்சமும் தொலைந்தது. பிறகு ஆரவீட்டு வம்சம் ஆளத் தொடங்கியது. விஜயநகரத்து ஆட்சியின் வலிமை குறையத் தொடங்கியது. ஆரவீட்டு வம்சத்தில் வெங்கிடபதி ராயன் (1586-1614) சிறிது தலைதூக்கி நின்றான். என்றாலும் தென் நாட்டில் உண்மையாக ஆட்சி புரிந்தவர்கள் மதுரை நாயக்கர்களும் மைசூர் உடையார்களுமே ஆவார்கள்.

கொங்குநாடு இவர்கள் இடம் அகப்பட்டுத் திண்டாடி வந்தது.

ஓ ஓ ஓ

37. தெலுங்கு கன்னட இயக்கம்

விஜயநகரத்தார் கொங்கு நாட்டில் புகுவதற்கு முந்தி, நாடு முழுதும் பெரும்பான்மையாகத் தமிழ் மயம் ஆகவே இருந்தது. ஹொய்சளர் காலத்தில் ஒரு சிறிதளவு கன்னடம் புகுந்திருந்தது. கன்னடியக் குடிகள் பெரும்பாலும் நீலகிரி, ஹாசனூர்க் கணவாய் வழிகளில் கொங்குநாடு புகுந்து மேற்குமலைத்தொடர்களின் அடிவாரத்தில் குடியேறினார்கள். இக்குடிகள் எல்லாம் விவசாயிகளே. புன்செய் நிலங்களிலே தங்கி புன்செய் தானியங்களே விளைவித்தார்கள். ஏனெனில் மைசூர் பீடபூமியில் அவர்கள் வசித்த காலையில் புன்செய் நிலங்களிலேயே அவர்களுக்கு பழக்கம் மிகுதி. இந்தப் பழக்கம் நாளது வரை அப்படியே இருக்கிறது. கன்னடிய ஒக்கிலியர்களுடைய கிராமங்கள் இந்நாளிலும் மலையடிவாரங்களிலேயே உண்டு. விஜயநகர ஆட்சியில் கன்னடத்தோடு தெலுங்குக் குடியேற்றமும் வரத் தொடங்கிற்று. விஜயநகரத்து வம்சங்களில் சங்கமரும் சாளுவரும் கன்னடிய அரசர்கள். ஆகவே கன்னடம் பாலிக்கப் பட்டது. துளவ, ஆர வீட்டார்கள் தெலுங்கு சம்பந்தம் உடையவர்கள். அவர்களால் தெலுங்கு பாலிக்கப்பட்டது. இந்த வகையில் முதலில் கன்னடிய மக்களும் பிறகு தெலுங்கு மக்களும் குடியேறினார்கள். அடிக்கடி விஜயநகரத்தார்கள்

தெற்கே படையெடுத்து வந்திருக்கிறார்கள். அவர்களுடைய சேனைகளோடு கன்னடப் போர்வீரர்களும் தெலுங்குப் போர்வீரர்களும் வந்தார்கள். பலபேர் இங்கேயே தங்கிவிட்டார்கள். படைகள் வரும்போது அப்படைகளுக்கு வேண்டிய உணவுப் பொருள் முதலியவைகளுக்காக வடநாட்டு வியாபாரிகளும் வந்தார்கள். இங்கே நிரந்தரமாகச் சில படைகள் நின்று விட்டன. வர்த்தகர்களும் இங்கேயே தங்கிவிட்டார்கள். மேலும் கிராம அதிகாரிகள் முதற்கொண்டு மாகாணத் தலைவர்கள் வரைக்கும் வடநாட்டாரே ஏற்படலானார்கள். ஆகவே பல குடும்பங்கள் தெற்கே வந்தன. கைத்தொழிற் கூட்டங்களும் தெற்கே வந்துவிட்டன. விஜய நகரச் சாம்ராச்சியம் இராக்ஷச தகடிப்போரில் முறியடிக்கப்படவே, அவர்கள் தலைநகரில் இருந்த பல வகுப்பார்கள் தெற்கே புறப்பட்டார்கள். அவர்களிலே தேவாங்கர்கள் ஒரு வகுப்பார். அவர்களுடைய முக்கிய மடம் ஹம்பியில் ஹேமகூட பருவதத்தில் இருந்தது. அம்மடமே அங்கிருந்து கலைந்தது. இவ்விதம் தெற்கே வந்த தேவாங்கர்கள் சேலம் கோவை இவ்வூர்களில் குடியேறினார்கள். இந்தக் குடி மாறுதல்களின் காரணத்தால் இப்போது கோவையிலும் அதற்கடுத்த பிரதேசத்திலும் 100க்கு தமிழர் 61·1ம், தெலுங்கர் 27ம், கன்னடியர் 10·9 பேரும் இருக்கிறார்கள். கோவை நகரில் தெலுங்கும் கன்னடமும் சிறிது அதிகமாகவே இருக்கும்.

38. மதுரை ஆதிக்கம்

விஜயநகரம் 1565-ல் பாழுடையவே அதன் சாமந்த மன்னர்கள் தலையெடுக்கத் தொடங்கினர். மதுரையில் நாய்க்கர்களும் மைசூரில் உடையார்களும் சுயேச்சை பெற்று ஆண்டனர். கொங்கு நாடு இவ் விருவருடைய எல்லைகளில் இருந்தது. ஆகவே இவ் விரு வம்சங்களும் அந்நாட்டை அடக்கிக்கொள்ள முயன்றார்கள். மதுரையில் விசுவநாத நாயக்கன் தன் அதிகாரத்தைப் பலப்படுத்திக் கொள்ளத் தன் நாடு முழுதும் பாளையக்காரர்களை நியமித்துக் கொண்டான். யுத்த காலங்களில் அவர்களே சேனைகளைத் திரட்டிக்கொண்டு வந்து சேனைத் தலைவர்களாக இருந்து போர் புரியவேண்டும். ஏனைய காலங்களில் நாட்டில் வரிவசூலித்துக் கப்பங்கட்ட வேண்டும். இவ்விதப் பாளையப்பட்டுகளில் சில பாளையப்பட்டுகள் தென் கொங்கில் இருந்தன. திரு மலை நாயக்கன் காலத்தில் அப்பாளையப்பட்டுகள் அவனுக்கு அடங்கியே யிருந்தன. அப்போது கோவை நகர் அவனுக்கு அடங்கியே யிருந்தது. அப் போதுதான் அவனுடைய மைத்துனனான அளகாத் திரி நாயக்கன் கோவைக்கடுத்த வடவழியில் (வடப் பள்ளி) இருந்து கொண்டு பிரதிநிதியாக ஆண்டான். அவனே பேரூர்க் கோயிலில் உள்ள கனகசபையைக் கட்டினவன். அவனுடைய உருவம் ஒரு கல்லில் செதுக்கப்பட்டிருக்கிறது. அம்மண்டபத்தில் உள்ள பத்துத் தூண்கள் மிக விசித்திர வேலைபாடு கொண்

டவை. உருவங்களின் நடையுடை பாவனைகள் நாயக்க மன்னரை ஒட்டியிருக்கக் காணலாம். ஒரு வீரன் கையில் துப்பாக்கி பிடித்திருக்கக் காணலாம். மேலே கல் சங்கிலிகள் தொங்குவதும் ஒரே கல்லில் பெரிய தாமரையும் அதன் நடு மத்தியில் தாமரை மொட்டைச் சுற்றி ஒரு கல் வளையம் தொங்குவதும் பாராட்டத்தக்க வேலையாகும். அத் தலைவனுடைய எண்ணம் கோயில் மண்டபங்கள் முழுதும் கட்டவேண்டும் என்பதாம். ஆனால் அது பூர்த்தி ஆகாததற்கு முன்பே ஏதோ ஒரு சம்பவத்தால் வேலை நின்றுவிட்டது. அதனால் வேலைசெய்த அனேக தூண்கள் அங்கேயே நின்றுவிட்டன. அவைகளைப் பின்னால் உபயோகப்படுத்திக் கொண்டார்கள். மருத மலையிலிருந்து வடவழி மார்க்கமாகப்பெருங்கற்களை எடுத்து வந்தார்கள். அதற்கு வழியெல்லாம் சான்றுகள் இருக்கின்றன. அளகாத்திரி நாயக்கன் வடவழியில் இருந்து வேலை வாங்கினவன் என்பதற்கு அங்கிருந்த அரண்மனைச் சின்னங்களும் கல்தூண்களும் பெயர்களுமே சான்றுகளாம். அப்போது கோவையும் மதுரையார் வசமே இருந்தது. 1655, 1665, 1667 ஆண்டுகளில் திருமலை நாயக்கனும் சொக்கநாத நாயக்கனும் செப்பேட்டுச் சாசனங்களை தந்திருக்கிறார்கள். பிறகு மெதுவாக மைசூரார் இந் நாட்டை ஆக்கிரமிக்கத் தொடங்கிவிட்டார்கள். 1657 லேயே காரமடைக்கு மைசூர் அரசன் கிருஷ்ணராசன் ஒரு செப்பேடு தந்திருக்கிறான். ஆகவே அப்போதிருந்தே மதுரை ஆட்சி குறையத் தொடங்கிற்று.

39. மைசூர் ஆதிக்கம்

திருமலை நாய்க்கனுக்குப் பிறகு நாயக்கர்வலி குறைந்தது. அதை அறிந்து மைசூரார் கொங்கு நாட்டைப் பிடிக்க எண்ணம் கொண்டு போர் தொடங்கினார்கள். அப்போது கண்டீரவ நரசராசன் மைசூர் மன்னன் ஆனான். அவன் வெகு பாராக்கிரம சாலி. 1641-ல் கோவை மீது படையெடுத்தான். பல இடங்களையும் பிடித்தான். 1653-ல் மறுபடியும் படை யெடுத்தான். 1659-ல் நடந்த போரில் மதுரையார் தோல்வி அடைந்தனர். 1672-ல் ஈரோட்டில் ஒரு பெரிய சண்டை நடந்தது. அதிலே மதுரையார் பெருந் தோல்வியுற்றார்கள். அதுமுதல் கொங்கு நாடு முழுதும் மதுரையைவிட்டு மைசூர் வசம் வந்து விட்டது. இந்தப் போரில் தளவாய் ஹம்பையா என்பவன் மைசூர் படையை நடத்தி வெற்றி அடைந் தான். அதுமுதல் மைசூர் அரசர்களுடைய கல்வெட்டு களும் செப்பேடுகளுமே கொங்கு நாட்டில் உள்ளன. கண்டீரவநரச ராசன் முதல் கிருஷ்ண ராசன் (1734 - 65) வரை பல அரசர்களின் கல்வெட்டுக்களும் இருக் கின்றன. இவ்வரசர்கள் காலத்தில் பல ஆலயங்கள் கட்டப்பட்டன, பழுதும் பார்க்கப்பட்டன. அவர் களிலே சிக்க தேவராயன் காலத்தில் சத்திய மங்கலத்துத் தவளகிரி ஆலயம் கட்டப்பட்டது. இது ஒரு முருகக் கடவுள் சந்நிதி. பவானிக் கரை யில் ஒரு சிறிய குன்றின்மேல் அழகாகக் கட்டப் பட்டுள்ளது. அவிநாசியிலும் த்ளவாய் தேவராச

னுடைய பிரதிநிதி சங்கரையன் பல மண்டபங்களைக் கட்டினன். ஆகவே கொங்கு நாட்டை ஆண்ட மைசூர் மன்னர்களில் அடியிற் கண்ட 4 அரசர்களுடைய கல்வெட்டுச் சான்றுகள் இருக்கின்றன. 1. கண்டீரவ நரசராசன் (1638-59), 2. தேவராசன் (1659 - 72), 3. சிக்கதேவராசன் (1672 - 1734), 4. கிருஷ்ணராசன் (1734-1765). 1672-ல் ஈரோட்டுச் சண்டை நடந்தபோது இருந்த மைசூர் மன்னவன் சிக்க தேவராசன். இவன், விஜயநகரத்துச் சீரங்கராயன் III அவனுக்குச் சகாயமாக வந்த மதுரை சொக்கநாத நாயக்கன் வெங்கிடகிரி அய்யப்ப நாயக்கன் என்பவர்களைத் தோற்கடித்தான். அய்யப்பன் அப்போரில் உயிர் துறந்தான். அவன்தான் தன் தகப்பன் சென்னப்பன் பேரினல் சென்னப்பட்டினம் கட்டினவன். அச் சென்னப்பன் வேலூரை வெங்கிடாத்திரியிடமிருந்து கைப்பற்றினவன்.

40. வட நாட்டுத் தொழில் இறக்குமதி

விஜய நகரத்தார் காலத்தில் தொடங்கிய வட நாட்டுக் குடியேற்றம் மைசூர் ஆதிக்கத்தில் மிகுதியாயிற்று. கிராமங்களில் மணியக்காரன் கணக்குப் பிள்ளை முதலிய கிராம உத்தியோகத்தர்கள் எல்லாரும் பெரும்பான்மையாகக் கன்னடியக் குடிகளும் பிராமணர்களுமாக ஏற்பட்டனர். சில கிராமங்களில் தமிழரே இல்லாமல் முழுப் பெயர்களும் கன்னடம் அல்லது தெலுங்கு பேசுபவர்களாக

இன்றைக்கும் இருக்கிறார்கள். இக் கிராமங்கள் விஜயநகரம் மைசூர் ஆட்சிக் காலங்களில் ஏற் பட்டவை எனலாம். நாயக்கர்கள் பெயரால் ஏற்பட்டவைகள் எல்லாம் அப்படிப்பட்டவையே. பெரும்பாலும் பாளையம் என்ற பெயரோடு வழங்கி வருபவை புதிய ஊர்களே. உதாரணமாக, பாப்ப நாயக்கன் பாளையம் பெரிய நாயக்கன் பாளையம என்ற பெயர்களைக் காண்க. இவைகள் தெலுங்கு பேசும் கம்மவார் குடிகளைக் கொண்டவைகள். இப் புதிய குடிகள் வந்தபோது கொண்டுவந்த பழக்க வழக்கங்களை இதுவரை அனுசரித்தே வருகிறார்கள். அவர்களோடு அவரவர்களுடைய தெய்வங்களையும் கொண்டு வந்திருக்கிறார்கள். இவர்களுடைய குடி யேற்றக் கதைகள், தேவதைகளுடைய கதைகள், சடங்குகள், நாட்டுப்பாடல்கள் மிகவும் அற்புதமாக இருக்கின்றன. கிராமங்களில் உள்ள புரோகிதர் களும் பெரும்பான்மையாக தெலுங்கு பிராமணர்க ளாக இருப்பது அறிக. மேலும் கைத்தொழிலாளர் கள் பெரும்பான்மையாக தெலுங்கு கன்னடமொழி பேசுபவர்களாகவே இருப்பதை அறியலாம். கோவை யில் பெரும்பான்மையாக உள்ள தேவாங்கர்கள் தெலுங்கு பேசுபவர்கள். சுற்றுக் கிராமங்களில் கன்னடம் பேசுகிறார்கள். கம்மாளர், வண்ணார், குயவர், செம்பட்டியர், துறையர், பேடர் முதலி யோர் தெலுங்கும் கன்னடமும் பேசுகிறவர்கள். குடித்தனக்காரர்களில் ஒக்கிலியர் கன்னடமும், காபு தெலுங்கும், கம்மவார் தெலுங்கும் பேசுகிறார்

கள். சக்கிலியர், தெலுங்கும் கன்னடமும் ஹொலே யர் கன்னடமும் பேசுகிறார்கள். இவ்வகுப்பார்கள் எல்லாரும் விஜயநகரம் மைசூர் ஆட்சிகளிலே குடி யேறினவர்களே ஆவார்கள். ஆகவேதான், கோவை நகரிலும் பெரும்பான்மையான தொழிலாளர்கள் தெலுங்கும் கன்னடமும் பேசுகிறவர்களாக இருக் கிறார்கள்.

41. தமிழ் வளர்ச்சி

கொங்கு நாட்டில் வீரசைவம் வந்த செய்தியை முன்னமே கூறியுள்ளோம். அதனைத் தமிழ் நாட்டிலே பரவச் செய்த பெரியார் சிவப்பிரகாச சுவாமிகள் (1632 - 1654). அவர் பிரபு லிங்கலீலை முதலிய பல தமிழ் நூல்களை அருளிச் செய்திருக் கின்றார். அவருடைய தங்கை நாகாம்பிகையை மணம் செய்துகொண்ட பெரியார் சாந்தலிங்க சுவாமிகள். இளவயதிலே கல்வி கேள்விகளில் சிறந்து பொம்ம புரம் சிவஞான பாலையரிடம் அளவிறந்த அன்பு பூண்டு அவரைத் தரிசிக்கச் செல்லுகையில் சிவப்பிர காச சுவாமிகளைச் சந்தித்து நட்பு பூண்டு அவருடனே பாலைய சுவாமிகளைத் தரிசித்தார். பிறகு ஞானாசிரி யரது திருவுள்ளப்படி நாகாம்பிகையை மணந்து இல்லறம் நடாத்தி வந்து, பிறகு துறவறம் பூண்டு திருப்பேரூரிலே ஐக்கியம் அடைந்தார். இவருடைய சீடர் குமாரதேவர். அவர் சீடர் சிதம்பர சுவாமிகள். அன்றாரே சாந்தலிங்க சுவாமிகளுடைய நூல்

களுக்கு உரை எழுதினவர். சாந்தலிங்க சுவாமிகள் இயற்றிய நூல்கள் 1. வைராக்கிய சதகம் - 50 செய்யுட்கள். 2. வைராக்கிய தீபம் - 105 செ. 3. அவிரோத உந்தியார் 100 செ. 4. கொலை மறுத்தல் 22 செ. திருப்பேரூரிலே நீண்டகாலம் மடம் கட்டி வாழ்ந்ததினால் கோவைக்கு சம்பந்தப்பட்டவர் ஆவர்.

இனி அடுத்தாற்போல் இங்குவந்து வாழ்ந்த ஒரு பெரும் புலவர் கச்சியப்ப முனிவர் - (18 - ம் நூ) தொண்டைமண்டலத்துக் காஞ்சிபுரத்தில் அவதரித்து கல்வி கேள்விகளில் சிறந்து சிவத்தல யாத்திரை பூண்டு திருவாவடுதுறை அடைந்தார். அங்கு நமசிவாயமூர்த்திகளைத் தரிசித்துப் பிறகு சின்னப்பட்டத்தில் இருந்த பின் வேலப்ப தேசிகரை ஒடுக்கத்தில் தரிசித்து அவரிடம் சிவதீட்சை பெற்றார். அதுமுதல் துறவறம் புகுந்து பாண்டிநாட்டில் பாடியகாரராக எழுந்தருளியிருந்த சிவஞான யோகிகளை அண்டி அவருடைய சீடர்களில் ஒருவரானார். இவர் வாக்கு வல்லமை மிகவும் புகழத்தக்கது. வெகு சாதுர்யமாக எப்பேர்ப்பட்ட அவைகளிலும் பேசவல்லவர். பிறகு சோழநாடு சென்று திருவானைக்காவில் அமர்ந்த போது அத்தலப் புராணமும் பூவாளூர்ப் புராணமும் பாடினார். பிறகு கொங்கு நாட்டிற்கு வந்து பேரூரில் சிலகாலம் தங்கினார். அப்போது தான் திருப்பேரூர்ப் புராணம் பாடினார். அதன் பிறகு சில ஆண்டுகள் பேரூரில் வசித்துவரும்போது ஒருதடவை மழையின்றி வெப்பம் மிகுந்து மக்கள் துயரப்படும் போது அதனைக் கண்டு கருணை யுற்று மக்கள்

துயரை நீக்குமாறு அரசம்பலவாணர்மீது ஒரு பிரபந்தம் பாடினார். உடனே மழைபெய்ய மக்கள் இன்புற்றனர். பின்னும் பட்டிப் பெருமான்மீது பல பதிகங்கள் பாடிப் பலருக்குக் குட்ட நோய் முதலியவற்றை நீக்கினார். அதற்குப் பிறகு தொண்டைமண்டலம் சென்று சென்னையில் இருந்து கொண்டு விநாயக புராணம் முதலிய பல நூல்களை இயற்றினார். வெகு முதிய வயதில் சிவபிரான் திருவடி அடைந்தனர். அடைந்த தேதி 20 - 4 - 1790. இடம் காஞ்சி; சமாதி இன்னும் இருக்கின்றது.

42. மைசூர் எழுச்சி

மைசூர் அரச வம்சத்தின் தோற்றம் விசித்திரமானதே. ஆனால் கீழ் நாடுகளில் இயல்பாக உண்டாகக் கூடியதே ஆகும். கர்ண பரம்பரையின்படி கூர்ச்சரத்தில் துவாரகையிலிருந்து யாதவ குலத்தைச் சேர்ந்த விஜயன் கிருஷ்ணன் என்ற இரு அரச குல வாலிபர்கள் தெற்கே புறப்பட்டார்கள். அவ்வழியே ஹடிநாடு வந்தபோது அங்கே ஆண்ட அரசன் அறிவு மாறி நகரைத் துறந்து இருந்தான். அச் சமயத்தில் அடுத்த நாட்டு அரசன் அவ்வரச குலத்தில் ஒரு கன்னிகையை மணக்க இச்சை கொண்டான். அவனோ தாழ்ந்த குலத்தான். இதனை அறிந்த யாதவ வாலிபர்கள் அப் பெண்ணை காப்பாற்றும் நிமித்தம் அயல் நாட்டரசன் விருந்து உண்ணும் சமயம் பார்த்து அவனைத் தாக்கி அவனையும் அவள் பரி

வாரங்களையும் கொன்றுவிட்டு அவனுடைய நகரை யும் பிடித்து விட்டு ஹடிநாட்டில் வெற்றியுடன் புகுந் தார்கள். உடனே அவ்விளவரசியை விஜயன் மணந்து உடையார் என்ற பட்டம் வகித்து அந் நாட்டிற்கு அரசனுனன். மைசூர் நகரத்திற்கு அடுத்துள்ளது அந்நாடு. அவன் வம்சத்தாரே மைசூர் அரசர்கள் ஆனார்கள். மைசூர் என்ற பெயர் மகிஷாசுர ஊர் என்றதாம். அடுத்துள்ள சாமுண்டி மலையில் உள்ள மகிஷாசுர மர்த்தனி, இவ்வரசன் குடும்பத்திற்குக் குலதேவதை. இக் குலத்தில் தோன்றிய ராச உடை யார் (1578 - 1617) காலத்தில் சீரங்கப் பட்டணம் பிடிபட்டது. அவ்வூரில் ஆண்ட விஜய நகரத்துத் திருமலைராயன் நோய் வந்து தலைக் காட்டிற்கு தீர்த்த ஸ்நானம் செய்யப் போனபோது அவன் அங்கு இறக்க, சமயம் பார்த்து இராஜ உடையான் அப் பட்டணத்தைப் பிடித்துக் கொண்டான். பிறகு தலைக் காட்டின் பேரில் சென்றான். திருமலைராயனின் மனைவி உடையான்மீது சாபம் இட்டுக் காவேரியில் விழுந்து உயிர் துறந்தாள். இதுதான் மைசூர் சாபக் கதை. அது முதல், மைசூர் வம்சத்தில் ஒன்றுவிட்ட ஒருவருக்கு மக்கட் பேறு இல்லையாம். இராஜ உடை யார் மைசூருக்குத் தெற்கே காவேரி வரையில் இருந்த நாட்டைப் பிடித்துத் தன் அரசைப் பெரிதாக்கினுன். அப்போதும் அது மிகச் சிறிதாகவே இருந்தது. அதற்குப் பிறகு வந்த கண்டீரவ நரசராஜன் மிகப் பலவான். வாலிபனாக இருந்த போதே மாறுவேடம் பூண்டு உறையூரில் ஒரு மல்லன் இருப்பதாகக் கேள்வி

யுற்று அந்த நாட்டு அரசர் சபையில் ஒருவனாகவே அம்மல்லனோடு முட்டிகொடுத்துக் கொன்று விட்டான். வெகுமதிகளை மறுத்துவிட்டு அன்றிரவே அவ்வூரை விட்டு மைசூர் திரும்பினான். பிறகு அரியாசனம் ஏறி முந்திய அரசனைக் கொலை செய்த மந்திரியைக் கொல்லுவித்துத்தானே வெகு கீர்த்தியுடன் ஆண்டான். இவன் தான் மதுரை அரசன்மீது படையெடுத்து டணாய்க்கன் கோட்டை சத்திய மங்கலக் கோட்டை முதலியவைகளைப் பிடித்து நாட்டைப் பெருக்கினான். இவனுக்குப் பின் வந்த தொட்ட தேவராசன் (1659 - 1672) இந்த நாட்டை மிகவும் பெரிதாக்கினான். இவ்விதம் மைசூர் நாடு பெருகி வந்தது. அவன் காலத்தில் ஈரோடு, தாராபுரம் வரைக்கும் அவன் கைக்குள் வந்துவிட்டது. ஆகவே கோவை அவன் வசம் இருந்தது.

43. மைசூர் பெருக்கம்

அடுத்து மைசூரை ஆண்ட அரசன் சிக்க் தேவராசன் (1672 - 1704) இவன் இளவயதில் சிறையில் வைக்கப்பட்டிருந்தான். ஆகவே கஷ்டவாழ்வு இன்னதென்று அறிந்தவன். இவனால்தான் மைசூர் சீமை வெகு வலிவு அடைந்தது. இளவயதில் எளந்தூரில் இவ்விளவரசன் வசித்து வந்தபோது ஒரு ஜைன பண்டிதர் இவனுடைய சாதகம் பார்த்துப் பின்னால் அரியாசனம் ஏறுவான் என்று சோதிடம் கூறி அவனை உற்சாகப்படுத்தி அவனிடம் தனக்குப் பிரதம மந்திரி

வேலையை வாக்காகப் பெற்றான். அது முதல் அரண்மனையில் இச் செய்தியைப் பரப்பித் தொட்ட தேவராசன் இறந்ததே சிக்கதேவனைப் பட்டம் ஏற்றித் தான் மந்திரி ஆனான். இவ்விருவரும் மிக வலுவோடு அரசு செலுத்தினார்கள். இவன் நாட்டிலே பல சீர் திருத்தங்களைக் செய்து வரிகளைத் திருத்தி அமைத் தான். இதனால் நாட்டில் கலகம் ஏற்பட்டது. அதனை ஜங்கமர்கள் தூக்கிவிட்டனர். இதனை அறிந்த அரசன் தந்திரம் செய்து ஜங்கமர்களை அழைத்துத் தனித்தனியாகப் பேட்டி கொடுத்து உள்ளே சென்றதும் வெட்டிப் புதைத்து விடும்படி செய் தான். இவ்வாறு ஒரே நாளில் 700 பேரைக் கொன்றும் அவர்கள் மடங்களை அழித்தும் விட் டான். இப்படி எதிர்ப்புத் தொலைந்தது. ஆனால் இதற்கு எல்லாம் ஜைன மந்திரியே காரணம் என்று எண்ணி அவனை சதி செய்து கொன்று விட்டார்கள். பிறகு திருமலை அய்யங்கார் என்றவர் மந்திரி ஆனார். அரசன் சுற்றிலுமுள்ள நாடுகளைப் பிடித்து அரசியலைப் பெருக்கினான். மதுரையாருடன் போர் புரிந்து அதனைப் பலவீனப் படுத்தினான். 76 வயது மட்டும் வாழ்ந்திருந்து 1704 ல் இறந்தான். இவன் இறந்த போது மைசூர் சீமை தெற்கே பழனி ஆனைமலையும் வடக்கே துங்கபத்திரை வரைக்கும் எட்டியது. நாட்டை 18 பிரிவுகளாகப் பிரித்துப் பரிபாலித்தான். வரிகளை ஒழுங்காகவும் மும்முரமாகவும் வசூலித்தான். ஒவ்வொரு நாளும் 1000 வராகன் கொண்ட இரண்டு பைகளை கஜானாவில் சேர்ப்பிக்காமல் சாப்பிட

மாட்டான். இந்த விதத்தில் அவன் பணம் சேர்த்தின முறையில் நவகோடி நாராயணன் எனப் பெயர் பெற்றான். சிக்கராசனுக்குப் பிறகு மூக்கரசு என்ற ஊமை பட்டத்துக்கு வந்தான். அவனுக்குப் பிறகு அவன் மகன் தொட்ட கிருஷ்ணன் வந்தான். இவர்கள் காலங்களில் மந்திரிகளே ஆட்சி புரிந்தார்கள். கிருஷ்ணராசன் சிற்றின்ப லோலனாக இருந்து மிகக் கொடிய செயல்களைப் புரிந்து வந்தான். மந்திரிமார்கள் தங்களுக்கு வேண்டிய இளவரசுகளைப் பட்டத்திற்குக் கொண்டு வருவதும் கொல்வதுமாக இருந்தனர். நஞ்சராசன் அப்படிபட்ட ஒரு மந்திரி. 1746ல் அவன் கோவையின் மீது படை யெடுத்து தாராபுரத்துப் பாளையக்காரனைத் தண்டித்தான். 1749ல் தேவன் ஹல்லி என்ற கோட்டையை முற்றுகையிட்டான். அம் முற்றுகை 9 மாதம் வரையில் நடந்தது. அப்போது நஞ்சராசனிடம் ஒரு இளைய முகம்மதியன் வந்து வேலையில் சேர்ந்து கொண்டான். அவனுடைய சாகசச் செயலைக் கண்ட நஞ்சராஜன் அவனை 50 குதிரைச் சேவகர்களுக்கும் 200 காலாட்களுக்கும் தலைவன் ஆக்கினான். இவனே பின்னால் பெயர் பெற்ற ஹைதர் அலி என்பவன். இவர்கள் காலத்தில் கோவை மைசூர் வசமே இருந்தது.

44. ஹைதர் அலி

பஞ்சாபிலிருந்து முகம்மது பெபோல் என்ற ஒருவன் மதப்பிரசாரத்திற்காகக் குல்பர்க்காவிற்கு

வந்தான். அவனுடைய இருமக்கள் மைசூர் நாட்டைச் சேர்ந்த சீராவிற்கு வந்து சுங்கச் சேவகர்களாக அமர்ந்தனர். பிறகு கோலாருக்குச் சென்றார்கள். அங்கே மூத்தவன் இறந்தான். அவன் மக்கள் மிகவும் கஷ்டப்பட்டுப் பல இடங்களில் சுற்றினார்கள். அவர்களில் பத்தே முகம்மது என்பவனின் மூன்றும் மனைவிக்கு ஹைதர் 1722ல் பிறந்தான். 1729ல் நேர்ந்த ஒரு சண்டையில் பத்தே முகம்மது கொல்லப்பட்டான். அதற்குப் பிறகு அவனுடைய கடன்களைக் கொடுக்கும்படி ஹைதரும் அவன் தமயனும் இம்சிக்கப்பட்டார்கள். அங்கிருந்து விடுதலையாகி மாமனரிடம் பெங்களூருக்குச் சென்றார்கள். அங்கே மூத்த பையனுன சபாசிக்கு ஒரு வேலை கிடைத்தது. அவன் தேவன் ஹல்லிச் சண்டையில் ஈடுபட்டபோதுதான் ஹைதர் சாகசச் செயல்செய்து படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டான். பிறகு மைசூராருக்கும் மராட்டியருக்கும் நைஜாமுக்கும் நடந்த யுத்தங்களில்மிகவும் கீர்த்திபெற்று உயர்ந்து ஓங்கினன். ஹைதர் திண்டுக்கல் சேனைத்தலைவனாக நியமிக்கப்பட்டான். பொருள் சேர்ப்பதற்காக அவன் செய்த வழிகளுக்குக் கணக்கில்லை. அவனுக்கு நன்மையோ திமையோ என்ற எண்ணமே கிடையாது. நோக்கம் ஒன்றே பிரதானமானது. அப்போது இவனைப்போலவே கண்டேராவ் என்ற ஒரு பிராமண அமைச்சன் தோன்றினன். அவனைத் தலைநகரில் வைத்துவிட்டு ஹைதர் தெற்கே மாகாணத்தை ஆளச் சென்றான். மைசூர் அரசன் கிருஷ்ண ராசன் பெயருக்கு மாத்திரம் அரசனே

ஒழிய உண்மையில் பிரதம மந்திரியான நஞ்சராாசன் தான் ஆண்டுவந்தான். அவ்விதம் 22 ஆண்டுகள் நஞ்சராசனே ஆட்சியை நடத்தினன். இதனை வெறுத்த அரசன் மந்திரிகளைத் தொலைக்கச் சில சதிகாரர்களை வைத்துக்கொண்டு 1756ல் சதி செய்ய முயன்றான். அதனை நஞ்சராசன் கண்டு கொண்டு அதனை வேரோடு அறுத்துவிட்டான். அரசனை சிம்மாசனத்தில் உட்கார வைத்துச் சதிகாரர்களை வரிசையாக நிறுத்தி அவர்களுடைய மூக்குகளையும் காதுகளையும் அறுத்தான். இக் கொடூரத்தைக் கண்ட மற்றொரு மந்திரி சகிக்காது தெற்கே சத்திய மங்கலம் சென்று அங்கே தங்கிவிட்டான். இதற்குள் வடக்கே இருந்து மராட்டியர் படையெடுத்து வந்தார்கள். கஜானவில் ஒன்றுமில்லை. அரசன் எதுவும் செய்யமுடியவில்லை. ஹைதர் அழைக்கப் பட்டான். ஹைதரும் கண்டேராவும் சேர்ந்து பல வழிகளிலும் அரசனுடைய நகைகளையும் விற்றுப் பணம் சேர்த்து மராட்டியருக்குக் கப்பம் கட்டி அனுப்பினர்கள். அப்போது படையாட்கள் சம்பளத் திற்காகச் சச்சரவு செய்தார்கள். அப்படையினரில் தலைவனை ஹரிசிங்கை மலைநாட்டிற்கு அனுப்பிக் கப்பம் வாங்கும்படி ஹைதர் ஆணையிட்டான். ஹரி சிங்கு அவிநாசியில் தங்கியிருந்தபோது ஒரு கொலை யாளியை அனுப்பி அவனைக் கொலைசெய்துவிட் டான். பிறகு தான் கொள்ளை அடித்த பணத்தை எடுத்துக்கொண்டு தலைநகருக்குச் சென்று அதில் ஒரு பகுதியை அரசனுக்குக் கொடுக்க அதற்குப் பரிசாக

கோயமுத்தூர் வருமானத்தைப் பெற்றுக்கொண்டான். 1759ல் மராட்டியர் மறுபடியும் வந்தார்கள். ஹைதர் அவர்களை சமாதானப்படுத்தி அனுப்பி விட்டான். அந்த நற்செய்திக்காக அவனுக்கு பத்தே ஹைதர் பகதூர் என்ற விருது பெற்றான். மூன்று அமைச்சர்கள் பேராசை பிடித்தவர்கள் ஒரு இடத்தில் இருக்கமுடியுமா? பல தந்திரங்களைச் செய்து 1760ல் கண்டேராவைத் தோற்கடித்தான். அவனைக் கிளி பேரில் நடத்துவதாகச் சொல்லிவிட்டு ஒரு இரும்புக் கூண்டில் அடைத்து அன்னமும் பாலும் கொடுத்து அவன் இறக்கும் வரை அதிலேயே வைத்தான். வயது முதிர்ந்து நஞ்சராசனும் இறந்தான். 1761ல் ஹைதர் முழு அதிகாரமும் பெற்றான்.

உ உ ஓ

45. ஹைதர் ஆட்சி

அரசனைத் தொலைத்து விடாமல் அவனை வைத்துக்கொண்டே அவன் பேராலேயே ஆட்சி முழுதும் நடத்தினான், அவனுக்கோ படிப்பு வாசனை கிடையாது. இருந்தாலும் கூரிய அறிவுள்ளவன். ஹிந்துஸ்தானி, தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் வெகு தெளிவாகப் பேசுவான். தப்பு செய்தால் சாதி, மதம், பதவி எதையும் பாராமல் தண்டிப்பான். உத்தரவுகளை ஒருவன் எழுத மற்றவனைப் படிக்கச் சொல்வான். பிசகு இருந்தால் தலைபோய்விடும். கசை தான் அவனுடைய ஆணை. ஒரு முறை முகம்மதியனுக்கிய ஒரு நாயரை ஒரு

ஊருக்குத் தலைவன் ஆக்கினன். அவனுக்குப் படிக்கத் தெரியாது. எவ்வாறு ஆட்சி செய்வேன் என்றான். 'படிப்பு என்னத்திற்கு? எனக்கும் தெரியாது. அதற்குப்பதிலாகக் கசை இருக்கிறது. இதை வைத்துக்கொண்டு நன்றாக ஆட்சி புரியலாம்' என்றான். மதத்தில் பற்றுச் சிறிதும் இல்லை. அதிகாரம் செல்வம் இவைகளே அவனுக்குத் தெய்வங்கள். தன் அரசியல் நிர்வாகத்தில் இந்துக்களையும் முகம்மதியர்களையும் ஒரே மாதிரி நடத்தினன். காரியம் ஆகவேண்டும் என்றால் எப்பேர்ப்பட்ட கொடுமையையும் செய்வான். மிகுந்த சிற்றின்பப் பிரியன். தன் அந்தப்புறத்தில் 600 மனைவியரை வைத்திருந்தான். இரவு முழுதும் தாசிகள் குடி முதலியவைகளில் காலம் கழிப்பான். ஆனால் காலையில் கடுமையாக வேலை செய்வான். போர் புரிவதில் எப்படிப்பட்ட நீதியும் அவனிடம் கிடையாது. பெரும்பாலும் துரோகச் செயல்களைக் கொண்டே காரியம் நிறைவேற்றிக் கொள்வான். பெத்தனூர் என்ற ஊரை முற்றுகையிட்டு அவ்வூர் மந்திரி ஒரு இளவரசு இவர்களைக் கொண்டு இரகசிய வழிகளை அறிந்து அதனைப் பிடித்தான். உடனே அவ்வூர் அரசி, அரச குமாரன், தனக்கு வழி காட்டின துரோகி இவர்கள் எல்லாரையும் மத்துகிரியில் சிறையிட்டான். மலையாள நாட்டின்மீது படையெடுத்துக் கோழிக்கோட்டை முற்றுகையிட்டான். தாமூரி ராசன் சமாதானத்திற்கு வரவே அவனை வைத்துககொண்டே கோட்டையைப் பிடித்து அமைச்

சர்கஸ் வதைத்தான். அதனைப் பொருறு தாமூரி ராசன் அரண்மனை புகுந்து தீயிட்டுக்கொண்டு இறந் தான். குத்தி முராரி ராவ் மிகுந்த பராக்கிரமசாலி. பல சண்டைகளில் வென்றவன். அவன் கோட்டை அசைக்கமுடியாதது. அதனை முற்றுகை போட்டுப் பிடிக்கமுடியவில்லை. அத்தலைவனுடைய காமக் கிழத்தியின் உதவியைக் கொண்டு இரசிய வழி யில் ஏறி அக்கோட்டையைப் பிடித்தான். முராரி ராவை கொடிய சிறையில் இறக்கும் மட்டும் அடைத்தான். துரோகம் செய்த காமக்கிழத் தியை சுண்ணும்புக் காளவாயில் 8 நாள் வேக வைத்தார்களாம். தொட்டபல்லாபூர்த் தலைவனையும் அவ்வாறே துரோகம் செய்து பிடித்துப் பெங்களூர் சிறையிலும் பின்னர் கோயமுத்தூர் சிறையிலும் அடைத்து வைத்தான். இவ்வாறு ஹைதர் வெகு தந் திரத்துடன் தன் நாட்டைப் பெருக்கினுன். அவன் காலத்தில் மைசூர் சீமை வடக்கே வட கன்னடம் கிருஷ்ணை வரைக்கும் தெற்கே திண்டுக்கல் வரைக் கும் மேற்கே கடற்கரை மட்டும் கிழக்கே கருனடகத் தில் பெரும்பாகமும் தன்னுள் கொண்டிருந்தது.

ஒ ஒ ஒ

46. இரண்டு குடிநீர்க் குளங்கள்

மைசூர் சீமையின் அதிகாரத்தின் அடையாள மாக இரண்டு குடிநீர் வாவிகள் கோவைநகரில் இருந் தன. இவைகள் மாதேராஜா குளம் சிக்கே ராஜா குளம் என்ற பெயர்களினுல் வழங்கிவந்தன. இவை

களில் ஒன்று வாணியர் தெருவிலுள்ள நந்தவனத்து இடத்தில் இருந்தது. மற்றொன்று தெப்பக்குளம் தெரு ஸ்ரீசாரதா பாடசாலை விளையாட்டிடத்தில் இருந்தது. இவ்விரண்டும் சுகாதாரம், தற்கொலை தடுத்தல், முதலிய பல காரணங்களினால் நகரச் சபையாரால் 1920-1930 ஆண்டுகளில் மூடப்பட்டன. அவைகள் இருந்த இடங்கள் மேலே கூறிய வாணியர் நந்தவனத்திற்கும் சாரதா பெண்பாடசாலைக்குமாக அளிக்கப்பட்டன. இவை இரண்டு குடி வாவிகளும் மைசூர் அதிகாரத்தைத் தெரிவிக்கின்றனவே யன்றி எந்த அரசர்களால் தோண்டப்பட்டன என நிச்சயமாகக் கூறுவதற்கில்லை. மாதையன் சிக்கையன் என்ற பெயர்கள் தகப்பனும் மகனுமாக டணாய்க்கன் கோட்டைத் தண்ட நாயக்கர்களில் இருந்தனர் என்று முன்பே கூறியுள்ளோம். அவர்கள் அக்குளங்களைத் தோண்டியிருக்கலாம். அல்லது பேரூர்க் குளத்தைத் தோண்டின திருக்கரும்பி மாதையனாகவும் இருக்கலாம். அவ்விதம் அம்மாதையனாக இருக்கும் பட்சத்தில் மற்றவனாகிய சிக்கேராசன் மைசூர் மன்னன் சிக்கதேவ ராசனாக இருக்கக் கூடும். அவ்வரசன் ஞாபகார்த்தமாக ஒரு தலைவன் இங்கே மற்ற குளத்தைத் தோண்டியிருக்கக் கூடும். இவ்விரண்டு வாவிகளும் நடைவாவிகளாக இருந்தன. நன்னீர்க் குளங்களாக இருந்தமையால் குடி நீர் வசதிக்காக அவை தோண்டப்பட்டன எனல் வேண்டும். இவைகள் அடுத்திருந்த தேவாலயங்களுக்குத் தெப்போற்சவங்களுக்குப் பயன்பட்டன. சாரதா பெண்பாடசாலைக் குளம் தெப்பக் குளம் என்றே

வழங்கப் பட்டுவந்தது. அக்குளத்தில் முன்னாளில் ஸ்ரீசவுடம்மன் தெப்போற்சவம் நடைபெற்றதாம். அக்குளத்தின் பெயரே இன்றைக்கும் தெருவின் பெயராக அமைந்திருக்கிறது.

ஃ ஃ ஃ

47. மாதே ராஜா மஹால்

கோவையில் கரிகால் சோழன் ஊர் அமைத்த போது சதுரமாக நான்கு மாடவீதிகளை அமைத்தான் என்று முன்னமே கூறியுள்ளோம். இவைகளையே இராஜவீதிகள் அல்லது தேர்வீதிகள் என்றூர்கள். இவைகளில் வடக்கு வீதிதான் மிகச் சிறந்திருந்தது. அதிலே அரண்மனையும் ஏற்பட்டது. அவ்வரண் மனையை மைசூர்ப் பிரதிநிதிகள் தங்கள் வாசஸ்தல மாக வைத்திருந்தார்கள். அக்கட்டடம் பின்னாலே பல மாறுதல்கள் அடைந்திருக்க வேண்டும். ஆனால் இடம் மாறவில்லை. இதில் மாதோராஜா என்ற அதிகாரி குடியிருந்ததினால் அதற்குப் பெயர் மாதே ராஜா மஹால் என்றும் அது இருக்கும் வீதிக்கு மாதேராஜா மஹால் வீதி என்றும் பெயர் வழங்கிற் றும். இந்த கட்டடத்தில் இப்போது அரசியலார் பெண் பாடசாலைப் பெண்கள் விடுதி இருக்கிறது. இப்போது இருக்கும் கட்டடத்தின் மூலை விளிம்புகள் கோட் டைக் கொத்தளம் போல் இருக்கக் காணலாம். இதிலே பெண்பாடசாலை வருவதற்கு முந்தி தாலூக் காக் கச்சேரி இருந்தது. இதற்குப் பெயர் தந்த மாதே ராஜன் யார் என்று நிச்சயமாகக் கூற வழியில்லை.

மாதைய தண்ட நாயக்கனுவது தெற்கணும்பி மாதையனுவாவது இருக்கலாம். முந்தியவன் ஹொய் சளர் காலத்திலும், பிந்தியவன் விஜய நகரத்தார் காலத்திலும் இருந்திருக்கின்ருர்கள். மேலும் ஹைதர் காலத்தில் கோவையில் ஒரு குறிக்கார மாதையன் என்பவன் அதிகாரம் செலுத்தி வந்தான். இவன் 40 வருடகாலம் இங்கேயே இருந்த தாகத் தெரிகிறது. அவன் காலத்தில் ஹைதர் ஆணைப் படி அரண்மனை முழுதும் பழுதுபார்க்கப்பட்டுச் சீர் திருத்தம் செய்யப்பட்டதாம். அவன் பெயரா லேயும் இந்தக் கட்டடம் வழங்கியிருக்கலாம். ஆனல் அவனை அரசன் என்று அழைக்க வகையில்லை. மஹால் என்ற சொல் வடநாட்டிலிருந்து வந்ததென்று அறிய வேண்டும். முகம்மதியர்கள் ஆட்சியிலிருந்தே இப்புதுப் பெயர் வழக்கத்தில் வந்திருக்கலாம்.

ஐ ஐ ஐ

48. கோட்டைச் சிறையும் அடங்காத் தலைவனும்

ஹைதர் படையெடுத்துச் சென்ற காலங்களில் அடிக்கடி கோவை வழியாக செல்வதுண்டு. திண்டுக் கல்லில் தலைவனுகச் சென்றபோதும் மலையாளத்தின் மீது படையெடுத்துச் சென்றபோதும் கோவையில் தங்கினதுண்டு. அரசியல் நிர்வாகத்திற்காகவும் அடிக்கடி பல நாட்கள் இங்கே தங்கினுன். அதற் காகக் கோவைக் கோட்டையை மிகப் பலமாகப் புதுப்பித்திருந்தான். மேலும் அக்கோட்டைக்குள் முக்கியமான தலைவர்களைச் சிறை பிடித்தும் வைத்

தான். அவ்விதச் சிறைக்கோட்டத்துள் ஒரு தடவை சிக்குபெல்லாபுரத்துப் பாளையக்காரனையும் வைத்திருந்தான். சிக்குபெல்லாபுரத்தை ஐதர் முற்றுகையிட்டு 3 மாதம் வெடிகள் வைத்ததில் அதன் பாளையக்காரன் சிக்கப்ப கவுடன் 6 லட்சம் ரூபாய் கப்பம் தருவதாக ஒத்துக்கொண்டு சமாதானம் செய்தான். ஹைதர் திரும்பியவுடன் எதிரிகளுடன் சேர்ந்து கொண்டான். மறுபடியும் ஹைதர் அக்கோட்டையை முற்றுகையிட்டுப் பிடித்தான். அங்கே பலபேரைச் சித்திரவதை செய்துவிட்டுப் பாளையக்காரன் குடும்பத்தைச் சிறை செய்தான். சிக்கப்பன் இறந்தான். ஏனையரைக் கோயமுத்தூர்க் கோட்டைக்கு அனுப்பிக் காவலில் வைத்திருந்தான். அப்படி இருக்கையில் ஒரு தடவை ஹைதர் கோவைக்கு வரவேண்டி யிருந்தது. அங்கு அரண்மனையில் இருந்தபோது, அந்த கோட்டைக்குள் சிறைபட்டிருந்த சிக்கப்பன் தமையன் மகன் பைச்சே (Baichai) கவுடன் ஞாபகம் வந்தது. அவனே அப்போது வயது வந்த கிழவனாக இருந்தான். ஹைதர் கைதிகள் எல்லாரையும் அழைத்து வரும்படி சேவகர்களை அனுப்பினான். பைச்சே கவுடனைத் தவிர மற்றவர்கள் வந்தார்கள். அவனை அழைத்த போது அவ்வீரன் தான் ஹைதர் எதிரில் வரமுடியாது என்றும் கூட்டிச் சென்றாலும் அவனை வணங்க முடியாது என்றும் அச்சம் இன்றித் துணிவுடன் சொன்னான். ஹைதர் அவன் துணிச்சலைக்கேட்டு மனம் பொருது அழுக்காறுற்று அவனை எப்படியாவது வணங்கும்படி செய்விக்க வேண்டும் என்று எண்ணி

ஒரு சூழ்ச்சி செய்தான். தான் வீற்றிருக்கும் ஆஸ்தான மண்டபத்தின் பக்கத்துச் சுவரில் ஒரு குறுகிய வழி செய்து அதன் வழியே அவ்வீரனை அழைத்து வரும்படி சொல்லி, அவன் அந்த வழியே நுழைவதற்குத் தலைகுனிய வேண்டியிருப்பதால் அவ்விதத் தலைக் குனிவே தனக்குச் செய்யும் வணக்கமாகக் கொள்ளலாம் என்ற நோக்கத்துடன் அவ்வாறே செய்யும்படி கட்டளை இட்டான். வணங்கா மனம் கொண்ட அவ்வீரனோ காவலாளிகளால் செலுத்தப்பட்டுப் போகையில் அக்குறுகிய வழியையும் சூழ்ச்சியையும் உணர்ந்து அஞ்சா நெஞ்சத்தவனாய் தன் தலை குனிந்து செல்வதற்கு மாறாகத் தன் காலை அவ்வழியே செலுத்தி அதனை முதலில் நீட்டினான். அவ்வடாத செயலைக் கண்ட ஹைதருக்கு அடங்காக் கோபம் வந்தது. உடனே அவ்வாறு அவமானம் செய்ததற்காக நீட்டிய காலுக்கு தாங்கமுடியாத இரும்பு விலங்குகளை இட்டுக் கடுஞ் சிறைக்குள் அடைத்தான். இதற்கெல்லாம் அஞ்சுவனோ அவ்வீரன். எப்படிப்பட்ட துன்பம் செயினும் அதையெல்லாம் பொறுத்துக் கொண்டு சிறையிலேயே உயிர்நீத்து வீரசுவர்க்கம் சென்றான்.

ஃ ஃ ஃ

49. கோவைக்கோட்டையின் முதல்முற்றுகை 1768 கி பி.

ஹைதர் நாடு பிடிக்கும் பேராசை கொண்டவன். அடுத்துள்ள நாடுகளை ஆக்கிரமித்து வந்தான். அப்போது மைசூர் பொம்மை ராஜா இறந்தான். பின்னர் பட்டத்திற்கு வந்த இளவரசன்

ஹைதரை எதிர்த்துத் தானே அரசாள எண்ணினன். ஹைதரோ அவனைச் சிறையில் அடைத்து அவன் சொத்து முழுதும் பறிமுதல் செய்தான். இச்செயலை இதர நாட்டார் வெறுத்தார்கள். 1763ல் நைஜாமும் ஆங்கிலரும் கூட்டு உடன்படிக்கை செய்து கொண்டார்கள். உடனே ஹைதரின் கொடுமையைக் குறைக்க வழி நாடினர்கள். மராட்டியர், நைஜாம், ஆங்கிலர் மூவரும் சேர்ந்து மைசூர் நாட்டின்மீது படையெடுத்தார்கள். நைஜாம் பெங்களூருக்கு வந்தான். ஆங்கிலர் பாரா மகாலைக் (சேலத்தில் ஒரு பகுதி) கைப்பற்றினர்கள். உடனே ஹைதர் ஒரு பெருஞ் சேனையைத் திரட்டி வந்து அப்பகுதியைப் பிடித்துக் கொண்டான். ஆங்கிலப் படை ஒன்று சரணம் அடைந்தது. இவ்விதம் இருகட்சியிலும் வெல்வதும் தோற்பதுமாக வெகுநாள் போர் நடந்தது. இப்போர் மைசூர் முதல் போர் என்ற பெயரால் வழங்கி வருகிறது. இப்போரில் ஆங்கிலப் படைத் தலைவன் கர்னல் உட் (Col. Wood) என்பவன் முதலில் திறமையாகப் போர் செய்தான். ஆனாலும் ஹைதரின் சாகசச் செயலுக்குத் தகுதியான திறமையுடையவனல்லன். முதலில் பாரா மகாலைப் பிடித்துத் தோற்றான். பிந்தி கரூர் மார்க்கமாகச் சென்று தாராபுரத்தைப் பிடித்துக் கொண்டு கோயமுத்தூருக்குச் சென்றான். அந்தக் கோட்டையை முற்றுகையிட்டுச் சுலபத்தில் பிடித்துக் கொண்டான். கோவை சிறிது காலம் ஆங்கிலர் வசம் இருந்தது. ஆனல் பேட்டை

யிலும் அக்கம்பக்கங்களிலும் ஹைதர் சேனைகள் இருந்து கொண்டிருந்தன. ஹைதரின் படைத் தலைவன் பாஸில் உல்லாகான் வடக்கேயிருந்து படைகளை இட்டுக்கொண்டு தெற்கே வந்து பலவித சதியுபாயங்களைச் செய்தான். கோட்டை பிடிபட்டது. கோட்டையிலிருந்து ஆங்கிலப் படை நிர்மூலம் ஆக்கப்பட்டது. இவ்வாறு சதியினால் உயிர் விட்டவர்களில் ஜில்லாவில் சம்பள உத்தியோகஸ்தரான ஹாமில்டன் என்பவனும் உண்டு. அவ்வாறு கோவைக் கோட்டையைப் பிடித்துக்கொண்டு அங்கே சில சைன்னியங்களைக் காவலுக்கு விட்டுவிட்டு அந்த முகம்மதியப் படைத் தலைவன் பிறகு 1768 இறுதியில் கோவையை முற்றுகையிட்டான். கோவையில் ஏற்கனவே இருந்த சேனையுடன் கலந்து கிழக்கே சென்று, விட்டுக் கொடுத்த எல்லாக் கோட்டைகளையும் மீண்டும் பிடித்துக்கொண்டு, திருச்சிராப்பள்ளியின் பக்கம் சென்றான். மழை மிகுதியாய்ப் பெய்ததால் மேல் செல்ல முடியவில்லை. ஆனால் ஹைதரோ ஓரே விரைவாகப் படைகளை நடத்திக் கொண்டு கிழக்கே ஆர்க்காடு செங்கல்பட்டு ஜில்லாக்களின் வழியாகப் போய் சென்னைக் கோட்டைமட்டும் சென்று விட்டான். ஆங்கிலர் சமாதானம் செய்யவேண்டி வந்தது. 1769ல் சமாதான உடன்படிக்கையும் செய்யப்பட்டது. அது ஹைதருக்கு அனுகூலமானது. இது தான் முதல் ஆங்கில முற்றுகை. பிறகு ஹைதர் கோட்டையைப் பலப்படுத்தினான்.

50. கோட்டையில் இரண்டாம் முற்றுகை 1783 கி. பி.

முதல் போருக்குப் பிறகு 11ஆண்டுகள் சண்டை இல்லை. ஹைதரும் தன் ஆட்சியைப் பெருக்கிக் கொண்டே வந்தான். ஆனால் அவனுடைய பேராசை அடங்கவில்லை. அச்சமயத்தில் 1780 ல் ஆங்கிலருக்கும் பிரெஞ்சுக்கும் சண்டை மூண்டுவிட்டது. அது காரணமாக ஆங்கிலர் மலைநாட்டி.லிருந்த மாஹியைப் (மய்யழி) பிடித்தார்கள். தன் நாடு வழியாகத் தன் உத்தரவு இல்லாமல் சென்றதற்காக ஹைதர் கோபித்து ஆங்கிலர்மீது சண்டை தொடங்கினான். இரண்டு வருஷங்கள் வெகு மும்முரமாகச் சண்டை நடந்தது. ஹைதரின் மகன் திப்புவும் அச் சண்டையில் படைகளை நடத்தினான். 1782ல் கர்னல் புல்லர்டன் (Fullerton) கொங்கு நாட்டின்மீது படையெடுத்துக் கோயமுத்தூர்க் கோட்டையைப் பிடித்துக்கொண்டான். அதைக்கேட்ட திப்பு தானே நேராக வந்து கோவையை முற்றுகையிட்டு அதனைப் பிடித்து அதில் ரோஷன் கான் என்ற சேனைத் தலைவனை நிறுத்திவிட்டுச் சென்றான். ரோஷன் கான் கோட்டையில் இருந்து ஆட்சி புரிந்து வந்தான். திப்புவோ தன் தகப்பன் இறந்ததைக் கேட்டுத் தலைநகர் சென்றுவிட்டான். ஆனால் போர் நிற்கவில்லை. தொடர்ந்தே நடத்தினான். அப்போது ஸ்வார்ட்ஸ் என்ற கிறிஸ்தவப் பாதிரி ஆங்கிலருக்கும் திப்புவுக்கும் சமாதானம் செய்து வைக்கத் தஞ்சாவூரிலிருந்து 1783 டிசம்பரில் புறப்பட்டார். அவர் தாராபுரத்

திற்கு வந்தபோது அங்கே முகம்மதிய சேனுபதியின் உத்தரவு இல்லாமல் முன் ஏற முடியவில்லே. அப்போது அப்பாதிரி கோயமுத்தூர் காணச் சென்ருர். அங்கே பயிர் வெகு நன்ருக வளர்ந்திருந்தது. அதை புல்லர்டன் பார்த்துவிட்டுத் தன் சேனைக்கு ஒரு ஆண்டுக்குத் தீனி கிடைத்தது என்று மகிழ்ந்திருந்தான். அவன் உத்தரவுப்படி சேனைகள் கதிர்களை அறுத்தார்கள். அதற்குள் முகமதியர்கள் வந்தார்கள். இருவருக்கும் சச்சரவு நடந்தது. அதில் காப்டன் டெம்பில் என்பவன் கொல்லப்பட்டான். இச் செய்தி ரோஷன்கானுக்குத் தெரிவிக்கப்பட்டது. அவன் ஏதும் செய்யமுடியாது என்று சொல்லிவிட்டான். பிறகு அப்பாதிரி மீண்டும் ஸ்ரீரங்கப் பட்டணம் செல்ல எண்ணி சத்தியமங்கலம் சென்ருர். அங்கிருந்து மேலே செல்ல அனுமதியின்றித் திரும்பினுர். பிறகு 1784ல் திப்புவுக்கும் ஆங்கிலருக்கும் மங்களூரில் சமாதானம் நடந்தது. அதன்படி கோவை திப்புவின் வசமே நின்றுவிட்டது. அந்தக் காலத்தில் கோவை நகரத்தார் குணத்தைப்பற்றி ஸ்வார்ட்ஸ் என்ற டென்மார்க்கு பாதிரி புகழ்ந்து எழுதியிருக்கிருர். “கோயமுத்தூர் உண்மையிலேயே ஒரு இன்பகரமான நாடு. அதன் குடிகள் நம் மிதமான ஆட்சியைக் கண்டு திருப்தி அடைந்திருக்கிருர்கள்” என்று எழுதியிருக்கிருர். ஹைதர் ஆட்சியைக் காட்டிலும் தங்கள் ஆட்சி மிருதுவாகவும் கொடுமை குறைந்ததாகவும் எண்ணித்தான் இவ்வாறு எழுதியிருக்க வேண்டும்.

51. திப்புவின் ஆட்சிமுறை

ஹைதர் எத்தனை கொடியவனாக இருந்தபோதி லும் இந்துக்களை மத விரோதம் கொண்டு இம்சிக்க வில்லை. ஆனால் திப்புவோ மதப்பற்று மிகுந்தவன். தான் சிறுவயதில் விளையாடின இடத்தில் இருந்த ஒரு கோயிலை இடித்து ஒரு பக்கீர் சொன்ன வாக்குப்படி மசூதி கட்டிவிட்டான். பல ஊர்களையும் பிடிக்கும் போது அங்குள்ள மக்களை சுன்னத்து செய்து முகம்மதியர்கள் ஆக்கினான். 1784 ல் குடகின்மீது படையெடுத்து அந்தச் செழிப்பான நாட்டையழித்து விட்டான். பாளையக்காரனின் மந்திரிகளைப் பிடித்துச் சுன்னத்து செய்து விட்டான். 1785ல் அஞ்சஙகோ என்ற கோட்டையைப் பிடித்தான். அதுகண்டு அவ் வூர் பாளையக்காரனின் விதவை ஓடிவிட்டாள். திப்பு அவள் மகனைப்பிடித்துச் சுன்னத்துச்செய்து, கோலார் பிராமணத் தலைவனின் சுன்னத்துச் செய்த மகனின் குமார்த்திக்கு மணம் செய்வித்தான். இவ்விதம் செய்த மத மாறுதல்கள் பல. மத மாறுதல்களே யன்றி இடப்பெயர்களையும் மாற்றிவிட்டான். குட குக்கு ஜுபராபாத் என்றும், கோழிக் கோட்டிற்கு (கள்ளிக் கோட்டை) இசுலாமாபாத் என்றும், திண் டுக்கல்லுக்கு கலிகாபாத் என்றும், சங்கரகிரி துர்க்கத் துக்கு முஜபராபாத் என்றும், கிருஷ்ணகிரிக்கு புல் கிலாஜும் என்றும், மைசூருக்கு நஸ்ஸாபாத் என் றும் பெயரிட்டான். மைசூர் சீமைக்கு குதா தாத் ராச்சியம் என்று பெயரிட்டான். அவன்

கோயமுத்தூரைச் சும்மா விடவில்லை. அதற்குச் சலாமாபாத்து என்றும் அடுத்துள்ள போத்தனூரை ஹூசேனுபாத்து என்றும் நாமகரணம் செய்தான். ஆனால் இப்பெயர்கள் எல்லாம் திப்பு இறந்தவுடனே மறைந்துவிட்டன. ஆனால் அவன் கட்டின பள்ளி வாசல்களும் விட்ட மான்யங்களும் இன்னும் இருக்கின்றன. கோட்டைக்கு வெளியே கோணியம்மன் கோயிலுக்கு மேற்கே ஒரு சமாதி வைத்தான். பேட்டையில் பழைய ஈசுரன்கோயில்இருந்த இடத்தில் ஒரு பள்ளிவாசல் கட்டினான். ஆனால் அதற்கு ஏற்பட்ட முத்துவல்லி (அறக்காப்பாளன்) அதனைக் கவனிக்காமல் அக்கட்டடம் இடிந்துவிட்டது. மானியங்கள் இருக்கின்றன. ஒரு மானிய நிலத்தை நகரசபையார் எடுத்துக்கொண்டு அதனைக் கால்பந்து ஆட்ட இடமாக்கிவிட்டனர். மேலும் இந்து கோயில்களின் இனும் பூமிகளை ஜப்தி செய்வது இவனுக்குச் சகசமாக இருந்தது. பேரூர்ப் பட்டீசுவரர் கோயில் இனும் கிராமத்தை 1784 ல் ஜப்தி செய்து அதன் வருமானத்தில் பாதியை மாத்திரம் கோயிலுக்குக் கொடுத்தான். இவ்விதம் அவன்செய்த கண்டிப்பான உத்தரவுகள் பல. இதனால் நாடு மிகவும் கேடு அடையத் தொடங்கிற்று.

ஓ ஓ ஓ

52. கோட்டையின் மூன்ரும் முற்றுகை 1790 கி. பி.

மூன்ரும் மைசூர்ப் போர் 1790ல் தொடங்கியது. ஆங்கிலேயருடைய நண்பனுன திருவிதாங்கூர்

மன்னன் மீது திப்பு படை யெடுத்தான். தங்கள் உடன்படிக்கைப்படி ஆங்கிலேயர் திருவிதாங்கூர் மன்னனைக் காக்கவேண்டி வந்தது. ஆங்கில தளகர்த்தன் ஜெனரல் மேடோஸ் என்றவன் 1790 மே 26 தேதி திருச்சியை விட்டுக் கிளம்பி ஜூன் 15ல் கரூரைப் பிடித்தான். ஜூலை 21 தேதி கோவையை தகரார் இன்றிக் கைப்பற்றினான். ஆகஸ்டு 6 தேதி ஈரோட்டையும் 23 தேதி திண்டுகல்லையும் பிடித்தான். திப்பு அனுப்பியிருந்த 5000 படையை மலைக்கணவாயில் துறத்தி விட்டுச் சத்திய மங்கலத்தைப் பிடித்துக் கொண்டான். இதை அறிந்த திப்பு 40000 ஆட்களைச் சேர்த்துக்கொண்டு கஜ்ஜல் ஹட்டிக் கணவாய் வழியாக சமநிலத்தில் புகுந்தான். உடனே மெடோஸ் அங்கிருந்து கோயமுத்தூர் சென்று அங்கே தன் சேனை முழுதும் திரட்டி வைத்தான். இதை அறிந்த திப்பு ஈரோடு வழி சென்று அக் கோட்டையையும் மற்றுமுள்ள இடங்களையும் பிடித்தான். இப்படியிருக்கையில் சென்னையிலிருந்து கர்னல் மேக்ஸ்வெல் 9500 துருப்புகளை இட்டுக்கொண்டு வாணியம்பாடி அருகில் வந்தான். அவனை எதிர்க்கச் சென்ற திப்பு ஆள் பலத்தைக் கண்டுவிட்டுத் திரும்பிக் காவேரிக்கரைக்கு வந்துவிட்டான். மெடோஸ் ஒன்றும் செய்ய முடியவில்லை. இதனைக் கண்ட கவர்னர் ஜெனரல் லார்ட் கார்ன்வாலிசு தானே தலைமை பூண்டு போருக்குப் புறப்பட்டார். போரும்மும்முரமாக நடந்தது. இதன் மத்தியில் கமுருதீன் என்ற திப்புவின் சேனைத்தலைவன் ஒருவன் ஒருபடையைத் திரட்டிக் கொண்டு மேற்கே நோக்கிச்

சென்று கோவையை நெருங்கினன். அப்போது அக் கோட்டை மேஜர் சாமர்ஸ் என்ற ஆங்கிலத் தலைவன் பாதுகாப்பில் இருந்தது. கமுருத்தீன் கோட்டையை முற்றுகை யிட்டான். அது 5 மாதம் நடந்தது. சாமர்ஸ் கூடிய மட்டும் எதிர்த்தும் முடியாமல் 23-10-1791ல் சரணம் அடைந்தான். அவனையும் அவன் கீழ் இருந்த அதிகாரியையும் பேச்சுக்கு மாறாகச் சிறை செய்து கமுருதீன் சீரங்கப் பட்டணத்திற்கு அனுப்பி வைத்தான். ஐந்து மாதம் நடந்த இந்த முற்றுகை மிகவும் உக்கிரகமாகவே நடந்தது. அடிக்கடி முற்றுகை இட்டவர்கள் கோட்டைக்குள் செல்வதும் முற்றகைப்பட்டவர்கள் அவர்களை எதிர்த்துத் துறத்துவதுமாக இருந்தார்கள். 11-7-1791ல் நடந்த சண்டை வெகு பலமானது. அதில் 1000பேர் வரை உயிர் துறந்து அகழியில் கிடந்தார்கள். ஒரு முறை ஆங்கிலப்படை பேட்டை வரையில் எதிர்த்துச் சென்றது. அதற்குள் மைசூரிலிருந்து பெருஞ் சேனை வர முற்றுகை பலப்பட்டது. என்ன எதிர்த்தும் முடியாமல் இறுதியில் சரணம் அடைந்தார்கள். இந்தக் கொடிய போரைக் குறித்துக் கோவையில் யாருக்கும் நினைவே இல்லை. பண்டைக் குடிகள் யார் என்ன ஆனாலும் அதனில் தலையிடாமல் தங்கள் வேலையே கவனிப்பார்கள் அல்லவா? அஹிம்சா துரந்தரர்கள் அல்லவா? ஆனால் கார்ன் வாலிசு பிரபுவோ பெருஞ் சேனையுடன் சென்று பல ஊர்களையும் பிடித்து முடிவில்சீரங்கப் பட்டணத்தை முற்றுகை இட்டான். திப்பு, எதிர்க்க முடியாமல்

சமாதானம் செய்து கொண்டான். அச்சமாதானப்படி கோவை திப்புவிற்கே கொடுக்கப்பட்டது. அவனே தனக்குத் துரோகம் செய்தவர்களையும் தோற்றவர்களையும் கத்திக்கிரை ஆக்கினன். கோவைக் கோட்டையை பின்னர் அழித்து விட்டான். அதோடு அனேக வீடுகளும் தொலைந்தன. ஐதர் காலத்தில் கோவை 3200 வீடுகள் கொண்டிருந்தது. திப்பு காலத்தில் அதில் 2000 வீடுகளே இருந்தன.

ௐ ௐ ௐ

53. மாதய்யன் ஆட்சி

குறிக்கார மாதையன் என்ற ஒரு லிங்காயத்து அதிகாரி மைசூர் அரசனின் பிரதி நிதியாக கோவையை நாற்பது ஆண்டுகள் ஆண்டு வந்தான். ஹைதர் அரசாளத் தொடங்கியதற்கு முந்தியிருந்தே அவன் ஆண்டு வந்திருக்கிறன். ஹைதர் வந்த பின்னும் அவனே ஆட்சி புரிந்து வந்தான். 40 ஆண்டுகளாக ஒருவனே ஒரு அரசியலுக்கு உட்பட்டு ஆட்சி புரிந்து வந்தான் என்றால் அவனுடைய ஆட்சி மேல் அதிகாரிகளுக்கு மிகவும் பிடித்தமாக இருந்திருக்கும் என்று எண்ண வேண்டியிருக்கிறது. மேலும் அவன் கீழ் இருந்த குடிகள் யாதொரு கலகமும் செய்யாமல் அமைதியாக இருந்திருந்த படியால் அவன் ஆட்சியும் நல்ல ஆட்சியாக இருந்திருக்க வேண்டும். இத்தலைவன் தான் கோவை மஹாலைக் கட்டினவனே என்று ஊகிக்கவும் வேண்டியிருக்கிறது. இந்த மஹால் முந்தியிருந்த ஒரு மாதையன் கட்டியிருக்கும்

பட்சத்தில் ஹைதர் சொற்படி இவன் அதைச் சீர் திருத்திப் பெரிதாக்கினன் என்பது நிச்சயம். இவனைப் பற்றி 1800ல் கோவைக்கு விஜயம் செய்த டாக்டர் புக்கானன் என்ற ஆங்கிலர் கூறியிருக்கிருர். மேலும் சில செப்பேட்டுச் சாசனங்களில் இவன் பெயர் குறிக் கப் பட்டுள்ளது. அதுவும் இவன் பெருமைக்குக் காரணம் எனலாம். கலியுகம் 4864க்குச்சரியான கி.பி. 1763ல் ஏற்பட்ட ஒரு செப்பேட்டுப்படி கிருஷ்ண ராச உடையார் காலத்தில் ஹைதர் அலி ஆட்சியின் கீழ் குறிக்கார மாதையன் கோவையில் இருந்ததை அறிகிருேம். அச்சாசனப்படி அக்குறிக்கார மாதை யன் ஐதர்அலி நவாபு பாதர் சாயபுக்குக் காரியத்துக்கு கர்த்தர் என்றும், அட்டவணை கந்தாசாரம் சுங்கம் பொம்மு தேவஸ்தானம் முதலாகிய அதிகாரமும் செய்கிறவன் என்றும் கண்டிருக்கிறது. ஆகவே மாதை யன் சகல அதிகாரங்களும் இவ்வூரில் பெற்றிருந்தான் என அறியலாம். அக்காலத்தில் சாவடி அதிகாரம் வெங்கடரமணையன், சென்போகு ரங்கையன், கணக்கு நீலகண்ட பிள்ளை அத்தப்பபிள்ளை, குடியானவர்கள் ராமநாத பிள்ளை, சாமிநாத பிள்ளை, குமாரவேலு பிள்ளை ஏழூர்பிள்ளை, தாண்டவ மூர்த்தி, சாமி ஆளு வார் கவுண்டன், ராசப்புடையாக் கவுண்டன், பெத் தாக் கவுண்டன், நல்லதம்பி, அங்கண முத்தப்புடை யான், நாகன் குட்டையன், அங்கண மன்ன முத்தன், ராசசேர்வைகாரன், குப்பி செட்டியார், சுப்பராய செட்டியார், தெய்வசிகாமணிக் கவுண்டன் இருந்தார் கள். இவர்கள் எல்லாரும் சேர்ந்து கோவையில் இருந்த

காசிமையயதீன் அவர்களுக்குத் தர்ம சாசனம் செய்து கொடுத்தார்கள். அதன்படி அடியிற்கண்ட நிலம் சர்வ மானியமாகக் கொடுக்கப்பட்டது. 'பேட்டை சாவடிக்குச் சேர்ந்த நிலம் நரசிங்கையன் குளத்துப்பத்தில் ஏரிக்கும் கிழக்கு, தெற்குப் புறத்தில் மாதன் தோட்டத்துக்கும் வடக்கு, சாயபுகான் மகன் உசேன் கான் கும்பந்தன் தோட்டத்துக்கும் மேற்கு, நாக சேர்வைக்காரன் குடி கிணத்துத் தோட்டத்துக்கும் கிழக்கு இதன் மத்தியில் உள்ள தோட்டமும், மற்ருெரு நிலமும்' என்பன.

54. ஆங்கிலர் வெற்றி, திப்பு முடிவு—1799 கி.பி.

1792 முதல் 1799 வரை சண்டை இல்லை. அப்போது திப்பு மறுபடியும் கைவிட்டுப்போன நாடுகளைப் பிடிக்கவும் மற்ற அரசரோடும் பிரஞ்சுக்காரரோடும் நட்பு செய்துகொண்டு போர் தொடங்கவும் முயன்ருன். ஆங்கிலரை இந்தியாவிலிருந்து துறத்துவதாகக் கங்கணங்கட்டிக் கொண்டான். தன் நாட்டிற்குள்ளேயே கொடுங் கோன்மை வலுத்து வந்தது. இறந்துபோன அரசனுக்குப் பதில் அரசனை நியமிக்கவில்லை. இந்து ஆலயங்களைச் சூறையாடிக் கிராமங்களில் மசீதுகளைக் கட்டிக் காஜிகளை முறையாக நியமித்தான். இச்செயல்களால் எங்கும் குழப்பம் பொங்கிக் கொண்டிருந்தது. 1899ல் கவர்னர் ஜனரல் இனிபொறுக்க முடியாது எனச் சொல்லி ஒரு பெரிய சேனையை ஹாரிசு என்ற தலைவன் மூலம் அனுப்பினர். அப்போது திப்புவின் சேனை மிகக் குறைவாக

இருந்தது. ஹாரிஸ் தாமதம் செய்யாமல் நேராகச் சீரங்கப்பட்டணத்தின்மீது புறப்பட்டான். வழியில் மளவள்ளியில் திப்பு தோல்வியுற்முன். உடனே சீரங்கப்பட்டணம் முற்றுகை தொடங்கியது. திப்புவும் வெகு வீரத்துடன் எதிர்த்தான். ஆனால் பயன்படவில்லை. கோட்டை தாக்கப்பட்டது. அப்போது ஏற்பட்ட கொடிய சண்டையில் திப்பு கொல்லப்பட்டான். 1799 மேமீ 4 தேதியன்று சீரங்கபட்டணம் பிடிக்கப்பட்டது. 'ஹைதர் ஒரு அரசைத் தாபித்தான்; திப்பு அதனைத் தொலைத்தான்' என்று மக்கள் பேசிக்கொண்டார்கள். திப்புவோடு முசுலிம் அரசு தொலைந்தது. பழைய அரச குடும்பத்தில் இருந்த ஒரு இளவரசனை இராஜாவாக்கினர்கள். திப்புவின் பிரதமமந்திரியாக இருந்த பூர்ணையாவை திவான் ஆக்கி வைத்தார்கள். பூர்ணையா கோயமுத்தூர் சரகத்திற்குச் சேர்ந்த ஒரு மாத்வ பிராமணர். மிகுந்த நிபுணர். ஹைதரும் திப்புவும் அவரிடம் நம்பிக்கை வைத்திருந்தனர். ஆங்கிலரும் அவ்வாறே நம்பினர்கள். அரசும் செவ்வையாக நடைபெற்றது. மைசூர் சீமை சுருக்கப்பட்டது. கோவை ஆங்கிலர் வசம் வந்தது. அதுமுதல் கோவை ஆங்கில ஆட்சியிலேயே இருந்து வருகிறது. திப்பு மைசூர் புலி என்று கூறுவர். அவனுடைய கொடி புலிக்கொடி என்றதினலேயோ அல்லது அவனுடைய கொடிய வீரத்தனத்தினலேயோ கூற இயலாது. திப்பு தொலைந்ததும் கோவை மக்களுக்கு ஆறுதல் ஏற்பட்டது.

55. புக்கானன் விஜயம்

மைசூர் பிடிபட்டதும் சென்னை அரசாங்கத்தார் சார்பிலே டாக்டர் புக்கானன் என்ற ஒரு ஆங்கிலச் சரிதாசிரியர் கருநாடக நாடுகளைச் சோதித்து ஒரு அறிக்கை எழுதும்படி அனுப்பப்பட்டார். அவரும் கோவை, மைசூர் முதலிய நாடுகளைச் சுற்றிவிட்டு ஒரு அருமையான நூல் எழுதியிருக்கிறார். இந்நூல் அச்சாகி இருக்கிறது. 1800 அக்டோபர் மாதத்தில் யாத்திரை தொடங்கினார். அவர் கோவையைப்பற்றி அடியிற் கண்டபடி குறித்திருக்கிறார். "கோவையைச் சுற்றி வறட்சி அதிகம். டணாய்க்கன் கோட்டையிலிருந்து கோவை செல்லும் வழியில் சாலைமரங்களும் சரியாக வளருவதில்லை. கோயமுத்தூரின் பரம்பரை அதிகாரி ஒரு வேளாளன். அவனுடைய முன்னோர்கள் மலைக்கருகில் அடிவாரத்தில் இருந்த ஒரு சிற்றூரில் இருந்தவர்கள். கோவை இருக்கும் இடம் முன்னாளில் ஒரு அடர்ந்த காடாக இருந்து அதில் ஐந்தாறு குடிசைகள் கொண்ட ஒரு மலசர் பதி இருந்தது. அதில் அவர்கள் வழிபட்ட பெண் தேவதை கோணம்மனின் கோயில் இருந்தது. அது இப்போதும் இருக்கிறது. இருளர் தலைவனுடைய பெயர் கோயன். அவன் ஊர் கோயன்பதி. இப்போதைய அதிகாரியின் முன்னோன் அந்த மலசர்களுடைய அனுமதி பெற்று ஒரு கோட்டையைக் கட்டினான். பிறகு அங்கிருந்த குடிகள் எல்லாரும் இறந்துவிட்டார்கள். தேவதை அன்றிரவு கனவில் தோன்றித் தன் கோயிலை பெரிதாக்கும் படிக்கும் தனக்கு ஒரு

பூசாரியை நியமிக்கும் படிக்கும் அவன் கொத்துக்கார காளியப்பன் என்ற பெயர் வகிக்கும் படிக்கும் ஊருக்குக் கோயன்புத்தூர் எனப் பெயர் வைக்கும்படிக்கும் சொல்லிவிட்டு மறைந்தாள். அவன் அவ்வாறே செய்தான். அவனுக்குப் பிறகு அவன் சந்ததியில் 20வது தலைமுறையில் இப்போது உள்ள அதிகாரி தோன்றியுள்ளான். இக்குடும்பம் முதலில் மைசூர் அரசர்களுக்குக் கப்பம் கட்டி வந்தது. 150 ஆண்டுகளுக்கு முன் மைசூரார் இவ்வூரைப் பிடித்துக் கோட்டையைப் பெரிதாக்கினார்கள். ஹைதர் அதிகாரத்திற்கு வருவதற்கு முந்தியும் பிறகும் ஒரு லிங்காதயன் மாதண்ணன் இவ்வூர் கவர்னராக 40 ஆண்டுகள் ஆண்டான். அவன் மண்ணினால் ஒரு மனை கட்டினான். அதனை அரமனை என்று மக்கள் கூறினார்கள். அம்மனை பெரியதானாலும் அவலட்சணமாக இருக்கிறது. சேனைத் தலைவர்களுக்கு இருப்பிடமாகப் பயனாகிறது. மாதண்ணன் காலத்தில் ஊர் செழித்து இருந்தது. பிந்தி ஏற்பட்ட போர்களிலே ஊர் தாழ்ச்சி அடைந்தது. 8 ஆண்டுகளுக்கு முந்தி திப்பு கோட்டையை அழித்துவிட்டான். ஆங்கிலர் வசம் வந்தவுடன் ஊர் செழித்து வருகிறது. இப்போது ஊரில் 2000 வீடுகள் உண்டு. ஹைதர் காலத்தில் இருந்ததில் ⅘ பாகம்தான் இருக்கிறது. திப்பு ஒரு பள்ளிவாசல் கட்டியிருக்கிறான். இவ்வூரில் பெரிய கோயில் ஒன்றும் இல்லை." இந்த விவரத்தினால் 1800-ம் ஆண்டில் கோவை இருந்த நிலைமையை நன்கு அறியலாம்.

56. கோவை தலைநகர் ஆனது

ஆங்கிலர் வசத்தில் நாடு வரவே அதனை ஜில்லாக்களாகப் பிரிவினை செய்து ஒவ்வொரு ஜில்லாவிற்கும் ஒவ்வொரு கலெக்டரை நியமித்தார்கள். கோயமுத்தூர் சீமை இருபகுதிகளாகப் பிரிக்கப் பட்டது. வடபகுதி சேலத்துடனும் தென்பகுதி மதுரையுடனும் சேர்த்துப் பிரித்தார்கள். வடபகுதிக்குப் பவானியையும் தென்பகுதிக்குத் தாராபுரத்தையும் தலைநகர் ஆக்கினார்கள். இவ்விரு ஊர்களும் தலைநகர் ஆவதற்குத் தகுதியாக இல்லாமல் போனபோதிலும், பவானி புனிதத் தலமாக இரண்டு பெரும் நதிகள் சேரும் இடத்தில் இருந்ததினாலும், தாராபுரம் பண்டைய கொங்கு நாட்டின் தலைநகராக இருந்து ஆம்பிரா நதியின் கரையில் இருந்தபடியாலும், இவ்விரு ஊர்களையும் தலைநகர்கள் ஆக்கினார்கள் போலும். மேலும் வடபகுதிக்கும் தென்பகுதிக்கும் எல்லையாக நொய்யலாறு இருந்தது. இவ்வாறே முன்னாளில் வட கொங்கையும் தென் கொங்கையும் பிரித்திருந்ததை அறியலாம். இக்காரணங்களினால் பிரிவினை செய்யப் பட்ட பகுதிகளுக்கு 1799 ஜூலை 6-ந் தேதி முதல் மாக்லியாட் (Capt. Macleod) என்பவரை வடபிரிவுக்கும், ஹார்டிசு (Hurdis) என்பவரைத் தென் பிரிவுக்கும், கலெக்டர் ஆக்கினார்கள். பிறகு 1802 மே 2 முதல் வடபிரிவுக்கு கேரோ (Garrow) என்பவர் கலெக்டர் ஆனார். இவர் வெகு பக்திமான். பவானி சங்கமேசுவரர் ஆலயத்திற்கு ஒரு தந்தப்

பல்லக்கைத் தானம் செய்தார். அவருடைய பெயர் அப்பல்லக்கில் தீட்டப்பெற்றிருக்கிறது. இப்பிரிவினையும் இவ்விரு தலைநகர்களும் சரியாகவும் வசதிகளாகவும் இருக்கவில்லை. ஆகவே 1804 நவம்பர் 24 தேதியன்று இவ்விரு பகுதிகளையும் ஒன்றுசேர்த்து கோவை ஜில்லா ஆக்கினார்கள். அதுமுதல் கோயம்புத்தூர் இச் சில்லாவிற்குத் தலைநகர் ஆயிற்று. காரோ என்பவர் கலெக்டர் ஆனதும் அவர் 1815 ஜனவரி 20 தேதி வரையில் அதிகாரம் செலுத்தினார். நாட்டில் நில அமைப்பு வரி விகிதங்கள் எல்லாம் நன்றாக அளவு செய்து ஏற்படுத்தப்பட்டன. கோவை நகரமும் வளர்ச்சி அடையத் தொடங்கிற்று. அரசியல் கட்டடங்களும் கட்டப்பட்டன. தலைநகருக்குச் செய்யவேண்டிய வசதிகள் செய்யப்பட்டன.

57. பெருமாள் ஆன முருகனும் நாடுகடந்த பெருமாளும்

கோட்டைக்குள் ஈசுவரன் கோயிலும் பெருமாள் கோயிலும் உண்டு. அவைகளில் முறையே மூர்த்திகள், சங்கமேசுவரர், கரிவரதராஜர் என்ற திருநாமங்களுடன் எழுந்தருளி யிருக்கிறார்கள். முகம்மதிய கலாபம் வந்த காலத்தில் ஆலயங்களை அழித்து விடுவார்கள் என்ற பயத்தினால் கோயில்களில் இருந்த அழகிய உற்சவ மூர்த்திகளை நிலத்துள் புதைத்துவிட்டுக் கோயிலைச்சாத்திவிட்டு அர்ச்சகர்கள் ஊரைவிட்டுப் போய்விட்டார்கள். கலாபம் முடிந்தவுடன் சிலபேர் திரும்பினார்கள், சிலபேர்

திரும்பவில்லை. பெருமாள் கோயில் அர்ச்சகர் திரும்பாததினுல் வேறு அர்ச்சகர் நியமனமாகிப் பூசை செய்து வந்தார். விக்கிரகம் இருந்த இடம் தெரியாது உற்சவம் நின்றுவிட்டது. ஆங்கில ஆட்சி வந்தபிறகு 1842ல் இனும் ஒழுங்கு செய்யத் தொடங்கினுர்கள். அப்போது உற்சவ மூர்த்திகளைக் கொண்டு வந்து காட்டினவர்களுக்கே இனும் உறுதி செய்தார்கள். பெருமாள் கோயில் அர்ச்சகருக்கு இன்னது செய்வது என்று தோன்றவில்லை. தனது நண்பரான ஈசுவரன் கோயில் குருக்களோடு ஆலோசித்துச்சந்திர சேகரரைக் குருக்கள் கொண்டு காட்டுவதென்றும் சுப்பிரமணிய மூர்த்தியை அர்ச்சகர் பெருமாள் உருவம் ஆக்கிக் கொண்டுபோய்க் காட்டுவதென்றும் தீர்மானித்தார்கள். இது சுலபமாக இருந்தது. சுப்பிரமணிய மூர்த்திக்கு ஒரு தலை நான்கு புஜம் இரண்டு தேவிமார் உண்டு. பெருமாளுக்கும் ஒரு தலை நான்கு புஜம் இரண்டு நாய்ச்சியர் உண்டு. சங்கு சக்கிரங்கள் சேர்க்கப்பட்டன. வேலாயுதம் எடுக்கப்பட்டது. இந்த மாறுதல்களோடு மூர்த்திகளைக் கொண்டு போய்க் காட்டி இரண்டு கோயில் பணியாளர்களும் தஸ்திக் பணத்தைப் பெற்றுக் கொண்டார்கள். இவ்வாறு வேறு பல தலங்களிலும் ஆனதாகக் கர்ண பரம்பரைக் கேள்வி உண்டல்லவா? அதுமுதல் முருகப் பெருமான் தன் மாமனுர் ஆகிய பெருமாள் கோலத்துடன் அருள் புரிந்து வந்தார். இவ்விதம் 1917 வரை நடந்து வந்தது. தேவஸ்தானச் சபையில் ஒரு சைவர் தலைவரானுர். இம்மாறுதலை அறிந்த

அவர் 1000 ரூ. செலவு செய்வித்து வேருகப் பெருமாள் உபய நாச்சியார்களைச் செய்வித்துப் பெருமாள் கோயிலில் எழுந்தருளப்பண்ணிப் பழைய முருகப்பெருமான் தேவிமார்களுடன் பழைய உருவத்திற்குக் கொண்டு வந்து தம் சொந்த ஆலயத்தில் எழுந்தருளப் பண்ணினூர். பிறகு ஒருநாள் பெருமாள் கோயிலுக்கு அடுத்த ஒரு தெருவில் தென்னங்கன்று வைக்க நிலத்தைத் தோண்டினதில் அங்கே பழைய பெருமாள் தம் பரிவாரங்களுடன் வெளி வந்தார். சர்க்கார் 'புதையல் சேமச் சட்ட'த்தின்படி அவைகளை எடுத்துக்கொண்டு போய் ஏலம் விட்டனர். 1000 ரூ. வரை தருமகர்த்தர் கோரினர். ஆனல் சர்க்காரில் அதற்கு மேலே கோரி எடுத்துக் கொண்டார்கள். அவ்வழகிய விக்கிரகங்கள் இப்போது இலண்டன் நகரத்துக் கண்காட்சி பவனத்தில் வந்து பார்க்கும் மக்களுக்கு காட்சி அளித்துக் கொண்டிருக்கின்றன. மாமனாராக 75 வருடம் மாறுவேடம் பூண்டு அருள் புரிந்து கொண்டிருந்த முருகப் பெருமான் இப்போது தன் தகப்பனார் சந்நிதியில் தனக்கு உற்ற இடத்தில் அமர்ந்து அருள் புரிந்து வருகிறார். அவர் மாமனார் வீட்டிற்குச் சென்ற காலத்தில் தனக்குப் பிரதியாக இருந்து அருள் புரிந்த சிறிய மூர்த்தியும் இங்கேயே இப்போது இருக்கின்றது.

ஒ ஒ ஒ

58. ஆங்கிலர் புகுந்தகாலே கோட்டை அமைப்பு

1799ல் ஆங்கிலர் கோட்டையில் புகுந்தகாலே அது மிகுந்த அலங்கோலம் அடைந்திருந்தது. அதற்கு

முந்தி மூன்று முறை அக்கோட்டை முற்றுகைப்பட்டிருந்ததனால் அது மிகவும் கிலமாகி இருந்தது. இறுதியில் அதாவது 1792ல் அதனைத் திப்பு வசப்படுத்திக் கொண்டபோது இக்கோட்டையால் வெறும் ஆபத்தே ஒழிய பயனில்லை என எண்ணியோ அல்லது வேறு என்ன காரணத்தினாலேயோ அதை இடித்து விட்டான். கோட்டைக்குத் தென்புறத்தில் ஏரியே அகழியாகவும் மற்ற இடங்களில் செயற்கை அகழிகளும் இருந்தன. மதில்களை இடித்து அவன் அகழிகளை மூடிவிட்டான். இவ்விதம் மதில்கள் அழிந்து போகக் கோட்டைக்குள் இருந்த கட்டடங்கள் கோயில்கள் எல்லாம் வெட்டவெளியாயின. கோட்டைக்கு வெளிப்புறத்தில் வடக்கே கோணியம்மன் கோயிலும் பெரிய தெருவில் ஈசுவரன் கோயிலும் அதற்குத் தெற்கே பெருமாள் கோயில்களும் இருந்தன. கோட்டை இடிந்துபோனதனால் மேடுஆகியிருந்தபடியால் அதனைக் கோட்டைமேடு என பொதுமக்கள் வழங்கினார்கள். கோட்டைக்குள் ஏரி ஓரமாக மலையாள நாட்டு முசுலிம்களைத் திப்பு குடியேற்றினான். இப்போது அங்கே அவர்கள் குடிகளும் பள்ளிவாசலும் உண்டு. இவர்கள் தமிழும் மலையாளமுமே பேசுகிறார்கள். தாழ்ந்த நிலமாகையால் இப்பகுதியில் எப்போதும் ஈரமாக இருக்கும். தொத்து வியாதிகள் முதல் முதலில் இங்கேயே உதிக்கும். கோட்டையின் வடகிழக்குப் பகுதியில் ரோமன் கிறிஸ்தவர்கள் குடியேறினார்கள். அதனை அடுத்து ஒரு பெரிய கோயிலும் கன்னிமாடமும் உயர்தரப் பாடசாலையும்

ஏற்படுத்திக் கொண்டார்கள். ஈசுவரன் கோயி லுக்கு எதிரே அக்கிரகாரமும் அதனை அடுத்து பெல்லம் கிருஷ்ண செட்டி தெருவும் உண்டு. கோட்டைக்குள் இருந்த தெருக்களின் பழைய பெயர் கள் மறைந்துபோய் புதுப் பெயர்கள் இப்போது தோன்றியிருக்கின்றன. இதற்குக் காரணம் திப்பு வின் அழிவுச் செயலே என்க. அதற்குள் இருந்த பழைய அரமனையும் சிறைக் குகைகளும் அப்போதே அழிக்கப்பட்டன. தோண்டினதில் சில புதையல்கள் கிடைத்தன; இனிமேலும் கிடைக்கலாம்.

ஐ ஐ ஐ

59. ஆங்கிலர் புகுந்தகாலை பேட்டை அமைப்பு

ஆங்கிலர் கோவை புகுந்தபோது பேட்டையின் எல்லைகள் வடக்கே சுக்கிரவாரப் பேட்டை, கிழக்கே மீன்கடை வீதி, தெற்கே வைசியர் வீதி, மேற்கே சலிவன் வீதி என்பன. (அக்காலத்துப் பெயர்கள் வேறு) சுக்கிரவாரப் பேட்டைக்கு வடக்கே புன்செய் தோட்டங்கள் இருந்தன. சின்னவாடம்பட்டி கிராம எல்லை அதுவரை எட்டியிருந்தது. இப்போதும் அப் பாகத்தில் சின்னவாடம்பட்டி எல்லைச் சந்து, சின்ன வாடம்பட்டி ஒட்டர் சந்து என்ற இரண்டு சந்துகள் அடையாளமாக இருக்கின்றன. அவ்வெல்லையில் கீழ்ப்பாகத்தில் தேவப்பன் தோட்டமும் கிணறும் இருந்தன. அக்கிணறு இன்னும் லிங்கப்ப செட்டி தெருவில் இருக்கிறது. நடை கிணருக இருந்தது இப் போது சேந்து கிணருக இருக்கிறது. அந்தக் காலத்

தில் சுக்கிரவாரப் பேட்டைத் தெருவில் ஒப்பணக் காரவீதிச் சந்திக்குக் கிழக்கே இருந்த பகுதிக்குத் தேவப்பன் தெரு என்ற பெயர் இருந்தது. இதற்கு வடக்கில் பனங்காடு இருந்த இடத்தில் ஒரு பாய்ச்சல் குளமும் மேல்பாகத்தில் முத்தண்ணன் குளம் என்ற குளமும் இருந்தன. இவ்விரண்டும் தூர்த்துவிடப் பட்டன. குளத்தின் பேரால் தெரு ஒன்று பின்னால் ஏற்பட்டது. சுக்கிரவாரமாகிய வெள்ளிக்கிழமை யன்று இத்தெருவில் சந்தை கூடி வந்ததினால் அப் பெயர் பெற்றது என ஊகிக்கலாம். நிச்சயமான காரணம் தெரியவில்லை. கிழக்கே மீன்கடைத் தெரு வில் (இப்போது நவாப் ஹகீம் தெரு) பள்ளர் பறை யர் வசித்த சேரிகள் இருந்தன. அதற்குக் கிழக்கே கீரைத் தோட்டங்கள் இருந்தன. இவைகள் ஒக்கிலி கருக்குச் சேர்ந்திருந்தன. அத்தோட்டங்களை L. M. பாடசாலை, Y. M. C. A. முதலியவர்கள் வாங்கிக் கொண்டார்கள். தெற்கே வைசியர் தெருவுக்கும் பெரிய ஏரிக்கும் இடையில் கீரைத் தோட்டங்கள் இருந்தன. தொறையர்களும் கெம்பட்டிகளும் சில சந்துக்களில் இருந்தார்கள். மேற்கே சலிவன் தெரு வுக்கு மேற்கில் வயல்கள் இருந்தன. இந்த நான்கு எல்லைகளுக்குள் கிழமேலாக வைசியர் வீதி (அப்போது கோமுட்டித் தெரு), பெரியகடைத் தெரு, இராஜவீதி, மடவிளாகத்தெரு, இடைவீதி, சுக்கிரவாரப்பேட்டை என்பன இருந்தன. இவைகளில் மடவிளாகத் தெரு வில் கீழ்ப்பாகத்தில் தேவரடியார்களும் மேல்பாகத் தில் தமிழ்ப் பிராமணர்களும் இருந்தனர். இப்

பகுதிக்கு முதலில் தமிழர் தெரு என்றும் பிறகு ஹெட் சிரஸ்ததார் தெரு என்றும் பின்னால் தாமஸ் வீதி என்றும் பெயர்கள் மாறின. அக்காலத்துச் சிரஸ்ததார் சுப்பையர் என்பவர் அத்தெருவில் வாழ்ந்தவர். தென் வடலாக இருந்த தெருக்கள், சலிவன் வீதி, தெலுங்கு பிராமணர் வீதி, கருப்ப கவுண்டன் வீதி, ஈசுவரன் கோயில் தெரு, சின்னகடைத் தெரு, ஒப்பணக்காரத் தெரு, மீன்கடை வீதி என்பன. சலிவன் வீதி ஒரு புது தெரு, சலிவன் (1815 கி. பி.) என்ற கலெக்டர் பெயரிடப்பட்டது. தெலுங்குத் தெரு தமிழர் தெருவைப் பேதப்படுத்திச் சொல்வது. கருப்ப கவுண்டன் ஊர்த் தலைவன். கொத்துக்கார காளியப்பன் மரபைச் சேர்ந்தவன். இப்போதும் இங்கே கொத்துக்காரர்கள் இருக்கிறார்கள். சின்னக்கடைத் தெரு இப்போது இரங்கே கவுண்டன் தெரு என்னப்படும். அவன் அக்காலத்தில் ஒரு பெரிய குடியானவன்; ஒக்கிலியர் வகுப்பு; அவன் மாடிவீடு இன்னும் அத் தெருவில் இருக்கிறது. ஒப்பணக்காரர் பலிஜ வகுப்பில் ஒரு பிரிவினர். ரவுத்து என்ற பட்டம் அவர்களுக்கு உண்டு. விஜயநகர சமஸ்தானத்தில் சேனைகளில் பணம் ஒப்புவித்துத்தரும் அதிகாரம் பெற்றவர்கள். மீன்கடை வீதி அங்கே முதலில் மீன் கடை வைத்திருந்த காரணம் பற்றி ஏற்பட்டது. இவைகளே அக்காலத் தெருவமைப்புக்கள்.

ஐ ஐ ஐ

60. ஊர் முதற் பெருக்கம்

ஆங்கில ஆட்சி வந்த பிறகு கோவை தலைநகர் ஆனதும் ஊர் செழிக்கத் தொடங்கியது. சண்டை

கள் ஒழிந்தன. படையெடுப்புகளுக்கும் முற்றுகை களுக்கும் குடிகள் அஞ்சவேண்டி யிருக்கவில்லை. ஊரைச் சுற்றிலும் புது வீடுகளைக் கட்டிக்கொண்டு மக்கள் வாழத் தொடங்கினர். முதலில் பேட்டைக் கும் கோட்டைக்கும் இடையில் இருந்த வெளி, ஊர் கட்ட உதவிற்று. அரசியல் சாலைகளைப் பெருக்க முயன்றதில் ஊருக்குக் கிழக்கே இருந்த தோட்டங் களை ஊருக்கு எடுத்துக்கொள்ள வேண்டி வந்தது. கோவைக்குக் கிழக்கே உப்பிலி பாளையம் அனுப்பர் பாளையம் என்ற இரு சிறு ஊர்களும் மேற்கே பேரூர்ப் பாதையில் பள்ள பாளையம் என்ற ஒரு சிற்றூரும் இருந்தன. அவைகளில் முறையே உப்பிலியர், அனுப் பர், பள்ளர் என்ற வகுப்பார்கள் குடியிருந்தார்கள். அவ்வூர்களைக் கோவையுடன் இணைக்க வேண்டி வந் தது. அவ்விதம் இணைத்ததினால் ஊரின் இடவசதி பெருகியதோடு ஜனத்தொகையும் பெருகிற்று. உப் பிலிய பாளையம் அனுப்பர் பாளையம் இவைகள் இரண்டிற்கும் கோவைக்கும் இடையில் இருந்த தோட்டங்கள் வீடுகள் கட்டவுதவின. இவைகளில் அரசியல் கட்டடங்களும் ஏற்பட்டன. முதலில் கலெக்டர் கச்சேரி இந்த இடத்தில் அமைக்கப்பட் டது. பின்னால் மற்ற சாலைகள் வரத்தொடங்கின. மேற்கே கோவைக்கும் பள்ள பாளையத்திற்கும் இடையில் நன்செய் வயல்களும் செல்வ சிந்தா மணிக் குளமும் இருந்ததினால் இவைகளுக்கு இடை யில் வீடுகள் உண்டாக வில்லை. இம்மூன்றும் கோவை யோடு இணைக்கப்பட்ட காலம் 19 - நூ. முற்பகுதி

ஆகும். உப்பிலிய பாளையத்திற்கும் அனுப்பர் பாளையத்திற்கும் இடையில் சென்னையிலிருந்து கோவை வரும் பெரிய சாலை வழி இருக்கின்றது. இது 100 அடி அகலமுள்ளதாக மிகக் கம்பீரமாக இருக்கிறது. இதனை இப்போது அவிநாசிச் சாலை என வழங்குகிறார்கள். இதே நேராக பழைய ஊரில் செல்லுகையில் சுக்கிரவாரப் பேட்டை எனப் பெயர் பெறுகிறது. உப்பிலி பாளையத்தில் பண்டைக்காலம் முதல் ஏற்பட்ட மாரியம்மன் கோயில் இன்னும் இருக்கிறது. கோவை மக்களில் அம்மை வார்த்தால் இந்த ஆலயத்திற்குத்தான் சென்று பிரார்த்தனை செலுத்துவதுண்டு. அனுப்பர் பாளையத்தில் கூப்பிடு பிள்ளையார் கோயில் இருக்கிறது. இங்கேதான் விஜயதசமியின் போது எல்லா ஊர்த் தேவதைகளும் சென்று வன்னிமரம் எய்வது. அதனை மறைத்து இப்போது சினிமாக் கொட்டகை கட்டிவிட்டார்கள். பள்ளபாளையத்தில் பத்திரகாளியம்மன், எல்லைக்கருப்பராயன் கோயில்கள் பேரூர் பாதையில் இருக்கின்றன.

ூ ூ ூ

61. நான்கு மச்சு வீடுகள்

பண்டைக் காலங்களில் ஒரு குடியில் மச்சுவீடு கட்டுவதற்கும் இரண்டு அடுக்கு மெத்தை கட்டுவதற்கும் வீட்டிற்குச் சுண்ணும்பினல் மேல்பூச்சு பூசுவதற்கும் அரசாங்கத்தார் அனுமதி வேண்டியிருந்தது. இப்போதும் நகரசபை இருக்கும் ஊர்களில் அனுமதியில்லாமல் எந்த வீடும் கட்டப்படாது என்று அறிந்

தால் அந்தப் பண்டைய வழக்கம் ஒரு வியப்பு அல்ல. அவ்விதம் ஊர்ச் சட்டம் இருந்ததினால் ஊர்களில் பெரும்பான்மையாக வில்லைக் கட்டடங்களே இருக்கும். கொடுங்கோல் மன்னர் ஆட்சிகளில் மச்சுவீடு கட்டித் தம் செல்வ நிலையை வெளியிடுவதும் அபாயமானதினால் மக்கள் வில்லை வீடுகளையே கட்டி வாழ்ந்தார்கள். கோவையிலே ஆங்கிலர் வருமட்டும் அரண்மனையும் ஆலயங்களும் தவிர இதர வீடுகள் ஓட்டு வில்லை வீடுகளாகவே இருந்தன. ஆங்கிலர் வந்த பிறகு முதலில் நான்கு மச்சு வீடுகளே தோன்றின. சுமார் 50 ஆண்டுகள்வரை இவைகளே மச்சு வீடுகள். பிறகே ஏனைய மச்சுவீடுகள் தோன்றின. இந்நான்கு மச்சு வீடுகளும் நான்கு புறங்களில் இருந்தன. அக்கிரகாரத்தில் இராஜ வீதியில் ஜாகீர்தாரர் வீடு என்பது ஒன்று. இதற்குப் பின்னால் ஒரு அழகிய பழத்தோட்டம் இருந்தது. இதனைப்பற்றிப் பின்னால் கூறுவோம். கோமுட்டி வீதியின் கீழ்க்கோடியில் தொப்பையப்ப முதலியார் வீடு மற்றொன்று. அது இவ்வூரில் பிரபல வர்த்தகரான ஆர்க்காடு தொப்பையப்ப முதலியார் உடையது. சுமார் 140 ஆண்டுகளுக்குமுந்தி பெங்களூரிலிருந்து தொப்பையப்ப முதலியார் சபாபதி முதலியார் என்ற இரண்டு கூட்டாளிகள் கோவைக்கு வந்து கூட்டு வியாபாரம் செய்தார்கள். அவ்விருவரும் இந்த வீட்டில் குடியிருந்தார்கள். அதற்கு முந்தி அது ஒரு சிங்கினுடைய வீடு. அவ்விரு முதலியார்களின் சந்ததியார் இப்போது பெருமைபெற்று விளங்குகிறார்கள். மூன்றாவது இரங்கே கவுண்டன்

வீதிக்குப் பெயர் தந்த இரங்கே கவுண்டன் கட்டிய இரட்டை அடுக்கு வீடு. இது விலைபெற்ற தேக்கு மரத்தினால் கட்டப்பட்டது. இக்கவுண்டன் ஒக்கிலிய மரபில் பிறந்து மிகுந்த செல்வாக்குப் படைத்து வாழ்ந்தவன். நான்காவது, சுக்கிரவாரப் பேட்டை வீதியில் லிங்கப்ப செட்டியார் வீடு. இது மிக விலை யுயர்ந்த ஈட்டித் தூண்கள் தேக்கு விட்டங்கள் கொண்டு கட்டியது. இந்தச் செட்டியார் லிங்காயத்து மரபினர். வெகு செல்வாக்கு படைத்தவர். இவ் வீட்டில் சிறிது காலம் முனிசிபல் பாடசாலை இருந் தது. பிறகு இதனைக் கோவை தேவாங்க மரபில் சிறந்த வர்த்தகர் ந. கிரியசெட்டியார் வாங்கி அதனைப் பிரித்து இரண்டு பெரிய வீடுகளாகத் தம் குடும்பத் திற்குக் கட்டினார். அத்தெருவில் வெகுகாலம் வரை யில் இவ்விரண்டு வீடுகளே பெரிய வீடுகளாக இருந் தன. இந்த நான்கு மச்சுகளே பழைய மச்சுகள். பிறகே பல மச்சுகள் ஏற்பட்டன. மேலும் கோவை யில் மூன்று அடுக்கு வீடுகள் இருக்கவில்லை. முதன் முதலில் மூன்றடுக்கு வீடுகளைக் கட்டின இரண்டு கனவான்கள் அதனால் உபத்திரவங்கள் ஏற்பட்ட தாக எண்ணி அவைகளில் மூன்றும் அடுக்கைப் பிரித்து எடுத்துவிட்டார்கள். இந்த கொள்கை இன்னமும் போகவில்லை. இன்றைக்கும் மூன்று அடுக்குகள் ஒன்றிரண்டிற்குமேல் இல்லை எனலாம். இது ஒரு விபரீத நம்பிக்கை.

62. இரண்டு தெப்பக்குளங்களும் ஒரு பழத்தோட்டமும்

இராஜ வீதியில் மேற்குக் கோடியில் ஒரு தெப் பக் குளமும் அதற்கு ஒரு பர்லாங்குக் கிழக்கில் மற்

இ. 8

றொரு தெப்பக் குளமும் இருக்கின்றன. முதல் தெப் பக் குளம் கோபால சுவாமி கோயில் தெப்பக்குளம் என்றும்,இரண்டாவதுவீதித்தெப்பக்குளம்என்றும், பொது மக்கள் சொல்லுவார்கள். கோபால சுவாமித் தெப்பக் குளத்தில் கோணியம்மன் கோயில் தெப் போற்சவம் மாசி மாதத்தில் திருவிழாவின்போது நடைபெறும். இதைச் சேர்ந்த பெருமாள் கோயிலில் இராமர் சந்நிதியைத் திரு. ந. கிரிய செட்டியார் 1926-ல் கட்டினார். இந்தத் தெப்பக் குளத்திற்கருகில் ஒரு அரசமரமும் நாகர்மேடையும் உண்டு. அதனடியில் ஊரார் ஈமக்கடன்களை முடிப்பர். வீதித் தெப்பக்குளம் அனுமந்தராயன் கோயிலுக்கு அடுத்து இருக்கிறது. இதற்குப் பின்னல் ஒரு பெரிய தோப்பு இருக்கிறது. அத்தோப்பைச் சார்ந்தது மயிலேறிப் பாளையம் ஜாகீர் தாரர் கட்டடம். அதற்கருகில் அனந்தையன் கிணறு என்ற குடி கிணறு உண்டு. கோவைக்குச் சிறுவாணிக் குடிநீர் வசதி வராததற்கு முந்தி இக்கிணறுதான் கோவையின் மேற்பகுதிக்கு நீர்வசதி தந்துகொண் டிருந்தது. வீதித் தெப்பக்குளத்துத் தோட்டத்தைப் பற்றிய சரிதம் பொதுமக்களுக்கு நன்ருகத் தெரி யாது. சென்னைக் கவர்னர் சர் தாமஸ் மன்ரோ இந்த நாட்டில் அதிகாரியாக இருந்தபோது இந்தத் தோட் டத்தை உண்டுபண்ணினாராம். அவரிடம் கோவிந்த ராவ் என்ற ஒரு மராட்டியப் பிராம்மணர் பெரிய சிரேஸ்ததாரராக இருந்தார். நிலத் தீர்வை போடு வதில் வெகு சாமர்த்தியமாக வேலை செய்ததினல்

அதிகாரிகளின் நல்ல மதிப்பைப் பெற்றார். அவர் ஓய்வு எடுத்துக்கொண்ட பிறகும் தஞ்சைக்கு அனுப்பப்பட்டு அங்கேயும் நிலத் தீர்வை விஷயமாக வேலை செய்தாராம். இவ்விதம் அரசியலாருக்கு வயது முதிர்ந்த பிறகும் ஓயாது வேலை செய்ததற்காக அதிகாரிக் கம்பெனியார் 1829ல் ஒரு ஜாகீர் இனுமாகத் தந்தார்கள். அந்த ஜாகீர் கோவை தாலூக்காவில் ஏழு ஊர்களைக் கொண்டது. அதில் முக்கியமானது மயிலேறிப் பாளையம் என்பதாகும். மேலும் சர் தாமஸ் மன்றோ தன்னிடம் வெகு சிரத்தையோடு வேலைசெய்த அந்த கோவிந்த ராவுக்குத் தன் சொந்தமான தோட்டத்தையும் குளத்தையும் வெகுமதியாகத் தந்தாராம். அவ்விதம் தந்த பரிசுடன் எழுதின கடிதத்தில்,

"நான் உனக்குத் தந்திருக்கும் தோட்டம் வெகு நல்லது. அதில் நான் நட்டிருக்கும் ஆரஞ்சு பப்பிலிமாஸ் பழச்செடிகளை நீர் நன்ருகப் பாதுகாக்க வேண்டும். மேலும் திராட்சைக் கொடி அங்கு நன்ருக வளரும். அதனை வைத்துக் கவனித்து வாரும். அதில் இரண்டு மூன்று அராபியப் பேரீச்ச மரங்கள் இருக்கின்றன. அவைகள் வளர்ந்தவுடன் நன்ருகக் காய்க்கும். இன்னும் சில குடைப்பனைகளும் இருக்கின்றன. அவைகள் மலையாள நாட்டில் நீர் கண்டிருக்கலாம். அதன் இலைகளால் குடைகள் உண்டாக்கலாம். வயது நிரம்பிய காலத்தில் நீர் துயரமும் கவலையும் இல்லாது சுகஜீவியாக இருப்பீர் என்று

விரும்புகிறேன். நீர் கும்பினிக்கு நன்றியுள்ள வேலையாளராக இருந்ததை நான் அறிவேன்.

உமது நண்பன்

டி. மன்றோ"

என்று மன்றோ எழுதியிருக்கிறார். இந்தக் கோவிந்தராவின் சந்ததியார் இன்னும் இந்தத் தோப்பையும் மனையையும் அனுபவித்து வருகிறார்கள். தோட்டத்திற்கு முன்புறமுள்ள ஹனுமந்தராயன் கோயில் கோவிந்தராவ் கட்டியதாம். இதில் இப்போதும் உற்சவங்கள் நடைபெறுகின்றன.

63. இரண்டாம் பெருக்கம் - பந்தய வட்டம்

கோவையிலே சர்க்கார் காரியாலயங்கள் அதிகமாயின. அவற்றோடு ஆங்கில ஆபீசர்களும் அதிகமாயினர். அவர்களுக்குக் குடியிருப்பு வசதிகள் இருக்கவில்லை. பழைய ஊரில் நாட்டு வழக்கப்படி கட்டின வீடுகள் இருந்தனவேயன்றி, பங்களா முறையில் கட்டின வீடுகள் இருக்கவில்லை. ஆங்கிலர்களுக்கு நாட்டு வீடுகளில் இருக்க விருப்பமில்லை. ஆகவே பங்களா முறையில் காற்றோட்டமும் சுகாதார வசதிகளும் உள்ள வீடுகள் அமைக்க வேண்டும் என்று இச்சைப்பட்டார்கள். அதற்காக கோவைக்குக் கிழபுறத்திலே அவிநாசிப் பாதைக்கும் திருச்சிப் பாதைக்கும் இடையில் இருந்த தோட்ட வெளிகளில்

அவ்விதமான வீடுகளைக் கட்ட ஒரு திட்டம் செய்தார்கள். அந்தத் திட்டத்தை கலெக்டர் சலிவன் வகையரு மும்முரமாக எடுத்துக்கொண்டு ஈடேற்றினர். தொடக்கத்தில் அப்பகுதி நிலம் ஊரோடு சேர்த்தப்பட்டது. அதனாலே ஊர் இப்போது இருக்கும் வட்டப்பாதை (Round Road) அல்லது பந்தய வட்டம் (Race course) உள்பட அதற்குக் கிழக்கே உள்ள இட்டேரி வரைக்கும் அகலப்படுத்தப்பட்டது. வீடுகள் அமைப்பதற்கு முந்தி முட்டை வடிவமான ஒரு அகலமான பாதை போடப்பட்டது. அதை அழகு படுத்துவதற்காக இருபுறமும் சாலை மரங்கள் நடப்பட்டன. பாதையின் அகலம் 100 அடி இருக்கும். நடுவில் வண்டிப் பாதை, இரண்டு ஓரமும் சாலை மரங்கள், பிறகு உலாவும் கால்நடைப் பாதை, பிறகு சாக்கடைப் பள்ளம், பிறகு வீட்டு வேலி. இவ்விதமாகச் சுமார் 1⅞ மைல் நீளமுள்ள முட்டை வடிவப் பாதை போடப்பட்டது. அதன் இருபுறங்களிலும் பொதுமக்கள் நிலங்களை வாங்கிப் பெரிய பங்களாக்களைக் கட்டினார்கள். முட்டை வடிவமான பாதையைக் குதிரைப் பந்தயத்திற்கு உபயோகித்தார்கள். சுகாதாரமான சௌகரிய வசதியோடு உல்லாச விளையாட்டுகளும் நடைபெறுமாறு இந்தப் புதுப்பேட்டை நிறுவப்பட்டது. முதலில் பொது மக்களே புது மாளிகைகளைக் கட்டிச் சொந்தமாக இருக்கவோ ஆபீசர்களுக்கு வாடகைக்குக் கொடுக்கவோ பயன்படுத்திக்கொண்டார்கள். பிறகு 1919-20ல் சர்க்காரிலே பல பகுதிகளைக் கிரயத்திற்கு வாங்கி

அரசியல் விடுதிகளைக் கட்டினார்கள். இப்போதும் முக்கிய உத்தியோகஸ்தர்கள் இந்த வட்டத்தின் இரு புறங்களிலேதான் வசிக்கிறார்கள். இந்தப் பகுதி சுகாதாரத்திற்கும் சுத்தமான காற்றிற்கும் பேர் போனது. உயரமான இடமாகையினால் நல்ல காற்று எப்போதும் வீசி இன்பம் தரக்கூடிய இடம் இது வாகும்.

64. சிறைச்சாலை

கோவைச் சிறைச்சாலை முதல்தரமானது. பல ஜில்லாக்களுக்கும் பயன் படுதலால் மத்தியச் சிறை (Central Jail) என்று பெயர். மேலும் இப்பெரிய சிறை ஏற்படுவதற்கு முந்தி சிறைச்சாலை சிறிதாகவும் ஜில்லாச் சிறைச்சாலையாகவும் இருந்தது. அப்போது சிறைக்கூடம் இப்போதைய நகர மண்டபத்தின் (Town Hall) பின்னால் இருக்கும் நகரசபைச் சாமான் அறைகளில் இருந்தது. மத்திய சிறைக்கூடம் 1862ல் கட்டத் தொடங்கி 1865ல் ஒருபகுதி முடிந்து 1868ல் முழுதும் கட்டிவிடப்பட்டது. 1865 முதலே சிறையாளர்களை அடைக்கத் தொடங்கினர். இச் சாலை அனுப்பர்பாளையம் கணபதி பாதையில் கீழ்ப் புறமாக இருக்கிறது. சிறைக் கட்டடம் 44 ஏகரா வும் சுற்றுமுள்ள உழவு நிலம் 160 ஏகராவும் பரப்பு கொண்டது. கட்டடமோ வெகுகாலத்திற்கு முந்தி கட்டப்பட்டதினால் விதிகளின்படி கட்டப்பட்டதல்ல. மத்தியில் ஒரு சிகரமும் சுற்றிலும் 12 கதிர்கள்

போன்ற கட்டடங்களும் இருக்கின்றன. வைத்தியச் சாலை அறைகள் வடமேற்கில் தனியே இருக்கின்றன. கைத்தொழிற்சாலை தென்கிழக்கே இருக்கிறது. பெண்கள் சிறைக்கூடமும் கடன்காரர் கட்டடமும் மத்திய மதிலுக்கு வெளிப்புறத்தில் இருக்கின்றன. கடுஞ்சிறை, தனியறைகள் கொண்ட மூன்று கட்டடங்களாக இருந்தது. அதனை இப்போது பிரித்து இரண்டடுக்குக் கொண்ட 8 கட்டடங்களாகக் கட்டியிருக்கிறார்கள். மொத்தம் 1399 ஆண் கைதிகளும் 10 பெண் கைதிகளும் இருக்கலாம். புது முறையில் 1216 தனிக் கைதிகளும் 377 கூட்டுக் கைதிகளும் இருக்கலாம். நீண்டகாலக் கைதிகள் நூலாலையில் நெசவு, சாயம், தையல், கூடாரம் செய்தல் முதலிய தொழில்களைச் செய்ய வேண்டும். நெசவுச்சாலையில் 130 மிஷின் தறிகள் வேலை செய்கின்றன. தையல் வேலையில் 73 மிஷின்கள் இருக்கின்றன. நூற்சாலையில் 3600 கதிர்கள் இருக்கின்றன. ஆகவே இத் தொழிற்சாலையில் முழு வேலையும் வெளியில் சரக்குக்குச் செல்லாமல் தாமே செய்யக்கூடிய அளவில் அமைந்திருக்கிறது. இச்சாலையிலிருந்து போலீசு, ஆஸ்பத்திரி முதலிய இலாகாக்களுக்கு வேண்டிய துணிச் சாமான்கள் தயாராக்கி அனுப்பப்படுகின்றன. 30 ஆண்டுகளுக்குட்பட்ட கைதிகளுக்குப் படிப்புக் கற்றுக்கொடுக்கப்படுகிறது. கைதிகளுக்குச் சமயமும் நீதியும் போதிப்பதற்குப் பல பெரியார்கள் வாரத்திற்கு ஒருமுறை இலவசமாக கைங்கரியம் செய்கிறார்கள். கைதிகள் மாதத்திற்கு இருமுறை

நிறுத்தப்பட்டு மருந்துகள் வழங்கப்பட்டுச் சுகாதாரம் காக்கப்படுகின்றது. சிறைக் கட்டடத்திற்குப் பார்வை யாளர் குழு உண்டு. முன்காலத்தில் சிலதடவை களில் வாந்தி பேதி கண்டு சிலபேர் மரணமடைந் திருக்கிறார்கள். 1877ல் 45பேர் இறந்தார்கள். 1882ல் 19 பேர் இறந்தார்கள். பிறகு இந்த நிலை வரா திருக்க உணவு சீர்திருத்தப்பட்டது.

65. கோட்டை வெளிப்புறக் கட்டடங்கள்

திப்பு சுல்தானல் கோட்டை மதில்கள் அழிக்கப் பட்டபோது கோட்டை யீசுவரன் கோயிலுக்கும் பெரியகடைத் தெருவுக்கும் மத்தியில் வெளியிடம் வீணுகக் கிடந்தது. மேற்புறத்தில் பழைய சிறைச் சாலை (தற்போது நகரசபை ஆபீசு) கட்டப்பட்டது. கிழ்ப்புறத்தில் டாக்டர் வைட் (Dr. Wight) என்ற பருத்தி ஆராய்ச்சியாளர் தன் ஆராய்ச்சிக்காக ஒரு பெரிய கிடங்கு கட்டினுர். அக்கிடங்கு இப்போதும் இருக்கிறது. அக்கிடங்கில்தான் பின்னல் (இன்சி னியரிங்கு) மராமத்து இலாகா வைக்கப்பட்டிருக் கிறது. கோவை ஜில்லாவில் பருத்தி விளையக்கூடிய கரிசல் நிலம் மிகுதி. முன்காலத்தில் நாட்டுப் பருத்தி இரகங்களைத்தான் பயிர் இட்டு வந்தார்கள். அக் காலத்திய அதிகாரிகள் வெளிநாட்டுப் பருத்தி விதைத் தால் வருவாய் மிகுதியாகக் கிடைக்கும் என்று எண்ணிப் புது ஆராய்ச்சியில் புகுந்தார்கள். 1819ல் சேலத்தில் வியாபார அதிகாரியாக இருந்த ராபர்ட் ஹீத் என்றவர் போர்போன் பருத்தியை கோவையிலே

நடச் சொன்னுர். அதை அனுசரித்துப் பிஷர் கம்பெனியார் (Fisher & Co) ஈரோடு தாராபுரம் தாலுக்காக்களில் பெரிய கிடங்குகளைக் கட்டிப் போர்போன் பருத்தியை விதைத்துப் பருத்தியை எடுத்தார்கள். ஆனுல் அக்கம்பெனி மூடப்பட்டது. பருத்தி விளைவு நடந்து வந்தது. 1840ல் அமெரிக்கா இரகத்தை உண்டாக்க அதிகாரிகள் முயன்ருர்கள். அதற்காக 1840-ல் டாக்டர் வைட் (Wight) என்பவரை நியமித்தார்கள். அதற்காக மேலே கண்டபடி கோவையில் பெரிய கிடங்கைக் கட்டி லட்சக் கணக்கான பணங்களைச் செலவழித்தார். ஆனுல் அம்முயற்சி பலன் அளிக்கவில்லை. பருவம் மாறியிருந்தது ஒரு காரணம் என்பர். குடியானவர்களும் அவ்வித விவசாயத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. 1849ல் அந்த முயற்சி விடப்பட்டது. அவ்வாறு 1841 முதல் 1849 வரை பருத்திக் கிடங்காக இருந்த கட்டடத்தில்தான் தற்போதைய மராமத்திலாகா அதிகாரியின் ஆபீசு இருக்கிறது. பின்னுல் முன்பாகத்திலும் ஒரு பெரிய கட்டடம் தொடர்ச்சியாகக் கட்டப்பட்டது. இக் கட்டடத்திற்கும் கிழக்கேதான் கோவைக் கலாசாலையும் கட்டப்பட்டது. ஆகவே கோட்டை மைதானத்தில் சிறைச்சாலை, பருத்திக் கிடங்கு, கல்விச்சாலை இம்மூன்றும் ஏற்பட்டு வெளியிடம் நிரப்பப்பட்டது.

66. இலங்கர் கானு

இந்தச் சொல் ஹிந்துஸ்தானி மொழி. இதற்கு நொண்டிகள் விடுதி என்று பொருள். இப்பெயர்

பெற்ற ஒரு அறச்சாலை கோவையிலே இரங்கே கவுண்டன் தெருவில் வடகோடியில் இருக்கிறது. இதன் ஆரம்பம் வெகு விசித்திரமானது. இந்த நாட்டில் கொங்கு வேளாளர்களே பண்டைக் காலம் முதல் நிலச்சொந்தக்காரர்கள். இவர்களுக்குள் எந்தக் குடும்பத்திலாவது நொண்டியாக அல்லது முடமாக ஒரு குழந்தை பிறந்தால் அதை ஆதரிப்பதற்காக ஒரு பொது நிலையம் ஏற்படுத்தப்பட்டது. அந் நிலையத்தை நடத்துவதற்காக அக்காலத்து அரசர்கள் முடவாண்டி சத்தியமங்கலம் என்ற ஒரு கிராமத்தை மானியமாகக் கொடுத்திருந்தார்கள். அக்கிராமம் இப்போதும் ஈரோடு தாலூக்காவில் இருக்கிறது. அது ஈரோடு காங்கயப் பாதையில் 5 கல் தூரத்தில் இருக்கிறது. அந்த அறம் இந்து அரசர்கள் காலத்திலும் அதற்குப் பிந்தியும் நடைபெற்றுவந்தது. திப்புவும் அதனை உறுதிப்படுத்தினுன். இந்த கிராம வரும்படியிலிருந்து 32 முடவாண்டிகளும் 42 காலாடிகளும் ஆதரித்து வரப்பட்டார்கள். காலாடிகள் முடவாண்டிகளைப் பார்த்து வரவேண்டியது. அதற்காக அவ்வூர் நிலங்களை அவர்கள் வசத்தில் விட்டிருந்தார்கள். ஆங்கில ஆட்சி வந்ததும் அதனை இன்னது செய்வது என்று தெரியாமல் விழித்தார்கள். தருமமும் சரியாக நடைபெறவில்லை. நிலங்கள் பராதீனங்களாயிருந்தன. ஆகவே, 1850-ல் அந்த இனும் கிராமத்தைப் பறிமுதல் செய்து அயன் கிராமமாக்கி அதன் மொத்த வரும்படியிலிருந்து ஒரு பகுதியை கோவை நகரச்சபைக்குக்

கொடுத்து அவர்களை அந்த தருமத்தை நடத்தும்படி சொன்னார்கள். பறிமுதல் செய்த காலத்தில் அக் கிராமத்தின் வரும்படியில் செலவுபோக 1200 ரூபாய் தான் வரும்படி என்றுசொல்லி இதுநாள்வரையிலும் அத்தொகையையே கொடுத்துக் கொண்டு வருகிறார் கள். ஒன்றிரண்டு முறை அத் தொகையை உயர்த்தித் தற்கால வரும்படியைத் தரும்படி அரசாங்கத்தாரைக் கேட்டும் அவர்கள் ஒத்துக்கொள்ளவில்லை. கோவை நகரசபையார் நொண்டிகள் மாத்திரமேயன்றி அங்க ஈனமுள்ள எல்லா ஏழைகளையும் சேர்த்துக்கொண் டார்கள். முதலில் பழைய தாலூக்காக் கச்சேரிக் கருகிலிருந்த புகையிலை மண்டியை இதற்கு உப யோகித்தார்கள். அதற்குப் பின் இரங்கே கவுண்டன் தெருவில் ஒரு தொட்டிக்கட்டுக் கட்டடத்தை நான்கு நீளமான அறைகளுடனே கட்டினார்கள். ஒரு கிண றும் சமையலறையும் உண்டு. 30 ஆண்டுகளுக்கு முன் 32 பேர்கள் இருந்தார்கள். பிறகு அகவிலை ஏற ஏற ஆட்கள் தொகை குறையத் தொடங்கிற்று. 25 பேர் ஆகி இப்போது 6 பேர்தான் இருக்கிறார்கள். இவர் களுக்கு உணவு ஒரு கண்ட்ராக்டர் மூலமாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. 1926ல் கோவை ஜன ஊழி யச் சங்கத்தார் இதன் மேற்பார்வை எடுத்துக் கொண்டார்கள். அப்போது பல பொது சனங்கள் இவ் வேழைகளுக்கு விருந்துகளும் துணிகளும் கொடுத்துவந்தார்கள். பிறகு நகர சபையாரே அதி காரம் எடுத்துக்கொண்டார்கள். இது ஒரு சுகாதார அதிகாரி மேற்பார்வையில் இருக்கிறது. முடவாண்டி

சத்தியமங்கலத்தின் பரப்பு 2421 ஏகர். கிஸ்தி வசூல் 2518 ரூபாய் ஆகும். கோவை நகரசபையார் இப்போது ஒரு ஏழை விடுதி ஏற்படுத்த மேட்டுப் பாளையப் பாதையில் இடம் வாங்கிக் கட்டடம் கட்டி வருகிறார்கள்.

67. பனங்காடு

கோவை நகருக்குத் தெற்கும் மேற்கும் ஏரிகள் இருக்கிறாற்போல் முன்னாளில் வடக்கும் இரு குளங்கள் இருந்தன. இவைகளுக்கு வாய்க்கால் பாய்ச்சல் இல்லாமல் கழிவுத் தண்ணீரோ அல்லது மழை நீரோ நிரப்ப உதவிற்று. இவ்விதக் குளம் அல்லது குட்டைகள் கொங்கு நாட்டில் ஒவ்வொரு கிராமத்திலும் இருந்தன. அவைகளில் மழை நீர் நிரம்பும். அதனாலே கால் கழுவவும் கால்நடை குடிக்கவும் உபயோகம் ஆகும். அதைவிட ஊரில் இருக்கும் கிணறுகளுக்கு ஊற்றங்கால் ஏற்படும். சமீப காலத்தில் இவ்வித உபயோகமான குளங்களை மூடியோ தூர்த்தியோ விட்டுக் குடிகளுக்கு வீடு கட்டவோ விவசாயம் செய்யவோ தர்காஸ்து கொடுத்துவிடுகிறார்கள். இதனால் நாட்டுக்கு மிகவும் கெடுதல் என்று அதிகாரிகள் அறிவதில்லை. இதே மாறுதல் கோவைக் குளங்களுக்கும் ஏற்பட்டன. கோவைக்கு வடக்கே மேற்குப் பகுதியில் முத்தண்ண குளமும் கீழ்ப்பகுதியில் பனங்காட்டுக் குளமும் இருந்தன. இவைகளிலே பனங்காட்டுக் குளத்தின் கரையை எடுத்து விட்டு குளத்

தைத் தூர்த்திப் பனைமரங்களை உற்பத்தி செய்தனர். அப்பனை மரங்கள் நன்றாக வளர்ந்து ஒரு பெரிய வனாந் திரம்போல் விளங்கியது. நூல் ஆலைகளுக்கு வடக்கே அடர்ந்த வனமாக இருந்தது. பல புற் பூண்டுகள் முளைத்துக் குள்ளநரி, உடும்பு, கீரி முதலிய சிறு பிராணிகள் வசிக்கும் இடமாக இருந்தது. பகல் வேளை தவிர மற்ற வேளைகளில் அதனருகில் மக்கள் நடமாடவும் அஞ்சுவார்கள். அதன் மத்தியில் இருப் புப் பாதை விழுந்தது. காலை மாலைகளில் அப் பாதை வழியாகப் பொழுது போக்குக்காக மக்கள் உலாவுதல் உண்டு. நகர சபையார் இந்தப் பனங்காட்டைக் குத்த கைக்கு விட்டு வருமானம் பெற்று வந்தார்கள். கள்ளுக் கட்டவும், நுங்கு போடவும், இலை இறக்கவும் உபயோகமாகி இருந்தது. ஊர்ப் பெருக்கம் அடையவே கெட்டுக் கிடந்த பனங்காட்டு வழியைப் புதுப்பித்துக் காட்டிடத்தை வீடுகளுக்காகப் பிரித்து நகர சபையார் விற்றுவிட்டனர். இப்போது மரங் கள் எல்லாம் வெட்டப்பட்டு ஊர்ப்புறம் ஆகிவிட் டது. இயற்கை போய் செயற்கை வந்தது. தொழி லாலைகள், சினிமாக் கொட்டாய், வைத்திய சாலை, மாட்டுத் தொழுவம், தேயிலை காப்பி ஆலைகள் இவைகளே இங்குக் காணலாம். அண்மையில் ஒரு பகுதி தேவாங்கர் உயர்தரப் பள்ளிக்கு அளிக்கப் பட்டது. இது ஒரு நற்செயல் ஆகும். ஆனால் முத் தண்ண குளமோ உபவனமாகிவிட்டது. இவை களைப்போல பாப்பநாயக்கன் பாளையக் குட்டை நந்

தவனமாகவும் இலந்தைக் குட்டை பங்களா இட மாகவும் ஆகிவிட்டன.

68. அரசியல் விடுதிகள்

மைசூர் மன்னர்கள் ஆட்சியில் இராஜ வீதியில் இருந்த மஹாலில்தான் அரசியல் வேலைகள் நடத்தப் பட்டன. ஹைதர் திப்பு காலங்களிலும் கோவை அதிகாரம் செலுத்தின மாதண்ணனும் அதே கட்ட டத்தில் தான் தன் அதிகாரச் செயல்களை நடத்தி வந்தான். பிறகு ஆங்கிலர் ஆட்சிக்கு வந்த போதும் தொடக்கத்தில் அங்கேதான் அரசாங்கக் காரியங்கள் நடந்தன. 1804ல் கோவை தலை நகரம் ஆன பிறகு அந்த இடம் போதவில்லை. ஊர்ப்பெருக்கம் மிக ஆகத் தொடங்கியது. அரசியல் வேலை ஆட்களும் அதிகம் ஆயினர். ஆகவே அதற்குத் தகுந்த கட்டடங்கள் நிறுவவேண்டி வந்தன. கோவைக்கும் உப்பிலி பாளை யத்திற்கும் இடையில் இருந்த தோட்டத்தை அர சாங்கத்தார் விலைக்கு வாங்கிக் கட்டடங்கள் கட்டி ஞர்கள். அதிலே கலெக்டர் கச்சேரியும் கஜானுவும் வைத்தார்கள். மகாலில் தாசில்தார் கச்சேரியும் அதற்கு எதிரே ஒரு கட்டடத்தில் மாஜிஸ்டேட் கச்சேரியும்ஈசுவரன் கோயிலுக்குப் பின்னுலே கிராம அதிகாரிச் சாவடியும் வைக்கப்பட்டன. 1843-ல் தான் நீதிபதிகளின் கச்சேரிகள் வந்தன. அப்போது அவிநா சிப் பாதையில் உப்பிலி பாளையத்திற்கு மேற்கே ஒரு தோட்டத்தை வாங்கி அதில் நீதி மன்றங்களை வைத்

தார்கள். முதலில் சதர் அதாலத்துக் கச்சேரியும் பின்னர் ஜில்லா நீதிபதி முன்சிப்தார் இவர்களின் கச்சேரிகளும் வைக்கப்பட்டன. இவ்வாறு எல்லா கச்சேரிகளும் சுமார் 50 ஆண்டுகளில் கோவையில் ஏற்பட்டன. பிறகு ஜில்லா நீதிபதிக்குத் தகுந்த கட்டடம் இல்லாமல் இப்போதுள்ள கச்சேரி கட்டப் பட்டது. அதற்கு முந்தி அதற்கு நாராயணராவ் கிரிக் கெட் விளையாட்டிடம் என்றுபெயர். அதற்கு எதிரே தாலூக்காக்கச்சேரியின்னுல்கட்டப்பட்டது. போலீசு ஆபீசும் ஏற்பட்டது. போலீசு விடுதிகளும் பல இடங்களில் வெவ்வேறு சமயங்களில் கட்டப்பட்டன. கலெக்டர் ஆபீசில் பலவித அரசியல் கட்டடங்களும் ஒன்றன் பின் ஒன்ருகக் கட்டப்பட்டன. ஊரிலிருந்த மகால் பெண் பாடசாலை விடுதிக்குக் கொடுக்கப்பட் டது. ஜில்லா கலெக்டர், ஜட்ஜ் முதலானவர்களுக்கு முதலில் வீடுகள் கட்டப்படவில்லை. வாடகை வீடு களில் இருந்தனர். பின்னுல் அவர்களுக்கென்று தனி பங்களாக்கள் கட்டப்பட்டன. 1920-30ல் ஊருக்குக் கிழக்கே இருந்த பரந்த செம்மண் நிலங்களை வாங்கிப் பல பங்களாக்களுக்கு இட வசதி ஏற்படுத்திஞர்கள். இம்முறையில் கோவையில் அரசியல் விடுதிகள் பெருக்கம் அடைந்தன.

69. நொய்யல் பாலம்

நொய்யலாறு சிறியதாயிருப்பினும் 16 அணைகள் உண்டென்று சொன்னேம். இவ்வாற்றில் மழைக் காலங்களில் திடீரென்று வெள்ளம் வருவதால் பாலங்

கள் அவசியமாயின. கோவையிலிருந்து போத்தனூர் பொள்ளாச்சி போகும் வழியில் பெரிய ஏரிக்கரை கடந்ததே ஒரு பாலம் இருக்கிறது. இது சுமார் 25 அகலமும் 150 நீளமும் கொண்டது. மூன்று கண்கள் உண்டு. இரும்பு விட்டங்கள் போட்டுக் கட்டப்பட்டிருக்கிறது. சென்ற நூற்றாண்டில் கட்டப்பட்டது. மேலும் கோவையிலிருந்து பேரூர் போகும் வழியில் வெகுகாலம் வரையில் அணையின் மேலேயே வண்டிகள் சென்று கொண்டிருந்தன. பிறகு அதற்குப் பலகைக் கற்களைப் பரவினார்கள். அப்போதும் வெள்ளம் வந்தால் கடக்கமுடியாமல் போய் அடிக்கடி உயிர்ச்சேதங்கள் ஏற்பட்டன. அதனை நிறுத்தவேண்டி அணைக்குக் கிழக்கே சில கஜ தூரத்தில் ஒரு புதிய பாலம் ஏற்பட்டிருக்கிறது. இது அண்மையில் கட்டப்பட்டது. மேலும் இருட்டுப் பள்ளத்தருகில் வெள்ளிமலைக்குச் செல்லும் வழியில் மற்றொரு பாலம் பின்னால் கட்டப்பட்டது. ஒரு பழைய பாலம் ஒண்டிபுதூருக்கு அருகில் திருச்சிப் பாதையில் இருக்கிறது. இது செங்கல் வளைவுகளால் கட்டப்பட்டது. இவைகளைத் தவிர திருப்பூரில் ஒரு வளைவுப் பாலமும் பழைய கோட்டையில் ஒரு இரும்புப் பாலமும் உண்டு. வேறு சில இடங்களில் அணைபோலக் கல் பரவின குறுக்குப் பாதைகள் உண்டு.

கோவை நொய்யற்பாலம் மிக அவசியமானது. போத்தனூர் பொள்ளாச்சி பாலக்காடு முதலிய இடங்களுக்கு இந்தப் பாலத்தின் மீதுதான் செல்ல வேண்டும். இதற்கு அருகிலே தோல் பதனிடும்

தொழிற்சாலைகள் பல உண்டு. மேலும் இப் பாலத்தை அடுத்தே கோவையின் முக்கிய இடுகாடும் சுடுகாடும் உண்டு. இப்பாலத்திற்கு அருகிலே அரச மர மேடைகள் இருக்கின்றன. அவைகளின் அருகிலே தான் இறந்தோர் கடனைக் கழிக்கும் சடங்குகள் நடைபெறும். அங்கே தென்னந் தோப்புகளும் வாழைத் தொகுதிகளும் வேறு பல குளிர்ந்த மரப் பொழில்களும் இருக்கின்றன. இவைகள் கண்ணுக்கு இனிமையும் உடலுக்குத் தண்மையும் தருவன. நொய் யல் அணை தோப்புகளுக்கு அருகில் உள்ளது. இதற்கு அண்மையில் ஒரு தோப்பில் சங்கிலி கருப்பன் கோயில் உண்டு. இங்கே ஊர்மக்கள் பொங்கலிட்டு வழிபடப் போவது வழக்கம். சிறு வயதில் இந்தக் கோயிலுக்குப் போனபொழுது அங்கிருந்த அஞ்சத் தக்க உருவாரத்தைக் கண்டு பயந்து போனதுண்டு. இக் காலத்திலும் சிறுவர்கள் இதனைக்கண்டு அஞ்சு வார்கள். தை நோன்பிலும் ஆடிப் பண்டிகையிலும் ஊர்க் கன்னிப் பெண்கள் கூட்டம் கூட்டமாக நொய் யலாற்றுப் பாலத்துக் கருகில் ஆற்றில் கன்னிமார் வைத்துப் பூசை செய்வதுண்டு. அப்போது அவர்கள் சிறு கூடைகளில் வளையல், குங்குமம், மஞ்சள், சிறு பாவாடை இவைகளை ஏந்திக்கொண்டு பூசை செய்து விட்டு ஊர் திரும்பும்போது 'ஓலையக்காள்' பாட்டுப் பாடிக்கொண்டும் 'நாட்டுக் கும்மி' அடித்துக்கொண் டும் ஊர் திரும்புவார்கள். இந்த ஊர்கோலம் மிக அழகாக இருக்கும்.

70. இருப்புப்பாதை நிலையம்

சென்னை இருப்புப்பாதை 1856-ல் தொடங்கி முதலில் ஆர்க்காடு (63 மைல்) வரைக்கும் ஒரு பகுதி ஆக்கப்பட்டது. பிறகு பற்பல பகுதிகளாக ஆக்கப்பட்டு இறுதிப் பகுதியில் கோழிக்கோட்டுப் பெய்ப்பூர் வரையில் நீட்டப்பட்டது. அப்போது கோவைக்கு 4 மைலிலுள்ள போத்தனூரே கெடித்தலமாக இருந்தது. பிறகு மேட்டுப்பாளையம் வரையில் பாதை போட்டதில் கோவை ஒரு இருப்புப் பாதை நிலையமாக ஏற்பட்டது. இப்பாதை கோவை நகருக்கும் உப்பிலி பாளையம் அனுப்பபாளையம் என்ற பகுதிகளுக்கும் இடையில் செல்லுகிறது. இங்கே இது தென் கிழக்கிலிருந்து வட மேற்காக ஓடுகிறது. கோவைக்கு வருமுன் இப்பாதை சின்ன ஏரிக்கும் வாலாங் குளத்திற்கும் இடையில் ஒரு செயற்கைக் கரைமேல் ஓடுகிறது. இருப்புப்பாதை நிலையம் முதலில் ஒரு சிறிய கட்டடமாக இருந்தது. திருச்சிப் பாதைக்கும் அவிநாசிப் பாதைக்கும் இடையில் குறுகிய இடத்தில் இந்நிலையம் கட்டப்பட்டிருந்தது. ஊர் பெரிதாகப் பெரிதாக இந்த நிலையம் ஒரு சிறிதும் போதாமல் இருந்தது. மேலும் திருச்சி அவிநாசிப் பாதைகளில் வண்டிகள் போகும்போது பாதைகள் மூடுவதினால் போக்கு வரத்திற்கு மிகுந்த இடஞ்சல் ஏற்பட்டது. இதையெல்லாம் கருதி கோவை நிலையத்தைப் பெருக்க முயன்றார்கள். முதலில் கோவையை ஒரு சந்தி ஆக்கி நிலையத்தை வடக்கே பனங்காட்டிடத்தில் கட்டுவ

தென நினைத்தார்கள். வெகு யோசனை செய்து அதனை விட்டு விட்டு பழைய இடத்திலேயே பெரிதாகக் கட்டத் தொடங்கினார்கள். திருச்சிப் பாதையில் பாலம் கட்டி அதன் பேரில் வண்டி ஓடும்படி செய்தும் நிலையக் கட்டிடத்தை 10 அடி உயர்த்திக் கட்டியும் அதற்குச் செல்லுவதற்கு கீழ் வழியும் படிக்கட்டு களும் கட்டி அழகுபெற நிறுமாணித்தார்கள். பிறகு சிங்காநெல்லூரிலிருந்து நேராக கோவைக்கு வண்டி வருவதற்கு ஒரு கிளைப் பாதையும் போத்தனூரி லிருந்து சிறு ரயில் வருவதற்கு ஒரு ஒட்டுப்பாதையும் போட்டார்கள். இப்போது சென்னை, நீலகிரி, கோழிக் கோடு பழனி முதலிய எல்லாப் பாகங்களிலிருந்தும் வண்டிகள் கோவைக்கு வந்து செல்லுகின்றன. இருந் தாலும் ஊரின் பெருக்கத்திற்குத் தகுந்த இட வசதி புதுநிலையத்திலும் இல்லை. புதுநிலயத்திற்கு 20இலட் சம் ரூபாய் செலவாயிற்றும். இந்தப் பாதைப் பெருக் கத்தினால் ஊரில் வர்த்தகமும் நிலப் பிரியமும் அதிக மாகிவிட்டன. சரக்கு இறக்குமதி ஏற்றுமதிப் பகுதி கள் தெற்குப் பகுதியிலிருந்து வடக்கே அவிநாசிப் பாதையில் திறக்கப்பட்டன. அவிநாசிப் பாதை யிலும் மேல் பாலம் அமைந்திருந்தால் இன்னும் சௌகரியம் அதிகமாக இருக்கும். இதற்கு இடை யூருகப் பஞ்சாலைக் கிளைகள் மூன்று உள்ளன. இந்த நிலையத்திற்கு வடக்கே ஒரு மைல் அளவில் வடகோவை என்ற ஒரு புதுநிலையம் ஏற்பட்டுள்ளது. இந் நிலையங்களில் 10 ஆண்டின் முன் 6 லட்சம் பிரயாணிகளும் 36 லட்சம் மணங்கும் சென்றன.

71. வைத்தியசாலைகள்

முதல் வைத்திய சாலை 1850 ஆண்டில் கோவையில் துரைத்தனத்தாரரான கும்பினியாரால் ஏற்படுத்தப்பட்டது. அதற்கு முந்தி இங்கு வைத்திய சாலைகளே இல்லை. ஜில்லாவிற்கு ஜில்லா வைத்தியர் என்ற ஒரு அதிகாரி மட்டும் இருந்தார். பெரும்பாலும் தேர்ச்சியடையாத பரம்பரை நாட்டு வைத்தியர்களே சிகித்சை செய்துவந்தார்கள். 1850 ல் ஆஸ்பத்திரி என்ற ஆங்கில வைத்தியசாலை கோணியம்மன் கோயிலுக்கு அருகில் இப்போதுள்ள கெடியாரக் கோபுரத்தின் மேற்கே ஒரு முக்கோணமான இடத்தில் கட்டப்பட்டது. அது குறுகிய இடமாகவும் மேற்கே வீடுகள் நெருங்கி இருந்தபடியாலும் விருத்தி செய்ய இடம் இல்லாத நிலையில் இருந்தபடியாலும் அந்த இடத்தைவிட்டுத் திருச்சிப் பாதையில் வடபுறத்தில்வாலாங்குளத்திற்கருகில் புது கட்டடங்கள் கட்டப்பட்டன. 1908ல் ஆஸ்பத்திரி புதுஇடத்திற்குச் சென்றது. முதலில் நகரபரிபாலன சபையின் ஆட்சியில் இருந்தது. 1918ல் அரசாங்கத்தார் எடுத்துக் கொண்டார்கள். முதலில் 58 ஆண்களுக்கும் 35 பெண்களுக்கும் இடம் இருந்தது. இப்போது அக்கம் பக்கத்து இடங்களைச் சேர்த்து, சாலை பெரிதாகக் கட்டப்பட்டிருக்கிறது. ஆஸ்பத்திரியை ஒட்டினாற் போல வைத்திய பாடசாலை ஒன்று முதலில் ஏற்படுத்தப்பெற்றது. அதில் மாணவர்களை L. M. P. என்ற பரீட்சைக்கு தயார்ப்படுத்தினார்கள். ஆனால் அந்தப்

பாடசாலை பின்னால் எடுத்துவிடப்பட்டது. அதில் இப்போது கோவைக் கல்லூரி இருக்கின்றது. மேலும் நகரசபையார் ஊர் நடுவில் ஒரு வைத்திய சாலையும் இராமநாத புரத்தில் ஒரு வேளைய வைத்தியசாலையையும் வைத்து நடத்துகிறார்கள். இவை தவிர சித்தவைத்தியசாலை ஒன்று கடைத்தெருவில் இருக்கின்றது. சமீபத்தில் பிரசவ சாலை ஒன்று பனங்காட்டுத் தெருவில் அசோகா பாக்குத் தூள் தொழிற்சாலையாரால் கட்டப்பட்டுள்ளது. அதற்கருகில் வைத்திய சங்கம் ஏற்பட்டிருக்கிறது. கோவையில் ஆங்கில வைத்திய நிபுணர்கள் 75 பேர் இருக்கிறார்கள். இவர்களில் சிலர் சொந்த வைத்திய சாலைகளும் வைத்திருக்கிறார்கள். இராமநாதபுரத்துக் கீழ்க் கோடியில் டாக்டர் C. S. இராமசாமி ஐயர் ஒரு பெரிய சொந்தச் சாலை வைத்திருக்கிறார். மேலும் கிறிஸ்தவப் பாதிரிமாரும் சில சாலைகளை வைத்திருக்கிறார்கள். உரோமன் மிஷனும் லூதரன் மிஷனும் முக்கியமானவை. லூதரன் மிஷனில் திரு. ஆரோக்கியசாமி பிள்ளையவர்கள் உதார குணத்தினால் அவரது வீட்டிலேயே ஒரு கண் வைத்தியசாலை வைத்திருக்கிறார்கள். இவைகளால் வைத்திய சிகித்சை போதுமானதாக இருக்கிறது. பிராணிகளுக்காக இரு வைத்தியசாலைகள் விவசாயக் கல்லூரியிலும் கோவை இஸ்மேல் ராவுத்தர் தெருவிலும் இருக்கின்றன. குழந்தை பாதுகாப்பு நிலையங்கள் 4 இருக்கின்றன. அவைகளில் 21 ஆயிரம் ரூ. செலவிடப்பட்டது.

72. நகரசபை

ஆங்கிலர் ஆட்சி வந்த பிறகு அனேக ஆண்டுகள் நகரத்திற்குத் தனி ஆட்சி இல்லாமல் ஜில்லா அதிகாரிகளே மேற்பார்வை பார்த்து வந்தார்கள். சிற்சில கலெக்டர்கள் சிறிது ஊக்கம் எடுத்துக்கொண்டதினால் அவர்கள் பெயர்கள் தெருக்கள் பெயர்களிலே நின்றிருக்கின்றன. உதாரணப் பேர்கள் சலிவன் (1815), தாமஸ் (1849), வெட்டர்பர்ன் (1868) முதலியன. ஆனால் சுகாதாரமும் முன்னேற்றமும் கருதி 1865ல் ஊர்அபிவிருத்தி சட்டம் ஒன்று ஏற்பட்டது. அதன்படி கோவைக்கு ஒரு நகரசபை ஏற்படுத்தப்பட்டது. அதில் கலெக்டர் மேக்ரிகோர் தலைவராகவும் இன்ஜினியர் மெம்பராகவும் பதினொரு பொது சனங்கள் அங்கத்தினராகவும் நியமனம் பெற்றார்கள். இவர்கள் அவ்வப்போது கூட்டம் கூட்டி நகரின் க்ஷேமத்தைக் கருதி வந்தார்கள். பிறகு 1884ல் நகரசபைக் சட்டம் புதுப்பிக்கப்பட்டது. அதின்படி கோவைக்கு 20 அங்கத்தினர்களும் அவர்களில் 15 பேர் ஜனங்களால் தெரிந்தெடுக்கப்பட்டும் 5 பேர் நியமிக்கப்பட்டும் அங்கத்தினர் ஆனார்கள். அவர்கள் ஒரு தலைவரைத் தாங்களே தெரிந்தெடுக்கலாம். அப்போது கோவை 7 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. 1920ல் மறுபடியும் சட்டம் மாற்றப்பட்டது. அதன்படி அங்கத்தினர் 24 பேர் ஆனார்கள். 1930ல் மறுபடியும் திருத்தப்பட்டது. அத்ன்படி அமைத்த 32 அங்கத்தினர்களும் தெரிந்தெடுக்கப்பட்டார்கள்.

73. கல்விச்சாலைகள்

பண்டை நாள்களில் அரசாங்கத்தார் கல்விச் சாலைகளை நடத்தினது இல்லை. தமிழ் ஆசிரியர்கள் தங்கள் வீட்டுத் திண்ணைகளில் சில மாணவர்களை வைத்துக்கொண்டு பாடம் கற்பித்து வந்தார்கள். தெலுங்கு வகுப்பார்கள் குடியேறவே சில தெலுங்குத் திண்ணைப் பள்ளிக்கூடங்களும் வந்தன. ஆங்கில ஆட்சி வந்த பிறகும் பல ஆண்டுகள் கல்வியைப்பற்றி எவரும் கருதவே இல்லை. கிறிஸ்தவப் பாதிரியார்கள் நமது நாட்டிற்கு வந்து சில பாடசாலைகளை வைத்தார் கள். அவர்களுடைய முக்கிய நோக்கம் சமயப் பிர சாரமாய் இருந்த போதிலும் பொதுக் கல்வியை மிகுதியாக ஊட்டியும் வந்தார்கள். இப்படியிருக்க அரசியலில் ஈடுபடுவதற்கு ஆங்கிலக் கல்வி வேண்டி யிருந்தது. அதற்காகப் பாடசாலைகளை வைக்கும் எண்ணம் மக்களுக்குத் தோன்றியது. அந்த முறை யிலே முதல் முதலில் தோன்றியது வீராசாமி முதலி யார் பாடசாலை. அது 18-ல் தாபிக்கப்பட்டது. அப்பாடசாலை ஒரு ஆரம்பப் பாடசாலையாக இன்றும் இருக்கிறது. அப்பாடசாலை நாளுக்கு நாள் பெருகி வந்து 1852ல் நடுத்தர பாடசாலையாகிப் பிறகு 1876ல் கல்லூரி ஆயிற்று. தாமஸ் (1849—62) என்ற கலெக் டர் இதில் மிகுந்த அக்கறை எடுத்துக் கொண்டதினால் அவர் பெயரால் ஒரு பெரிய கட்டடம் கோணியம் மன் கோயிலுக்கு மேற்கே கட்டப்பட்டது. இப் போதும் அதில் உள்ள மண்டபம் தாமஸ் ஞாபகச் சின்னம் என்னப்படும். இது 30 அகலமும் 60

நீளமும் கொண்ட பெரிய மேடைக்கூடம். இக்கல்லூரி இரண்டாம்தரக் கல்லூரியாக இருந்து பொது ஜனக் குழுவால் 1919 வரை நடத்தப்பெற்று, பிறகு அரசியலாரால் எடுத்துக் கொள்ளப்பட்டது. 1946ல் அது முதல்தரக் கல்லூரியாக உயர்த்தப்பட்டது. இக்கல்லூரியில் பல பெயர்பெற்ற நிபுணர்கள் படித்து மேன்மை உற்றிருக்கிறார்கள். இதில் பழைய மாணவர் சங்கத்தாரால் பல உதவிகள் மாணவர்களுக்குச் செய்யப்படுகின்றன. கல்லூரியின் மேல் வகுப்புகள் பழைய வைத்தியப் பாடசாலைக் கட்டடத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன. இந்நகரில் நடுத்தரப் பாடசாலைகள் 12 உள்ளன. ரோமன் மிஷனரிகளால் நடத்தி வரும் பாடசாலை (St. Micheals) முந்தி கல்லூரியாக இருந்து பிறகு 1907ல் நடுத்தரப் பாடசாலையாகக் குறைக்கப்பட்டது. நகர சபையார் இரண்டு ஆண் பிள்ளைகள் பாடசாலைகளையும் ஒரு பெண் பாடசாலையையும் நடத்துகிறார்கள். யூனியன் ஹைஸ்கூல் என்ற ஒரு பெரிய பாடசாலை முந்தி இலண்டன் மிஷனரி பாடசாலையாக இருந்தது. இப்போது கமிட்டி பார்வையில் இருக்கிறது. வெள்ளையர்களுக்கு ஒரு பாடசாலை ஸ்டேன்சு பெயரினால் நடைபெறுகிறது. நடுத்தரப் பெண் பாடசாலைகள் அரசியலார், முனிசிபல், உரோமன் காதலிக் இந்தியர், வெள்ளையர் என நான்கு உண்டு. இவைகளைத் தவிர அடுத்துள்ள பூளை மேட்டில் சர்வ ஜனப் பாடசாலை ஒன்றுண்டு. ஆக 12 பாடசாலைகளில் 6000 பிள்ளைகள் வாசிக்கிறார்கள். ஆரம்பப்

பாடசாலைகள் 35 இருக்கின்றன. அவைகளில் 11971 பிள்ளைகள் வாசிக்கிறார்கள். இங்கே இலவசக் கட்டாயப் படிப்பு உண்டு. ஆனால் போதியபடி இன்னம் அமுலுக்கு வரவில்லை. இந்திப் பாடசாலைகள் தற்போது தொடங்கப்பட்டிருக்கின்றன. முசுலிம்களுக்குத் தனிப் பாடசாலைகள் உண்டு. போதனா முறைப் பாடசாலை ஒன்றும் கைத்தொழில் பாடசாலைகள் இரண்டும் உண்டு. அவைகளில் ஒன்று கிறிஸ்தவர்களால் 1900ல் தொடங்கப்பட்டுக் கண் ஆஸ்பத்திரிக்கு அருகில் இருக்கிறது. மற்றொன்று பூளைமேட்டில் இருக்கிறது.

74. ஆலயங்கள்

கோவையில் சிறந்த ஆலயங்கள் இல்லை. பெரிய ஆலயத்திற்குப் பேரூர்தான் செல்ல வேண்டும். உள்ளூரில் உள்ளவை சிறிய அளவினவாக இருக்கின்றன. கல்வெட்டோ சிற்பமோ ஓவியமோ இல்லை. ஊராரம்பத்தில் இருந்த இரு சிவாலயங்களே இப்போதும் உண்டு. அவை கோட்டையும் பேட்டையுமேயாம். இவ்விரண்டிலும் இரண்டு பெருமாள் கோயில்கள் உண்டு. கோபாலசுவாமி, லட்சுமிநாராயணசுவாமி, நரசிம்மசுவாமி என்ற கோயில்களும் இருக்கின்றன. இவைகளைத் தவிர மூலைமுடுக்குகளில் எல்லாம் பிள்ளையார் கோயில்கள் உண்டு. முத்து விநாயகர் கோயில் வெள்ளை விநாயகர் கோயில் அத்திவாடப் பிள்ளையார் கோயில் முக்கியமானவை.

இவைகள் எல்லாவற்றிலும் அம்மன் கோயில்களே முக்கியமானவை. ஒவ்வொரு வகுப்பாரும் ஒவ்வொரு அம்மனைத் தம் தம் குலதேவதைகளாக வைத்துக் கொண்டு வழிபடுகிறார்கள். இவைகளிலே ஒன்பது கோயில்கள் சிறப்புற்றவை. அவ்வம்மன்களைச் சகோதரிகள் என்றும் மக்கள் கதை சொல்லுவதுண்டு.

1. கோணியம்மன் - ஊர்த்தேவதை, எல்லாருக்கும் பொது: அதைப்பற்றி முன்னமே கூறிவிட்டோம். சில புலவர்கள் பாடல்களும் பாடியிருக்கிறார்கள்.

2. மாரியம்மன்-உப்பிலி பாளையத்தில் உள்ளது; மிகப் பிரசித்தி பெற்றது. டவுன் மார்க்கட்டில் உள்ளதை தண்டு மாரியப்பன் அல்லது ப்ளேக் மாரியம்மன் என்று சொல்லுவதுண்டு; குண்டம் மிதிப்பதுண்டு.

3. மாகாளியம்மன் - மேட்டுப்பாளையம் பாதையில் வடக்கே உள்ளது. முன்னம் கங்க குலத்தாருக்குச் சேர்ந்து இப்போது கெங்கடிகார ஒக்கிலிகருக்குச் சேர்ந்தது.

4. காமாட்சியம்மன் - பெரிய கடைத்தெருவில் தட்டாருக்குச் சேர்ந்தது.

5. அங்காளியம்மன் - வைசியர் தெருவில் உள்ளது. பல குடும்பங்களுக்கு வீட்டுத் தெய்வம்.

6. துரௌபதியம்மன் - துறையர் தெருவில் உள்ளது ; சிவராத்திரியில் குண்டம் மிதிப்பதுண்டு. வன்னியர்களுக்குச் சொந்தம்.

7. பத்திரகாளியம்மன் - துறையர் தெருவில் உள்ளது. அக்கம் பக்கத்துக் குடிகள் வழிபடுவார்கள்.

8. கன்னிகா பரமேசுவரியம்மன் - வைசியர் தெருவில் உள்ளது; வைசியரின் குலதேவதை; நவராத்திரி விசேஷம். பாடசாலையும் சங்கமும் கல்யாண மண்டபச் சத்திரமும் உண்டு.

9. சவுடம்மன் - தேவாங்கர்களுக்குச் சொந்தம். இராஜவீதிக் கோயில் கல்கட்டடம். பெரிய கோபுரம் கொண்டது. இதுதான் கோவையில் மிகப் பெரிய கோபுரம். புதுச்சவுடம்மன் - இரங்கே கவுண்டன் வீதியில் தேவாங்கர் வீடுகளுக்கு இடையில் உள்ளது. நவராத்திரி, திருவாதிரை முதலிய விழாக்கள் விசேஷம்.

இவைகளைத் தவிர, மேகமுனியப்பன் கோயில் தடாகம் செல்லும் வழியிலும், மாதேசையப்பன் பின்னும் சிறிது தூரத்திலும், உக்கடம் கிராம தெய்வங்கள் போத்தனூர் வழியிலும் உள்ளன. இவைகளைத் தவிர பல சில்லறைக் கோயில்களும் ஆங்காங்கே உண்டு.

75. பள்ளிவாசல்கள்

கோவையில் முசுலிம் குடிகள் 100 க்கு 7 வீதம் இருக்கிறார்கள். இவர்களில் உருது பேசும் மக்கள் மீன்கடைத் தெருவிலும் அதனைச் சுற்றிலுமுள்ள சந்துகளிலும் தமிழ் மலையாளம் பேசுகிறவர்கள்

கோட்டை, ஹபீஸ்பேட்டைகளிலும் அறைகுறை யாய் உருது பேசும் பட்டுநூல் துருக்கர்கள் முத்தண்ண குளச்சந்துகளிலும் வசிக்கிறார்கள். ஆகவே பள்ளிவாசல்களும் பல உண்டு. பெரிய பள்ளிவாசல் பெரிய கடைத்தெருவும் ஒப்பணக்காரத் தெருவும் கூடும் இடத்தில் இருக்கிறது. இது செல் வாக்குள்ள நிலையம்; மிகுந்த வருமானம் உண்டு. 50 ஆண்டின்முன் புதுப்பித்து இரண்டு அழகிய கோபுரங் களுடன் கட்டியிருக்கிறார்கள். இதைநடத்துகிறதற்கு ஒரு சபை உண்டு. பரிபாலனம் கடை வீதியில் வியாபாரம் செய்யும் தமிழ் பேசும் முசுலிம்களிடம் இருக்கிறது. இரண்டாவது பெரிய பள்ளிவாசல் கோட்டையில் உள்ளது. இதையும் ராவுத்தர், மரக்காயர், மலையாள முஸ்லிம்கள் ஆதரிக்கிறார்கள். மூன்றாவது நாகன் கிணற்றுக்கருகில் உள்ளது. இதனை உருது பேசுகிற மக்கள் ஆளுகிறார்கள். இம் மூன்று பள்ளிவாசல்களுக்கும் அடுத்து பாடசாலைகள் உண்டு. உருது அரபு கற்பிக்கப்படுகின்றன. இராச வீதிக் கீழ் கோடியில் ஒரு சிறு பள்ளிவாசல் இருக் கிறது. போலிசு விடுதிகளுக் கருகில் அவர்களுக் கென்று ஒரு சிறு பள்ளிவாசல் உண்டு. திப்புவின் பள்ளியைப்பற்றிமுந்தியே கூறிவிட்டோம். இப்பள்ளி வாசல்களைத் தவிர வேறு சில சமய நிலையங்களும் உண்டு அவைகளை மக்கான்கள் என்று கூறுவார்கள். மொஹரம் பண்டிகையின் போது தாஜியா என்ற சப்பரங்களை அங்கு வைத்து 10 நாள் ஊர்வலம் செய்து கொண்டு ஆற்றுக்குச் செல்வது வழக்கமாக இருந்தது. இவ்வித ஊர்வலங்கள் பெரிய திருவிழாக்

கள் போலத் திரண்ட ஜனங்கள் சேருவார்கள். ஆண் பெண் வேஷம், புலிவேஷம் முதலிய வேஷங்கள் போட்டுக் கொண்டு யாசகம் எடுப்பதும் உண்டு. இவ்வித மக்கான்கள் ஹாபீஸ் பேட்டையில் பாரா மக்கான், கோமுட்டி வீதி மூலையில் ஆதம்சா மக்கான், சின்னக்கடைத் தெருவில் பெரிய மக்கான், இரங்கே கவுண்டன் வீதியில் மேட்டங் காட்டு மக்கான். சுக்கிரவாரப் பேட்டையில் ரஹ்மான் மக்கான், மீன் கடை வீதியில் சப்பர மக்கான் முதலியவை. இவைகளிலிருந்து அனேக தாஜியாக்கள் ஒன்றன் பின் ஒன்று சென்றால் வெகு கம்பீரமாக ஊர்வலம் இருக்கும். ஆனால் கி. பி. 1௮௫9ல் நடந்த ஒரு கலகத்தை முன்னிட்டுப் பல விசாரணைகள் நடந்தன. அது முதல் கொண்டு தாஜியா ஊர்வலங்கள் நின்று விட்டன. இவ்விழாக்களில் இந்துக்களும் கலந்து கொள்ளுவார்கள். இனி க்டை வீதி மத்தியில் ஜமேஷா சமாதி என்ற ஒரு சிறு கட்டடம் இருக்கின்றது. 19-வதுநூ. முன் இருந்த ஒரு மகான் இங்கு சமாதி ஆனதாகவும், அது முதல் அது ஒரு புனித இடமாகக் கொள்ளப்பட்டும் வருகிறது. முசுலிம் கல்லறைகள் இரண்டுண்டு. ஒன்று மேட்டுப்பாளையம் பாதையில் மற்றொன்று இருப்புப் பாதை நிலையத்திற்கருகில் உள்ளன. இரம்ஜான் பண்டிகை கூட்டம் முந்திய கல்லறைக்குள் நடக்கின்றது.

76. கிறிஸ்தவாலயங்கள்

ரோமன் வகுப்பு : நான்கு நூற்றுண்டுகளுக்கு முந்தியே மலையாள நாட்டிலிருந்து செயிண்ட் சேவியர்

(St. Xavier) என்ற பெரியார் கோவைக் கருகில் சவேரியர் பாளையத்தில் மதப் பிரசாரம் செய்தனராம். அது முதல் அவ்வூர்க் குடிகள் சிறப்பாகக் கன்னடிய தேவாங்கர்கள் கிறித்தவ சமயம் தழுவினுர்கள். ஆனுல் வெகு காலம்வரை ஜாதி பேதமும் பழக்க வழக்கங்களும் அவர்கள் விடவில்லை. பின்னுலே சத்தியமங்கலத்திற்குச் சுற்றிப் பிரசாரம் நடந்ததில் பல கிராமங்கள் கிறித்தவம் ஆயின. அக்காலத்தில் இருந்த அரசியல் மாறுதல்களினுலே அங்கு கிறித்தவம் பரவவில்லை. கோவைக்குச் சேர்ந்த புளிய குளத்தில் ஓர் ஆலயம் ஏற்பட்டது. கோவைக்கு 12 மைல் தொலைவிலுள்ள கருமுத்தம் பட்டியில் ஒரு குரு நியமிக்கப்பட்டார். அவர் கீழே கோவை இருந்தது. 1846 ல் தான் குரு பீடம் கோவைக்கு மாற்றப்பட்டது. 1887 ல் பிஷப் நியமிக்கப்பட்டார். பிறகு பாடசாலைகளும் அநாதை விடுதிகளும் கன்னிகா மாடமும் ஏற்பட்டன. இரயிலடியில் பெரியஆலயம் முன்னுல் கட்டப்பட்டது. பின்னுல் ஜெயில் பாதையில் ஒரு புது ஆலயம் கட்டப்பட்டது. மீன்கடை வீதியில் மிகப் பழைய ஆலயம் இருக்கிறது. அது 17 நூ - ல் தொடங்கப்பட்டது. என்பர். கோட்டையில் ரோமானியர்கள் மிகுதி.

இலண்டன் மிஷன்: 1830 ல் ஆடிஸ் என்ற பாதிரி வேலை தொடங்கினுர். முதல் பாடசாலை சுக்கிரவாரப் பேட்டைத் தெருவில் தாபிக்கப்பட்டது. அது கிறித்தவர்பேட்டைப் பாடசாலை என்று பெயர். பிறகு ஆண் பெண் பாடசாலைகள் பல தொடங்கப்

பெற்றன. ஒரு உயர்தரப் பாடசாலையும் கட்டப் பட்டது. உப்பிலிபாளையத்தில் ஒரு பெரிய சொத்தை வாங்கி ஆலயமும் அனாதை விடுதியும் இருப்பிடமும் அமைத்தார்கள். பல பாதிரிகள் வேலை செய்கிறார்கள்.

லூதரன் மிஷன்: முதலில் நன்றாக வேலை செய்து ஓர் ஆலயத்தை வண்டிப் பேட்டைக்கருகில் கட்டினார்கள். பாடசாலையும் மிஷன் பங்களாவும் கட்டினார்கள். சென்ற 1914 போரில் அவைகள் எடுத்துக் கொள்ளப் பட்டன. ஆலயமும் பாடசாலையும் ஆரோக்கியசாமி பிள்ளை கட்டின மாணவர் விடுதியும் இருக்கின்றன.

ஆங்கில சமயச் சங்கம்: 1799-ல் ஆங்கிலர் கோவைக்கு வந்திருந்தும் இங்கு போதிய ஆங்கிலக் கிறித்தவர்கள் இல்லாமையினால் தனி ஆலயம் ஏற்படவில்லை. 1855 முதல் குன்னூரிலிருந்து செய்லர் என்ற குரு கோவைக்கு வருடத்திற்கு நான்கு முறை வந்து போதித்துவந்தார். அது வரை ஜில்லா கச்சேரியில் தொழுகை நடத்திவந்தார்கள். பிறகு பாடசாலையில் (High School) தொழுகை நடத்தினார்கள். 1067 ல் தனி ஆலயம்கட்ட முயற்சி செய்யப்பட்டது. ஆனால் அது பலிக்கவில்லை. 1870 ல் 13767 ரூபாய் செலவுசெய்து கட்டடம் முடிக்கப்பட்டது. அதே ஆண்டில் போப் என்றவர் கோவை குருவாக நியமிக்கப்பட்டார். 1872 ஜனவரி 27 தேதியில் All Souls Church என்ற பெயரில் ஆலயம் திறக்கப்பட்டது. 1874 ல் அக்கட்டடம் அரசியலார் ஆதரவில் விடப்பட்டது. இதற்குச் சேர்ந்த கல்லறை திருச்சிப்பாதை

யில் இருக்கிறது. அதில் உள்ள சமாதிகளில் சல்லிவன் 1821, மாரிஸ் 1828, R. கிளேவ் 1831, ராட்டன் 1847, ஹாரிங்டன் 1849, பர்டு 1875, வெப்ஸ்டர் 1879 என்ற I. C. S. சமாதிகள் இருக்கின்றன. இராணுவத்தில், பெல் (Bell) 1833, பிரிக்ஸ் (Briggs) 1834 உள்ளன. 1783 ல் முற்றுகையின்போது கொல்லப்பட்ட காப்டன் டெம்பிள் என்ற படைத் தலைவன் சமாதி நடுவில் இருக்கிறது. கரூர் முற்றுகையில் இறந்த M. Stanley என்பவனின் சமாதியின் பேரில் கட்டின சின்னமும் இருக்கிறது.

77. மூன்றுவது பெருக்கம்

கோவையில் விஷசுரத் தொத்து நோய் அடிக்கடி வரவே குடிகள் சௌக்கியத்திற்காக வேண்டி ஊருக்கு வெளியே பங்களாக்கள் என்ற தோட்ட வீடுகளை கட்டிக் குடிசென்றார்கள். இவ்வாறு திருச்சிப் பாதையிலும் அவிநாசிப் பாதையிலும் பல வீடுகள் உண்டாயின. இரண்டு மூன்று வருஷங்களில் கோவைக்கும் பாப்பநாயக்கன் பாளையம் இராமநாதபுரம் புளியகுளம் என்ற கிராமங்களுக்கும் இடையில் இருந்த புன்செய் நிலங்கள் எல்லாம் வீடுகள் ஆகி இவ்விரு புற ஊர்களும் தொடர்ச்சியான தொகுதிகளாகிவிட்டன. இதனை நோக்கி நகரசபையார் இம்மூன்று ஊர்களையும் கோவையுடன் இணைப்பது உசிதம் என்று எண்ணி அரசியலார் அனுமதி பெற்று அவைகளைச் சபையின் ஆட்சிக்குள் சேர்த்

துக் கொண்டனர். இம் மூன்று ஊர்களும் சேர்ந்த தினல் நகரத்தின் பரப்பு 4 சதுர மைலிலிருந்து 7 ச. மைல். அதிகரித்துக்கொண்டு விட்டது. அதனுல் ஜனத்தொகையும் வருமானமும் மிகுதியாயிற்று. ஆனுல் நகர சபையின் கடமைகளும் அதிகரித்தன. நகரப்பகுதிகளும் மிகுதியாகிப்பிரதிநிதி அங்கத்தினர் களும் அதிகமாயினர். புதுப் பகுதிகளிலே பாப்ப நாயக்கன் பாளையத்தில் சீதாப்புதூர், நாரணுபுரம், புது பாப்பநாயக்கன் பாளையம், பழைய பாப்பானுய்க் கன் பாளையம் இவைகள் உட்பகுதிகள். இவைக ளோடு இரண்டு சக்கிலிய நத்தங்களும் உண்டு. புளிய குளத்தில் கிறிஸ்தவப் புளிய குளமும் பள்ளர் என்ற தேவேந்திர குலத்தார் புளிய குளமும் உட்பகுதிகள் இராமநாத புரத்தில், காட்டூர், இராமநாத புரம் 2-ம் காட்டூர் என்பவைகள் உட்பகுதிகள். இப்பகுதி களில் முறையே கம்மவார், குறும்பர், சக்கிலியர், வேளாளர், கிறித்தவர், இந்துப்பள்ளர், அகமுடை யார், சக்கிலியர். பறையர் முதலிய வகுப்பார்கள் குடி யிருக்கிருர்கள். இப் பகுதிகள் சபைக்குள் சேர்ந்த வுடன் பாதை மராமத்து, சாக்கடைத்திருத்தம், மலங் கழிக்கும் இடர்கள், தெருச் சுத்தம் குடிநீர் வசதி, பாடசாலைகள், விளக்குகள், வைத்தியசாலை முதலிய சீர் திருத்த ஏற்பாடுகள் தரப்பட்டன.

ஆகவே இப்போதுள்ள கோவை நகர் அடியிற் கண்ட ரிவின்யூ கிராமங்களைக் கொண்டிருக்கிறது. கோயமுத்தூர், தெலுங்குபாளையம், இராமநாதபுரம், கிருஷ்ணராய புரம், சங்கனூர், அனுப்பர்பாளையம்,

புளிய குளம், குமார பாளையம், சவுரி பாளையம், கணபதி என்பவைகள். இதன் பரப்பு 10 ச. ம. உயரம் சராசரி 1426 அடி. இனி பூளைமேடு சிங்கா நல்லூர் கணபதி முதலிய பஞ்சாயத்துக்களைச் சேர்த்துக் கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவைகளுக்கெல்லாம் இப்போது விசைவண்டி போக்குவரத்து உண்டு. அப்போது ஊர் 10 மைல் நீளமும் 7 மைல் அகலமும் ஆகிவிடும்.

78. சங்கனூர்ப் பள்ளம்

கோவைக்குத் தற்போது வடக்கும் கிழக்கும் எல்லையாக உள்ளது சங்கனூர்ப் பள்ளம். இது ஒரு காட்டாறு என்று கூறவேண்டும். சாதாரண காலங்களில் வெறும் மணற் பள்ளமாகவே இருக்கும். மழைக் காலங்களில் மட்டும் திடீரென்று வெள்ளம் வந்து புரண்டு செல்லும். தடாகக் கணவாய்க்கு இரு புறங்களிலுமுள்ள மலைச் சரிவுகளில் விழும் மழைநீர் சிறு சிறு பள்ளங்களின் வழியே ஓடி அவைகளுக்கு இடையே உள்ள பள்ளத்தாக்கின் வழியே செல்வது இப்பள்ளம். கோவைக்கு வடக்கே சங்கனூர் என்ற கிராமத்திற்கு அருகே ஓடுவதால் இது சங்கனூர்ப் பள்ளம் என்று பெயர் பெறும். கோவைக்கு வடக்கே இப்பள்ளத்திற்கு ஒரு வண்டிப் பாலமும் இருப்புப் பாதைக்கு ஒரு இரும்புப் பாலமும் உண்டு. இது மேற்கேயிருந்து கிழக்கே ஓடி இருப்புப்பாதைப் பாலத்தைக் கடந்ததும் தென்

கிழக்காய் ஓடி, கணபதி, பாப்பநாய்க்கன் பாளையம் இக் கிராமங்களின் நடுவே சென்று பிறகு தெற்கே திரும்பி கோவைக்கும் பூளை மேட்டிற்கும் இடையே சென்று பின்னும் புளிய குளத்திற்கும் சௌரீ பாளையத்திற்கும் இடையில் விழுந்து நொய்யலாற்றுக்குச் செல்லுகிறது. மழைக்காலங்களில் வண்டலோடு வெள்ளம் வருகிறதினால் அடுத்துள்ள நிலங்களுக்கு உரம்போட வேண்டியதில்லை. அவ்வண்டலே போதுமான உரத்தைக் கொடுக்கிறது. மேலும் பூளை மேட்டுக்கருகில் இப்பள்ளத்தின் வண்டல் மண்ணினால் செங்கல் காளவாய் சுடுகிறார்கள். இச் செங்கல்லே கோவைக் கட்டடங்களுக்குப் பயன் படுகிறது. திருச்சிப் பாதையை இப்பள்ளம் இராம நாதபுரத்திற்குக் கிழக்கே கடக்கிறது. அந்த இடத்தில் இதற்குச் செருப்படி பள்ளம் என்ற நாமதேயம் பெற்றிருக்கிறது. இப்போதுள்ள பாலம் கட்டப்படு முன்னர் இந்தப் பள்ளம் புதை மணல் கொண்டிருந்ததினால் வண்டிகள் அவனைக் கடக்கச் சிரமப்படும். இருட்டுக் காலங்களில் இங்கே வண்டிகள் சிக்கிக் கொண்டால் கள்ளர் அடிக்கு அஞ்ச வேண்டியது தான். இராமநாத புரத்தில் இரண்டு உடன் பிறந்தார்கள் ஆண்மாரி பெண்மாரி என்ற அலிப்பேடிகள் இத் தொழிலில் ஈடுபட்டு அகப்பட்டோர்களை செருப்பால் அடித்துக் கொள்ளை யடித்தார்கள் என்ற கதை உண்டு. அதனால் தான் இந்தப் பள்ளத்திற்கு அந்தத் திருநாமம் ஏற்பட்டதாம். பாலம் கட்டின பிறகு அப்படிப்பட்ட செயல் நடப்பதில்லையாம்.

79. நச்சுச்சுரமும் புதுமனை இடங்களும்

1897 ல் பம்பாய் மகாணத்தில் கட்டி கட்டும் நச்சுக் காய்ச்சல் (Bubonic Plague) தோன்றியது. அது மிகக் கொடியது. தொத்துநோய் ஆகையால் வெகு எளிதில் பரவி உயிர்களைக் கொள்ளை கொண்டு போகும். முதலில் எலிக்கு வரும். பிறகு அவ்வெலி விழுந்து இறக்கும். உடனே அதன்மீது உள்ள கிருமி மனிதன்மீது பாயும். மனிதன் இறப்பான். இந்தக் கொடிய நோய் ஆப்ரிக்காவிலிருந்து பம்பாய்க்குக் கப்பல் மார்க்கமாக வந்தது. என்ன முயற்சிகள் செய்தும் அதைத் தடுக்க முடியவில்லை. 1903-ம் ஆண்டில் கோவைக்கு வந்து விட்டது. கணக்கில்லாத மக்களைச் சாகடித்தது. ஊரை விட்டு மக்கள் ஓடிவிட்டார்கள். நோயும்நின்றது. பிறகு 6ஆண்டுகள் கழித்து மறுபடியும் 1909-ல் உக்கிரத்தோடு தோன்றிற்று. பிறகு 6 ஆண்டுகள் கழித்து 1917ல் தோன்றிற்று. இவ்வாறு விட்டுவிட்டுத் தோன்றி வருடம் ஒன்றுக்கு சராசரி 3500 பெயர்களைக் கொண்டு சென்றது. வைத்திய நிபுணர்கள் இதற்காக மருந்து கண்டு பிடித்து அம்மை குத்தத் தொடங்கினார்கள். இதனால் அந் நோயின் மும்முரம் குறைந்தது. சுகாதாரம் சரியாக இருந்தால் எலிகள் வளரா. ஆகவே நோய் குறையும். இதனை அறிந்த மக்கள் ஊருக்கு வெளியே இடம் விட்ட விடுகள் கட்டத் தொடங்கினர். மேலும் ஊருக்குள்ளே நெருக்கடியான இடங்களை இடித்து விசாலப்படுத்தினார்கள். இந்த வகையில் சுகாதாரம்

விருத்தி செய்யப்பட்டது. இந்த நகரச் சீர்திருத்தம் 1910 ஆம் ஆண்டிலிருந்தே துவக்கப்பட்டது. கடைத் தெருக்களுக்கு அருகே ஒத்தச் செக்கார் கெம்பட்டி முதலிய வகுப்பார் வசித்து வந்த இடங்கள் மிகவும் நெருக்கடியாகவும் நாற்றம் வீசும் இடங்களாகவும் இருந்தன. அவைகளைப் பலவந்தமாக வாங்கி அழித்து வெட்டவெளி யாக்கினர். அவ்விதம் அகற்றப்பட்ட குடிகளுக்கு ஹபீசுபேட்டை, ஹமிங்குவேபேட்டை, தேவாங்கபேட்டை முதலிய பல புதுப்பேட்டைகளை உண்டாக்கினார்கள். 1911 ல் பிராமணர்களுக்கு ஜெயிலுக்கு அருகில் ஒரு புதிய அக்கிரகாரமும் உண் டாக்கப்பட்டது. பொது மக்களுக்கு மேட்டுப்பாளை யம் தடாகப்பாதைகளுக்கு இடையில் இருந்த 350 ஏகரா நிலங்களை வாங்கிப் புது வீடுகள் கட்டக் கொடுத்தார்கள். இப்புற நகர்க்கு இரத்தினசபாபதி புரம் என்று பெயர் பின்னால் வழங்கிற்று. இடம் விட்டுக் கட்டும் பூந்தோட்ட வீடுகள் மிகப் பெருகி வந்தன. தொடக்கத்தில் இடம் ஒன்று 100ரூ இருந் தால் இப்போது 1000 ரூபா பெறும்படியாக உயர்ந்து விட்டது. மக்கள் இப்படிப்பட்ட வீடுகளை மிகவும் மதிக்கிறார்கள். கோவையில் புது வீடுகளுக்கு இருக் கும் கிராக்கி வேறு எந்த ஊரிலும் இருக்காது எனலாம். நகரசபையாரால் ஏற்படுத்திய புதிய பேட்டைகளே யன்றிச் சொந்தத்திலும் பல பேட்டைகள் உண்டாயின. காக்ஸ் டவுன், கிரே டவுன், காந்திபுரம், டாடா பாத்து, ஸ்ரீனிவாசபுரம், கோபாலபுரம் முதலியன அவ்வாறு ஏற்பட்டவை.

இதனுல் நகரத்துச் சுகாதாரம் மேன்மை அடைந்தது.

ஓ ஓ ஓ

80. அங்காடிகள் சந்தைகள்

பண்டைக் காலத்தில் பெரு நகரங்களில் நாளங்காடி, அந்திக்கடை முதலியவைகள் இருந்தன என்று சங்க நூல்கள் கூறுகின்றன. அவைகள் இப்போதும் உண்டு. பெயர் மாத்திரம் வேறு. அவைகள், நாள் முழுதும் இருக்கும் கடைகள், (Bazaar) மாலைக்காலங்களில் விற்கும் கடைகள் (Evening Bazaar) வாரச் சந்தைகள் (Weekly Market) முதலியன. கோவையில் பெரிய கடை சின்னக் கடை என்ற இரண்டு தெருக்கள் உண்டு. அங்கே வர்த்தகர்கள் நிரந்தரமாகச் சரக்குகளை விற்பார்கள். நகர சபையால் ஏற்படுத்தியிருக்கும் நாட்சந்தைகள் இரண்டு உண்டு. நகர சபைக்குப் பின்னுல் உள்ள சந்தை ஒன்று. இது பழையது. சின்னக் கடைத் தெருவுக்கு மேற்கே ஒத்தச் செக்கார் வீடுகளை அப்புறப்படுத்தியதில் ஏற்பட்ட வெளியிடத்தில் கட்டிய சந்தை இரண்டாவது. இது -ல் ஏற்பட்டது. இவைகளைத் தவிர இரங்கே கவுண்டன் தெருவில் முகம்மதியக் கல்லறைக்கு வடக்கே ஒரு வாரச் சந்தை ஏற்படுத்தப் பட்டது. ஆனுல் அது சரியாக நடைபெறவில்லை. ஆகவே அது எடுத்து விடப்பட்டது. இரத்தின சபாபதி புரத்தில் புதிதாக ஒரு சந்தை ஏற்பாடாயிருக்கிறது. மேலும் இரங்கே கவுண்டன் தெருவில் பிள்ளையார் கோயில்

அதிகாரிகளால் ஒரு சிறு சந்தை நடத்தப்படுகிறது. மற்றப் புதுப் பேட்டைகளுக்குச் சிறு சிறு சந்தைகள் ஏற்பட்டு வருகின்றன. பழைய சந்தையில் (Old market) வரும் லாபத்தைவிட புதிய சந்தையில் அதிக லாபம் கிடைக்கிறது.

கூட்டுறவு இயக்கத்தை ஒட்டி சில பண்டகச்சாலைகள் ஏற்பட்டிருக்கின்றன. 1906 லிருந்து ஏற்பட்ட சலிவன் வீதி விற்பனைச் சங்கம் கிளைகளுடன் வேலை செய்கிறது. 1940-ல் ஏற்பட்ட தேவாங்க விற்பனைச் சங்கம் கிளைகளுடன் வேலை செய்கிறது. இவற்றில் மாதம் நிரம்ப விற்பனை ஆகிறது. 1938-ல் ஏற்பட்ட பால் பண்ணைச் சங்கம் நாள்தோறும் நிரம்ப பால் விற்பனை செய்கிறது.

81. தொழிற்சாலைகள்

முந்திய பருத்தி விருத்திச் சாலையைப் பற்றிக் கூறியிருக்கிறோம். பின்னர் நூல் ஆலைகள் ஏற்பட்டு மிக வெற்றியுடன் தொழில் நடத்துகின்றன. முதல் நூலாலை 1888-ல் சுக்கிரவாரப்பேட்டையின் கீழ்ப் புறத்தில் ஏற்பட்டுச் சில நாள்களுக்குப் பின் ஸ்டேன்ஸ் கம்பெனியார் விருத்தி செய்து அவர்களும் விட்டுவிட கம்மவார்களால் இப்போது நடைபெறுகிறது. இரண்டாவது நூலாலை காளீசுவரர் ஆலை அது 1906-ல் நாட்டுக்கோட்டை நகரத்தாரால் தொடங்கப் பட்டு நாளதுவரை நன்றாக நடைபெறுகிறது. பிறகு ஒன்றன்பின் ஒன்றாகக் கோவையிலும் அதனைச் சுற்றி

லும் 21 ஆலேகள் நடைபெறுகின்றன. இவைகளில் ரூ. 150ல. மூலதனமும் 383933 கதிர்களும் உண்டு. கோவையானது தென் இந்தியா மான்செஸ்டர் என்ற பெயர் பெற்று விளங்குகிறது. நடந்த போரில் இவ்வாலேகள் மிகுந்த பொருள் வருவாய் பெற்றுவிளங்கின. இவைகளில் 2 நெம்பர் முதல் 100 நெ. வரை நூற்கிருர்கள். 21526 தொழிலாளிகள் வேலே செய்கிருர்கள். ஆலேகளில் நெசவும் வைக்கப்பட்டிருக்கின்றது. அவைகளில் 1260 தறிகள் இருக்கின்றன. 1938-க்குப் பிறகு 5 புது ஆலேகள் தோன்றின. தோல் கிடங்குகள் நொய்யலாற்றங்கரையில் பல இருக்கின்றன. தோலேப் பதனிட்டு ஏற்றுமதி செய்கிருர்கள். இரும்பினுல் யந்திரங்கள் செய்தல், மோட்டார் வண்டிகளேப் பழுது பார்த்தல் முதலிய வேலேகள் அதிகரித்திருக்கின்றன. எலும்புகளே நொருக்கி எருவு ஆக்கும் சாலேயும் ஒன்று ஸ்டேன்சு கம்பெனியால் துடியலூரில் நடக்கிறது. காப்பி, தேயிலே வறுத்துத் தூளாக்கி விற்கும் சாலேயும் அவர்களே வைத்திருக்கிருர்கள். புருக் பாண்டு கம்பெனியார் மற்ருெரு ஆலேயை பனங்காட்டுப் பாதையில் வைத்து நடத்துகிருர்கள்.

இவைகளேத்தவிர குடிசைத் தொழில்கள் பலவுண்டு. கைத்தறி நெசவை3000தறிகள் செய்கின்றன. மிகவும் மேன்மையான சேலேகளும் உருமால்களும் செய்யப்படுகின்றன. இவைகள் தென் இந்தியா முழுதும் செலவாகிறதோடு, இலங்கை, வடநாடு முதலிய இடங்களுக்கும் செல்லுகின்றன. கோயமுத்தூர் சேலே, உருமால் என்ருல் நாடெங்கும் பெயர் பெற்றுவிட்டது.

82. கெரடி கோவில்

ஆங்கிலர் இந்நாட்டிற்கு வருவதற்கு முன் ஒவ்வொரு கிராமத்திலும் தற்காப்பிற்காக வாலிபர்கள் தேகாப்பியாசம் செய்து ஆயுதப்பிரயோகமும் கைச்சண்டையும் பழகுவார்கள். அவ்விதம் பழகுவதை ஜெட்டிகள் என்ற ஒரு வகுப்பார் கற்றுக்கொடுப்பதுண்டு. அவர்கள் கைச்சண்டையில் மிகத் தேர்ந்தவர்கள். ஆகவே மல்லக ஜெட்டிகள் என்ற பெயர் அவர்களுக்கு உண்டு. கிராமங்களிலே குடியேறி பாடசாலைகளை ஏற்படுத்தி அக் கிராம வாலிபர்களுக்கு அப்பியாசங்கள் கற்றுக் கொடுத்து ஊதியம் பெறுவார்கள். இதனை அவர்களுடைய தாய் மொழியாகிய தெலுங்கில் கெரடிகூடம் என்றும் தமிழில் சிலம்பக்கூடம் என்றும் இந்துஸ்தானியில் தாலிம் கானு என்றும் சொல்லுவார்கள். மைசூர், கருநாடகம், நிஜாம் முதலிய பிராந்தியங்களில் ஒவ்வொரு ஊரிலும் ஒரு கெரடிகூடமாவது இருக்கும். கொங்கு நாட்டை வசப்படுத்தி ஆண்ட மைசூர் சிக்கே ராஜன் காலத்தில் சில ஜெட்டிக் குடும்பங்கள் தெற்கே வந்து கோவையில் குடியேறின. அவர்களுடைய சந்ததியார் இன்றும் கோவையில் இருக்கின்றனர். இவர்கள் எல்லாம் வைஷ்ணவர்கள். மைசூரிலிருந்து ஹாசனூர் கணவாய் வழியாக வரும்போது ஓர் ஆலயத்தில் லட்சுமி நாராயண சுவாமி, வேணுகோபால சுவாமி விக்கிரகங்கள் இருந்தன. அவைகள் வெகு அழகாக இருந்தன. அவற்றின் மீது மிகுந்த ஆர்வம்

கொண்டு அவைகளைத் தம்முடன் எடுத்துக் கொண்டு வந்துவிட்டார்கள். கோவையில் செட்டித்தெருவில் அவர்கள் குடியேறி அங்கு ஒரு கெரடிகூடம் கட்டி அதில் தாமும் கெரடி செய்து மாணுக்கர்களுக்குக் கெரடி கற்றுக் கொடுத்தும் பிழைத்துவந்தனர். அக் கெரடி கூடத்திற்கு அருகில் ஒரு பெருமாள் ஆலயம் எழுப்பி அதில் தாம் கவர்ந்து கொண்டு வந்த இரண்டு விக்கிரகங்களையும் தாபித்தனர். அவைகளுக்காக ஆனை மலை முனியக் குட்டிக்கவுண்டர் ஆலயங் கட்டினுர். அப்போது கலசபாக்கம் இராமாநுச ஐயர் என்ற சாத்தாத வைஷ்ணவர் அங்கேஒரு தெலுங்குபாடசாலையும் வைத்தார். திருநாராயண புரத்திலிருந்து வந்த பிரதிவாதி பயங்கரம் வேங்கடாச்சாரியர் என்பவர் கோயிலில் இவ்விக்கிரகங்களைப் பிரதிஷ்டை செய்தார். இக் கோயிலுக்கு மானியங்களும் தானியங்களும் வந்து சேர்ந்தன. இவ்விதமாக இக்கோயில் கெரடி கோயில் எனப் பெயர் வழங்கிற்று. தொண்டை மண்டலத் துளுவ வேளாளர்கள் இக்கோயிலை நடத்தி வருகிறுர்கள்.

83. பொருளாதார வசதிகள்

ஆரம்பத்திலிருந்தே கோவையில் நெசவு முக்கியத் தொழிலாக இருந்தது. முதலில் மட்ட தினுசுகள் நெய்து வந்திருந்தாலும் கூடிய சீக்கிரத்தில் தொழிலும் வர்த்தகமும் விருத்தியாயிற்று. 20, 30 நெம்பர் நெய்தவர்கள் 100, 200 நெய்யத் தொடங்

கினர். சரக்குகளும் பம்பாய் நாகபுரி முதலிய ஊர்களுக்கு ஏற்றுமதி ஆயின. மேலும் பஞ்சாலைகளும் வைக்கப்பட்டன. தோல் பதன்செய்யும் இடங்களும் காப்பி வறுக்கும் தொழிலும் உண்டாயின. ஆகவே வர்த்தகம் அதிகமாக ஆகப் பண லேவாதேவியும் பெருகிற்று. நாட்டுக்கோட்டை நகரத்தாரும் மார்வாடிகளும் வட்டிக்குக் கடன் கொடுக்கத் தொடங்கினர். அவர்களுடைய வட்டி விகிதம் அதிகமாக இருந்தபடியால் வட்டிக்குக் கடன்கொடுக்கும் நிதிகள் ஏற்பட்டன. முதலில் வர்த்தக விருத்திசங்கமும் பிறகு ஜனோபகார நிதியும் பிறகு இந்து கிருபாகர நிதியும் ஏற்பட்டன. பிறகு ஒன்றன்பின் ஒன்றாக 128 நிதிகள் கோவை ஜில்லாவிலும் 40 கோவையிலும் ஏற்பட்டன. இதனைக் கண்டதும் சென்னை சர்க்கார் பாங்கு இங்கு வந்தது. பிறகு வெளிநாட்டு பாங்குகள் பலவும் இங்கே கிளைகளை வைத்தனர். கோவை நிதிகள் சரியான பார்வையில்லாமல் அதிக வட்டி கொடுத்து மக்கள் கஷ்டப்பட்ட வகையில் சீர் கெடத் தொடங்கின. 1931 ல் ஏற்பட்ட பண நெருக்கடியில் இந்நிதிகள் குறையத் தொடங்கின. பிறகு வட்டி இலவசச் சட்டம் வரவே நிதிகள் பலவும் மறைந்து போயின. வட்டியிலேயே பிழைத்து வந்த நகரத்தார் கடைகளும் மாயமாயின. நகரத்தார்கள் வட்டியில் பிழைப்பதை விட்டுவிட்டு வர்த்தகம் கைத்தொழில் இவைகளில் புகுந்தார்கள். வட்டிக்காகக் கோவை புகுந்த மார்வாடிகளும் சிகார் பூரிகளும் நகரத்தைவிட்டு ஓடினர். பிறகு போர்

தொடங்கி இரண்டு வருஷம் ஆனதே வர்த்தகம் மறுபடியும் தலை நிமிர்ந்தது. மறுபடியும் வடநாட்டு லேவா தேவிகள் இங்கே வரத்தொடங்கினர். நூல் பருத்திச் சாலைகள் அதிக செல்வாக்கு அடைந்தன. அதை ஒட்டி இதர நாட்டு பாங்குகள் பலவும் இங்கே கிளைகளை வைக்கத்தொடங்கினர். இப்போது வெளி நாட்டு பாங்கிகள் மாத்திரம் இங்கே இருக்கின்றன. அவைகளில் பெரும்பான்மை மைசூர், பரோடா, திருவாங்கூர் முதலிய சமஸ்தான பாங்குகள். பொருளும் பணமும் அதிகம் ஆக வீட்டு வாடகை அதிகமாகி விட்டது. வீட்டு விலையும் மிதமீறிப் பெருகிவிட்டது. ஒன்றுக்கு நூறு மடங்கு அதிகமாகிவிட்டது. இந்த நிலைமையில் கோவைப் பணப் பெருக்கு எங்கே நிற்கும் என்று சொல்லமுடியவில்லை.

84. புதுக் கல்விச்சாலைகள்

விவசாயக் கல்லூரி என்னும் உழவியல் கல்லூரி ஒன்று கோவைக்கு மேற்கே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இது முந்தி ஒரு சிறிய விவசாயப் பாடசாலையாகச் சென்னைக்கு அடுத்த சைதாப்பேட்டையில் 1876 முதல் நடந்துவந்தது. அதனைச் சீர்திருத்தியமைக்க வேண்டி 1902-ல் ஒரு ஆலோசனைக் குழு ஏற்படுத்தப்பட்டது. அதன் விளைவாக கோவைக்கு அடுத்து இரண்டு மைல்தூரத்தில் தகுந்த இடம் தேர்ந்தெடுக்கப்பட்டு 1907 - ல் கட்டட வேலை தொடங்கி 1909-ல் புதுக்கல்லூரி தொடங்கப்பட்டது.

கட்டடம் மிகவும் அழகானது. விஞ்ஞான முறையில் பயிர் செய்வதற்கு வேண்டிய ஆராய்ச்சிகள் செய்யப் படுகின்றன. உழவியலில் பலவகைப் பகுதிகளும் இங்கு ஆராயப்படுகின்றன. மாணவர்களுக்குப் போதனை யும் அவ்வப்போது புது நூல்களும் வெளியிடப் படுகின்றன. கல்லூரியும் அதனை ஒட்டியுள்ள ஆராய்ச்சிச்சாலை, காய்கறித்தோட்டம், கால்நடைச் சாலை, ஆராய்ச்சி நிலங்கள் முதலியன சுமார் 500 ஏகரா கொண்ட சொத்தாகும். மாணவர்களுக்குப் போதிப்பதற்காக ஒரு புதிய கட்டடமும் கட்டப் பட்டிருக்கிறது. பால் பண்ணை, தேனீ வளர்த்தல், கால்நடை வைத்தியம் முதலியனவும் உண்டு. கரும்பு ஆராய்ச்சி தனியாக அடுத்த மேற்புறத்தில் ஏற்பட் டிருக்கிறது. அது இந்திய சர்க்காருக்குச் சேர்ந்தது.

காட்டுக் கல்லூரி : இது கோவைக்கு வடமேற்கில் கட்டப்பட்டிருக்கிறது. 1907க்கு முந்தியே கட்டி லாக்காவில் கீழ்தர வேலையாட்களுக்கு என்று ஒரு பாடசாலை இருந்தது. பெரிய உத்தியோகத்தர்கள் 1874-ல் டெராடூனில் தொடங்கிய கல்லூரிக்குச் செல்லவேண்டி வந்தது. அது சென்னைக்குப் பயன் படாமல் போக சென்னைக் கல்லூரி கோவையில் 1912-ல் தொடங்கப்பட்டது. சுமார் 350 ஏக்கர் நிலத் தில் பெரிதாகக் கட்டின கட்டித்தில் 1915-ல் திறக் கப்பபட்டது. இதில் சென்னை மாணவர்களே அன்றி சமஸ்தான மாணவர்களும் வாசிக்கலாம். இக்கல்லூரி கண்காட்சி மண்டபம் ஒன்று (Gass) காஸ் என்ற துரையின் பேரால் வைக்கப்பட்டது. அதில் மிகச்

சிறந்தகாட்டுப் பொருள்கள் இருக்கின்றன. மத்தியில் சில ஆண்டுகள் இக்கல்லூரி மூடப்பட்டு மறுபடியும் தொடங்கப் பெற்றிருக்கிறது. போர்க்காலங்களில் மால்டா தேசத்தார் இங்கு சரண் புகுந்து இருந்தார்கள்.

பொறி இயல்கல்லூரி : ஹோப் இன்சினியரிங்கு கல்லூரி 1945-ல் இங்கு பூளைமேட்டில் தொடங்கப் பெற்றிருக்கிறது. இது திரு. துரைசாமிநாயடு என்ற மோட்டார் யந்திர நிபுணரின் ஆர்வத்தால் நிறுவப் பெற்றது.

போலீசு பாடசாலை : இது போலிசு காவலாளிகள் வேலை பழகுவதற்காக வைக்கப்பட்டிருக்கிறது. கட்டடம் மிகப் பெரியது. சிறைச்சாலைக்குக் கீழ்ப்புறம் அகன்ற இடத்தில் ஏற்பட்டிருக்கிறது. வெகு நாள் இங்கு நடந்த வைத்தியசாலை இப்போது எடுபட்டது. திரும்பி வந்தால் நலமாக இருக்கும்.

ஃ ஃ ஃ

85. ஜனப் பெருக்கம்

கோவையில் ஹைதர் காலத்தில் 3200 வீடுகள் இருந்தன. சராசரி 22000 மக்கள் இருக்கலாம். டிப்புவின் சண்டைகளால் ஜனத்தொகை குறைந்தது.

1800-ல் 2000 வீடுகளும்	15000 மக்களும் இருந்தனர்.			
1825-	,,	18000	,,	
1850-	,,	20000	,,	
1866-	,,	24241	,,	
1871-ல் 5000	,,	35310	,,	4·20 சதுர மைல்

1881-ல்	6784	வீடுகளும்	38967	மக்களும் இருந்தனர்.	
1891-ல்	7081	,,	46383	,,	
1901-		,,	53080	,,	
1911-		,,	47007	,, ப்ளேக்கினல் குறைவு	
1912-ல்	9283	,,	60195	,, ப்ளேக்கு முடிந்த	
1921-		,,	65788	,, [பிறகு	
1931-ல்	13742	,,	95077	,,	7·5 சதுர மைல்
1941-ல்	27000	,,	130354	,,	12 சதுர மைல்
1947-		,,	200000	,,	

அண்மையிலே அரிசி பங்கீட்டுக்காக கணக்கு எடுத்ததில் கோவை நகரில் மட்டும் 180000 சீட்டுகள் கொடுக்கப்பட்டன. மேலும் சீட்டு இல்லாத பெயர் களுக்கு அளவில்லை. ஆகவே மொத்தம் நகரப்பகுதி யில் இரு நூறுயிரம் மக்கள் என்பது மிகையல்ல. ஆனல் நகருக்கு ஐந்துகல் சுற்றிலும் இப்போது நகர்ப்புறம் என்றே கூறவேண்டும். அதில் குறைந் தது மற்ெறுரு இரண்டு லட்சம் மக்கள் இருக்கலாம். ஆகவே மொத்தம் ஜனத்தொகை நான்கு லட்சம் என்றுகூற இயலும்.

ஓ ஓ ஓ

86. மின்சாரம்

கோவை நகரில் வெகுகாலமாக மண்ணெண் ணெய் விளக்குகளே போடப்பட்டிருந்தன. அவ் விளக்குகளும் போதிய ஒளியைத் தராமல் சில இருட்டு இரவுகளில் தான் எரிந்துகொண்டிருந்தன. 1830-ல் திரு. வின்செண்ட் என்ற ஒருவர் மின்சார

யந்திரத்தைக் கொண்டு அசையும் படங்களை ஓட்டி வந்ததில் மீதியான சக்தியை தெருக்களுக்குத் தருவதாக முன்வந்தார். அவருக்குச் சில தெருக்களுக்கு மாத்திரம் விளக்குப்போட அனுமதிதரப்பட்டது. அவ்விதம் போட்ட விளக்குத் திட்டம் சிறிது சிறிதாகப் பரவி வந்தது. பிறகு அரசாங்கத்தால் நீலகிரியில் பாய்கரை ஆற்றில் மின்சாரம் இறக்கின திட்டத்தில் கோவைக்கும் ஒரு பகுதி தரப்பட்டது. அதன்படி கொண்டுவந்த மின்சாரத்தினுல் கோவை நகரம் முழுதும் விளக்குப் போடுவதற்கும் யந்திர சாலைகள் இயங்குவதற்கும் கிணறுகளில் தண்ணீர் இறைப்பதற்கும் திட்டம் செய்யப்பட்டது. இதற்காகக் கோவைக்கு வடக்கே ஒரு மின்சார சக்திச் சாலை அமைக்கப்பட்டது. இங்கே பாய் கரையிலிருந்து வரும் சக்தி மாற்றப்பட்டுக் கோவைக்கு அளிக்கப்படுகிறது. கோவையில் மின்சார வசதி அளிக்கும் அனுமதி நகரசபைக்கு அளிக்கப்பட்டது. 31-3-1937 வரை 5½ லட்சம் ரூபாய் செலவாகி இருக்கிறது. 1937-ல் 2366 தெரு விளக்குகள் போடப்பட்டன. 1946-ல் 3148 உண்டு. இவைகளைத் தவிர குடிகளுக்கு விளக்குகளும் ஆலைகளுக்குச் சகல மின்சார வசதிகளும் அளிக்கப்படுகின்றன. அவைகளின் மொத்தம் 4667. தெரு விளக்குகள் மாலை 7-மணி முதல் விடியல் 5 மணி வரைக்கும் எரிகின்றன. வீடுகளுக்கு மற்ற ஆலை முதலியவைகளுக்கும் எப்போதும் மின்சாரம் அளிக்கப்படும். மின்சாரத்தினுல் கோவையின் சோபை இரவில் விளங்குவதன்றிக்

கைத்தொழில் முதலிய இயக்கங்கள் மிகப் பெருகிச் செல்வாக்கு உயர்ந்து வருகின்றது. மின்சாரத்தினுல் நகரசபைக்கு 45-46-ல் 5 லட்சம் வருமானமும், அதில் லாபம் 179000 கிடைத்திருக்கிறது. சென்ற போர்க் காலங்களில் மின்சாரச் சரக்குகள் குறைந்துவிட்ட படியால் வசதி குறைக்கப்பட்டது. ஆனுல் சண்டை முடிந்தவுடன் எப்போதைப் போல மின்சார வசதி கொடுக்கப்பட்டு வருகிறது. மின்சாரச் சரக்கு வர்த்தகமும் நகரில் அதிகரித்து விட்டது. மொத்தம் மின்சாரக் கம்பிகளின் நீளம் 131 மைல். அதில் பளுவான கம்பிகள் 11 மைல். அதில் $2\frac{1}{2}$ மைல் நீளம் நிலத்தில் புதைக்கப்பட்டிருக்கிறது. மற்றவை கம்பங்களின் மேல் செல்லுகின்றன. ஊருக்குள்ளே 4 இடங்களில் மாறுதல் செய்யும் சிறு இயந்திரங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. இவைகளின் மேற்பார்வைக்கு ஒரு இன்சினியர், 54 உத்தியோகஸ்தர்கள், வேலையாட்கள் முதலியோர் இருக்கின்றனர். மின்சாரத்தினுல் ஓடும் தெருக் கெடியாரங்கள் மூன்று. அவிநாசிப் பாதையிலிருந்த கெடியாரத்தை ஒரு இராணுவ வண்டி மோதி உடைத்துவிட்டது, மற்ருென்று கெட்டுப்போய்விட்டது.

87. சிறு வாணிக் குடிநீர்

கோவையில் சில தெருக்களில் மாத்திரம் சில நல்ல நீர்க் கிணறுகள் இருந்தன. மற்றக் கிணறுகள் அனேகமாக உப்பு நீர்தான். வெய்யில் காலங்களில்

கிணறுகள் வற்றி விடும். இந்த முறையில் மக்கள் குடி நீருக்கு மிகவும் அவதிப்பட்டு வந்தார்கள். 1889-ஆண்டில் முதல் முதலாகச் சிறுவாணித் திட்டம் வெளியிடப் பட்டது. ஆனால் 1903-ல் விஷசுரம் தோன்றும் வரையில் அதைப்பற்றி எவரும் சிந்திக்கவேயில்லை. 1912 வரையில் சுலபமான சில திட்டங்களைப்பற்றி ஆராய்ந்தார்கள். ஒன்றும் பலிக்கவில்லை. பிறகு மறுபடியும் சிறுவாணித் திட்டமே ஆராயப்பட்டது. நகர சபையார் மன்ருடியதின் பேரில் 1920 ல் 38.68 லட்சத்திற்கு அந்தத் திட்டம் சர்க்காரில் அங்கீகரிக்கப்பட்டது. சிறுவாணி என்பது மலையாளம் ஜில்லாவில் முத்திக் குளத்தில் உற்பத்தியாகி இரண்டு மலைத் தொடர்களுக்கு இடையே பல சிற்ருேடைகளுடன் சேர்ந்து வடக்கே 25 மைல் ஓடிப் பவானியோடு கலக்கும் ஒரு சிற்ருறு. உயர்ந்த மலைகளிலே பெய்யும் மழையினுல் அந்த ஆறு எப்போதும் வற்ருமல் ஓடுகிறது. கோவைக்கு மேற்கே 21 மைலில் பொரத்தி அடிவாரத்திற்குச் சென்று மலைமேலே 3½ மைல் ஏறி அப்புறம் இறங்கினுல் அதை அடையலாம். வழி மிக அழகாக இருக்கும். சிறுவாணியை வேறுபடுத்தி நிற்கும் மலை பொரத்தி மலையாகும். அதனைக் குடைந்து நீண்ட துவாரம் ஆக்கிச் சிறுவாணிக்கு ஒரு அணைக்கட்டித் தண்ணீரைத் தேக்கி வைத்து அந்தத் துவாரத்தின் வழியே தேக்கின நீரை ஓட விட்டால் அந்நீர் கோவைச் சரிவில் ஓடுகிற ஆனையாற்றில் விழும்; அதிலிருந்து தொட்டிகளில் நிரப்பிக் குழாய் வழியாக 21 மைல் கோவைக்குக் கொண்டு

வரச் செய்தலே இந்தத் திட்டம் ஆகும். மலையில் தோண்டின துவாரம் ஒரு மைல் நீளம். நீர் மிகச் சுத்தமானது. அணை 23 அடி உயரம். குழாய் 18 அங்குலம் குறுக்களவு. இந்த திட்டத்திற்கு இறுதியில் ஏற்பட்ட செலவு ரூ. 43 லட்சம். 1928க்குள் 30 மைல் குழாய்போடப்பட்டது. 1929-ல் 390 அடி துவாரம் தோண்டினதும் வேலை தடைப்பட்டது. பிறகு ஒரு வங்காள முதலாளிக்கு ஒப்புவிக்கப்பட்டது. அவர் ஆட்களாலே விரைவில் பூர்த்தி செய்யப் பட்டது. இந்தத் திட்டம் ஒரு சிறந்த திட்டம். இதை நடத்திய முறையும் திடமானதே. 1929ல் கோவையிற் குடிநீர் பஞ்சம் அதிகரித்தது. வேலை தொடங்கி வெகுநாள் ஆகியும், நீர் வரும் வழியில்லாமல் வேலை தடையுற்றதால் மக்களில் கிளர்ச்சி ஏற்பட்டது. வேலைக்கு காரணபூதரான திரு. C. S. இரத்தினசபாபதி முதலியார் உடனே அரசியலாரை அணுகி ஆனையாற்று நீரை எடுத்துக்கொள்ள அனுமதிபெற்றதும், இடந்திரங்களின் மூலம் நீர் ஏற்றிக் கொண்டு வரப்பட்டது, தெருக்களில் குழாய்களில் நீர் வரவே மக்கள் மகிழ்ச்சி அடைந்தார்கள். பிறகு வேலை முடிவடைந்ததும் வீடுகளுக்கு நீர் தரப்பட்டது. இத்திட்டத்தின் செலவில் அரசியலார் பாதி ஏற்றுக்கொண்டனர். கடன் கட்டுவதற்காகப் புதுவரி 8 வீதம் போடப்பட்டது. தண்ணீர்த் தேக்கத் தொட்டி ஊருக்கு வடக்கே கார்ட்டுக்கல்லூரிக்கு அடுத்த மேட்டில் கட்டப்பட்டது. அதன் உயரம் 1450 அடி. மற்ற பாகங்கள் இதை விடத் தாழ்ந்தவை. ஆகவே நீர் சிரமம்

இன்றி ஓடக்கூடியது ஆகும். தொட்டிக் கருகில் ஒரு உபவனமும் உண்டாக்கப்பட்டிருக்கிறது. 24 லட்சம் காலன் குடிநீர் தரப்படுகிறது. இப் போதையக் குடிப் பெருக்கத்திற்கு இது போதாது.

88. ஜலதாரை வசதி

கோவைநகர் கடல்மட்டத்தின் மேல் சுமார் 1350 அடி உயரம் உள்ளது. வடமேற்குப் பாகங்கள் உயரமாகவும் தென் கிழக்கு பாகங்கள் தாழ்ந்தும் உள்ளன. சாக்கடைநீர் ஓடும் திக்குகளை நோக் கினல் நிலமட்டம் தெரியும். பொதுவாக அதிக உயரமும் தாழ்வும் இல்லாத சமநிலம் ஆகும். ஆகவே ஜாலதாரை வசதி மிகவும் கடினமானது. முதலில் தெருக்களின் இரண்டு ஓரங்களிலும் சாக்கடைப் பள்ளங்கள் வெட்டப்பட்டிருந்தன. அவைகள் மண் பள்ளங்கள். ஆகையினல் சாக்கடைநீர் அனேகமாகத் தேங்கிவிடும். அதினுலே சேற்று நாற்றமும் கொசு உபத்திரவமும் அதிகமாக இருந்தது. ஆகவே பெரிய தெருக்களில் சாக்கடைகளுக்குக் காறை போட்டார் கள். அதனுலே நீர் தங்காமல் ஓடத்தொடங்கியது. ஊருக்கு இடையிலே பனங்காட்டிலிருந்து தென்புற மாக வாலாங்குளம் வரையில் ஒரு பெரிய பள்ளம் ஓடுகிறது. இதன் வழியே எல்லாப் பள்ளங்களின் நீரும் வடிந்து ஓடிக் குளத்தில் போய்ச்சேரும். சமீபத் தில் இப் பள்ளத்தை காறைபோட்டுச் சுத்தமாக்கி யிருக்கிறுர்கள். அதே மாதிரி மேற்கே செட்டித்

தெருவிலிருந்து ஒரு பள்ளம் பெரிய ஏரிக்கும் ஊர் நடுவில் உக்கடத்திற் கருகில் பெரிய குளத்திற்கு ஒரு பள்ளமும் போய்ச் சேருகின்றன. இவைகள் செப்பன் இடப்படவில்லை. இதற்குள் குடி நீர்வசதி ஊருக்கு ஏற்படவே எங்கு பார்த்தாலும் சாக்கடைத் தேக்கம் அதிகமாகிவிட்டது. அதனை நிவர்த்தி செய்யப் புது ஜலதாரை வசதி செய்ய வேண்டிவந்தது. இதற்கு 6 லட்சம் ரூபாய் திட்டம் போடப்பட்டது. நிலத்தின் கீழ் 10 அடி ஆழத்தில் குழாய்ப் புதைத்து அவற்றின் வழியே சாக்கடைகளைக் கொண்டு செலுத்தி இறுதியில் கோட்டை மேட்டின் மத்தியில் சின்னக் குளத்தின் அடியில் கொண்டுபோய் அதன் கீழ் உள்ள வயல்களில் கொண்டுசெலுத்துவது இந்தப் புதுத் திட்டம் ஆகும். இதற்கு வேலை 1939ல் தொடங்கியது. போரினால் வேலை தாமதம் ஆகி முடிவு பெறாமல் நிற்கிறது. நகரை ஐந்து பகுதிகளாகப் பிரித்து வேலை செய்திருக்கிறார்கள். இருப்புப் பாதைக்கு மேற்கே அனேகமாக வேலை பூர்த்தியாகிவிட்டது. முழுவதும் பூர்த்தியாக 3, 4 ஆண்டுகள் பிடிக்குமாம்.

89. உபவனங்கள்

பண்டைக் காலத்தில் தலைநகர்களில் அழகிய பூந்தோட்டங்கள் இருந்தனவாக நூல்கள் கூறுகின்றன. அரண்மனையை ஒட்டி அவை பெரும்பாலும் இருக்கும். முகம்மதிய மன்னர்களும் பூந்தோட்டங்களைத் தங்கள் மாளிகை ஒட்டியும் மசீதுகளை ஒட்டி

யும் வைத்திருந்தார்கள். அதை அனுசரித்து சமீப காலங்களில் பெரிய ஊர்களில் எல்லாம் ஊர்ப் பொது மக்கள் ஒழிவு நேரங்களில் உல்லாசமாகப் பொழுது போக்குவதற்காக உபவனங்கள் என்ற பூந்தோட்டங் களை வைக்கத் தொடங்கிவிட்டார்கள். கோவையிலே ஜார்ஜ் மன்னர் பட்டாபிஷேகத்தை ஒட்டி அதன் ஞாபகச் சின்னமாக ஒரு பெரிய பூந்தோட்டத்தை 1912-ல் பொதுமக்கள் தந்த நன்கொடைகளினால் ஏற்படுத்தினார்கள். அது சிறைச்சாலைச் சுவர்களி லிருந்து அவிநாசிப் பாதைமட்டும் 75 ஏகர் கொண்ட தாக இருக்கிறது. சில ஆண்டுகளுக்குப் பிந்தி அதன் பரிபாலனம் ஜில்லா போர்டாருக்குக் கொடுக்கப் பட்டது. நடுவில் அழகிய தோட்டமும் செய்தி வெளி யிடும் ஒலி பெருக்கியும் தாமரைக் குளமும் கொடிப் பவனங்களும் அமைந்திருக்கின்றன. தென் பாகத்தில் தேகாப்பியாசம் விளையாட்டுகள் இவைகளை நிகழ்த் தக் காந்தி - இர்வின் ஸ்டேடியம் என்ற சோபான மண்டபமும் பந்தாட்ட வெளியும் இருக்கின்றன. கோவையில் நடக்கும் பெருத்த கூட்டங்களும் பந்தய விளையாடல்களும் இங்கேயே நடக்கின்றன.

மேலும் சிறுவாணி நீர் வசதி ஏற்பட்டதில் அந்த நீர்த்தேக்கத்திற்காக இரண்டு மகத்தான நீர்த் தொட்டிகள் காட்டுக் கல்லூரிக்கு வடக்கே கட்டப் பட்டன. அந்த இடத்தில் நீர்வசதி முதலியவைகளை அனுசரித்து ஓர் அழகிய பூந்தோட்டம் அமைக்கப் பெற்றிருக்கிறது அது கோஷன் உபவனம் என்ற பெயரால் வழங்குகிறது. அக் கவர்னர் அதனைத்

திறந்து வைத்தார். அந்த வனத்தில் அழகிய செடி கொடி மரங்கள் அன்றி, பூ வளைவுகளும் சிறுவாணித் திட்டத்தைப் போல ஒரு அமைப்பும் கட்டப்பட்டிருக்கின்றன.

சமீபத்தில் முத்தண்ண குளத்து இடத்தையும் பாப்ப நாய்க்கன் பாளையத்துக் குட்டையையும் ஊர் நடுவில் பழச் சந்தைக்கு மேற்கே இருந்த காந்தி மைதானத்தையும் உபவனங்களாக மாற்றி யிருக்கின்றார்கள். இவைகளினால் மக்கள் ஆரோக்கிய நிலை செவ்வையாகலாம். இவைகளைத் தவிர பல பாதைகள் சேருமிடங்களில் உள்ள சிறு வெளியிடங்களையும் சிறு சிறு பூந்தோட்டங்களாக்கி வருகிறார்கள். 50 ஆண்டுகளுக்கு முந்தியிருந்த பெரிய குளத்தோப்பும் பனங்காடும் முந்தி தோட்டங்களாக இருந்தன. அவைகள் இப்போது மாறி தொழிலாளர் விடுதிகளாகவும் வீடுகளாகவும் ஆகிவிட்டன.

ை ை ை

90. நாடக சாலைகள்

நூறு ஆண்டுகளுக்கு முன் கூத்துக்களும் பொம்மலாட்டங்களுமே நாட்டில் மிகுந்திருந்தன. அவைகளுக்குத் தனிக் கட்டடங்கள் இருக்கவில்லை. அரசர்கள் இருந்த பெரும் தலைநகர்களில்தான் நாடக சாலைகள் இருந்தனவாகச் சிலப்பதிகாரம் முதலிய நூல்களால் அறியலாம். மேற்குக் கோடியில் உள்ள கோவை போன்ற ஊர்களில் தெருக்கூத்துக்களே நடைபெறும். இரணிய நாடகம் வாணசுர நாடகம்

போன்றவை அங்கே நடைபெற்றுவந்தன. நாடகங்கள் தெருமூலைகளில் சிறிது வெளியிடம் கிடைத்தால் அதில் ஒரு மேடை இட்டு ஒற்றைத் திரை போட்டு இராக் காலங்களில் கூத்து நடத்துவார்கள். ஆட்டக்காரர்களும் பொழுது போக்குக்காக ஆடுவார்களேயன்றி ஒருநிரந்தரத் தொழிலாகஅதனைக் கொள்ளார்கள். ஊரார் எல்லாரும் அதற்குச் செல்லலாம். ஊர்ப் பொதுவில் வரி வசூலித்து நன்கொடை கொடுப்பார்கள். பிறகு தஞ்சை முதலிய இடங்களிலிருந்து ஆங்கில நாடகங்களை ஒட்டி நாடகம் நடத்தும் சபையார்கள் வந்து நாடகம் நடத்தத் தொடங்கினுர்கள். அதற்காக ஆதம்சா கொட்டகை, சாரதா கொட்டகை என்ற இரு கொட்டகைகள் முதல் முதலில் கட்டப்பட்டன. உள்ளூரிலும் சிலர் நாடகம் கற்று வெளியும் கிளம்பினுர்கள். ஒளிப் படங்கள் என்ற ஆடும் படங்கள் தோன்றவே நாடகங்களுக்கு மதிப்பு குறைந்தது. திரு. வின்சண்ட் என்றவர் முதலில் கூடாரத்தில் ஒளிப் படங்களைக் காட்டினுர். பிறகு இடையர் வீதிக் கிழபுறத் தொடர்ச்சியில் ஒரு நிரந்தரக் கொட்டகை கட்டினுர். இதுவே முதல் கொட்டகை. பிறகு அதற்குக் கிழக்கே சுவாமி என்ற மற்ருெரு கொட்டகை ஏற்பாடாயிற்று. ஒளிப்படங்கள் நாளா வட்டத்தில் ஒலி ஒளி அல்லது பேசும் படங்கள் ஆயின. அவைகள் மக்களை மிகுதியும் கவரவே, கொட்டகைகள் பெருவாரியாகத் தோன்றின. இப்போது கோவையிலே 8 கொட்டகைகள் நடக்கின்றன. இந்த நிலையில் மறுபடியும் நாடகங்களுக்கு

மதிப்பு வந்துவிட்டது. அதற்காகத் தனியாக ஒரு பெரிய கொட்டகை ஜோசப் கைத்தொழில் பாட சாலைக்குப் பின்னால் கட்டப்பட்டிருக்கிறது. இரங்கே கவுண்டன் தெருவில் மற்றொன்றும் கட்டப்பட்டிருக்கிறது. இவ்வித உல்லாச நிலையங்கள் பொது மக்களுடைய மனோபாவங்களுக்கு இசைவாக அமைந்தும் மாறியும் மேம்பட்டும் வருகின்றன. அரசியலாரும் மக்களுடைய மனோபாவங்களை அனுசரித்துப் புது வரிகளையும் போடுகிறார்கள். பேசும் படங்களைத் தயாரிக்கும் யந்திர சாலைகளும் இரண்டு ஏற்பட்டுள்ளன. இவையேயன்றி விளையாட்டுக் காட்சிகள் என்ற அரைச் சூதாட்ட இடங்களும் வந்தும் போய்க்கொண்டும் இருககின்றன. அவ்வப்போது சர்க்கஸ் என்ற மிருக நாடகங்களும் நடைபெறுகின்றன.

91. சங்கங்கள்

கோவையிலும் பல சங்கங்கள் தோன்றியும் நின்றும் அழிந்தும் போயிருக்கின்றன. அவைகள் கல்வி, அரசியல், கூட்டுறவு, தொழில், வர்த்தகம், வகுப்பு, உல்லாசம் முதலிய பல நோக்கங்களைக் கொண்டுள்ளன. கல்விச் சங்கங்ளில் இராஜவீதி மாணவர் கல்விச் சங்கம் 1884ல் தோன்றி அதுமுதல் நன்றாக வேலைசெய்து வந்திருக்கிறது. அதற்கென்ற தனிக் கட்டடமும் நூற்சாலையும் உண்டு. மிகப் புகழ்பெற்ற பெரியார்கள் இதில் பங்கெடுத்துக்

கொண்டிருக்கிறார்கள். பொன்விழா 1936ல் நடந்தது. ஒரு சஞ்சிகையும் வெளியிடப்பட்டது. அரசியல் சங்கங்களில் தேசீய சங்கமாகிய காங்கிரசு சங்கக்கிளை மும்முரமாக வேலை செய்கிறது. நீதிக்கட்சிச் சங்கம் தூங்குகிறது. முசுலிம் சங்கமும் ஒன்றிரண்டுண்டு. கூட்டுறவுச் சங்கங்கள் பல துறைகளிலும் வேலை செய்கின்றன. அவைகள் கூட்டுறவு மத்திய பாங்கியின் ஒத்தாசையினால் வேலை செய்கின்றன. தொழிலாளர் சங்கங்கள் வெகு மும்முரமாக வேலை நடத்துகின்றன. அரசியல் தேர்தல்களில் ஆர்ப்பாட்டங்கள் மிக ஊக்கமானவை. காங்கிரசு என்றும் பொது உடைமை என்றும் இரு பிளவுகள் தோன்றியிருக்கின்றன. ஒவ்வோர் ஆலையிலும் தனித் தனிச் சங்கங்களேயன்றிக் கைத்தொழில் வகுப்பார்களும் தனித் தனிச் சங்கங்கள் வைத்து நடத்துகிறார்கள். நெசவுத் தொழிலாளர் சங்கம் சென்ற சில வருஷங்களாக வெகுவிரைவாக வேலை செய்கிறது. வர்த்தகச் சங்கங்கள் சென்ற போர் தொடங்கியது முதற்கொண்டு தங்கள் பிழைப்பின் நிமித்தமாக வேலை செய்யத் தொடங்கி விட்டன. ஜவுளி வர்த்தகர்கள், இரும்பு வர்த்தகர்கள், மில் ஆலை முதலாளிகள், சாய முதலாளிகள், கரும்பு வயற்காரர்கள், பஞ்சு முதலாளிகள் முதலான பலவகை முதலாளிகளும் தனித்தனிச் சங்கங்கள் வைத்து நடத்துகிறார்கள். மேலும் பலவித வகுப்புகளும் சங்கங்களை நிறுவி இருக்கிறார்கள். தேவாங்கர், விசுவப் பிராமணர், கம்மவார், நாயிடு, குயவர், அம்பட்டர், ஒட்டர், (கங்கவார்) துறையர்,

ஒக்கிலிகர், வாணியர், வைசியர், அரிஜனங்கள், அருந்ததியர் முதலிய பல வகுப்பார்களும் தனித் தனிச் சபைகள் நிறுவி நூற்சாலைகள், வாசகசாலைகள், பாடசாலைகள் இவைகளை ஏற்படுத்தித் தங்கள் வகுப்பு மக்களை ஈடேற்ற வழி தேடுகிறார்கள். பல மகாநாடுகளும் நடைபெற்றன. உல்லாசச் சங்கங்களிலே தேகாப்பியாசச்சங்கங்கள் விளையாட்டுச்சங்கங்கள், பொழுது போக்குச் சங்கங்கள் உண்டு. காஸ்மாபாலிடன் கிளப்பு மிகப் பழையது. 1891ல் தாபிக்கப் பெற்றது. பந்தாட்டம் முதலியவை உண்டு. இங்கிலீஷ் கிளப்பு முன்னால் தொடங்கப்பட்டது. ஆங்கிலருக்கு மாத்திரம் இடம் உண்டு. உத்தியோகிகள் சங்கம் பின்னால் ஏற்பட்டது. மலையாளர் கிளப்பு, மாதர் கிளப்பு முதலிய பலவும் உண்டு. வழக்கறிஞர் சங்கம் முதலிய தொழில்முறைச் சங்கங்களும் உண்டு. உல்லாசச் சங்களுக்குத்தான் பொருள் வருவாய் சொத்து முதலியவை மிகுதி.

ஃ ஃ ஃ

92. புலமை

அரசியல் ஊழியம் பெறுதல் பொருட்டு ஆங்கிலக் கல்வியில் அதிக மோகம் கொண்ட 19, 20 நூற்றாண்டுகளிலும் கோவையிலே தமிழின்மீது ஆர்வம் கொண்ட மக்கள் பலர் இருந்திருக்கின்றனர். அவர்களிலே சிலர் வழக்கறிஞர் தொழிலில் இருந்தும் தமிழ்ப் புலமைபெற்று இருந்தார்கள் என்றால் வியப்பே அன்றோ? வித்துவான் சந்திரசேகரம்

பிள்ளை 100 ஆண்டுகளுக்கு முன் சதர்அதாலத்து கச்சேரியில் உத்தியோகம் பெற்றுப் பின்னர் வழக்கறிஞர் ஆனவர். அவர் பல தமிழ்ப் புலவர்களை ஆதரித்ததுமன்றித் தானும் கவி பாடக் கூடியவர். அவர் மாணுக்கர் வித்துவான் கந்தசாமி முதலியார். அவர் பேரூர்ப் புராணம் பவானி அவிநாசி கருவூர்ப் புராணம் முதலியவை பதிப்பித்ததன்றிப் பேரூர் பிரபந்தங்கள் 6ம் மருதமலைப் பிரபந்தங்கள் 2-ம் இயற்றினர். அவர் இயற்றிய கிள்ளைவிடு தூதிற்கு சாமிநாத பிள்ளை என்ற கிறித்தவப் பண்டிதர் பிள்ளைவிடு தூது என்ற மறுப்புநூல் பாடினர். அதற்கு முதலியாரவர்கள் மற்ெருரு மறுப்பு எழுதுவித்தும் பாடுவித்தும் வெளியிட்டார். இவற்றிலுள்ள கருத்துக்கள் மிகச் சுவையாக இருக்கும். வித்துவான் கந்தசாமி முதலியாரின் மாணுக்கர் மேற்கூறிய சந்திரசேகரம் பிள்ளையின் புதல்வரான திருச்சிற்றம்பலம் பிள்ளை அவர்கள். ஹைஸ்கூல் பண்டிதராக இருந்தார். மாணிக்க வாசகர் வரலாறும் ஆனந்தமடம் முதலிய பல உரை நூல்களையும் எழுதியுள்ளார். அவருடைய மாணுக்கர் மேற்கூறிய கந்தசாமி முதலியாரின் திருக்குமாரர் C. K. சுப்பிரமணிய முதலியார். இவர்களும் வழக்கறிஞர். பல செய்யுள் நூல்கள் ஆராய்ச்சி நூல்கள் பெரியபுராண விரிவுரை முதலியவை இயற்றியுள்ளார். மேலும் கோவைக்கருகிலும் பல புலவர்கள் இருந்திருக்கிருர்கள். அவர்களில் சிலரைக் குறிக்கலாம். ஒராட்டுக்குப்பை செட்டிபாளையம் வாசுதேவ முதலியார் பவானிப் புராணம் முதலிய நூல்களும் பல பிரபந்தங்களும் வெளியிட்டவர். வடவழி

அருணுசலக் கவிராயர் மருதாசலச் சதகம் முதலிய பல நூல்களை வெளியிட்டார்கள். கோவைக் கல்லூரிப் பண்டிதர் சபாபதி பிள்ளை சௌடநாயகி மாலை திருப்பேரூர் அந்தாதி முதலிய நூல்களை இயற்றினார்கள். உரைநடை நூல்களை இயற்றிய கல்விமான்கள் பலபேர் இருந்தார்கள். செய்தித் தாள்களும் பல வெளிவந்துள்ளன. நரசிம்மலு நாயடு வெளியிட்ட கலாநிதி முதல் சஞ்சிகையாகும். பிறகு மகாஜன நேசன், கோவை ஜனபிமானி, கொங்கு மலர், கொங்கு வர்த்தமானி, வசந்தம் முதலியவைகள் வெளிவந்தன. தனிப்பாடல்கள் மிகச் சுவையுள்ளவை தோன்றியிருக்கின்றன. கிணற்றுக் கடவுக்கருகில் ஒரு புலவர் சென்றபோது "சாந்தம் கலிக்குதவாது பொன் மாமலைச் சண்முகனே" என்று ஈற்றடியையைக் கொடுக்க மற்ற புலவர் "வேந்தரும் நீசர்கள் ஆயினர் மண்ணின்மிசை வளரும், மாந்தரும் அவ்வழி மேவினர் நின்றன் வளம் பொருள்கள், ஆந்துணை காக்கவோர் ஆளிலை ஆதலினால், சாந்தம் கலிக்குதவாது பொன்மாமலைச் சண்முகனே" என்று முடித்தாராம். இது எத்தனை அறிவு மிளிர்ந்தது என எளிதில் காணலாம். அம்மலையில் வீற்றிருக்கும் முருகப்பிரான் வெகு சக்தியுள்ளவராக இருந்து ஒரு மாந்தரீகர் பீடத்தில் இருந்த யந்திரத்தை எடுத்து விட்டதிலிருந்து அம்மூர்த்தி சாந்தமானதாகவும் அது முதல் நாட்டில் கொள்ளை அதிகம் ஆயிற்று என்பதும் அக்கோயிலிலேயே கொள்ளை போயிற்று என்பதும் கண்டு இப்பாடல் பாடப்பட்டது.

93. மகாநாடுகள்

கோவையில் பல இயக்கங்களும் அவ்வப்போது தோன்றியதன்றிப் பலவகை மகாநாடுகளும் கூடியிருக்கின்றன. அரசியல் துறையில் 1897ல் முதன் முதலாக மாகாண மகாநாடு நார்ட்டன் தலைமையில் கூடிற்று. பிறகு 1914ல் கோவை ஜில்லா அரசியல் மகாநாடு திரு. கேசவ பிள்ளையவர்கள் தலைமையில் கூடிற்று. அப்போது சமூகச் சீர்திருத்த மகாநாடு சீனிவாச சாஸ்திரி தலைமையில் கூடிற்று. 1917ல் பிராமணர் அல்லாதார் இயக்கம் தோன்ற அதன் முதல் மகாநாடு 1918ல் கோவையில் பானகல் மன்னர் தலைமையில் கூடிற்று. அந்த சமயத்தில் ஜில்லா பொது மகாநாடும் கூடிற்று. பிறகு ஒத்துழையாமை இயக்கம் தோன்றியவுடன் பல மகாநாடுகள் பெரிதாகவும் சிறிதாகவும் தோன்றின. 1923ல் மேற்கு ஜில்லாக்களின் ஸ்தல ஸ்தாபன முதல் மகாநாடு மங்களூர் சுப்பராவ் தலைமையில் கோவையில் கூடிற்று. கூட்டுறவு மகாநாடு ஒன்று இயக்கத் தலைவர் தலைமையில் கூடிற்று. பிறகு பல கூட்டுறவு மகாநாடுகள் பல சங்கதிகளுக்காகக் கூடியிருக்கின்றன. அவைகளில் ஒன்று பால் வசதிக் கூட்டுறவு மாநாடு. கல்வித் துறையில் கூடிய பல மகாநாடுகளில் முதலில் ஆரம்ப உபாத்தியார்களின் மகாநாடு Dr. சுப்பராயன் தலைமையில் 24-4-27ல் கூடிற்று. உபாத்தியாயர்களுக்கு நினைவுக்கூட்டங்கள் பல கூடின. தென்னிந்திய ஆசிரியர்களின் மகாநாடு 1930ல் தேவசிகாமணி பிள்ளை தலைமையில் கூடிற்று.

அப்போது பூகோளநாடும் சுப்பிரமணிய ஐயர் தலைமையில் கூடிற்று. சமய சம்பந்தமாக சைவ சித்தாந்த மகாநாடு 1939ல் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் தலைமையில் கூடிற்று. அதனோடு இளைஞர் மகாநாடும் கூடிற்று. மற்றும் வெவ்வேறு வகுப்பு முன்னேற்ற நாடுகள் பல கூடின. 1929ல் தேவாங்கர் மகாநாடு திரு. திவான்பகதூர் குமாரசாமி செட்டியார் தலைமையில் கூடிற்று. அது சம்பந்தமாக மாதர் மகாநாடும் கைத்தொழில் மகாநாடும் சமய மகாநாடும் கண்காட்சியும் ஏற்பட்டன. வைசியர் மகாநாடு பின்னால் திரு. சாமி வேங்கடாசலம் செட்டியார் தலைமையில் கூடிற்று. தொண்டைமண்டல வேளாள மகாநாடு ஒன்று திருப்பேரூரில் வெகுநாள் முன் கூடிற்று. இவை தவிர நாடார் அகமுடையார் முதலியவர்களின் மகாநாடுகள் அவ்வப்போது கூடின.

94. பெயர்பெற்ற குதிரை

40, 45 ஆண்டுகளுக்கு முந்தி கோவை தெருக்களில் சென்ற ஒவ்வொருவனும் ஒரு செகப்புக்குதிரை ஒரு வண்டியை இழுத்துக்கொண்டு அழகிய நடையில் செல்வதைக் கண்டு அதிசயத்துடன் பார்த்துக் கொண்டே நிற்பான். நாள்தோறும் மூன்று நான்கு இளைஞர்களை ஏற்றிக்கொண்டு கோணியம்மன் கோயிற் கருகாமையில் உள்ள கல்லூரிக்குப் போவதைப் பார்ப்பான். ஒரு கம்பீரமான பெரியவரை ஏற்றிக்கொண்டு ஊரில் பல இடங்களுக்கும் கடை

வீதிக்கும் பந்தய வட்டத் தெருவுக்கும் போவதைக் காண்பான். அப்போது எல்லாம் அக்குதிரை அழகிய நடன நடையே அவன் கண்ணிற்படும். இது என்ன நீலவேணிச் குதிரையோ அல்லது பாராசாரிக் குதிரையோ என்றுங்கூட மக்கள் அதிசயத்ததுண்டு. பல சர்க்கஸ் முதலாளிகள் ஓராயிரத்துக்கு மேலேயே அதற்கு விலை கொடுப்பதாகக் கூறினதுண்டு, ஆனால் அந்தப் பெரியார் அத் தொகைகளைப் பாராட்டவே இல்லை. தனக்கும் தன் குடும்பத்திற்கும் பாடுபட்டுத் தன் செல்வாக்குக் காரணமாயிருந்த அந்தக் குதிரையைத் தன்னை விட்டுப் பிரியாமல் காத்து வந்தார். அது வெகு வருடம் மிகுந்த அமைதியோடு உழைத்து வந்தது. வேலை செய்ய முடியாது கிழட்டுத் தன்மை வந்தபோதும் அதனை மிக அன்போடு பாதுகாத்து வந்தார். அது முதிர்ந்த வயதில் அவருடைய தோட்டத்திலேயே புல் தின்றுகொண்டே இறைவன் திருவடி அடைந்தது. அதன் உடலை அத் தோட்டத்திலேயே சமாதி செய்யப்பட்டது. இன்றைக்கும் 50 ஆண்டுகளுக்கு மேல்பட்ட நகரக் குடிகள் அக்குதிரையின் அழகிய நடையைப்பற்றி வியந்து பேசுகிறார்கள். இக்குதிரை யாரிடம் இருந்தது எவ்விதம் வந்தது எனக் கேட்க ஆவல் கொண்டிருப்பீர்கள், இக்குதிரை முதலில் கோவையில் சிறந்த வள்ளலாக இருந்த காஞ்சி சதாசிவ முதலியாரிடம் இருந்தது. அவர் பல வர்த்தகக் கம்பெனிகள், சர்க்கரைக் கம்பெனி, பேரூர்த் தேவஸ்தானக் கமிட்டி முதலிய பணிகளில் ஈடுபட்டு திடீரெனச் சிவபதம் அடைந்தவர்.

பரோபகார சீலராய் கோயமுத்தூரைக் கோவை நகரம் ஆக்கிய திருவாளர் திவான்பகதூர் C. S. R. முதலியார் அவர்களின் தந்தையார் சதாசிவ முதலியார் சிவபதம் அடைந்ததும் அவர் குதிரையும் வண்டிகளும் கோவை தேவாங்க மரபில் சிறந்த வர்த்தகரும் நகர சபையில் சேவை செய்து கொண்டிருந்தவருமான திரு. ந. கிரிய செட்டியார் குடும்பத்திற்கு வந்தன. அப் பெரியாரும் அவருடைய தமையனார் திரு. ந. மருதாசலம் செட்டியார் குமாரர்களுமே அவ் வண்டிகளில் அடிக்கடி சென்று கொண்டிருந்தவர்கள். ஒரே குடும்பத்தில் ஒரே சமயத்தில் மூன்றுபேர் பாகம் பிரியாத ஒட்டுக்குடும்ப அங்கத்தினர்கள் நகர சபைக்குத் தெரிந்தெடுக்கப் படுவார்கள் ஆனுல், அக் குடும்பம் எத்தனைச் செல்வாக்குடையதாகும். புதுபுது முறைகளைத் தங்கள் தொழிலில் வகுத்து தங்கள் இனத்தாரின் தொழிலை அக்காலத்திலேயே விருத்தி செய்த பெருமை அக் குடும்பத்திற்கே உண்டு. இந்தியத் தொழிலாராய்ச்சிக் குழு (Indian Industrial Commission) கோவைக்கு வந்தபோது அதன் முன்னர் நாட்டுத் தொழிலை அபிவிருத்தி செய்யும் முறைகளை எடுத்து விளக்கி வைக்கக் கோவை ஜில்லாவிற்காகத் தெரிந்தெடுக்கப்பட்ட இந்திய வர்த்தகச் சீமான் இவர் ஒருவரே. அன்னுர் குடும்பத்தில் இருவர் நகர உதவித் தலைவர்களாகவும் ஒருவர் அரசியல் பட்டம் பெற்றவராகவும் பல கல்விச் சபைகளில் அங்கம் வகித்தவராகவும் இருந்திருக்கிருர்கள். குதிரை விசேஷமா, குடும்ப விசேஷமா, கேட்க வேண்டாம்.

95. ஒரு சீர்திருத்தப் பேராசிரியர்

18-ம் நூ. ஆண்டின் பிற்பகுதியிலும் 19 நூ. ஆண்டின் முன் பகுதியிலும் ஒரு பெரியார் வங்க நாட்டில் அவதரித்தார். நாட்டில் சமயத்தின் பேரால் நடந்து வரும் அறிவற்ற செய்கைகளும் மக்கள் படிப் பின்மையால் அடைந்து வரும் அடிமைத் தன்மையும் அவரது நெஞ்சைப் புண்படுத்தின. தனக்குச் சுற்றிலு மிருந்த இரும்புச் சிறை போன்ற பழக்க வழக்கங் களின்கட்டுப் பாட்டை உடைத்துத் தகர்த்தெறிந்து ஒரு புத்துணர்ச்சியை நாட்டில் பரப்பினுர். பல அறி வாளர்கள் அவரைப் பின்பற்றிப் புது வழியில் செல் லத் தொடங்கினர். இவ்வியக்கம் வெகு விரைவில் நமது கண்டமெங்கும் பரவிற்று. அப் பெரியாரே ராஜாராம மோஹனராயர். அவரது இயக்கமே பிரம்ம சமாஜம். இவ்வியக்கம் வங்க நாட்டில் மிகுதி யாகப் பரவினுலும் ஆந்திர நாட்டிலும் கோவையிலும் ஒருவாறு பரவத் தொடங்கியது. கோவையிலே இரண்டு குடும்பத்தார்கள் இவ்வியக்கத்தில் மிகவும் ஈடுபட்டார்கள். ஒன்று பகடால குடும்பம். மற் ருென்று குழந்தைவேலுப்பிள்ளைக் குடும்பம். பிள்ளைக் குடும்பத்தின் சந்ததியார் இன்றும் இவ்வியக்கத்தில் ஈடுபட்டு வருகின்றனர். முன்னைக் குடும்பம் சேலத்தி லிருந்து கோவையில் குடியேறின ஒரு குடும்பம். சேலத்திலும் கோவையிலும் ஒப் பணக்காரர் என்ற பலிஜவார் வகுப்பு முன்னுளில் சிறந்து இருந்தது. அதிலே பகடால குடும்பம் ஒரு கல்விகற்ற குடும்பம். அதிலே திரு. நரசிம்மலு நாயடு என்ற பெரியார்

அவதரித்துத் தமிழ் தெலுங்கு வடமொழி ஆங்கிலம் என்ற நான்கு மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்ருர். தமிழிலும் தெலுங்கிலும் வெகு நன்ருகப் பேசவும் எழுதவும் வல்லமை பெற்றவர். சமயத்திலும் அரசியலிலும் சமூகச் சீர்திருத்தத்திலும் புது இயக்கம் வங்க நாட்டில் தோன்றியதைக் கண்டு அதனை நன்ருக ஆராய்ந்து முழுமனதுடன் அதனில் இறங்கினுர். கோவையில் ஒரு கிளைச் சங்கம் நிறுவி மக்களை அவ்வியக்கத்திற்கு அழைத்து வாரா வாரம் மிகுந்த ஆர்வத்துடன் போதித்து வந்தார். கோவையில் சுக்கிர வாரப்பேட்டைத் தெருவில் கீழ்க் கோடியில் ஒரு பெரிய தோட்டம் வாங்கி அதில் தனக்கு ஒரு பவனமும் அச்சுச்சாலையும் கட்டினுர். அவரது பவனத்தில் வாரக் கூட்டங்களும் நடத்தினுர். கலாநிதி என்ற ஒரு பத்திரிகையும் நடத்தி அதன் மூலம் தன் கருத்துக்களை வெளியிட்டார். ஆராய்ச்சி நூல்களை எழுதுவதில் அவரே முதல் ஆசிரியர். தென்னிந்திய சரிதம் பலிஜவாரு புராணம் தல வரலாறுகள் ஆரிய தருமம் முதலிய பல உரை நடை நூல்களை எளிய தமிழ் நடையிலும் தெலுங்கிலும் எழுதி வெளியிட்டார். இவருடைய ஆராய்ச்சி நூல்களைக் கண்டே பிற ஆராய்ச்சியாளர்கள் சென்னையிலும் நூல் எழுதத் தொடங்கினுர்கள். சமயத்திற்கும் மொழிக்கும் அரசியலுக்கும் பாடுபட்டதுமன்றிக் கோவை நகருக்கும் மிகுதியாகப் பாடுபட்டு வந்தார். கோவைத் தண்ணீர் வசதிக்காக சிறுவாணித் திட்டத்தைப்பற்றி 1889லேயே எழுதிய பெரியார் இவரே. கோவை

நூலாலையை முதலில் நிறுவினவர்களில் இவரும் ஒருவரே. சர்க்கரை ஆலையைத் தொடங்கியவர்களில் இவரும் ஒருவரே. எப்பெரும் கூட்டமும் இவர் பேச்சில்லாமல் நடைபெறுது. இவர் சொத்து முழுதும் அறத்திற்கே எழுதிவைத்து காலகதி அடைந்தார். இவர் தாபித்த பிரம்ம சமாஜப் பெண் பாடசாலை இன்னும் நடந்து வருகிறது.

ஃ ஃ ஃ

96. பேரன் பேச்சைப் பாட்டன் கேட்டு மகிழ்ந்தது

பாட்டன் பண்டைக்கால மனிதர், மிகுந்த வயதானவர், பெரும் பணக்காரர். பேரனோ கோவையில் படிப்பு முடித்துக்கொண்டு சென்னைக்குச் சென்று உயர்தரப் படிப்பு கற்று வந்தார். மிகவும் கருத்தோடு பாடங்களைப் படித்ததன்றி கலாசாலைப் பேச்சுப் போட்டிகளில் கலந்துகொண்டு பரிசுகள் பெற்றுப் புகழுடன் ஊர் திரும்பினார். பெரும் புகழுடன் ஊர் திரும்பின வாலிபரை நல்லுரைகளுடன் ஊரார் வரவேற்றினார்கள். பேச்சில் வல்லவர் என்று அறிந்த ஒரு வாலிபச் சங்கத்தார் அவரை ஒரு பொருளைக் குறித்துப் பேசும்படி கேட்டுக் கொண்டனர். அவரும் மூன்று சொற்பொழிவுகளை இயற்றுவதாக இசைந்தார். சொற்பொழிவின் தலைப்போ "ஜெர்மானியரின் 18 நூ. மேம்பாடு" என்பது. கூட்டத்திற்குத் தகுதியான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. பெரிய மண்டபம் இல்லாமல் வெட்ட வெளியில் உயரிய பீடம் போட்டு வைத்தார்கள். அதின் மேல் நின்று

பேரன் பேச்சைப் பாட்டன் கேட்டு மகிழ்ந்தது

ஆயிரக்கணக்கான மக்களை விளித்து வெகு தெளிவாகவும் சிறந்த கருத்துக்களோடும் சொற்பொழிவை இயற்றினர். ஊரிலிருந்த பெரியார்கள் எல்லோரும் வந்திருந்தார்கள். தம் ஊர் வாலியர் சிறந்த நாவரசர் எனக் கண்டு மகிழ்ந்தார்கள். இவ்விதம் அப்பேச்சைக் கேட்கவந்தவர்களில் பாட்டனாரும் ஒருவர். தனியாகப் பீடத்திற்கு அருகில் ஒரு நாற்காலியைப் போடச் செய்து அதில் உட்கார்ந்து மிகுந்த பெருமையுடன் கேட்டுக்கொண்டிருந்தார். பேரன் பேசியதோ ஆங்கிலத்தில்; பாட்டனாருக்கோ ஆங்கிலம் தெரியாது. இருந்தாலும் முடிவு வரை வெகு நிம்மதியோடு வீற்றிருந்து வெகு திருப்தியோடு வீட்டுக்குத் திரும்பின அப்பாட்டனாரின் மனத்திலெழுந்த இறுமாப்பைப்பற்றிக் கூறவும் வேண்டுமா? திருவள்ளுவர் கூற்றின்படி, ஒரு தந்தை தான், தன் மகன் பெருமையைக் கேட்டு மகிழ்ந்து இவனைப் பெற என்ன தவம் செய்தேனே என்பான். ஒரு பாட்டன் தன் பேரனைப் பற்றி அவனைவிட அதிகஇறுமாப்பும் மகிழ்ச்சியையும் கொண்டால் பேரனின் பெருமை எடுத்துக் காட்ட வேறு என்ன அத்தாட்சி வேண்டும்? இப்படிப்பட்ட பேரன் படிப்படியாகப் பல பதவிகளையும் பெற்று ஒருநாள் மத்திய சட்ட சபையின் தலைமைப் பதவிக்குத் தெரிந்தெடுக்கப்பட்டார். அப்போது பல பெரியார்கள் வந்து நன்றி கூறினர்கள். தலைநகருக்குச் செல்லும் நாள் வந்தது. பல அன்பர்களும் உறவினர்களும் நல் வார்த்தை கூறி வழியனுப்ப வந்திருந்தார்கள். அவைகளை யெல்லாம் ஏற்றுக்கொண்டு தம்

குடும்பத்தாரிடம் விடைபெறச் சென்றார். அப்போது தம் வயது முதிர்ந்த பாட்டியிடம் விடைபெறச் சென்றார். "தம்பி, உனக்கு நல்ல பெரிய வேலை கிடைத்திருக்கிறதாம். ரிரம்ப சந்தோஷம். ஆனால் ஒரு காரியம் மாத்திரம் செய். முத்திரைப்படி பெரிதாகச் செய்யும்படி உத்தரவுபோடு" என்றாள். "பாட்டீ, படி பெரிதாக்கினால் என்ன பிரயோசனம்? அதற்குத் தகுந்த விலை ஏறிவிடும் அல்லவா?" என்றார். "தம்பி, உனக்குத் தெரியாது, படி பெரிதானால் சரக்கு அதிகமாய்க் கிடைக்காதா, இங்கிலீஷ் படித்தாலே சாதாரண புத்தி போய் விடுகிறது" என்று சொல்லி முகத்தைச் சுளித்தாள். பேரனுக்கோ இப்படிப்பட்ட பழமை மனிதர்களுடன் பேசித் திருப்தி அளிக்க முடியாது என்று தெரியும். "பாட்டீ, அப்படிச் செய்ய முயல்கிறேன்" என்று சொல்லி அவளுடைய ஆசி பெற்று டெல்லி சென்றார். இப் பேரப்பிள்ளை தான் பிரசித்தி பெற்ற சர் R. K. ஷண்முகம் செட்டியார்.

௵ ௵ ௵

97. உருவச் சிலையும் கெடியாரக் கூண்டும்

கோவை நிலையத்திலிருந்து பெரிய கடைத் தெருவிற்குப் போகையில் கோணியம்மன் கோயிலைத் தாண்டினதும் அத்தெரு இரண்டு பிரிவுகளாகப் பிரிந்து செல்லக் காண்பீர்கள். அவ்வாறு அது பிரியும் இடத்தில் எதிரே கெடியாரக் கூண்டும் அதற்கு முன்னால் ஒரு பெரியாரின் வெண்மை உருவச் சிலையும் காண்பீர்கள். இவ்வுருவத்தின் கம்பீரமான

பார்வையும் வெள்ளைத் தலைப்பாகையையும் கையில் நீண்ட செங்கோலும் கண்ட எவருக்கும் இப்பெரியார் யாவர், இவ்வூரில் தனிமைச் சிறப்புடனே உருவம் செய்யப்பெற்று யாவரும் புகழ அமர்த்தி வைத்திருக்கும் பெருமை இவருக்கு எப்படி வந்தது, என்ற பல எண்ணங்கள் தோன்றலாம். இப்பெரியார் கோவை நகர சபையில் பல ஆண்டுகள் முடிசூடா மன்னராய் விளங்கினூர் என்றால், அவரைப் புகழ்ந்து அவருக்கு ஒரு சிலையை வைக்கமாட்டார்களா எனலாம். ஆனால் எல்லாத் தலைவர்களுக்கும் இவ்விதமாய்ச் சிலையில் அமரும் பெருமை வருகிறதா? இல்லவே யில்லை. இதில் ஒருவிதத் தனிச் சிறப்பு இருக்க வேண்டிவரும் என்று எண்ணுவீர்கள். அதுதான் இங்கே இருக்கும் மர்மம். ஒரு குடும்பம் தலைமுறை தலைமுறையாகச் செல்வத்தில் திகழ்ந்து யாவர்க்கும் தீங்கு செய்யாமல் நடுநிலைமையே வகித்து நகரத்திற்குப் பலவித நன்மைகள் புரிந்து நகரச் சபையில் போட்டியின்றித் தலைமை வகித்து ஒரே குடும்பத்தில் பல பெயர்களும் பலவிதமான கவுரவத் தானங்களைப் பெற்றும் இருந்தால் அவர்கள் குடும்பம் ஏன் போற்றப்படாது? அக்குடும்பத்தலைவன் ஏன் உருவச் சிலையில் அமரமாட்டான் என்று கூறுங்கள். மேலும் இத்தலைவர் பல பொதுத் தாபனங்களில் சேர்ந்து அவைகளில் பங்கு எடுத்துக் கொண்டது மன்றிக் கோவையில் அவ்விதமான பொதுத் தாபனங்களுக்கெல்லாம் பல நன்கொடைகளும் கட்டடங்களும் தந்திருப்பது ஒரு சிறந்த பண்பாகும். கோவை மத்திய வைத்தியசாலையில் பிரசவ

அறை கட்டிக் கொடுத்தவர் அவரே. காஸ்மாபாலி டன் கிளப்பில் பெரிய மண்டபம் கட்டித் தந்தது அவர் குடும்பமே. அவர் உருவச் சிலைக்குப் பின்னுல் இருக்கும் கெடியாரக் கூண்டும் அதனடியில் வைத் திருக்கும் இலவச வாசகசாலையும் அவர் குடும்பத்தைச் சார்ந்ததே. இவர் குமாரரே அண்மையில் நகரசபைத் தலைவராக இருந்தவர். கோவையில் முதல் முதலில் அரசியலாரால் அங்கீகரிக்கப்பட்ட உயர்ந்த பட்டம் பெற்ற பெரியாரும் அவரே. தொண்டை மண்டல வேளாளரில் அதன் தலைநகரான ஆர்க்காட்டுக் குடி களில் ஒருவராகிப் பெங்களூர் முதலில் இடங்களில் பல தொழில்களில் ஈடுபட்டுக் கோவையில் குடியேறிப் பெரிய வர்த்தகத்தில் ஈடுபட்ட ஆர்க்காட்டுத் தொப்பையப்ப முதலியாரின் அரும் புதல்வரான ராவ்பகதூர் ஆ. தொ. திருவேங்கடசாமி முதலி யாரின் திரு உருவமே அந்த வெள்ளைச் சிலையாகும். அவருடைய பெருத்த தலைப்பாகையும் அகன்ற நெற் றியில் அதில் தவருது அணிந்துள்ள பட்டை நாமமும் அவரை எக்காலமும் மறக்கச் செய்யா. ஆழ்ந்த வைஷ்ணவ பக்தியுடையவர். வாரம் தோறும் சனிக் கிழமைகளில் பஜனை செய்யும் நியமமும் கொண்டவர். அவர் கோவைக்குச் செய்த சேவையை நகரத்தார் என்றும் மறவார்கள்.

98. வாத்தியார்

பெரிய கடைத்தெருவிலே நேரே மேற்கே சென்ருல் கெரடி கோயிலுக்குப் பக்கத்தில் ஒரு

'பெரிய தொட்டிகட்டு வீடு இருக்கக் காண்பீர்கள். அதுதான் வாத்தியார் வீடு. இப்போது அதில் நகர சபை ஆரம்பப்பாடசாலை இருக்கிறது. யார் வாத்தியார் என்று நான் சொல்ல வேண்டியதில்லை. 50 வருஷத்திற்கு முன்பு இருந்த படித்த ஆட்கள் எல்லாரும் அவா யார் என்று அறிவார்கள். அக்காலத்தில் பிரவேசப் பரிட்சையில் கணக்கில் தேறவேண்டும் என்றால் அவரிடம் குட்டுப்பட்டால்தான் ஆகும் என்பர். அவரைப்போல் தனக்கென வாழா பிறர்க் குரியாளர் கோவையில் எப்போதும் இருந்ததில்லை அவர் ஆயுள் முழுதும் பிரமசரியம் காத்த பெரியார். கணக்குப் போதிப்பதில் நிபுணர். எப்படிப்பட்ட மந்த புத்தியாளனையும் தேறிடச் செய்வார். ஊர்ப் பிள்ளைகள் எல்லாரும் அவருடைய பிள்ளைகளே. அவருடைய வீட்டில் எப்போதும் பிள்ளைகள் இருந்த வண்ணமாய் இருப்பார்கள். உட்கார இடம் இல்லா ஏழைகளுக்கு இவர் வீடே படிக்க இடம். இரவும் பகலும் அங்கேயே இருக்கலாம். தெரியாத கேள்விகளுக்கு அவ்வப்போதே தெளிவான விடைகிடைக்கும். ஓய்வில்லாத உதவி. யாரே இவ்வாறுசெய்வார்? தாயினும் நல்ல தயாமூர்த்தி என்றால் அவருக்கே ஒக்கும். ஏழைகள் மாத்திரம் அல்ல, பணக்காரப் பிள்ளைகளும் அங்கே வருவார்கள். கடவுளுக்குப் பணக்காரனும் ஒன்றுதான் ஏழையும் ஒன்றுதான். அந்த நிலைமையில் இருப்பார் வாத்தியார். ஒருவரிடமும் ஒரு தம்பிடியும் வாங்கமாட்டார். ஏழைப் பிள்ளைகளுக்குச் சம்பளமும் உதவி செய்வார். 'தன்

சாப்பாட்டிற்கு என்ன வேண்டியதோ அதற்குமேல் ஆகும் பணத்திற்கு என்ன வேலை? ஏழைகளுக்குக் கொடுத்துதவ வேண்டாமா? இப்படிப்பட்ட ஒருவரும் இருப்பாரா என்று கேட்காதீர்கள். அண்மையில் சென்னைப் பெரிய நீதி மன்றத்தில் நீதிமானாக இருந்த உயர்திரு ஜஸ்டிஸ் சி. என். குப்புசாமி ஐயர் என்ன, அவருக்கு முன்னும் பின்னும் கோவைக் கல்லூரியில் வாசித்த ஏனைய பெரியார்கள் என்ன, இவர்கள் எல்லோரும் இதற்கு எல்லா அத்தாட்சியும் கொடுப்பார்கள். அப்படிப்பட்ட பெரியாரின் திருவுருவம் கண்டு சிறிது புண்ணியம் பெறவேண்டும் என்றால், கோவைக் கல்லூரியில் தாமஸ் பெயரினால் விளங்கும் பெரிய மண்டபத்தை அலங்கரிக்கும் ஓவியத்தைக் கண்டு களிமின்கள். இப்படத்தை 40 ஆண்டுகளுக்கு முந்தி திறந்து வைத்தபோது இந் நகரப் பெரியார்களில் ஒருவரான சேலம், பகடால நரசிம்மலு நாயுடு அவர்கள் கூறியமொழிகள் இன்னும் என் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. "இன்று இப்படத்தை அலங்கரிக்கும் பெரியாரைப்பற்றி யான் எடுத்துக் கூறவேண்டியது இல்லை. கோவை மகா ஜனங்களும் சிறப்பாக மாணவர்களும் அறிவார்கள். ஈழ நாட்டு யாழ்ப்பாண சரகத்திலிருந்து ஏழு இருடிகள் (முனிவர்கள்) தென்னிந்தியாவில் திருத்தொண்டு புரியவந்தார்கள். அவர்களில் ஒருவர் இப்பெரியார் ஆவர். தம் உடல் பொருள் ஆவிமூன்றையும் இந் நாட்டிற்கே தத்தம் செய்திருக்கின்றார்; திரு. வைத்தியலிங்கம் பிள்ளை

என்றால் கோவையில் கண்டு வணங்காத மகனும் உண்டோ? அவரது திருவுருவம் பின்வரும் மாணவர் களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக இருப்பதாகுக!'' என்றார். திரு நாயடு அவர்கள் கூறிய ஏனைய இருடிகள் - சி. வை. தாமோதரம் பிள்ளை, வேலுப்பிள்ளை, விசுவநாதம் பிள்ளை, ஆறுமுக நாவலர், கதிரைவேற் பிள்ளை, கனகசபை பிள்ளை என எண்ணுகிறேன். இப்பெரியார்கள் தமிழ்நாட்டிற்குச் செய்த பேருதவி யைப்பற்றி இங்கு எடுத்துரைக்க வேண்டியதில்லை. அப்படிப்பட்ட எழுவரில் வாத்தியார் திருத்தொண்டு கோவைக்கு கிடைத்தது இந்நகர் செய்த பாக்கியம். அவர் ஒரு வெள்ளைக்காரத் தலைமையின் கொடுங் கோலினால் ஒய்வு எடுத்துக்கொண்டபோது மாணவர் கள் பட்ட துயரம் சொல்லொணாதது. பிறகு அவர் சிவபதம் அடைந்தபோது அழாத மாணவர் இலர் என்பது மிகையாகாது. அவர்வாணாள் முழுதும் கற் றுக்கொடுத்த வீடு இன்னும் கல்விச் சாலையாகவே இருப்பது அவருடைய நல்வாழ்வின் பயனேயாகும்.

99. சிற்பக்கற்கள் யாவை

கோவைக் கல்லூரியின் வாசலில் இரு புறங் களிலும் இரண்டு கற்றூண்கள் நிற்கின்றன. அவைகளில் அருமையான ஆலயச் சிற்பங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன. பொதுவாக நாயக்க மன்னர் காலத்துச் சிற்பப்பணி என்று கூறமுடியும். அத்தூண்கள் இங்கே எப்படிவந்தன? கல்லூரியைத்

தொடங்கின தாமஸ் என்ற ஆங்கிலக் கலெக்டர் தூண்டுதலினால் அவனுக்குக் கோயில் பணிக் கற்கள் எப்படி கிடைததன என்று கேட்கலாம். மேலும் இராஜவீதியில் பெண் பாடசாலைக்கு எதிரே சித்திர வேலைசெய்த கல் ஒன்று கிடக்கிறது. இங்கே இக் கல் எப்படி வந்தது? சில ஆண்டுகளுக்கு முந்தி காளீசுவரர் பஞ்சாலைக்கும் மால்மில் ஆலைக்கும் இடையில் பாலங்கட்டத் தோண்டினபோது சில அருமையான வேலைப்பாடு கொண்ட கற்கள் கிடைத்தன. இவை அங்கே எப்படிவந்தன? இவைகளைப்பற்றி விசாரித்ததில் சில துப்புகள் கிடைத்தன. ஆங்கிலர் புதிதாய் வந்த நாளில் விசித்திரமான பொருள்கள் கிடைத்தால் அவைகளை எடுத்துக் கண்காட்சிச் சாலைக்கு அனுப்பி விடுவது வழக்கம். மிக அருமையாக இருந்தால் இங்கிலாந்திற்கும் அனுப்பிவிடுவார்கள். சாதாரணமாக இருந்தால் பெரிய ஊர்களில் அலங்காரம்செய்ய அனுப்புவார்கள். இவ்விதம்கோவைக்கு மேற்கே 18 கல் தூரத்தில் உள்ள காஞ்சிமா நதிக்கரை முட்டம் நாகேசுவரர் கோயிலில் இருந்த பல கற்களையும் கோவைக்குக் கொண்டு வந்துவிட்டார்கள். இவ்வாலயம் புராதனமானது. சேரர்படையெடுப்பு காலத்திலேயே இருந்தது. அக் கோயில் பாழடைந்து பூசையில்லாமல் இருந்ததினால் அச் சிற்பங்களை எளிதில் கொண்டுவந்துவிட்டார்களாம். பிறகு கோவையில் சில இடங்களில் சாக்கடைகளுக்குப் பாலம் கட்டவேண்டி வந்தது. அப்போது வேலை செய்த சில ஒப்பந்தக்காரர்கள் லாபம் அடைவதற்

காகச் செதுக்கி வேலை செய்யப்பட்டிருந்த அவ்வாலயத்துக் கற்களை எளிதில் கொண்டுவந்து பாலத்துக் கற்களாக்கிப் பணம் பெற்றுகொண்டார்களாம். இந்த விதத்தில்தான் பஞ்சாலைக்கருகில் இருந்த கற்கள் வந்த காரணம். இனி காரனேஷன்பார்க் என்ற உபவனத்தில் உள்ள இரண்டு குதிரை வீரர் கற்கள் ஜில்லாபோர்டு சபைத்தலைவரால் நாட்டுப்புறத்திலிருந்து கொண்டுவரப்பட்டன. இவ்விதமாகப் பல ஆலயங்களிலிருந்து சிற்பக் கற்கள் கோவையில் புகுந்து அதனை அலங்கரிக்கின்றன.

100. சத்திரங்களும் மடங்களும்

ஒவ்வொரு ஊரிலும் பிரயாணிகள் தங்குவதற்கான சத்திரங்களும் மடங்களும் கட்டியிருப்பதுண்டு. வர்த்தகர்களும் யாத்திரிகர்களும் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் சென்றால் அங்கு தங்குமிடம் இருக்க வேண்டாமா? அதிலும் நமது நாட்டில் பண்டைக் காலம் முதற்கொண்டே வர்த்தகம் இருந்து வந்திருக்கிறது. புண்ணியமும் உலக அனுபவமும் பெறுவதற்காக யாத்திரையும் செய்ய வேண்டும் என்று சமய நூல்கள் ஆணையிட்டிருக்கின்றன. சமயக் குரவர்களும் தங்கள் வாணாட்களில் செய்தும் காட்டியிருக்கின்றனர். இவ்வாறு ஆணையிடப்பட்டிருக்கிற கடமைகள் மனிதனுக்கு இருக்கும்போது அதற்கு வேண்டிய வசதிகள் தேடவேண்டாமா? அவ்வித வசதிகளை உண்டாக்குவதும் ஒரு

வகை அறமாகும் என்று எண்ணினர். அவ்வித அறத்தைக் கடைப்பிடிக்க லெளகீகர்களுக்குச் சத்திரமும் வைதிகர்களுக்கு மடமும் கட்டிப் புண்ணியத்தைச் சம்பாதித்தனர். இன்னும் சம்பாதித்துக் கொண்டும் இருக்கின்றனர். அப்படிப்பட்ட அறச் சாலைகள் வேறு ஊர்களைப் போலவே கோவையிலும் உண்டு. அவைகளில் குறிப்பிட்டவைகளை மாத்திரம் இங்கே எடுத்து எழுதுவோம். கோவை இருப்புப் பாதை நிலையத்திலிருந்து பெரிய கடைத்தெரு செல்லும் வழியில் சமீபத்தில் உள்ளது நஞ்சப்பராவ் சத்திரம். அது இரண்டு அடுக்குக்கொண்ட ஓர் அழகான கட்டடம். நஞ்சப்பராவ் என்ற ஒரு மராட்டியச் சீமான் சென்ற நூற்றாண்டில் பிரயாணிகள் தங்குவதற்காகக் கட்டியது. மாடிமேல் அறைகளும் கீழே கூடங்களும் உண்டு. கட்டடத்திற்கு இரு புறங்களிலும் இரண்டு சித்திர விமானங்கள் இருக்கின்றன. அதிலிருந்து மேற்கே இராஜவீதி வழியாக மேல்கோடிக்குச் சென்றால் அங்கே பிராமணர் இருப்பிடங்களுக்கு நடுவில் கொச்சி நஞ்சப்பையர் சத்திரம் என்ற ஒரு பெரிய கட்டடம் இருக்கிறது. இதனைக் கொச்சி சமஸ்தானத்தில் அமைச்சராக இருந்த நஞ்சப்பையர் என்ற ஒரு சீமான் பிரயாணிகள் தங்குவதற்காகக் கட்டி வைத்தார். இதனை அந்த புண்ணியவான் கொண்ட கருத்துக்கு மாறாக உணவுக் கடை முதலிய செயல்களுக்குப் பயன்படுத்துகின்றனர். போத்தனூர் பாதையில் உப்பிலிபாளையம் இராமசாமி செட்டியார் சத்திரம் என்ற ஒரு சத்திர

மும் அதற்குத் தெற்கே ஏரிக்குக் கிழக்கில் மற்ருென்றும் இருக்கின்றன. இராமசாமி செட்டியார் என்ற தனிகர் அவைகளை ஏற்படுத்தியிருக்கிருர். அவருடைய மருமகளார் இப்போது ஒன்றைப் பிரசங்க சாலை, கல்யாண மண்டபம் முதலிய அறங்களுக்காக மாற்றியிருக்கின்ருர். வைசியர் வீதி மேற்பகுதியில் பேச்சிமுத்துக் கவுண்டர் சத்திரம் என்ற ஒரு பெரிய அறச்சாலை இருக்கிறது. இதனை ஒரு அறக்காப்பாளர் குழு நடத்தி வருகின்றது. இவைகளைத் தவிர வைசியர் சத்திரம் குஜராத்தியர் சத்திரம் என்ற இரு ஜாதிச் சத்திரங்களும் உண்டு. இனி கோவையில் உள்ள மடங்கள் பலவும் அந்தந்த சமயச்சார்பான மக்களால் ஆளப்பட்டு வரப்படுகின்றன. அவைகளில் சங்கரமடம், ஸ்ரீ வைஷ்ணவ மடம், மாத்துவ மடம், லிங்காயத மடம், மாகாளியம்மன் கோயில் மடம், மேகமுனியம்மன் கோயில் சிறுத்தொண்ட நாயனர் மடம் முதலியன. இப்படிப்பட்ட அறநிலையங்களைப் பாதுகாக்கவும் ஆலோசனை சொல்லவும் ஒரு சங்கம் இருந்தால் நலம்.

101. தமிழ்ப் புலமையும் வாழ்வுவெற்றியும்

கோவைக் கல்லூரியில் வாசித்த மூன்று மாணவர்கள் அடுத்தடுத்த ஆண்டுகளில் சென்னைப்பட்ட பரீட்சையில் முதன்மையாகத் தமிழில் தேறினர்கள். சென்னை அரசியலார் கல்லூரியில் தமிழுக்கு என்று

வழங்கிவந்த பரிசுகளையும் வரிசையாகப் பெற்றார்கள். பின்னால் ஓர் ஆண்டில் இந் நூலாசிரியன் தம்பியாரும் கீழ்ப் பரிசைகளில் வடமொழி பயின்று தேறியும் பட்டப் பரீட்சைக்குப் பின் தமிழில் கட்டுரை எழுதி அதே பரிசைப் பெற்றார். இவையே கோவை மாணாக்கரின் தமிழ் வல்லமையைக் காட்டுகின்றன. இப்படியிருக்க மேலே சொன்ன மூன்று முதன்மை மாணாக்கர்களும் தமிழில் வல்லவர்களாய் இருந்ததன்றிச் சட்டமும் கற்று வழக்கறிஞராக அமர்ந்து அத் தொழிலைத் தம் பிழைப்புத் தொழிலாகக்கொண்டார்கள். அவர்களில் இருவர் தமிழை புறக்கணிக்காமல் பிற் காலத்திலும் போற்றி வந்தார்கள். சொற்பொழிவுகள் புரிவதும் கட்டுரைகளை எழுதுவதும் முதலிய செயல்களைக் கைக்கொண்டு வந்தார்கள். ஆனால் மூன்றாவதவரோ தமிழைவிட்டு வழக்கறிஞர் தொழிலில் அதிக சிரத்தை செலுத்திவந்தார். மற்ற இருவர்களைவிட சம்பாத்தியத்தில் உயர்ந்தவரானார். பிறகு நாள் செல்லச் செல்ல பொது ஊழியம், அரசியல் ஊழியம், கூட்டுறவு முதலிய இயக்கங்களில் தம் ஓழிவு நேரத்தைக் கழித்தார். இந்தப் பொதுஜன ஊழியத்தினால் நாட்டில் சிறந்த பேரும், மக்களிடம் நல்ல புகழும் அரசியலாரிடம் பட்டங்களும் நன்மதிப்பும் பெற்றார். மற்ற இரண்டு பெரியார்களோ தமிழ்ப்பாண்டித்தியத்தில் பேர் பெற்றார்களேயன்றி, பொருளிலும் அரசியல் விவகாரங்களிலும் முன்னேறவில்லை. இதனை அறிந்தோர் பலரும் தமிழ் கற்றதினால்

வறுமையும் துன்பமும் வருமேயன்றிச் செல்வமும் இன்பமும் வராது என எண்ணுவர். முன்னொரு தமிழ்க் கவிராயர் "பல தொழில் இருக்கத் தமிழ் கற்றேனே" என்று பிரலாபித்துத் தமிழால் தான் அடைந்த துன்பங்களை உருக்கமாக உணர்த்தியிருக் கின்றார். அவர் சொன்ன கூற்று இம் மூவர் வாழ்க் கைகளிலும் நிரூபிக்கப்படுகின்றது அன்றோ? இவர் களில் தமிழில் சிறந்து தேர்ந்தும் தமிழைவிட்டு அரசி யலில், கூட்டுறவுத் துறைகளில் சிறந்து விளங்கித் தலை நிமிர்ந்த புகழாளர் திரு. தி. அ. இராமலிங்கம் செட்டியார் ஆவார்கள். இவர் கூட்டுறவு இயக் கத்தில் தமது நாட்டிற்கு இயற்றிய பேருதவி வேறு எவராலும் செய்திருக்கமுடியாது. மற்ற இரண்டு தமிழ் வல்லுநர்களின் பெயர்களைக் குறிக்கேன். வேண்டியவர்கள் வினவித் தெரிந்துகொள்வார் களாக.

முற்றிற்று

பொருள் அகராதி

பொருள் அகராதி

கோவை நிலையப் பதிப்பகம்

அறிக்கை

கோவை கிழார் தொடர்பு பெற்ற அடியிற்கண்ட நூல்கள் விலைக்குக் கிடைக்கும். முன்பணமும் தபால் செலவும் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

1.	கடலின்கண் முத்து அல்லது யான் கண்ட இலங்கை—ஓர் அரிய தமிழ்ப் பயண நூல் ...	3	8
2.	இதுவோ எங்கள் கோவை (கோவை நகர சரிதம்)		
	மாணவர் பதிப்பு ...	2	0
	உயர்ந்த பதிப்பு ...	3	0
3.	சிறு கதைத்திரள்—20 சிறுகதைகளும் 5 பாடற் கதைகளும் ...	1	0
4.	கொங்கு மலர் - நான்கு ஆண்டுகள் - ஆராய்ச்சிக் கட்டுரைகள் பல உண்டு. ஆண்டு ஒன்றுக்கு ...	3	0
5.	கொங்கு நாட்டுக் கட்டுரைகள் 9 - கொங்கு சரிதம் முதலியன ...	1	0
6.	ஊ[illegible]ல் பாடல் - அருமையான எளிய பாடல்கள் ...	0	12
7.	சந்[illegible]ர்த்திகளும் கொங்குநாடும்-ஆராய்ச்சி நூல் ...	0	12
8.	சித்தாந்தம்—1947-48. புதுமுறையில் வெளியிடப் படுவது. கட்டினது. ...	3	8
9.	சிவக்கவிமணி வாழ்க்கைத்திறன்-சைவப்பெரியார், கோவைப் பேராசிரியர் C. K. சுப்பிரமணிய முதலியார் அவர்களின் வாழ்க்கை வரலாறு ...	0	8
10.	கோவைகிழார் வாழ்க்கை வரலாறு ...	0	4

இன்னும் பல ஆராய்ச்சிக் கட்டுரைகளும் கிடைக்கும்

கிடைக்கும் இடம் :—

கோவை நிலையப் பதிப்பகம்

4/89, திருச்சிப்பாதை,

கோயமுத்தூர்.